"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.69,18,30,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.48,81,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.112,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9688, திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டத்தில் நலிவடைந்துவரும் தோல் தொழில்களைப் புனரமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.69,18,30,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.48,81,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.112,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9736, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டம், அரூர் பகுதியில் ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உறுதிப்படுத்தும் மாலிப்டினம் தொழிற்சாலையைத் துவக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.69,18,30,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.48,81,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.112,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9818, முனைவர் கு. ஜெயக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 9872, திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மூடிய ஆலைகள் மற்றும் தொழிற்சாலைகளை மீண்டும் திறக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.69,18,30,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.48,81,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.112,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9912, திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொங்கணாபுரம் ஒன்றியம், கச்சுப்பள்ளி கோவலன்காட்டில் கயிறு திரிக்கும் தொழில் செய்பவர்களுக்கு இலவச மின்சாரம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.69,18,30,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.48,81,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.112,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9979, திரு. மா. சந்திரகாசி.

**திரு. மா. சந்திரகாசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், வேப்பூர் பகுதியில் சிமெண்ட் தொழிற்சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.69,18,30,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.48,81,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.112,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9983, திரு. து. செல்வராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 10381, திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் மாம்பழத்திலிருந்து பழச்சாறு எடுத்து பதப்படுத்தும் தொழிற்சாலை ஒன்றை அரசு அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.69,18,30,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.48,81,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.112,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10745, திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெரணமல்லூர் தொகுதி மக்களுக்கு நிரந்தர வருவாய் தரும் வகையில் ஒரு தொழிற்சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.69,18,30,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.48,81,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.112,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10836, திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மானாமதுரை தொகுதியில் அரசு நூற்பாலை ஒன்று தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.69,18,30,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.48,81,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.112,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10944, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்துறைப்பூண்டி தொகுதியில் உள்ள கிராமப்புற ஏழை எளிய மாணவ மாணவியர் கணினிப் பயிற்சி பெற அரசே கணினிப் பயிற்சி மையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.69,18,30,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.48,81,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.112,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11672, திருமதி பி. பத்மாவதி.

**திருமதி. பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நன்னிலம் தொகுதியில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைத்துத் தரவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.69,18,30,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.48,81,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.112,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

## (ஆ) கோரிக்கை எண் 31–தகவல் தொழில்நுட்பவியல் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 31–தகவல் தொழில்நுட்பவியல் துறை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.766,99,48,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 327, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.766,99,48,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5362, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 11156, திரு. து. அமரமூர்த்தி.

**திரு. து. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மான்ியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.766,99,48,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11391, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.766,99,48,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5251, திரு. கு. பாண்டுரங்கன்.

**திரு. கு. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.766,99,48,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7284, திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.766,99,48,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8064, திரு. கே.வீ. ராமநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8617, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.766,99,48,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8733, திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.766,99,48,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10196, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.766,99,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

முற்பகல் 9–45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10481, திரு. கி. ஆறுமுகம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 11219, திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.766,99,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10943, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.766,99,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11860, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.766,99,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 854, திரு. கே.ஏ. செங்கோட்டையன்.



**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிப்பாளையத்தில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.766,99,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3326, திரு. தா. மலரவன்.

**திரு. தா. மலரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவையில் அமைய உள்ள தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.766,99,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5333, திரு. ஆர்.டி. கணேசன்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தேனி மாவட்டம், தேனியில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.766,99,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5405, டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி.

**டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுராந்தகத்தில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.766,99,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5410, திரு. செ. பொன்னுதுரை.

**திரு. செ. பொன்னுதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதியில் உள்ள சிப்காட் வளாகத்தில் படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.766,99,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5648, திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்தணி தொகுதியில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.766,99,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5979, திரு. எல். ரவிச்சந்திரன்.

**திரு. எல். ரவிச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டத்தில் கணினிப் பூங்கா அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.766,99,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6075, திரு. ந. கணபதி.

**திரு. ந. கணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விழுப்புரம் மாவட்டத்தைச் சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்ந்த இளைஞர்கள் பயன்பெறுகின்ற வகையில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா ஒன்று அமைத்திட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.766,99,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6138, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அனைத்து பஞ்சாயத்து யூனியன் தொடக்கப் பள்ளிகளிலும் 3, 4, 5 வகுப்புகளில் கம்ப்யூட்டர் கல்வியை இலவசமாக அரசு மாணவர்களுக்கு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.766,99,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6405, திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதியில் தகவல் தொழில்நுட்பம் பயில்வதற்கு ஏதுவாக தகவல் தொழில்நுட்பப் பயிலகம் ஒன்று துவக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.766,99,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6611, திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காஞ்சிபுரத்தில் தொழில் பூங்கா அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.766,99,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6803, திரு. செ. தாமோதரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7120, திரு. ஆர்.எம். பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பள்ளிப் படிப்பை முடித்து பொறியியல் கல்லூரிகளில் படிக்கும் ஏழை எளிய மாணவர்களுக்கு இலவசமாகக் கணினி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.766,99,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7305, திரு. என்.ஆர். ரங்கராஜன்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கணினிகளுக்குத் தொகுதி பற்றிய விவரங்கள் அடங்கிய மென்பொருள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.766,99,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7401, திரு. இ. மகேந்திரன்.



**திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டத்தில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா எந்த இடத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.766,99,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7499, திரு. ஓ.கே. சின்னராஜ்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேட்டுப்பாளையம் தொகுதியில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.766,99,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7741, திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கணினி சார்ந்த பட்டப் படிப்பு மற்றும் மேற்படிப்பு படித்த மாணவ, மாணவியர்கள், பி.பி.ஓ. (Business Process Outsourcing) நிறுவனங்கள், கால் சென்டர்கள் போன்றவை அமைத்து சுய தொழில் புரிய தகவல் தொழில்நுட்பவியல் துறைமூலம் சலுகைகள் அளித்து ஊக்கப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.766,99,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7825, திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், உயர் கல்வி, பள்ளிக் கல்வி, பல்கலைக்கழகக்

கல்வி ஆகியவற்றில் தகவல் தொழில்நுட்பம் பற்றிப் படிப்பதற்கு ஊக்குவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய *31* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*766,99,48,000*/–ல் ரூ.*100*/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *7929*, திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்போரூர் தொகுதியில் பல பகுதிகளில் தகவல் தொழில்நுட்ப நிலையங்கள் இருந்தும், இத்தொகுதியில் வசிக்கும் யாருக்கும் தொழில்நுட்ப நிறுவனங்களில் பணி வழங்க மறுப்பது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய *31* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*766,99,48,000*/–ல் ரூ.*100*/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *8100*, திரு. எஸ். ஜாண் ஜேக்கப்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டத்தில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய *31* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*766,99,48,000*/–ல் ரூ.*100*/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *8246*, டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தகவல் தொழில்நுட்பவியல் துறையில், தமிழ்நாட்டை உலகின் உச்சத்திற்குக் கொண்டு செல்லும் வகையில் ஒவ்வொரு ஊராட்சி, பேரூராட்சியிலும் தகவல் மையம் ஒன்றினை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய *31* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*766,99,48,000*/–ல் ரூ.*100*/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *8327*, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் வழங்கப்பட்டுள்ள கேபிள் டி.வி. இணைப்பை அரசே இலவசமாக வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய *31* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*766,99,48,000*/–ல் ரூ.*100*/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *8484*, திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டத்தில், பொள்ளாச்சி மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் செல்போன் டவர் (பி.எஸ்.என்.எல்.) அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய *31* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*766,99,48,000*/–ல் ரூ.*100*/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *8504*, திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொன்னேரி, கும்மிடிப்பூண்டி, திருவள்ளூர் தொகுதியைச் சேர்ந்த தகவல் தொழில்நுட்பக் கல்வி பயின்ற மாணவர்கள் பயன்பெற சென்னை–கொல்கத்தா சாலையையொட்டி தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா ஒன்று தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.766,99,48,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8937, திரு. டி. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தளி சட்டமன்றத் தொகுதியில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.766,99,48,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9026, திரு. சு.ப. வேலுமணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 9272, திரு. ஞா. செந்தமிழன்.

**திரு. ஞா. செந்தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் (I.T. Parks) அமைப்பதில் முதலீட்டாளர்களுக்கு உள்ள சிரமங்களைப் போக்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.766,99,48,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9358, திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டத்தில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.766,99,48,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9433, திருமதி மு. சந்திரா.

**திருமதி மு. சந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு இலவச கணினி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.766,99,48,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9621, திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டத்தில் குப்பம் ஊராட்சியைச் சார்ந்த முருக்கேரி குப்பத்தில் 147 ஏக்கர் நிலப் பரப்பில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.766,99,48,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9817, முனைவர் கு. ஜெயக்குமார்.

**முனைவர் கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாமக்கல் தொகுதியில் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.766,99,48,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9882, திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காவேரிப்பட்டினம் தொகுதியில் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.766,99,48,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9908, திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிராமப்புற மாணவர்களுக்கு தகவல் தொழில்நுட்பம் குறித்த கல்வியைக் கற்றுக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.766,99,48,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10544, திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூரில் டைடல் பூங்கா அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.766,99,48,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10743, திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மிகவும் பின்தங்கிய மாவட்டமான திருவண்ணாமலையில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.766,99,48,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10820, திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் கேபிள் டி.வி. சேவையை அரசே ஏற்று நடத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.766,99,48,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11651, திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தகவல் தொழில்நுட்பவியல் கல்லூரி ஒன்று அரசு துவக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.766,99,48,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூ விரும்பினால் கூறலாம்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவ அவர்களே, தொழில் துறை, தகவல் தொழில்நுட்பவியல் துறை ஆகிய குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலு அச்சேற்றப்பெற்று மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற் வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்

@ 497 முதல் 547 வரையிலான பக்கங்களில் இணைப்புகள்-I மற்றும் ஆக அச்சிடப்பட்டுள்ளன.

மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிப்பேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். இன்று இரண்டு மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பெற்றுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு மானியக் கோரிக்கைகள்மீதும் சேர்த்தே பேசலாம். முதலில், மாண்புமிகு உறுப்பினர் முனைவர் மு. தம்பிதுரை. உங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிற நேரம் 15 நிமிடங்கள்.

***முனைவர் மு. தம்பிதுரை**: தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோர் வழி வந்து, தமிழ்நாட்டை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்ல அயராது உழைக்கின்ற ஒப்பற்ற தலைவி புரட்சித் தலைவி அம்மா (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களை வணங்கியும், இந்தத் தொழில் துறை மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பளித்த சட்டப் பேரவைத் தலைவருக்கு என் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். காலத்தினுடைய அருமையைக் கருதி, நான் சுருக்கமாக சில கருத்துகளை இந்த அவையிலே பதிவுசெய்ய விரும்புகின்றேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் கடந்த 5 ஆண்டு கால ஆட்சியில், தமிழ்நாடு வலுவான தொழில் கட்டமைப்பு அடிப்படையுடனும், மிகுந்த தொழில்நுட்பத் திறனுடைய மனிதவளத்துடனும் தொழில் மூலதனத்திற்கு ஏற்ற ஒரு மாநிலமாக, விரும்பத்தகுந்த ஓர் இடமாக உருவாகி உள்ளது. தமிழ்நாட்டின் உள்கட்டமைப்பு வளர்ச்சி, பல்வேறு ஆய்வுகளில் இந்தியாவின் முதல் மூன்று சிறந்த மாநிலங்களில் சிறந்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது. அம்மா அவர்களின் தெளிவான தொழில் கொள்கையினால், தமிழகத்தில் பல தொழிற்சாலைகள் உருவாகின. 1991 ஆம் ஆண்டு ஜூலை மாதம் மத்திய அரசு புதியதாக தொழிற்கொள்கையை அறிவித்தது.

அதையடுத்து, இந்தியாவிலேயே முதன்முதலாகத் தமிழகத்தில்தான் 1992 ஆம் ஆண்டு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் புதிய தொழில் கொள்கை தமிழகத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)



தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கும், பொருளாதார மேம்பாட்டிற்கும் அடித்தளம் அமைத்ததே இந்தத் தொழில் கொள்கைதான். அம்மா அவர்களின் எழுச்சிமிக்க தலைமையின்கீழ் அமைந்த தமிழக அரசு, தமிழ்நாட்டை அனைத்துத் துறைகளிலும் முதலிடத்திற்கு உயர்த்தும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக, மீண்டும் 2003 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் Tamil Nadu New Industrial Policy என்னும் புதிய கொள்கையை வெளியிட்டார்கள். இந்தக் கொள்கை தொழிலதிபர்கள் பலராலும் பாராட்டப்பட்டு மிகுந்த வரவேற்பைப் பெற்றது. தொழிலதிபர்கள் மட்டுமல்ல, இன்றைய இந்த அரசும் அதைப் பாராட்டி வரவேற்றிருக்கிறது என்பதை இங்கே பதிவு செய்ய விரும்புகின்றேன். இன்று அரசு வெளியிட்டுள்ள கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தைப் பார்த்தீர்களென்றால் முதல் பக்கம் முன்னுரையிலேயே இதைச் சொல்லியிருக்கின்றார்கள். "தமிழ்நாட்டின் பொருளாதாரம் புத்துயிர் பெற்று, எழுச்சி பெற அரசின் நட்பு ரீதியிலான தொழில் கொள்கைகளும், நம்பிக்கையூட்டும் முயற்சிகளும் முக்கியப் பங்காற்றியுள்ளன" என்றும், "தமிழ்நாட்டில் முக்கியமான தொழிற்சாலைகள் அமைவதற்கு மாநில அரசின் கொள்கையும், ஊக்குவிப்புமே காரணமாகும்" என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 1992–லும் பிறகு 2003–லும் இந்த இரண்டு ஆண்டுகளில் அறிவிக்கப்பட்ட தொழில் கொள்கைகள்தான் அரசின் தொழில் கொள்கைகளாக இருக்கின்றனவேயொழிய, அதற்குப் பிறகு எந்த ஒரு புதிய தொழில் கொள்கையையும் இன்றைய அரசு அறிவிக்கவில்லை. ஆகவே, இந்த வளர்ச்சி எல்லாம் அம்மா அவர்களின் தொழில் கொள்கையை அடிப்படையாகக் கொண்டதுதான் என்ற கருத்தைச் சொல்ல விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, தமிழ்நாட்டில் பல பெரும் தொழிற்சாலைகள் அமைவதற்குக் காரணம் எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்த இந்தத் தொழில் கொள்கைதான். இதுதான் முதலிலே வெளியிடப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதோடு, தமிழ்நாடு 2005–2006 ஆம் ஆண்டில் வருங்கால ஆசியாவின் சாதனையாளர் என்றும் தேர்ந்தெடுக்கப்பட்டது. மேலும் பைனான்ஷியல் டைம்ஸ் நாளிதழின் ஓர் அங்கமான fDI பத்திரிகையால்

வெளிநாட்டு முதலீடுகள் ஈர்க்கும் திறன் கொண்ட மிகச் சிறந்த
இடமாகத் தமிழ்நாடு தேர்ந்தெடுக்கப்பட்டது என்பதைப்
பெருமையுடன் குறிப்பிட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)
இத்தகைய ஏற்றமிகு சிறப்பிடத்தைத் தமிழ்நாடு பெற்றிட புரட்சித்
தலைவி மாண்புமிகு அம்மா அவர்களின் புதிய தொழில்
கொள்கைகளே காரணம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சிறிய கருத்தை
இந்த அவைக்குச் சொல்ல விரும்புகிறேன். பொதுவாகக் கொள்கைக்
குறிப்பேடானது மாண்புமிகு உறுப்பினர்களுக்கு 2, 3 நாட்களுக்கு
முன்னாலே கொடுப்பது வழக்கம். இன்று நடைபெறுகின்ற மானியக்
கோரிக்கைத் தொடர்பான கொள்கைக் குறிப்பேடு வரும் என்று இரவு
12–00 மணி வரையிலும் காத்திருந்தும் எனக்குக் கிடைக்கவில்லை.
இன்று காலையில்தான் இதைப் பார்க்க முடிந்தது. கொள்கைக்
குறிப்பேடு இருந்தால்தான் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள்
அதைப் படித்து அதற்கேற்ற கருத்துகளைச் சொல்ல வாய்ப்பாக
இருக்கும். இதை நான் பெரும் குற்றமாகச் சொல்லவில்லை. எங்கோ
தவறு நடந்திருக்கலாம். ஆகவே, குறிப்பேடே இல்லாதது மாண்புமிகு
உறுப்பினர்கள் பேசுவதற்கு இடைஞ்சலாக இருக்கிறது. இன்றைய
அரசினுடைய தொழில் கொள்கையே இல்லாத நேரத்தில் எப்படி பல
முதலீட்டாளர்கள் இந்த நாட்டிலே முதலீடு செய்வார்கள் என்று
சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆகவேதான் சொல்கின்றேன், புரட்சித்
தலைவி அம்மாவினுடைய அந்தத் தொழில் கொள்கையின்
காரணமாகத்தான் Nokia தொழிற்சாலைக்கு 6–4–2005 அன்று
புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. (மேசையைத் தட்டும் ஒலி)
Flextronics தொழிற்சாலைக்கு 6–10–2005–லும், B.M.W. தொழிற்சாலைக்கு
8–12–2005–லும், Foxconn தொழிற்சாலைக்கு மார்ச் 2006–லும்
புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. Caparo தொழிற்சாலை
அமைக்க எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. தேர்தல்
அறிவிக்கப்பட்டதால் அந்த நேரத்திலே ஒப்பந்தம் ஏற்படுத்த
முடியவில்லை.

அதுமட்டுமல்ல, அம்மா ஆட்சியில் LG Electronics, Samsung,
Motorola, Apollo Tyres போன்ற நிறுவனங்கள் தொடங்குவதற்கு
ஏற்பாடுகள் செய்யப்பட்டன. Hero Honda தொழிற்சாலை 100 முதல்
150 கோடி ரூபாய் முதலீட்டிலும், Honda Japan தொழிற்சாலை 150 முதல்
200 கோடி ரூபாய் முதலீட்டிலும் தொடங்க ஏற்பாடுகள்
செய்யப்பட்டன. Deutche Ceramics, Fly Ash based செங்கல் தொழிற்சாலை



700 கோடி ரூபாயில் தொடங்க அம்மா அவர்கள் ஏற்பாடு செய்தார்கள்.
தற்பொழுது சிறப்புப் பொருளாதார மண்டலமாக வளர்ந்துள்ள
மஹிந்திரா தொழிற்பூங்கா 2–2–1996 ஆம் ஆண்டு புரிந்துணர்வு
ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்ட ஒரு திட்டமாகும். மற்றும்
அம்மா அவர்களுடைய ஆட்சியில் சுமார் ரூ. 10,811 கோடி செலவில்
Saint Gobain, Asian Paints, Asahi Glass, Tata Titanium Di–oxide, Hyundai,
Jagannath Textiles, Ennore Foundries, Infosys, Xansa, Road Improvement
(Asia Fund), TICEL Park, Nokia, Flextronics, B.M.W., Southern Automobile
Testing Centre, Hewlett Packard, Kamatsu (Earthmover), Motherson
(Automobile), Rohm and Haas (Chemicals), Dalmia Cements விரிவாக்கம்
போன்ற பல்வேறு தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்பட்டன. (மேசையைத்
தட்டும் ஒலி) அதற்குக் காரணம் அவர் வெளியிட்ட அந்தத் தொழில்
கொள்கையே. மிக அதிகப்படியான முதலீட்டு மானியம் வழங்கவும்,
சில சிறப்பு மானிய வசதிகளும், அதிக காலத்திற்கு விற்பனை வரி
செலுத்துவதை ஒத்திவைக்கவும், சில தொழில்களுக்கு விற்பனை வரியை
சில ஆண்டுகளுக்கு முழுவதுமாகத் தள்ளுபடி செய்ததும், புதிய
தொழிற்சாலைகளில் மின்வெட்டுப் பிரச்சினையைத் தீர்க்க
ஜெனரேட்டர் அமைக்க மானியம் அளித்ததும், தொழில் முனைவோர்–
அரசிடையே நல்ல புரிந்துணர்வையும் நட்புணர்வையும் வளர்த்திட
மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டு வந்த சில திட்டங்கள்
ஆகியவற்றாலும் தொழிற்சாலைகளைத் தமிழகத்தில் ஆரம்பிக்க பலர்
முன்வந்தனர் என்பதே உண்மையாகும்.

முற்பகல் 9–55

அம்மா அவர்களுடைய கொள்கை முடிவின்படி சிறுதொழில்
முதலீட்டாளர்களுக்கு திட்டம் முடிந்தபின் மானியம் வழங்கி வந்த
முறையை மாற்றி இடையிடையே (Stage by Stage) கொடுக்கின்ற
நிலை உருவானது. சிறு தொழிற்சாலைகள் தயாரித்து அளிக்கும்
பொருட்களுக்கு மாநில பொதுத் துறை நிறுவனங்கள் 30 நாட்களுக்குள்
அதற்குரிய பணத்தைத் தரவும் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

TIIC மூலம் Venture Capital Fund, Technology Development Fund என்ற
நிதியங்கள் உருவாக்கப்பட்டு சிறு தொழில் முனைவோருக்கு
ஊக்கமளிக்கப்பட்டது. நலிவடைந்த சிறு தொழில் நிறுவனங்களின்
புனர்வாழ்வுக்கு ஒரு குழுவும், தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு நிதியமும்
ஏற்படுத்தப்பட்டன. தடையில்லா மின்சாரம் வழங்கும் கொள்கையும்,
2,160 கோடி ரூபாய் செலவிலே சாலை மேம்பாட்டுத் திட்டமும், தகவல்
தொழில்நுட்ப அதிவிரைவுச் சாலைத் திட்டமும், வர்த்தகத்திற்கான

கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு அனுமதி பெறுதலை எளிமைப்படுத்தியதாலும், பல வரிச் சீர்திருத்த நடவடிக்கைகள் எடுத்ததன் காரணமாகவும், முத்திரைத் தாள் தீர்வை விகிதங்கள் குறைக்கப்பட்டதன் காரணமாகவும், பெரிய தொழிற்சாலைகளும். மத்திய தர தொழிற்சாலைகளும் நிறுவ பல முதலீட்டாளர்கள் தமிழ்நாட்டை நோக்கி, அம்மா ஆட்சிக் காலத்தினைத் தேர்ந்தெடுத்து வந்தார்கள்.

உங்கள் முந்தைய ஆட்சியில் நாங்குநேரி தொழில்நுட்பப் பூங்காவைச் சரியாகச் செயல்படுத்த முடியவில்லை. நாங்குநேரி தொழில்நுட்பப் பூங்கா வராமல் போனதற்குக் காரணம் சரியான தொழில் முனைவோரை முதலிலேயே நீங்கள் தேர்ந்தெடுக்கவில்லை. முதலீடு செய்ய முடியாதவர்களைத் தேர்ந்தெடுத்தீர்கள். அதனால்தான் நீங்கள் அங்கம் வகிக்கும் மத்திய அரசே, ஏன் நாங்குநேரி சிறப்புப் பொருளாதார மண்டலத்தை இரத்து செய்யக்கூடாது எனக் கடிதம் எழுதியது. (மேசையைத் தட்டும் ஒலி) நாங்குநேரியில் இதுவரை எந்தத் தொழிலையும் கொண்டுவர இயலவில்லை. இந்தக் கருத்தை ஏற்றுக்கொள்கின்ற வகையில் தாங்கள் சமர்ப்பித்துள்ள நிதிநிலை அறிக்கை 2007–2008, பக்கம் 24, பத்தி 62–ல் நாங்குநேரி சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்கு மேலும் ஒரு புதிய கூட்டுத் தொழில் முனைவோர் தேர்ந்தெடுக்கப்பட்டு தொடங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். நாங்களே இதைச் செய்திருப்போம். ஆனால், நாங்கள் செய்திருந்தால் நீங்கள் அதை அரசியல் ஆக்கியிருப்பீர்கள். அதனால் நாங்கள் செய்யவில்லை. (குறுக்கீடு)

அடுத்து சிமெண்ட். நவீன பொருளாதாரத்தில் ஒரு முக்கியத் தூணாக விளங்குகிற சிமெண்ட் விலை உயர்வு சாதாரண மக்களை நிலைகுலைய வைக்கிறது. நீங்கள் ஆட்சியை விட்டுச் சென்றபொழுது 2001–ல் தமிழ்நாட்டில் சிமெண்ட் உற்பத்தி 8.156 மில்லியன் டன்னாக இருந்தது. ஆனால் தமிழகத்தின் ஒப்பற்ற தலைவி, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் 2002-இல் இந்த உற்பத்தி 9.308 மில்லியன் டன்கள் என்ற அளவுக்கு உயர்ந்து (மேசையைத் தட்டும் ஒலி) 2005 இறுதியில் 14.289 மில்லியன் டன்கள் என்ற அளவினை எட்டியது. எங்கள் அம்மா ஆட்சியில் கட்டுப்பாட்டில் இருந்த சிமெண்ட் விலை இன்றைய ஆட்சியில் சாதாரண மக்களால் சிமெண்டே வாங்க முடியாத அளவிற்கு உயர்ந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்குக் காரணம் இன்றைய அரசு



சிமெண்ட் ஆலை முதலாளிகள் தங்கள் விருப்பத்திற்கு ஏற்ப விலையை ஏற்றிக்கொள்ள அனுமதிப்பதுதான் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து சர்க்கரைத் துறை. சர்க்கரைத் துறை அம்மா ஆட்சியில் பெரும் முன்னேற்றமடைந்தது என்பதை யாராலும் மறுக்க முடியாது. உங்கள் ஆட்சியில் 2001 ஆம் ஆண்டுவரை ஒரே ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலை மட்டும்தான் இலாபத்தில் இயங்கி வந்தது. ஆனால், அம்மா ஆட்சியில் அவரது நிருவாகச் சீர்திருத்தத்தின் காரணமாக ஒரு பொதுத் துறை ஆலையையும் சேர்த்து 9 ஆலைகள் இலாபத்தில் இயங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) மொத்தமாக ரூ.4,701.40 இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது. அம்மா அரசு, கரும்புக்கு டன் ஒன்றுக்கு குறைந்தபட்ச விலையாக விவசாயிகளுக்கு ரூ.1,014/– வழங்கியது. (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்லாமல் பிழிதிறன் 9 சதவிகிதத்திற்கு மேல் கூடுதலாக உள்ள ஒவ்வொரு 0.1 சதவிகிதத்திற்கு டன் ஒன்றுக்கு ரூ.8.80 ஊக்கத் தொகையாக நிர்ணயிக்கப்பட்டது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். அதோடு, அரசின் கொள்கை விளக்கக் குறிப்பிலே 2005–2006–ல் அரைவைப் பருவத்தில் 62.68 இலட்சம் டன்கள் கரும்பு அரைவை செய்யப்பட்டு 5.87 இலட்சம் டன்கள் சர்க்கரை புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே உற்பத்தி செய்யப்பட்டது என உள்ளது.

முற்பகல் 10–00

மேலும், எங்களுக்குக் கொடுத்துள்ள கொள்கைக் குறிப்பின்படி 2006–2007–ல் இந்த ஆலைகள் 46.7 இலட்சம் டன்கள் கரும்பைத்தான் அரைவை செய்து 4.54 இலட்சம் டன்கள் சர்க்கரைதான் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். சேலம் மற்றும் அமராவதி சர்க்கரை ஆலை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த சர்க்கரை ஆலை துவக்கப்பட்டது, அவர்களுடைய அம்மா ஆட்சியிலே, அருணா சர்க்கரை ஆலை என்ற பெயரிலே எங்கள் பகுதியிலே துவக்கப்பட்டது. இரண்டு ஆண்டு காலம் ஓடி, அந்த சர்க்கரை ஆலை இழுத்து மூடப்பட்டு, இந்த 4 ஆண்டு காலம் அந்த

விவசாயிகளுக்கு எல்லாம் அந்த ஆட்சியில் பணம் கொடுக்காமல் இருந்து, அந்த விவசாயிகள் இன்று வரையிலும் கரும்பு வெட்ட முடியாத சூழ்நிலையில் இருந்து, தலைவர் கலைஞருடைய ஆட்சியில்தான் இப்போது ஐந்து சர்க்கரை ஆலைகளுக்கு, இன்றைக்கு அதையெல்லாம் பிரித்துக் கொடுத்திருக்கிறோம் என்பது அந்த ஆட்சியினுடைய அவல நிலையைக் காட்டுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

**முனைவர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அவர்கள் என்ன புள்ளிவிவரம் கொடுத்திருக்கிறார்களோ அதைத்தான் படித்துக்கொண்டிருக்கிறேன். இன்னொன்றையும் சொல்லியிருக்கின்றார்கள். சேலம் மற்றும் அமராவதி சர்க்கரை ஆலையில் 2005–2006 அரைவைப் பருவத்தில் 83.13 இலட்சம் லிட்டர் ஆல்கஹால், அதாவது சாராயம், உற்பத்தி செய்யப்பட்டது. இது எங்களுடைய ஆட்சிக் காலத்தில். ஆனால், இப்போது 2006–2007 அரைவைப் பருவத்தில் 221.49 இலட்சம் லிட்டர் ஆல்கஹால், அதாவது சாராயம், இந்த ஆட்சியில் உற்பத்தி செய்யப்பட்டது. இதில்தான் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. சர்க்கரை உற்பத்தியில் முன்னேற்றம் ஏற்படவில்லை என்பதை உங்களுக்கு சபையிலே சொல்ல விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே ரூ.5,114 இலட்சத்திற்கு உப்பு விற்பனை செய்யப்பட்டது. 1996 முதல் 2000 வரை ரூ.2,232.28 இலட்சத்திற்குத்தான் உப்பு விற்பனை செய்யப்பட்டது. ஆனால், நீங்கள் கொடுத்த புள்ளிவிவரத்தின்படியே பார்த்தால், 2005–2006 ஆம் ஆண்டிலே 94,163 டன் உப்பானது விற்பனை செய்யப்பட்டிருக்கிறது புரட்சித் தலைவி அம்மா ஆட்சியிலே. ஆனால், இப்போது உங்களுடைய ஆட்சியிலே, 2006–2007 ஆம் ஆண்டிலே 93,734 டன் உப்புதான் விற்பனை செய்யப்பட்டிருக்கிறது. உப்பைக்கூட உங்களால் அதிகமாக விற்பனை செய்ய முடியவில்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

தமிழ்நாடு கனிம நிறுவனத்தில்கூட இதேபோன்ற நிலைப்பாட்டைத்தான் காண்கின்றோம். 1996–2001 வரை கிரானைட் பாறைகளின் உற்பத்தி 87,559 சதுர மீட்டர் மட்டுமே. ஆனால், 2001–2005 முடிய மொத்தம் 1,55,252 சதுர மீட்டர் கிரானைட் பாறைகள் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளன என்பதை இங்கே பணிவுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அம்மாவின் ஆட்சியில் விற்பனை ரூ.412.63 கோடி அளவுக்காகும்.



ஆனால், தி.மு.க. ஆட்சியில் விற்பனை செய்யப்பட்டது ரூ.258.40 கோடி அளவுக்கு மட்டுமே.

சிப்காட்டைப்பற்றி கொள்கை விளக்கக் குறிப்பில் விளக்கம் கொடுத்திருக்கின்றீர்கள். சிப்காட்டிலே பல பகுதிகளைப் பார்த்தால் நிலமானது கையகப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால், ஏற்ற முறையிலே, பயன்படும் வகையிலே, பயன்படுத்துகிறவர்களுக்கு, தொழில் செய்பவர்களுக்கு இன்னும் அந்த நிலங்களை எல்லாம் பெரும்பாலும் பகிர்ந்தளிக்கவில்லை என்ற புள்ளிவிவரம் உங்களுடைய குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. அதுவும், 50 சதவிகிதத்திற்கு மேலாக தொழில் முனைவோருக்குத் தரப்படாமல் இருக்கிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முனைவர் தம்பிதுரை, நேரம் முடிந்தது.

**முனைவர் மு. தம்பிதுரை:** உரையை முடித்துவிடுகிறேன், முடித்துவிடுகிறேன். கிராமப்புறங்களில் தொழிற்சாலைகளை அமைப்பதன்மூலமாகத்தான் கிராமப்புற வளர்ச்சி ஏற்படும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரம் முடிந்தது. உங்களுக்கு ஒதுக்கப்பட்டது 15 நிமிடங்கள். 9–48–க்குப் பேச ஆரம்பித்திருக்கிறீர்கள்.

**முனைவர் மு. தம்பிதுரை:** ஒரே ஒரு கருத்தைச் சொல்லிவிடுகிறேன். உயர் கல்வித் துறைபற்றி ஒரு கருத்தை அப்போதே, மாண்புமிகு அமைச்சர் சொல்லும்போதே, சொல்ல வேண்டும் என்று விரும்பினேன். மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் புதிய ஒரு கல்வி முறையை இப்போது தமிழகத்திலே உள்ள கலைக் கல்லூரிகளில் புகுத்தியுள்ளார்கள். அதாவது shift system. Shift system என்ற முறையை 60 கலைக் கல்லூரிகளில் புகுத்தியிருக்கிறார். தொழில் வளர்ச்சிக்கும், உயர் கல்விக்கும் தொடர்பு உண்டு.

பேசுவதற்கு வாய்ப்பு அளித்ததன் காரணமாக இந்தத் துறை குறித்து ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். Shift system என்பது அரை நாள் கல்லூரிதான். முன்பு அரை நாள் பள்ளிக்கூடத்தை மூதறிஞர் இராஜாஜி அவர்கள் கொண்டு வந்தார்கள். அதுபோல இப்போது அரை நாள் கல்லூரி என்பதை மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். அதாவது, சில மாணவர்கள் அரசுக் கல்லூரிகளில் காலை எட்டு மணியிலிருந்து ஒரு மணி வரை படிப்பார்கள்; மற்ற மாணவர்கள் ஒன்றரையிலிருந்து ஆறரை மணி வரை படிப்பார்கள். ஆனால், அரசு உதவி பெறும்

கல்லூரிகளிலும், சுய நிதிக் கல்லூரிகளிலும் காலை ஒன்பது மணியிலிருந்து மாலை நான்கரை மணி வரையிலும் முழு நேரமாக வகுப்புகள் நடக்கும். ஆகவே, தமிழகத்தில் ஒரு சிலருக்கு, குறிப்பாக அரசுக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு, ஒரு மாதிரியும், வசதி படைத்தவர்களுக்கு எல்லாம் வேறு மாதிரியும் உயர் கல்வியானது கிடைக்கும். கல்லூரிகளில் இலவசக் கல்வி என்று சொல்லிவிட்டு, மாணவர்களைப் பாதி நேரம் படிக்க வைப்பது என்ன நியாயம்? அதனால் கல்வியின் தரம் உயருமா? இப்போது பார்த்தீர்கள் என்றால் Computer, Bio–technology போன்ற course எல்லாம் படிக்கும்போது ஒரு கல்லூரி மாணவர், கல்லூரியில் முழு நேரம் இருப்பதன்மூலமாகத்தான் ஆசிரியரிடம் கல்வி பெறுவதற்கு நல் வாய்ப்பு இருக்கும். மாண்புமிகு அமைச்சராக இருக்கட்டும், நானாக இருக்கட்டும், நாங்கள் எல்லாம் முழு நேரம்தான் கல்லூரியில் படித்திருக்கிறோம். ஆகவே, நீங்கள் தரத்தை உயர்த்துவோம் என்று சொல்லி, எண்ணிக்கையை மட்டும் உயர்த்தியிருக்கின்றீர்கள். தரம் உயர வாய்ப்பில்லை. கல்லூரிக் கல்வியின் தரம் குறைந்துவிடும். ஆகவே, நம்முடைய மாணவர்கள் அனைவரும் நன்றாகப் படிப்பதற்கு, முழுநேரக் கல்லூரியே நல்லது. கல்லூரியில் shift system முறையினால் நல்ல தரமான கல்வியை மாணவர்களுக்குத் தரமுடியாது.

*முற்பகல் 10–05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ். (குறுக்கீடு) திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ். (குறுக்கீடு) மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கல்லூரியையெல்லாம் நடத்திக் கொண்டிருப்பவர்; தவறாகப் புரிந்துகொண்டிருக்கிறார்; அது அரை நாள் கல்லூரி அல்ல. எந்த முழுநேரக் கல்லூரியாக இருந்தாலும், 5 மணி நேரம் வகுப்புகள் நடக்கும். அது 9–00 மணிக்கு ஆரம்பித்தாலும், 4–00 மணிக்கு ஆரம்பித்தாலும், ஒரு நாளைக்கு 5–00 மணி நேரம் வகுப்புகள் நடக்கும். அதேபோல, காலையிலே 8–00 மணியிலிருந்து 1–00 மணி வரையென்றாலும், 5 மணி நேர பாடம் நடக்கும். அது அரைநாள் கல்லூரி அல்ல. காலையிலே ஒ shift; மாலையிலே ஒரு shift. நீங்கள் நடத்துகிற கல்லூரியிலே எத்தனை மணி நேரம் நடத்துகிறீர்களோ, அதே நேரம்தான் அங்கே நடக்கு ஆகவே, இதிலே எந்தவிதமான தவறும் கிடையாது. இது ...



உருவாக்கப்பட்டிருக்கிற ஒன்றுதான். தனியார் கல்லூரிகளிலே இப்போது இதுமாதிரி நடத்துகிறார்கள். Jamal Mohamed College, Trichy போன்ற கல்லூரிகளில் எல்லாம் காலை, மாலை வகுப்புகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதை un–official–ஆக நடத்திக் கொண்டிருக்கிறார்கள். தனியார் கல்லூரிகளிலும் இதுபோல நடத்த முன்வந்தால், அவர்களுக்கு அனுமதி கொடுப்பதற்கு இந்த அரசுக்கு எந்தவிதமான வேறுபட்ட கருத்தும் கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ். (குறுக்கீடு)

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. பீட்டர் அல்போன்ஸ், அனுமதிக்கப்பட்ட நேரம் 15 நிமிடங்கள்தான்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007–2008 ஆம் ஆண்டிற்கான தொழில் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை மானியக் கோரிக்கைகளின்மீது, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாகக் கருத்துகளை வழங்குவதற்கு அனுமதி தந்த காங்கிரஸ் கட்சிக்கும், உங்களுக்கும் என்னுடைய நெஞ்சம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பழுத்த அனுபவமும், கூர்த்த மதியும், எல்லோரையும் ஒருங்கிணைக்கும் அணுகுமுறையும், விருப்பு வெறுப்பற்ற மன நிலையும், பிரச்சினைகளைப் புரிந்துகொள்ளும் மனப் பக்குவமும், சேரவேண்டிய இடம், நோக்கம் குறித்து குழப்பமற்ற சிந்தனையுமுடைய நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய தலைமையில், (மேசையைத் தட்டும் ஒலி) வழிகாட்டுதலில் செயல்படும் நமது தொழில் துறை, கடந்த 10 மாதங்களில் பல நிறைவான சாதனைகளைச் செய்துள்ளது.

கடந்த சுமார் 9 மாதங்களில், சுமார் 7 ஆயிரம் கோடி ரூபாய் அளவில் மொத்த முதலீட்டுடன், 90 ஆயிரம் பேர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு உருவாகின்ற வகையில், இந்திய மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடன் இந்த அரசு ஏழு புரிந்துணர்வு ஒப்பந்தங்களை ஏற்படுத்திக் கொண்டுள்ளது. Motorola cell phone, Apollo Tyres, Tessolve நிறுவனத்தினுடைய Integrated Circuit Chips உற்பத்தி, Dell Computer தொழிற்சாலை, Growth Link Overseas நிறுவனத்தினுடைய காலணி உற்பத்திச் சிறப்புப் பொருளாதார மண்டலம், Samsung

Electronics தொழிற்சாலை, Mahindra and Mahindra கூட்டமைப்பு நிறுவனத்தினுடைய வாகனத் தொழிற்சாலை என்று பல்வேறு தொழில் முயற்சிகளுக்குத் தமிழகத்தினுடைய கதவுகளைத் திறந்துவிட்டு, பல்லாயிரக்கணக்கான படித்த இளைஞர்களுக்கும் வேலைவாய்ப்பினை உருவாக்குகின்ற வகையிலே, இந்த அரசு ஓர் ஆன்ம சுத்தியோடு தன்னுடைய முயற்சிகளை மேற்கொண்டு வருவதைக் கடந்த 9 மாதங்களாகச் சாட்சிகளாக இருந்து பார்க்கக்கூடிய வாய்ப்பினை நாங்கள் பெற்றிருக்கிறோம்.

இந்தியாவெங்கும் உள்ள மாநிலங்கள், முதலீடுகளைத் தங்களை நோக்கி ஈர்ப்பதற்குப் பெரும் முயற்சிகளை எடுத்துக்கொண்டு, ஒன்றுடன் ஒன்று போட்டி போட்டுக் கொண்டிருக்கின்றன. ஒரு அரசினுடைய வெற்றி அல்லது ஒரு முதலமைச்சருடைய வெற்றி அல்லது அவரது ஆட்சியின் தரத்தை நிர்ணயிப்பதில் அந்த மாநிலம் பெற்றுள்ள புதிய தொழில் வரவுகள், முதலீடுகள் பெரும் பங்கு வகிக்கின்றன.

தொழிலதிபர்கள் முதலமைச்சர்களையும், அரசு நிர்வாகத்தையும் தேடிவந்து, சுற்றிச் சுற்றி வந்த காலம் மாறி, அரசும், முதலமைச்சரும், அரசு நிர்வாகமும், தொழில் முனைவோரைத் தேடிச் சென்று சந்திக்கின்ற காலம் இந்தக் காலம். கால மாற்றத்தின் தேவைகளையும், புதிய சூழ்நிலைகளையும் உடனடியாக உணர்ந்துகொள்கின்ற நம்முடைய முதல்வர் அவர்கள், தொழில் முன்னேற்றத்திற்கேற்ப புதிய அணுகுமுறையை இந்த அரசின் இரத்தத்தில் பாய்ச்சியுள்ளார் என்பதை யாரும் மறுக்கமுடியாது.

கடந்த சில மாதங்களாக, நம்முடைய அரசினுடைய தொழில் துறை இரவு நேரங்களிலேகூட விழித்திருந்து வேலை செய்வதாக நாங்கள் கேள்விப்படுகிறோம். வெளிநாட்டைச் சார்ந்த முதலீட்டாளர்களும், இந்தியாவின் பல பாகங்களிலிருந்து வருகின்ற பெரிய முதலீட்டாளர்களும், தமிழக அரசினுடைய அதிகாரிகளையும், அரசு நிர்வாகத்தையும் மட்டுமல்ல; தமிழகத்தினுடைய முதலமைச்சரைக்கூட நினைத்த நேரத்திலே சந்திக்கமுடியும் என்கிற தகவல் (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியா . முழுவதும் இருக்கின்ற தொழில் முனைவோர்களுடைய வளையத்திற்குள் வேகமாகச் சென்று, இந்தியாவிலே இருக்கின்ற தொழில் முனைவோர்களை எல்லாம், நம்முடைய மாநிலத்திற்குப் பற்றி இழுக்கின்ற அந்தக் காட்சியை, ஏதோ இங்கே பெருமைக்காக, ஒப்புக்காகச் சொல்லவில்லை; ஒரு ஆதாரத்தோடு சொல்ல விரும்புகிறேன்.



Indian Express பத்திரிகை 27–4–2007 அன்று ஓர் அற்புதமான செய்தியை வெளியிட்டிருந்தது. "Andhra Pradesh has lost to neighbouring Tamil Nadu, a mega automobile unit, that was planned to come up in the backward Telengana region. Having failed to secure a firm commitment from the State Government on infrastructural facilities, automobile major Mahindra & Mahindra which wished to set up a new facility with an investment of Rs.500 crore adjacent to its existing unit at Zaheerabad in Medak District, finally shifted the proposed unit to Tamil Nadu".

*முற்பகல் 10–10*

ஆந்திராவிலே ஏற்கெனவே, பெரிய தொழிற்சாலை வைத்துக்கொண்டிருக்கக்கூடிய Mahindra & Mahindra என்கிற அந்த மிகப் பெரிய நிறுவனம், ஆந்திர அரசினுடைய அழைப்பையும், அங்கே அளிக்கப்பட்ட பல்வேறு சலுகைகளையும் மீறித் தமிழகத்திற்கு வந்து, புதிதாகத் தன்னுடைய தொழிற்சாலையைத் துவங்க முன்வருகிறது என்று சொன்னால், இந்த அரசு அவ்வளவு அனுசரணையான சமிக்ஞைகளை இந்தியாவினுடைய தொழில் உற்பத்திக்குச் செய்துகொண்டிருக்கிறது என்பதை நான் கூற ஆசைப்படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வெளிநாட்டுத் தொழில் முனைவோர்கள் நம்முடைய தமிழகத்திற்கு வந்து நம்முடைய முதலமைச்சரைச் சந்தித்து, புரிந்துணர்வு ஒப்பந்தத்திலே கையெழுத்திட்டு வெளியே வந்தவர்களில் ஒரு வெளிநாட்டு நிபுணர் சொன்ன அந்த வார்த்தைகளை நான் இந்த மன்றத்திலே பதிவு செய்வது அவசியம் என்று எண்ணுகிறேன். "The Political Executive of Tamil Nadu is receptive, understanding, accommodative and transparent" என்று சொல்லியிருக்கிறார். இதைவிட நல்ல பாராட்டுரைகளை யாராவது கொடுக்க முடியுமா என்று எனக்குத் தெரியவில்லை. வெளிநாடுகளிலிருந்து தொழில் முதலீடு செய்ய வருகின்றவர்கள் நம்மிடம் வேறு எந்தச் சலுகையும் எதிர்பார்க்கவில்லை. அவர்கள் எதிர்ப்பார்ப்பு என்பதெல்லாம், எப்பொழுதும் பேசுவதற்கும், அவர்கள் சொல்லுகின்ற பிரச்சினைகளைப் புரிந்துகொள்ளுவதற்கும், அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கும் ஒரு நிருவாகம் தயாராக இருக்கிறது என்ற ஒரு சின்ன செய்தி மட்டுமே. தமிழகத்திலே இருக்கின்ற பல்வேறு மாவட்டங்களிலே இருக்கின்ற தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கின்ற வகையிலே பல்வேறு முதலீடுகள் வரும்.

இங்கே எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் முனைவர் மு. தம்பிதுரை அவர்கள் சில புள்ளிவிவரங்களைத் தந்தார்கள். ஆனால், என்னிடம் இருக்கின்ற புள்ளிவிவரங்கள் அதற்கு மாறான தகவல்களைத் தருகின்றன. ஆகவே, இந்தப் புள்ளிவிவரங்களுக்கும் அவர் விளக்கம் சொல்லவேண்டுமென்று நான் எதிர்பார்ப்பது முறை என்றே கருதுகின்றேன். அவரும் பதில் சொல்வார் என்று எண்ணுகிறேன்.

கடந்த 2001–2005–ல் தமிழகத்திலே இருக்கின்ற வேலைவாய்ப்பு குறைவாக இருப்பதாக—நான் சொல்லவில்லை—அந்த அரசாங்கத்திலே பணியாற்றிய அரசுத் துறை, The Commissionerate of Employment and Training, Government of Tamil Nadu ஒரு புள்ளிவிவரத்தை வெளியிட்டிருக்கிறது. அந்தப் புள்ளிவிவரத்தின்படி, 2001 ஆம் ஆண்டு தமிழ்நாட்டிலே employment in organised sector—6,08,762 பேர். ஆனால், அந்த ஆட்சி முடிந்துபோகின்றபோது 2005 ஆம் ஆண்டு அந்த வேலைவாய்ப்பு விகிதம் குறைந்து employment in organised sector 2004–2005 ஆம் ஆண்டு 5,91,499 பேர்.

ஐந்து ஆண்டுகளிலே இவ்வளவு பெரிய முதலீடுகள் வந்திருக்கின்றன என்று சொல்கிறார்கள். தொழில் கொள்கையை நாங்கள்தான் இந்த நாட்டிலே, தமிழ்நாட்டிலே முதல்முதலாகப் போட்டோம்; அதற்குப்பிறகு வேறு தொழில் கொள்கைகளே வரவில்லை; அதற்குப் பிறகு முதலீடுகளின் கதவுகளையெல்லாம் அடைத்துவிட்டீர்கள் என்று சொன்னார்கள். தொழில் முனைவோரின் பொற்காலம், தொழில் முதலீட்டின் பொற்காலம் என்று அவர் சொன்ன அந்த நாட்களிலே—நான் கொடுக்கிற தகவல்கள் என்று சொன்னால் மாறுபட்ட தகவலாக இருக்கலாம். ஆனால், அதே ஆட்சியிலே பணியாற்றிய அந்த Commissionerate of Employment and Training என்ன சொல்கிறதென்று சொன்னால்—அந்த 4 ஆண்டுகளிலே 2001–லிருந்து 2005 வரை, ஏறக்குறைய ஒன்றரை விழுக்காடு வேலைவாய்ப்பிலே குறைவு என்பதை ஆதாரங்களோடு சுட்டிக்காட்டுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

இவைமட்டுமல்ல. 2005 ஆம் ஆண்டிலே 'The Industrial Economist' என்ற பத்திரிகை எழுதிய வாசகத்தை மட்டும் பதிவு செய்து கடந்த காலத்திலிருந்து நான் நிகழ்காலத்திற்கு வர ஆசைப்படுகிறேன். கடந்த காலத்தைப் பற்றியே பேசுவதற்கு இந்த மன்றம் பொருத்தமான இடமல்ல. வரும் காலத்தில் என்ன செய்யவேண்டும் என்பதைப்பற்றி நாம் அதிகமாகப் பேச வேண்டும். ஆகவே, இந்த ஒரு பதிவோடு மட்டும் நான் அடுத்த விஷயத்திற்குப் போகிறேன்.



"The euphoria created by the Tamil Nadu Government's announcement of a slew of infrastructure projects in the State has ebbed, if not died down. Contracting and engineering companies who had been looking at consolidating their presence in the State, after it attracted a handful of overseas multinational companies interested in establishing their manufacturing base in the State, are sore about the Tamil Nadu Government's slow progress".

இது நான் சொன்ன வார்த்தைகள் அல்ல. இந்தியா முழுவதும் தொழில் முனைவோர்களால், தொழிற்சாலைகளால் மிகப்பெரிய வணிக நிறுவனங்களால் அங்கீகரிக்கப்பட்டு, தினசரி படிக்கப்பட்டு விவாதிக்கப்படுகின்ற 'The Industrial Economist' என்கிற பத்திரிகை 2005 ஆம் ஆண்டு தமிழகத்தைப்பற்றி, தமிழகத்தினுடைய தொழில் நிலையைப்பற்றி, பதிவு செய்த வரிகளைத்தான் நான் இங்கே பதிவு செய்கிறேன்.

ஒரு புதிய தலைமுறைக்காக, ஒரு புதிய வழிகாட்டுதலுக்காக இன்று தமிழகம் நம்முடைய முதலமைச்சரை எதிர்நோக்கியிருக்கிறது. நம்முடைய பல்வேறு முயற்சிகளாலே தமிழகத்தில் ஆண்டுதோறும் வருடத்திற்கு 80,000 பொறியியல் பட்டதாரிகளை நாம் உற்பத்தி செய்கிறோம். நம்முடைய பொறியியல் கல்லூரிகளிலிருந்து ஏறக்குறைய 80,000 பொறியியல் பட்டதாரிகள் ஆண்டுதோறும் வெளியே வருகிறார்கள். 60,000 பட்டயப் படிப்பாளர்களும் (Diploma holders) வெளியே வருகிறார்கள். Skilled graduates and diploma holders ஏறக்குறைய 1,50,000 பேர் ஆண்டுக்கு வெளியே வருகிறார்கள். இப்படி வெளியே வருகின்றவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுப்பதற்காகத்தான் இந்தத் தொழில் துறையை வளர்க்க வேண்டுமென்று எண்ணுகிறோம்.

முற்பகல் 10–1

அரசினுடைய தொழில் கொள்கை, தொழில் கொள்கை என்று சொல்கிறார்களே, இந்த அரசினுடைய தொழில் கொள்கையினுடைய நோக்கம் என்னவாக இருக்கவேண்டும் என்று சொன்னால்—சில தனிப்பட்ட செல்வந்தர்களை உருவாக்குவதற்காகவோ, சில தனிப்பட்ட தொழில் முனைவோர்களை உருவாக்குவதற்காகவோ இந்த அரசு தொழில் கொள்கை இயற்ற வேண்டாம். இந்தியாவிலே தமிழகத்தை மிகப் பெரிய பணக்கார மாநிலமாக ஆக்குவதற்கான தொழில் கொள்கையை நாம் நிறைவேற்ற வேண்டாம்—நாம் நிறைவேற்றுகின்ற தொழில் கொள்கை எப்படி இருக்க வேண்டுமென்று சொன்னால் இந்த இந்திய நாட்டிலே, அதிலும் தமிழகத்திலே, வேலை செய்ய

தகுதி படைத்திருக்கின்ற 3 கோடி பேருக்கு வேலைவாய்ப்பை உருவாக்கக்கூடிய தொழிற்சாலைகளை உருவாக்குகிற தொழில் கொள்கைகளை நாம் வகுக்க வேண்டும்.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு அந்த உணர்வுகளும் அந்த எண்ணங்களும் உண்டு என்பதிலே எனக்கு நிச்சயமாக மாற்றுக் கருத்து இல்லை. நான் புள்ளிவிவரத்திற்காகச் சொல்லுகிறேன். தமிழகத்தினுடைய மொத்த ஜனத்தொகை இந்த ஆண்டு 659.39 இலட்சம், இதில் வேலை பார்க்கத் தகுதி பெற்றவர்கள்—**ஆங்கிலத்தி**லே இதை work force என்று அழைக்கிறோம்—அது 332.50 **இலட்சம்**, அதாவது 50.43 விழுக்காடு. இது, இந்த ஆட்சியினுடைய **தொடக்கத்**திலே. இந்த ஆட்சி ஐந்தாண்டுகளை நிறைவு செய்கிறபோது, 2011–2012–வது ஆண்டிலே இந்த work force, தொழில் செய்யத் தகுதியுடையவர்களுடைய விருப்பமுடையவர்களுடைய எண்ணிக்கை, ஏறக்குறைய 351.51 இலட்சமாக உயரும் என்று நம்முடைய திட்டச் செய்திகள் கூறுகின்றன. ஏறக்குறைய மூன்றரைக் கோடி பேர் வேலை செய்வதற்குத் தயாராக, ஆசைப்படுகின்றவர்களாக இருப்பார்கள்.

இதிலே என்னுடைய கேள்வி, நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் இந்த அரசுக்கும் காங்கிரஸ் கட்சியின் சார்பாக கொண்டுவர விரும்புவது, ஒன்று உள்ளது. இப்போது நாம் அதிகமாக தகவல் தொழில்நுட்பத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறோம். தகவல் தொழில்நுட்பத் துறையில், இந்த ஆண்டு 47 விழுக்காடு தமிழ்நாட்டிலே இந்த software exports, software production அதிகரித்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். 7,000 கோடி ரூபாயிலிருந்து 10,000 கோடி ரூபாய்க்கு வந்துவிட்டதாகச் சொல்லுகிறார்கள். அடுத்த ஐந்தாண்டுகளிலே, அதாவது 2011 ஆம் ஆண்டு, இந்த மென்பொருள் உற்பத்தியும் மென்பொருள் ஏற்றுமதியும் ஏறக்குறைய 12 billion US dollars அளவுக்கு இருக்கும் என்று சொல்லுகிறார்கள். ஆனால், அவர்கள் உருவாக்கப்போகிற வேலைவாய்ப்பு 70,000 பேருக்கு மட்டுமே இந்த 70,000 பேருக்கு வேலைவாய்ப்பை உருவாக்கிக் கொடுப்பதற்கு, இந்தத் தகவல் தொழில்நுட்ப industry-க்கு, இந்த software sector–க்கு நாம் என்ன செய்கிறோம் என்ற சொன்னால், we give them the best of lands, we give them the best of roads, we give them the best of infrastructure facilities, we give them the best of the time of the Government, we give them the best of the time of the Chief Minister. இப்படி நம்மிடம் இருக்கின்ற அத்தனையிலேயும் தலைசிறந்தவைகளை அந்த industry–க்குக் கொடுத்துவிட்டு



அவர்களிடமிருந்து நாம் எதிர்பார்க்கின்றபோது நாம் நினைக்கிற இந்த மூன்றரைக் கோடி பேருக்கு வேலைவாய்ப்பு கொடுப்பதற்கு அந்த sector, industry–யிலிருந்து என்ன கிடைக்கும் என்று எதிர்பார்த்தால் நமக்கு ஏமாற்றமாக இருக்கிறது. ஆகவேதான், இந்த I.T. Sector–ல் மேலும் மேலும் முனைப்பும் கவனமும் செலுத்தி, அந்தக் குறிப்பிட்ட தொழிற்பகுதியை வளர்ப்பதிலே என்ன ஆபத்து இருக்கிறது என்பதை அரசு சற்று ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்று எண்ணுகிறேன்.

இன்னும் அதிகமாகச் சொல்லப்போனால் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய இந்த மூன்று மாவட்டங்களில் மட்டும்தான் தமிழ்நாட்டில் இருக்கின்ற organised labour–ல் 26 விழுக்காடு இருப்பதாகச் சொல்லுகிறார்கள். நான்கூடச் சொன்னேன்; இப்பொழுது வரிசைப்படுத்தி வாசித்தேன். அத்தனைத் தொழிற்சாலைகளுமே இந்த மூன்று மாவட்டங்களுக்குள்ளே உருவாகின்ற காரணத்தினால் சென்னையும் அதன் சுற்றுப்புறமும் மிகப் பெரிய, வாழ்வதற்கே சாதகமில்லாத ஒரு பகுதியாக மாறி வருவதை அரசு உணர வேண்டும். எனவேதான், இந்த முனைப்பையும், இந்த focus–ஐயும் தொழில்முனைவோரின் கவனத்தையும் தொழிற்சாலைகளுடைய குவிப்பையும் தெற்கு நோக்கி நகர்த்த வேண்டும், மேற்கு நோக்கி நகர்த்த வேண்டும் என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

*முற்பகல் 10–20*

இனி சென்னையைச் சுற்றி 70, 80 கிலோ மீட்டர் தூரத்திற்குப் புதிய தொழில் முனைவோர்களையும், புதிய தொழிற்சாலைகளையும் அரசாங்கம் ஊக்குவிக்க வேண்டாம் என்பது காங்கிரஸ் கட்சியின் சார்பாக நான் விடுக்கின்ற வேண்டுகோள். ஏனென்று சொன்னால், மேலும் மேலும் சென்னையைச் சுற்றி வருகின்ற பெரிய பெரிய தொழிற்சாலைகளால்—இன்னும் வருங்காலங்களிலே இந்த I.T. sector என்று சொல்லக்கூடிய அந்த ஒரு குறிப்பிட்ட தொழில் மட்டும், ஏறக்குறைய 11 Billion Dollar முதலீடு சென்னையைச் சுற்றியுள்ள மூன்று மாவட்டங்களைச் சுற்றி நடக்க இருக்கிறது. அப்படி நடக்கும்போது என்ன ஆகிறது என்று சொன்னால்—தென் மாவட்டங்களிலிருந்தும், மற்ற மாவட்டங்களிலேயிருந்தும் மக்கள் பிழைப்பிற்காக வேலை தேடிச் சென்னையை நோக்கி வருகிறார்கள். சென்னையிலே இடப் பற்றாக்குறை, சென்னையிலே சாலைப் பற்றாக்குறை, சென்னையிலே போக்குவரத்து வசதிப் பற்றாக்குறை. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** It is none of your work. நான் பார்க்க வேண்டிய வேலை அது.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனவேதான் இந்த குறிப்பிட்ட பிரச்சினையின்மீது அரசாங்கம் வலுவாகச் சிந்திக்க வேண்டும். உரத்த சிந்தனையோடு இருக்க வேண்டும். அதற்காக Information Technology—தகவல் தொழில்நுட்பம் வேண்டாம் என்பது எங்களுடைய வாதம் அல்ல. இப்போது அந்தத் துறை வளர்ந்திருக்கிற வேகத்தைப் பார்த்தால், தன்னைப்பற்றி கவனத்தில் எடுத்துக்கொண்டு, தன்னை வளர்ப்பதற்கான அத்தனை வசதிகளையும் அதுவே செய்து கொள்ளக்கூடிய அளவிற்கு வளர்ந்திருக்கிறது என்றுதான் நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். ஆகவே, அரசாங்கத்தினுடைய கவனம் எங்கே போகவேண்டுமென்று சொன்னால், புதிதாக வேலைவாய்ப்புகளை அதிகமாக உருவாக்குகின்ற தொழிற்சாலைகளை நோக்கித்தான் அரசாங்கத்தின் கவனம் இருக்க வேண்டும். அதிலும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள், சரியான பாதையிலே செல்வதாகத்தான் நாங்கள் நினைக்கிறோம். ஏனென்று சொன்னால், Automobile Industries என்று சொல்லக்கூடிய வாகனப் போக்குவரத்துத் தொழிலுடைய முகத்துவாரமாக, முதலீட்டு மையமாக சென்னை உருவாகி வருவதைப் பார்க்கிறோம். புதிய புதிய தொழிற்சாலைகள் வந்துள்ளன. இன்று நம்முடைய Hyundai தொழிற்சாலை, வருடத்திற்கு ஏறக்குறைய 3 இலட்சம் கார்களை உருவாக்கக்கூடிய தொழிற்சாலையாக மாறிவருவதாக அறிகிறோம். நம்முடைய முதலமைச்சர் அவர்கள், மத்திய அரசு பொறுப்பேற்றவுடனே வாகன உதிரிப் பாகங்களை சோதனையிடுகிற மிகப்பெரிய மையத்தை இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். இப்படி வாகன உற்பத்தித் தொழிற்சாலைகள் வேண்டும். இதற்கு அடுத்து, Textile Valley என்று சொல்லக்கூடிய . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக இருங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Textile Valley எனப்படும், கோவை மாவட்டத்தைப் பற்றியும், திருப்பூரைப் பற்றியும், நான் பேசுவதைவிட அதிகமாக அருமை நண்பர் கோவிந்தசாமி அவர்கள் பேசுவார்கள் என்று எண்ணுகிறேன். இந்தியாவிலே உற்பத்தியாகின்ற knitwear—பின்னலாடையில் 80 விழுக்காடு திருப்பூர் மாநகரத்திலிருந்து உற்பத்தியாகிறது. அதனால், அதைச் சுற்றியுள்ள மாவட்டங்களிலேயிருந்தும், தென்



மாவட்டங்களிலிருந்தும் வேலை பார்க்கக்கூடிய தகுதி படைத்தவர்கள், அங்கே போகிறார்கள். அதைப்போன்று, வேலைவாய்ப்புகளை அளிக்கக்கூடிய தொழிற்சாலைகள் வேண்டும். அதைப்போல, தோல் பதனிடுகின்ற Tannery Industries தேவை. இன்று இந்தியாவிலே இருக்கின்ற tanning capacity–யில் 80 விழுக்காடு capacity தமிழ்நாட்டிலேதான் இருக்கிறது. ஆனால், பதனிட்ட தோலை ஏற்றுமதி செய்வதற்கான விழுக்காடு 40 விழுக்காடாகக் குறைந்திருக்கிறது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் நண்பர்களுக்கு கடந்த காலத்தைப் பற்றிப் பேசினால்தான் சந்தோஷம். வருங்காலத்தைப்பற்றிப் பேசினால், அவர்களுக்கு. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சரி. நான் பார்த்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) திரு. அன்பழகன், உங்கள் வேலை அதுவல்ல. மற்ற வேலையைப் பாருங்கள். நான் அதைப் பார்த்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) நான் பேசுவதற்கு எனக்கு இன்னும் இரண்டு நிமிடங்கள் இருக்கின்றன. எனவே, இந்தச் சூழ்நிலையிலே இந்தத் தொழிற் கொள்கையைப் பற்றிப் பேசுவதற்குக் கிடைத்த வாய்ப்பினைப் பயன்படுத்தி, நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நெஞ்சாரப் பாராட்ட விரும்புகிறேன். ஒரு சரியான வழித்தடத்திலே இந்தத் தொழில் துறையை ஏற்றி வைத்திருக்கிறீர்கள். அப்படி ஏற்றிவைத்திருக்கிற தொழில் துறையில் ஐந்தாண்டுகளின் நிறைவின்போது, எத்தனை பேருக்கு வேலைவாய்ப்பைக் கொடுத்தோம் என்பதைப் பொறுத்துத்தான் அந்தத் தொழிற் கொள்கையினுடைய வெற்றி இருக்க முடியும். எனவே, எங்களைப் பொறுத்தவரை, நாங்கள் என்ன சொல்கிறோம் என்றால், I.T.—Information Technology—software export—இதைப்போன்ற தொழில்களுக்கு முன்னுரிமை கொடுத்து, அவர்களை ஆதரிக்க வேண்டாம் என்பது எங்களுடைய நிலைப்பாடு அல்ல. ஆனால், அதைவிடப் பன்மடங்கு அதிகமாக, உற்பத்தித் தொழிற்சாலைகளிலே (manufacturing industries) அதிகக் கவனம் செலுத்தவேண்டும்.

இன்னும் அதிகமாகச் சொல்லப்போனால், Agro-based Industries ஆரம்பித்து விவசாயத்தை மையமாக வைத்து, ஆங்காங்கே பல இடங்களிலே விவசாயக் கூலித் தொழிலாளர்களை ஒன்றிணைத்து, அவர்களுக்கு வேலைவாய்ப்புகளைக் கொடுக்கக்கூடிய புதிய Agro Economic Industrial Zones—விவசாய பொருளாதாரத் தொழில்

மண்டலங்களை, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு முழுவதும் உருவாக்க வேண்டும் என்கிற கோரிக்கையை நாங்கள் வைத்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

(முற்பகல் 10–25

இங்கே உறுப்பினர் அவர்கள் நிறைய சொன்னார்கள், கரும்பு ஆலைகளை எல்லாம் எப்படி அவர்கள் வெற்றிகரமாக நடத்தினார்கள் என்று. ஒரு உதாரணத்திற்கு நான் சொல்கிறேன். இங்கே இருக்கின்ற படாளம் சர்க்கரை ஆலை மூடப்பட்டு பல ஆண்டுகள் ஆகிவிட்டன. என்னுடைய அருமை நண்பர் அரியலூரில் இயங்கி வருகின்ற அரசு சிமெண்ட் ஆலை நல்ல இலாபத்தில் இயங்கி வருகிறது என்று சொன்னார். அந்தத் தொழிற்சாலையைப் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் ஒரு கருத்தை இந்த மன்றத்திலே பேசி விவாதத்திற்குரிய பொருளாக்க விரும்பவில்லை. இந்த சர்க்கரை ஆலை நிர்வாகமும், சர்க்கரை இயக்குநரகமும் எப்படி நடந்தன என்பதற்கு அந்த இயக்குநரகத்திலே பணியாற்றுகின்றவர்களே, 2001–இலேயிருந்து அந்த இயக்குநரகம் எவ்வளவு தூரம் இலஞ்சம், ஊழலில் ஊறித் திளைத்தது என்பதற்கு என்னிடம் கையெழுத்திட்டுக் காகிதம் கொடுத்திருக்கிறார்கள். நான் அதை அப்படியே முதலமைச்சரிடம் கொடுக்கிறேன். (குறுக்கீடுகள்) எனவே, ஊழலற்ற. . . (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பீட்டர் அல்போன்ஸ், முடியுங்கள். (கூச்சல்–குழப்பம்) மற்றவர்கள் எல்லாம் உட்காருங்கள். திரு. பீட்டர் அல்போன்ஸ், பேசுங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல் குழப்பம்) நான் பார்க்கிறேன். (குறுக்கீடுகள்) பார்க்கிறேன், நீங்கள் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, வேலூர், செய்யாறு, கள்ளக்குறிச்சி ஆகிய கூட்டுறவு சர்க்கரை ஆலைகளிலே நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் . . . (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர்; (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் உட்காருங்கள். நீங்கள் ஏன் அங்கே பார்த்துக் கை நீட்டுகிறீர்கள்? (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) திரு. பீட்டர் அல்போன்ஸ், முடியுங்கள்.



(இந்திய தேசிய காங்கிரஸ் சட்டமன்றக் கட்சித் தலைவர் திரு. டி. சுதர்சனம் அவர்கள் சில தாட்களைப் பேரவைத் தலைவரிடம் அளித்தார்.)

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று ஒரு வரலாற்றுப் புகழ்மிக்க நாள். இந்த மன்றத்திலே இருக்கின்ற ஒவ்வொருவருக்கும் . . . (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பீட்டர் அல்போன்ஸ், முடியுங்கள். திரு. ஜெயக்குமார், திரு. அக்ரி கிருஷ்ணமூர்த்தி, எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. மலரவன், முதலில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஜெயக்குமார், நான் கூப்பிட்டாலொழிய நீங்கள் எழுந்திருக்கக் கூடாது. முதலில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) No. முதலில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. செ.ம. வேலுசாமி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) No, No, No. உட்காருங்கள், திரு. பீட்டர் அல்போன்ஸ், சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** இதோ முடித்துவிடுகிறேன். இன்று ஒரு வரலாற்றுப் புகழ்மிக்க நாள். இந்த மே மாதம் 8 ஆம் தேதிதான் கடந்த ஆண்டு எங்களது வாக்குப் பெட்டிகள் எல்லாம் விதைகளால் நிறைந்தன. (மேசையைத் தட்டும் ஒலி) ஓர் ஆண்டை நாங்கள் நிறைவு செய்திருக்கிறோம். கடந்த மே மாதம் 8 ஆம் தேதி நாங்கள் பெற்ற வாக்குகள் இன்று விலை தருகின்ற பயிர்களாக இந்த மன்றத்திலே விளைந்து, பொன்விழா காண்கின்ற முதல்வரை எங்கள் கண்களால் காணக்கூடிய பாக்கியத்தை எங்களுக்குத் தந்திருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நல்ல நாளிலே ஒன்றை மட்டும் இறைவனிடம் வேண்டி நிறைவு செய்கிறேன். தமிழகத்தினுடைய எதிர்காலம் கருதி, ஏழை எளிய மக்களுடைய நல்வாழ்வு கருதி, இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் சமூக நல நீதியையும் கருதி, எங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு பணி இருக்கின்ற வரை வாழ்வையும், வாழ்வு இருக்கின்ற வரை பணியையும் தர வேண்டுமென்று வாழ்த்தி அமர்கின்றேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராஜா. நீங்கள் 15 நிமிடத்தில் பேசி முடித்துவிடுங்கள்.

***திரு. எஸ்.ஆர். இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா வழியில், சட்டமன்றத்தில் ஒவ்வொரு மணித்துளியையும் மக்கள் நலனுக்காக, அமைதியாகவும்,

கண்ணியத்தோடும் வாதங்களை எடுத்து வைத்து, 50 ஆண்டு காலமாக அரும் பணியாற்றிவரும் தமிழ் சமுதாயத்தின் ஒப்பற்ற தலைவர் கலைஞர் அவர்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஜனநாயகக் காவலர், கலைஞர் அவர்களுடன், தோளோடு தோள் நின்று தமிழ் உணர்வை ஊட்டி, அரும் பணியாற்றிவரும் மாண்புமிகு இனமான பேராசிரியர் பெருந்தகை அவர்களே, அனைவரையும் அன்போடு அரவணைக்கும் அருளாளர் அண்ணன் மாண்புமிகு ஆற்காட்டார் அவர்களே, நெருக்கடி நிலை எனும் இரத்தத் தடாகத்தில் பூத்த குறிஞ்சி மலர், இலட்சோப இலட்ச இளைஞர்களை வழிநடத்தும், நாளைய சமுதாயத்தின் நம்பிக்கை நட்சத்திரம் மாண்புமிகு அண்ணன் எங்கள் தளபதி அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) இன்றையதினம் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொழிற்சாலைகளுடைய வளர்ச்சியைப்பற்றிப் பேசுவதற்காக வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நேரத்திலே உங்களுக்கு என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1996–ல் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் தொலைக்காட்சிமூலம் நாட்டு மக்களுக்கு ஒரு அறிவிப்பை வெளியிட்டார்கள். குடிப்பதற்குக் குடி தண்ணீரும், அடிப்படை வசதிகளும், மின்சார வசதிகளும், ஏழை எளிய மக்களுக்கு செய்து தருவேன் என்று சொன்னார்கள்.

*முற்பகல் 10–30*

சொன்ன பணியை நிறைவேற்றினாரா என்றால்—அன்றைக்கு உள்ளாட்சித் துறை அமைச்சராக அண்ணன் திரு. கோ.சி. மணி அவர்கள் அந்த 5 ஆண்டுகளிலே பொறுப்பேற்றிருந்தார்கள்—நாட்டுமக்களுக்கு முதலமைச்சர் அவர்கள் அன்றைக்கு என்னென்ன பணிகளைச் செய்வதாகச் சொன்னார்களோ, அந்தப் பணிகளை அனைத்து கிராமங்களுக்கும், அனைத்து நகர்ப்புறங்களுக்கும், செய்து காட்டிய முதல்வர்தான் நம்முடைய முதல்வர், தலைவர் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்க்கட்சி உறுப்பினர்கள் உட்பட, இங்கே இருக்கின்ற அனைவரும் நன்கு உணர்வார்கள்.

2001 ஆம் ஆண்டிலே முன்னாள் முதலமைச்சர் அவர்கள், இன்றைக்கு எதிர்க்கட்சித் துணைத் தலைவராக இருக்கின்றவருடைய தலைவி அவர்கள், நாட்டுமக்களுக்கு தொலைக்காட்சியிலே ஒரு கருத்தைச் சொன்னார்கள். குடிப்பதற்கு தண்ணீரும், நாட்டுமக்களுக்குத்



தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையிலே, தமிழ்நாட்டை இந்தியாவிலே முதல் மாநிலமாக ஆக்குவேன் என்று அன்றைக்கு நாட்டுமக்களுக்குத் தொலைக்காட்சியிலே சொன்னார்கள். அப்படிச் சொன்ன முன்னாள் முதலமைச்சர் அவர்கள் அதைச் செய்தாரா என்று பார்த்தால் செய்யவில்லையென்பது அனைவருக்குமே தெரியும்.

தாம்பரம் தொகுதி என்பது தொழிற்சாலைகளின் வளர்ச்சியும், தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியும் நிறைந்துள்ள பகுதி. அதை ஒட்டியே, அதை இணைத்தே, என்னுடைய சில கருத்துகளை உங்கள் மத்தியிலே எடுத்துச் சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். நான் சொல்வதைவிட இந்தியா டுடே பத்திரிகை ஒரு ஆய்வு செய்தது. அந்த ஆய்வின் முடிவு என்னவென்றால், முன்னாள் முதலமைச்சர் இந்தியாவிலே 19–வது இடத்தில் இருந்தார் என்பதை நீங்கள் அனைவருமே பார்த்திருப்பீர்கள்.

தாம்பரம் தொகுதியில் சோழிங்கநல்லூரிலே மத்திய அரசாங்கமும், மாநில அரசாங்கமும், டாடா நிறுவனமும் சேர்ந்து அமைக்கவுள்ள சிங்கப்பூர் காரிடர் என்ற ஒரு தொழிற்கூடம் சற்றேறக்குறைய இரண்டாயிரம் கோடி ரூபாய் முதலீட்டிலே வர இருந்தது. அதிலே, சற்றேறக்குறைய நேரிடையாக 20 ஆயிரம் மக்களும், மறைமுகமாக 10 ஆயிரம் மக்களும், ஆகமொத்தம், 30 ஆயிரம் மக்கள் பணியாற்றுகின்றவகையிலான அந்தத் தொழிற்கூடம் இன்றைக்கு கர்நாடகா மாநிலத்திற்குச் சென்றிருக்கிறது என்று சொன்னால், நாட்டு மக்களுக்கு செய்த பணியை, வளர்ச்சியைப்பற்றி இவர்கள் பேசுவதற்கு என்னவிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டும்தானா என்று சொன்னால் இல்லை. ஒரு தனியார் ஷூ கம்பெனி, தைவான் நாட்டைச் சேர்ந்த அப்பாச்சி என்ற ஒரு நிறுவனம், சற்றேக்குறைய 300 கோடி ரூபாய் முதலீட்டிலே, வரவிருந்த அந்தக் கம்பெனி, இன்றைக்கு தடாவிற்கு மாற்றப்பட்டு, அந்தக் கம்பெனி அங்கே வெற்றிகரமாக செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. வருகின்ற கம்பெனியையும் இவர்கள் புறக்கணித்தார்கள். நல்ல நிலைமையிலே ஓடிக்கொண்டிருந்த நம்முடைய அரசாங்க முதலீட்டிலே இருக்கின்ற அந்த ஸ்பிக் நிறுவனத்தின் பங்குகளை இவர்கள் குறைந்த விலைக்கு விற்று அதன்மூலமாக சற்றேறக்குறைய 40 கோடி ரூபாய் இழப்பை அரசாங்கத்திற்கு அன்றைக்கு ஏற்படுத்தினார்கள்.

அதுமட்டும்தானா என்று பார்த்தால் இல்லை. இங்கே பேசிய நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. தம்பிதுரை அவர்கள் சொன்னார்கள் எந்தெந்தத் தொழிற்சாலைகள் எல்லாம் வந்தன என்று. அவர்கள் சொன்ன தொழிற்சாலைகள் அத்தனையும் தாம்பரம் தொகுதியிலே அடங்கிய தொழிற்சாலைகள் என்ற காரணத்தால் சொல்கிறேன். நீங்கள் சிமெண்ட் விலையைப் பற்றி இங்கே பேசினீர்கள். அதேபோல ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிற்சாலை என்ற ஒரு தொழிற்சாலை இருந்தது. அந்தக் காலத்திலே தொழிற்சாலை என்று சொன்னால் ஒரு நான்கு, ஐந்து தொழிற்சாலைகள்தான் இருந்தன. அதிலே ஒரு தொழிற்சாலை ஸ்டாண்டர்டு மோட்டார் கம்பெனி தொழிற்சாலை. இன்றைக்கு நிலம் மட்டும் சற்றேக்குறைய 150 கோடி ரூபாய்க்கு செல்கின்ற அந்தத் தொழிற்சாலையை ஒரு தனியார் முதலாளி பெற்றுக்கொண்டு, அதில் இரண்டு கோடி ரூபாய் முதலீடு செய்து, அந்தத் தொழிற்சாலையை மூடி, சற்றேறக்குறைய 3,000 தொழிலாளர்கள் நடுத்தெருவிலே நின்று, பல பேர் உயிர் இழந்திருக்கிறார்கள் என்பதும் அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

அடுத்து சிமெண்ட் ஆலை. அந்த சிமெண்ட் ஆலைகளைக் காப்பாற்றிய பெருமை யாருக்கு இருக்கிறது என்று சொன்னால், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் இல்லையென்று சொன்னால், அன்றைக்கு அந்தத் தொழிற்சாலையை ஒரு தனியாருக்கு விற்றிருப்பார்கள். இருப்பதோ ஒரு ஐந்து, ஆறு தொழிற்சாலைகள். அந்தத் தொழிற்சாலைகளில் ஒரு தொழிற்சாலை உங்களுடைய ஆட்சிக் காலத்திலே போய்விட்டது. இன்னும் இரண்டொரு தொழிற்சாலை வேறு மாநிலத்திற்குப் போய்விட்டது. வந்திருக்கின்ற இந்தத் தொழிற்சாலையை திராவிட முன்னேற்றக் கழகம்தான் காப்பாற்றியது என்று சொன்னால், அதை யாரும் மறுக்க முடியாது. இன்றைக்கு தொழில் துறையின் வளர்ச்சியாலே நம்முடைய தமிழகத்திற்கு, உலகத்திலே இருக்கும் பெரிய தொழில் நிறுவனங்கள் எல்லாம் படையெடுத்து தொழில் அமைக்க வரிசையாக வருகிறார்கள் என்றால், அதற்கான அந்தச் சூழ்நிலையை ஏற்படுத்திய காரணங்களை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும்.

முற்பகல் 10–35

எத்தனை நிறுவனங்கள் வந்திருக்கின்றன, வருவதற்குக் காத்துக்கொண்டிருக்கின்றன என்பதெல்லாம் நமக்குக் கொடுத்திருக்கின்ற புத்தகத்திலே இருக்கின்றது. எனவே, காலத்தின் அருமையைக் கருதி அந்த விவரங்களைச் சொல்லத் தேவையில்லை.



அவற்றையெல்லாம் மக்களும் நன்கு அறிவார்கள். இன்று இதற்கெல்லாம் காரணம் யார்? இன்று நன்றி உள்ள தமிழர்கள் அனைவரும் எண்ணிப்பார்த்து நன்றி பாராட்டிக்கொண்டிருக்கின்றார்கள் நல்லவர்கள் எல்லாம் மகிழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். இப்படி ஒரு சில விஷயங்களைக் கோடிட்டுப் பதிவு செய்வது என் கடமை என்று நான் இங்கே கருதுகின்றேன்.

சமூக நீதி பாதுகாக்கப்படுகின்றது. இங்கே சமூக நலன்மீது அக்கறை கொண்டிருக்கின்ற அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது இன்றைக்கு இங்குள்ள மத நல்லிணக்கம் இந்தியாவிற்கே எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. மேலும், அயராது பாடுபட்டு தமிழ்நாட்டின் தொழில் முனைவோருக்காக, அடுத்த தலைமுறைக்கு தொலைநோக்குப் பார்வை கொண்டு, விஞ்ஞான சிந்தனையோடு தமிழ்நாட்டிற்கு கட்டமைப்புப் பணிகளை அமைக்கின்ற சூழ்நிலைகளையெல்லாம் உருவாக்கித் தந்து, நம் மக்களுக்காக மட்டுமல்ல, நம் பேரக் குழந்தைகளுக்கும் வழிவகை செய்து, நமக்கு வழிகாட்டியாகத் திகழ்வது தமிழ்நாட்டின் ஒப்பற்ற தலைவர் கலைஞர் அவர்கள்.

தலைவர் அவர்களே, I.T. என்று சொல்லக்கூடிய தகவல் தொழில்நுட்பம் வளரக் காரணம், 1996 கழக ஆட்சியிலே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொலைநோக்குப் பார்வையோடு கல்வி நிறுவனங்களுடன் சேர்ந்து ஹார்வர்டு பல்கலைக்கழகத்திலே ஓர் ஆய்வு செய்யப்பட்டு, அதன்மூலமாக அக்கறையோடு செயல்பட்டு, தமிழக அரசு பல கட்டமைப்புப் பணிகளை நிறைவேற்றிச் செய்து முடித்தது. அதன் பலனாகத்தான் நாம் இப்போது வளர்ச்சியைப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். IT–யிலும் அதேபோல Automobile Industry–ல் இன்றைக்கு உலக வரைபடத்திலே இந்தியாவின் Detroi என்று சொல்லக்கூடிய அளவிற்கு தமிழ்நாடு இடம்பெற்றிருக்கிறது என்று சொன்னால், அந்தப் புகழ் அவரையே சாரும். இங்கே ஒரு ஆலோசனையைத் தருவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும். We canno be complacent. I.T. துறையில் பல மாநிலங்கள் போட்டிப் போடுகின்ற நிலை உருவாகிக்கொண்டிருக்கிறது. எனவே, நாம் இன்னும் 10 ஆண்டுகளில் என்ன நிலைமைகள் உருவாகும் என்ற நிலையை அறிய, ஒரு High power Futurology Cell உருவாக்கப்பட வேண்டுமென்ற கருத்தைத் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தலைவர் அவர்களே, விவசாயப் புரட்சிக்குப் பிறகு, தொழில் புரட்சி வந்தது. அடுத்தபடியாக தகவல் புரட்சி வந்தது. அதற்கு அடுத்தபடியா

Bio-Technology என்று சொல்லக்கூடிய துறையில் புரட்சி ஏற்படப் போகிறது. Bio-Technology இன்றைக்கு வளர்ந்துகொண்டிருக்கின்ற காரணத்தினாலே, அரசு இந்தத் துறையின் முன்னோடியாக விளங்கி கட்டமைப்புப் பணிகளை மேற்கொள்ள ஒரு mission-oriented operator ஆக செயல்பட ஆவன செய்ய வேண்டுமென்று அன்போடு நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்றையதினம், தாம்பரம் தொகுதியிலே பல்வேறுபட்ட தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. TCS, Infosys, HCL, Wipro, Polaris, Cognizant, Satyam என்று பல தனியார் நிறுவனங்கள் வந்திருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் தம்பிதுரை அவர்கள் இங்கே சொன்னார்கள், அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே இந்த கம்பெனிகளெல்லாம் அவர்கள் ஏற்படுத்தியது என்று. இவையெல்லாம் அவர்கள் ஏற்படுத்தியது அல்ல. இவர்களெல்லாம் தனியார் முதலீட்டோடு, இந்தப் பகுதியிலே கட்டமைப்பு வசதிகள் இருக்கின்றன என்பதை அறிந்து அவர்களாகவே அங்கே வந்திருக்கின்றார்கள். அங்கே இப்பொழுது மாணவர்களுக்குண்டான நெருக்கடிகள் அதிகமாக இருக்கின்றன. அங்கே செல்கின்ற பணியாளர்களுக்கும், தொழிலாளர்களுக்கும், போக்குவரத்து கஷ்டமாக இருக்கின்றது. இந்த தொழிற்சாலைகளெல்லாம் அங்கே வந்திருக்கின்றன. பக்கத்திலே இருக்கின்ற நாவலூரிலே சிப்காட் தொழிற்பேட்டை இருக்கின்றது, சிறுசேரியிலே தொழிற்சாலைகள் இருக்கின்றன. இவற்றுக்கெல்லாம் போதுமான மின்சார வசதி இருக்கிறதா என்று பார்த்தால், அங்கு வாழ்கின்ற மக்களிடமிருந்தும், அதைப்போல அங்கே இருக்கின்ற தொழிற்சாலைகளிடமிருந்தும் பல்வேறுபட்ட குறைபாடுகள் குறித்து மனுக்கள் வந்தன. மாண்புமிகு மின் துறை அமைச்சர் அண்ணன் ஆற்காட்டார் அவர்களிடத்திலே எடுத்துச் சொல்லி, இந்தப் பகுதியிலே இன்றைக்கு பல்வேறுபட்ட பிரச்சினைகள் இருக்கின்றன, இங்கெல்லாம் எங்களுக்கு மின் துறையின் பணியை நீங்கள் வேகப்படுத்தித்தர வேண்டுமென்று ஒரு கோரிக்கையை வைத்தோம். அப்படி கோரிக்கையை வைத்ததன் விளைவாக அந்தப் பகுதியிலே மட்டும் இன்றைக்கு சற்றேறக்குறைய 650, 700 கோடி ரூபாய்க்கு 10 துணை மின் நிலையங்கள் தாம்பரம் தொகுதியிலே அமைப்பதற்கு, குறிப்பாக, பெருங்குடியிலே, சோழிங்கநல்லூரிலே, செம்மஞ்சேரியிலே, ஈஞ்சம்பாக்கத்திலே, தரமணியிலே, மேடவாக்கம் பகுதியிலே தனியாக அதற்கென்று ஆய்வு செய்யப்பட்டு, இப்போது அந்தப் பணிகளெல்லாம் அங்கே நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.



முற்பகல் 10-40

அங்கிருக்கிற நகர்ப்புறம் என்பது அதைச் சுற்றியிருக்கிற, தொழில் பூங்காவைச் சுற்றி இருக்கிற நகரங்கள், டவுன் பஞ்சாயத்தின்கீழ் வருவதால் நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் தளபதியிடத்திலே எடுத்துச் சொன்னோம். வேகமாக வளருகிற இந்தப் பகுதிகள், குறிப்பாக பெருங்குடி, அதைப்போல சோழிங்கநல்லூர், திருநீர்மலை, பள்ளிக்கரணை, பெருங்களத்தூர், மாடம்பாக்கம், செம்பாக்கம் போன்ற பகுதிகளுக்கு பாதாளச் சாக்கடைத் திட்டத்தை நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். பாதாளச் சாக்கடைத் திட்டம், ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிற இந்த நேரத்திலே அந்தப் பகுதிகளிலே இன்றைக்கு குடிதண்ணீர் மெட்ரோ வாட்டர்மூலமாக வழங்கவேண்டும். நாங்கள் எல்லாம் அரசாங்கத்திடம் கேட்பது தேவையான நிதி அந்தப் பகுதியிலே இருக்கிற டவுன் பஞ்சாயத்துகளுக்கு இருக்கின்ற காரணத்தினால், மெட்ரோ வாட்டர்மூலம் குடி தண்ணீரை அந்தப் பகுதிக்கு நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் வழங்குவார்களேயானால், இன்னும் பணி சிறப்பாக இருக்கும் என்பதை நான் அன்போடு இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

O.M.R., E.C.R. என்று இரண்டு சாலைகள் உள்ளன. இந்த இரண்டு சாலைகளை இணைக்கின்ற பகுதிகளில் பல்வேறுபட்ட கிராமங்களும் வருகின்றன, நகர்ப்புறங்களும் வருகின்றன. அடையாறு, திருவான்மியூர் பகுதிகளிலிருந்து ஆரம்பித்து, கொட்டிவாக்கம் பகுதி, பாலவாக்கம் பகுதி, நீலாங்கரைப் பகுதி, ஈஞ்சம்பாக்கம், செம்மஞ்சேரி; இன்னொரு பக்கம் சோழிங்கநல்லூர், காரப்பாக்கம், துரைப்பாக்கம், பெருங்குடி, தரமணி பகுதிகளிலே இருக்கின்ற பொதுப் பணித் துறைக்குச் சொந்தமாக இருக்கிற அந்தப் பக்கிங்காம் கால்வாயை அகலப்படுத்தி இரண்டு பக்கங்களிலும் ஒரு தரைப் பாலத்தை ஏற்படுத்தித் தந்தால் இந்தத் தொழில் கூடங்கள் எல்லாம் வருவதற்கும், அங்கிருக்கிற போக்குவரத்து நெரிசல் குறைவதற்கும் வாய்ப்பு ஏற்படும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

தாம்பரம் தொகுதியை எடுத்துக்கொண்டால், பொதுப் பணித் துறையாக இருந்தாலும் சரி, உள்ளாட்சித் துறையாக இருந்தாலும் சரி, அதைப்போல நம்முடைய மின்சார வாரியமாக இருந்தாலும் சரி,

எங்களுடைய தேவைகளை ஓரளவுக்கு நிறைவேற்ற இந்த அரசு, இந்த ஓராண்டுக் காலத்திலே செய்திருக்கிற பணி போதுமான பணி. அந்தப் பணிகள் ஆய்வு செய்யப்பட்டு, டெண்டர் வரை இப்போது கொண்டு வந்திருக்கிறோம். அந்தப் பணிகளையெல்லாம் வேகமாகச் செய்தால் போக்குவரத்து நெரிசல் இல்லாமல் இருப்பதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. *(மணியடிக்கப்பெற்றது)* ஒரே ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். இங்கே ஓர் உறுப்பினர் சொன்னார், ஒரு துறை, ஒரு தொழிற்சாலை வளர வேண்டுமென்று சொன்னால் தொழில் பூங்கா வளர வேண்டுமென்று சொன்னால் கட்டமைப்பு வசதிகள் இருக்க வேண்டுமென்று. இதற்கு முன்னால் மாண்புமிகு அ.தி.மு.க. உறுப்பினர் ஒருவர் பேசும்போது சொன்னார், உலக வங்கி அலுவலகம் தமிழ்நாட்டிலே ஆரம்பிக்கப்பட்டது அவர்களுடைய ஆட்சியில் என்று சொன்னார். உலக வங்கி அலுவலகம் தமிழ்நாட்டிலே ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் அதற்குக் காரணம் மறைந்த நம்முடைய முன்னாள் மத்திய அமைச்சர் மாறன் அவர்கள்; அவர் அன்றைக்குச் சொன்னார், 45 நிமிடத்திலே சென்னையில் இருக்கிற எந்தப் பகுதிக்கும் செல்ல வேண்டுமென்று சொன்னார்; Inner ring road போட்டது எப்போது என்றால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில். *(மேசையைத் தட்டும் ஒலி)* கட்டமைப்பு வசதிகளைக் கொண்டு வந்தது எப்போது என்றால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில். ஒவ்வொரு பகுதியையும் நான் சொல்வதற்கு நேரம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்போது நேரம் இல்லை.

**திரு. எஸ்.ஆர். இராஜா:** கடைசியாக ஒரேயொரு கருத்தை மட்டும் ஒரே நிமிடத்திலே சொல்லிவிடுகிறேன். எல்லாவற்றையும் வைத்துவிட்டேன், இது ஒன்றே ஒன்றுதான். நேரத்தை வீணாக்குவது என்பது கூடாது. ஓர் ஆண்டின் மதிப்பை 5 மதிப்பெண்கள் குறைவாகப் பெற்ற மாணவர்களைக் கேட்டால் தெரியும். ஒரு மாதத்தின் அருமையைக் குறைப் பிரசவத்திலே குழந்தை பெற்ற தாய்மாரைக் கேட்டால் தெரியும். ஒரு வாரத்தின் அருமையை ஒரு வாரப் பத்திரிகை ஆசிரியரைக் கேட்டால் தெரியும், ஒரு நாள் என்பதன் அருமை அன்றாடம் தினக் கூலியிலே பணியாற்றுகின்ற பணியாளரை, ஏழைத் தொழிலாளியைக் கேட்டால் தெரியும். 10 நிமிடம் என்பதன் அருமையைக் காதலர்களைக் கேட்டால் தெரியும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடம் waste என்பதைப்பற்றி சபாநாயகரைக் கேட்டால் தெரியும். *(சிரிப்பு)*



**திரு. எஸ்.ஆர். இராஜா:** ஒரு நிமிடம் என்பதன் அருமை இரயிலைக் கோட்டை விட்டவர்களைக் கேட்டால் தெரியும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன்.

**திரு. எஸ்.ஆர். இராஜா:** ஒரு வினாடி என்பது. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அது எங்களைக் கேட்டால் தெரியும். *(சிரிப்பு)* திரு. வேல்முருகன். *(குறுக்கீடுகள்)* இல்லை. திரு. வேல்முருகன், ஆரம்பியுங்கள்; அவர்கள் அப்படித்தான் சொல்வார்கள். ஒரு வினாடி என்பதன் அருமை எங்களுக்குத்தான் தெரியும், ஆரம்பியுங்கள். *(குறுக்கீடு)* ஒரே நிமிடம்தான் எங்களுக்குத் தெரியும். திரு. வேல்முருகன் உங்களுக்கு 15 நிமிடங்கள்தான். முந்திரிப் பருப்போ, பலாப் பழமோ ஒன்றுக்கும் இடம் கிடையாது.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழில் துறை மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை மானியக் கோரிக்கைகள்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து, இந்தத் துறைகள் குறித்து சில கருத்துகளைப் பதிவு செய்வதற்காக எனக்கு வாய்ப்பைத் தந்திருக்கிற எம் தமிழினப் போராளி மருத்துவர் அய்யா அவர்களுக்கும் முதற்கண் என்னுடைய நன்றிகலந்த வணக்கத்தினைத் தெரிவித்து, என்னுடைய நீண்ட நாள் கனவாக இருக்கின்ற பண்ருட்டி தொகுதியில் ஒரு முந்திரி பதப்படுத்தும் தொழிற்சாலை வேண்டுமென்கிற. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஆரம்பித்துவிட்டாரய்யா! *(சிரிப்பு)*

**திரு. தி. வேல்முருகன்:** அந்தக் கனவை நினைவாக்குகின்ற வகையில், அதற்கான நிதி ஒதுக்கி அதற்கான பணித் திட்டத்தைத் தொடங்குவதற்கு உத்தரவிட்டிருக்கிற மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியை முதலிலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 10–45*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசின் கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளவாறு பல்வேறு தொழில் நிறுவனங்களுக்கும், குறிப்பாக தனியார்

தொழிற்சாலைகளுக்கும், அதிலும் குறிப்பாக அந்நிய நாட்டின் மிக உயர்ந்த செல்வந்தர்களாக இருக்கின்ற, உலக அரங்கில் போட்டி போடக்கூடிய பெரிய தொழில் நிறுவனங்களை நடத்துகின்றவர்களுக்கு வாய்ப்பு அளிக்கின்ற வகையில் பல்வேறு சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளன. அந்தத் தொழில் நிறுவனங்களெல்லாம் தமிழ்நாட்டில் காலூன்றி, வேர் பதித்து, இன்று கோடிக்கணக்கான ரூபாய் இலாபம் ஈட்டுகின்ற தொழிலைத் தொடங்குவதற்கு பல்வேறு சலுகைகளைக் கடந்த அரசும், இந்த அரசும் தொடர்ந்து அளித்து, ஆதரித்து வருகின்ற நிலைமை இருந்துகொண்டிருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றால், சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் முதலில் சீன நாட்டில் தொடங்கி, பின்னர் அது பல்வேறு நாடுகளிலும் பரவி, அதன் பின்னர் இந்தியாவிலும் பரவி, இப்போது தமிழகத்திலும் பரவியிருக்கிறது. சீனாவில் 1980–களில் இந்த சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் தொடங்கப்பட்டு, தற்போது அந்த நாட்டில் வெறும் ஆறு மண்டலங்கள்தான் இயங்கி வருகின்றன. ஆனால், 1–4–2005–ல் இந்தியாவுக்கு வந்து, இந்திய அரசு கொள்கை முடிவு எடுத்து அறிவிக்கப்பட்டிருக்கின்ற சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் 237. அவற்றில் 164 மண்டலங்களுக்குக் கொள்கை அளவில் ஒப்புதலும், மேலும் 300 மண்டலங்களுக்கு திட்ட உருவாக்கம் என்ற அடிப்படையிலும், கிட்டத்தட்ட 700 சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் இந்தியா முழுவதும் உருவாக்கத் திட்டமிட்டு, கிட்டத்தட்ட 70 மண்டலங்கள் தமிழகத்தில் கொண்டு வரப்பட்டிருகின்றன. அவற்றை யார் அன்றைக்குத் தொடங்கினார்களோ, அவர்களே, அவற்றைக் கொண்டு வந்த சீன அரசாங்கமே அதனால் மக்களுக்குப் பாதிப்பு இருக்கும், மக்களின் வேலைவாய்ப்பு உரிமைகளைப் பாதுகாக்க முடியாது என்ற அடிப்படையிலே, இப்போது அதிலிருந்து பின்வாங்கி, இப்போது ஒன்றுவிட்டு ஒன்று தொடங்குவதற்கு பல்லாண்டுக்காலம் எடுத்துக்கொள்கின்றது. ஆனால், அதற்கு நேர்மாறாக, இந்தியப் பேரரசும், தமிழக அரசும் இந்த சிறப்புப் பொருளாதார மண்டலங்களை, அந்தப் பன்னாட்டு கம்பெனிகளை, தமிழகத்திலே காலூன்றச் செய்வதும், அவர்களுக்கான சலுகைகளை வாரி வழங்குவதும் இங்கு நடைபெறுகிறது. இவர்களுக்கு அதிக உரிமைகளை வழங்குவதால், தமிழ்நாட்டு சட்டங்களும், இந்திய அரசியல் சாசனச் சட்டமும், தமிழகக் காவல் துறையும், தமிழ்நாட்டு தொழிலாளர்களின் உரிமைகளும் இவை எவையுமே இவர்களுக்குப் பொருந்தாமல், இவர்கள் தனிக்காட்டு ராஜாக்களாக, ஒரு குட்டி அரசாங்கமாக அல்லது குட்டி நாடுகள் போன்று வாழ்வதற்கு இது வகை செய்கின்றது. இந்த சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்காகத் தொடர்ந்து ஆங்காங்கே விளை நிலங்களையும், விவசாய நிலங்களையும், ஏழை எளிய மக்களுடைய நிலங்களையும் அவர்களாகவே கையகப்படுத்தித் தொடங்கினாலும்கூட, அதை எதிர்க்கின்ற ஒரு நிலையை பாட்டாளி மக்கள் கட்சி இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றது. அதற்கான காரணம் என்னவென்றால், சிறப்புப் பொருளாதார மண்டலங்கள்மூலம் சுற்றுச்சூழல் பாதிப்பு; தொழிலாளர் உரிமைகள் அபகரிப்பு; ஏற்றத்தாழ்வுகள் அதிகரித்தல்; அரசின் வருவாய் இழப்பு போன்ற பல சிக்கல்கள் இவற்றில் இருக்கின்றன என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



இம்மண்டலங்களில் 25 விழுக்காடு நிலம் மட்டுமே எதற்காக அவர்கள் தொழிற்சாலைகளைக் கொண்டு வந்தார்களோ அதற்குப் பயன்படும். மீதமுள்ள 75 விழுக்காடு இடங்கள், நீச்சல் குளம் அமைப்பதற்கும், பொழுதுபோக்குச் சாதனங்களை உருவாக்கிக்கொள்வதற்கும், அவர்கள் சுகபோக வாழ்வை அனுபவிப்பதற்கும்தான் இந்த சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் நாட்டிலே உருவாக்கப்படுகின்றன என்று குற்றஞ்சாட்ட நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்திய நாட்டின் ரிசர்வ் வங்கி இந்தச் சிறப்புப் பொருளாதார மண்டலங்களைப் பற்றி சுட்டிக்காட்டியிருக்கின்றது. சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்குத் தரப்படுகின்ற கடன், ரியல் எஸ்டேட் தொழிலுக்காகத் தரப்படுகின்ற கடனாகவே கருதப்படவேண்டுமென்று இந்திய நாட்டின் ரிசர்வ் வங்கி சுட்டிக்காட்டுகின்றது என்று சொன்னால், இவை எந்த நோக்கத்திற்காக தமிழகத்திலே காலூன்றுகின்றன என்பதை நாம் இங்கு சிந்தித்துப் பார்க்கவேண்டும். உதாரணத்திற்கு, முத்திரைத்தாள் கட்டணம், பதிவுக் கட்டணம், கூடுதல் வரி, இறக்குமதிமீதான வரிகள், நுழைவுக் கட்டணங்கள், தண்ணீர் வரி மற்றும் மின்சாரம்மீதான வரிகள் போன்ற அனைத்துக்கும் வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கின்றன. கட்டுமானப் பொருட்களை வாங்குதல், மூலப் பொருட்களை வாங்குதல் போன்றவற்றுக்கும் எந்த வரியும் கிடையாது. அதேபோன்று வருமான வரி செலுத்துவதிலிருந்து 10 ஆண்டுகள் வரை வரிச் சலுகை அளிக்கப்படுகின்றது. இதுபோன்று எல்லா சலுகைகளும் உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்கள் அனைத்திற்கும் அளிக்கப்படுகின்றது. இத்தகைய தாராளமயமான

கொள்கையால் இந்திய அரசுக்கு சுமார் ஒரு இலட்சத்து 65 ஆயிரம் கோடி ரூபாய் நட்டம் ஏற்படுவதாக இந்திய அரசின் நிதியமைச்சரே சுட்டிக்காட்டுகின்றார். நாம் தமிழகத்திலுள்ள சில குறிப்புகளை எடுத்துச் சொல்கின்றபோது, இந்திய அரசின் நிதித் துறை அமைச்சரின் செயல்பாடுகளைப் பாராட்டி, அவர் சொல்லிவிட்டார், அதை நாம் ஏற்றுக்கொள்கின்றோம் என்கிறோம். ஆனால் இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரை, இந்திய நாட்டின் நிதியமைச்சரே, இது ஏற்புடையதல்ல, இது இந்திய அரசுக்கும், தமிழக அரசுக்கும் ஏற்புடையதல்ல என்ற கருத்தை அவர் பதிவு செய்திருக்கின்றார்.

*முற்பகல் 10–50*

அதுமட்டுமல்ல, இந்த சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கு தண்ணீரும், மின்சாரமும் தங்குதடையின்றி வழங்கப்படவேண்டும்.

ஆனால், மக்களுக்கு இருக்கிறதோ இல்லையோ, அதைப்பற்றிக் கவலையில்லை என்கிற ஒரு நிலை இந்த மண்டலங்களிலே இருக்கிறது. அதேபோல, மாநிலத்தில் மின்சாரப் பற்றாக்குறை ஏற்படும் காலங்களில் கிராம மக்களைப் புறக்கணித்துவிடலாம்; இங்கு சிட்கோ மூலமாக, சிப்காட் மூலமாக நடத்தப்படுகின்ற சிறு தொழிற்சாலைகளுக்கு மின்சாரம் இருக்கிறதோ இல்லையோ, இந்தச் சிறப்பு பொருளாதார மண்டலங்களுக்கு மின்சாரம் தரப்படவேண்டுமென்பது கட்டாய விதியாக உருவாக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் எத்தனையோ சிப்காட் தொழிற்பேட்டைகள் இருக்கின்றன. கடலூர் சிப்காட், ஓசூர் சிப்காட், பெருந்துறை சிப்காட் என்று பல்வேறு சிப்காட் தொழிற்பேட்டைகளெல்லாம் இருக்கின்றன. ஆனால், அவையெல்லாம் நலிவடைந்திருக்கின்றன. அந்தச் சிப்காட் தொழிற்பேட்டைகளிலே தொழில் தொடங்க வருபவர்கள் அரசு கொடுக்கின்ற சலுகைகளையும், நிலங்களையும் அபகரித்துக்கொண்டு அவர்கள் பாதியிலேயே மூடிவிட்டு ஓடிவிடுகிறார்கள். உதாரணத்திற்கு தருமபுரி மாவட்டத்திலே இருக்கின்ற மக்கள் 50 சதவிகிதத்திற்கும் மேல் இன்றைக்கு பிழைப்புத் தேடி வெளிமாநிலங்களுக்கு அகதிகளாகச் சென்று கொண்டிருக்கிறார்கள். அங்கு இருக்கின்ற ஓசூர் சிப்காட்டில் 75 சதவிகித நிறுவனங்கள் மூடப்பட்டிருக்கின்றன. கடலூரிலே இருக்கின்ற சிப்காட்டில் 54 நிறுவனங்களில் 31–க்கும் மேல் மூடப்பட்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் மீண்டும் கொண்டுவருவதற்கு, அவற்றை நடத்துவதற்கு இந்த அரசு முயற்சி



எடுக்காமல், பன்னாட்டு நிறுவனங்களையும், பண முதலாளிகளையும், வட மாநில அல்லது தென் மாநில இன்னும் இருக்கின்ற பிற மாநில ஆதிக்கம் இந்த மண்ணிலே வேரூன்றுவதற்கு எப்படித் தமிழக அரசு அனுமதித்துக்கொண்டிருக்கிறது என்பதை நான் இங்கே கேள்வி எழுப்பக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதேபோல, இப்போது இந்தச் சிறப்புப் பொருளாதார மண்டலத்தினால் வருமானம் குறையும் என்கிற ஆய்வை திரு. பண்டாரி என்பவர் செய்துள்ளார். "இம்மண்டலம் ஒருவருக்கு வேலை கொடுக்குமானால், மூன்று பேரின் வேலையைப் பறிப்பதற்கு இந்தச் சிறப்புப் பொருளாதார மண்டலம் பயன்படும்" என்கிறார். ஆனால், இங்கு வேலைவாய்ப்பு வரும் என்று சொல்கிறோம்.

இந்த சிறப்புப் பொருளாதார மண்டலத்திலே பல்வேறு தொழில்நுட்பக் கூடங்களில் யார் பணிபுரிகிறார்கள்? அடித்தளத்திலே இருக்கின்ற ஏழையெளிய மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், ஒடுக்கப்பட்ட ஆதி திராவிட மக்கள், இப்போது அந்த சிறப்புப் பொருளாதார மண்டலங்களிலோ அல்லது பொருளாதார மண்டலங்களிலோ, அல்லது I.T. Park என்று சொல்லக்கூடிய தொழில்நுட்ப வளாகத்திலோ பணிபுரிவதற்கு வாய்ப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா? நிலத்தைத் தருவது நாம். மின்சாரத்தைத் தருவது நாம். அதற்கு வரி விலக்குச் சலுகை, முத்திரைக் கட்டணச் சலுகை, எல்லாவிதமான சலுகைகளையும் அள்ளிக்கொடுத்து பன்னாட்டு நிறுவனங்கள் இந்த மாநிலத்திலே காலூன்றி நிறுவனம் தொடங்குகின்றபோது, அதிலே பணிபுரிகின்ற மக்களுடைய, வேலைவாய்ப்பை பெற்றிருக்கக்கூடிய மக்களுடைய, விகிதாசாரத்தைக் கணக்கெடுத்தால் இன்றைக்கு வட மாநிலத்தைச் சேர்ந்தவர்களும், பிற நாட்டைச் சேர்ந்தவர்களும் அதிலே காலூன்றி ஆதிக்கம் செலுத்துகிறார்கள். சிறப்புப் பொருளாதார மண்டலமாக இருக்கலாம், தொழில்நுட்பக் கூடங்களாக இருக்கலாம், I.T. Park என்று சொல்லக்கூடிய அந்த நிறுவனங்களாக இருக்கலாம், இவையெல்லாம் யாருடைய ஆளுகையில் இருக்கிறது என்று சொன்னால் ஒரு தமிழனின் கையில்கூட இல்லை.

கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிட்டிருக்கிற எந்த நிறுவனமும் தமிழ்நாட்டிற்குச் சொந்தமான நிறுவனமாக இல்லை. ஆகவே, இதையெல்லாம் தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்தோடு பரிசீலிக்கவேண்டும். இப்போது ஏழையெளிய

மக்களுக்கு, குறிப்பாக இதுபோன்ற தனியார் நிறுவனங்களில் 50 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு, 70 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு தருகின்றோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். வேலைவாய்ப்புத் தருகிறோம் என்ற உறுதிமொழியை இந்த அரசு தருவதற்காக நான் இந்த அரசை மனமாரப் பாராட்டுகிறேன். ஆனால், அது எப்படிப்பட்ட வேலைவாய்ப்பாக இருக்க வேண்டுமென்று சொன்னால் கிராமபகுதியிலே இருக்கின்ற எத்தனையோ இலட்சக்கணக்கான ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, ஆதிதிராவிட மக்கள் இன்றைக்கு இட ஒதுக்கீட்டு உரிமையினால் B.E. படித்துவிட்டு, I.I.T.–ல் படித்துவிட்டு, பல்வேறு உயர் தொழில்நுட்பக் கல்வியை படித்துவிட்டு, வீட்டிலே காத்துக்கொண்டிருக்கிறார்களே, அவர்களுக்கு அந்த வேலைவாய்ப்பு கிடைப்பதற்கு இந்த அரசு வழிகாண வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் வேண்டுகோள் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதேபோல, ஒட்டுமொத்தமாக இந்த சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் தொழிலாளர் உரிமைகளுக்கு வேலையில்லை என்ற நிலை உருவாகியுள்ளது. இம்மண்டலங்களில் பொது நோக்கத்திற்காக, தேவை அடிப்படையில் போராட்டம், ஆர்ப்பாட்டம் எல்லாம் நடைபெற்றால் அவை சட்டவிரோதமாக அறிவிக்கப்படும் என்று சொல்கிறார்கள். அங்கு ஏதாவது சம்பவம் நடந்தது என்று சொன்னால் நம்முடைய காவல் துறையே அந்த வளாகத்திற்குள்ளே செல்லவேண்டுமென்றாலும் அதற்கு ஒரு கமிஷனர் இருப்பாராம். அந்த கமிஷனருடைய அனுமதியில்தான் உள்ளே செல்ல முடியும் என்று சொல்லப்படுகிறது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்கு வாய்ப்பு இருக்கிறதா? அதுவும் கிடையாது என்கிற நிலைகளெல்லாம் இதிலே இருக்கின்றன.

அடுத்து இந்தச் சில்லறை வியாபாரிகள். இந்த ஏழையெளிய மக்கள், காய்கறி விற்பவர்கள், ரோட்டில் விற்பவர்கள், தர்பூசணி விற்பவர்கள், தள்ளு வண்டியில் விற்பவர்கள், பழம் விற்பவர்கள், முருங்கைக்காய் விற்பவர்கள், கீரை விற்பவர்கள், இவர்களும் தமிழ்நாட்டிலே வாழ்ந்துவிடக்கூடாது என்று சில்லறை விற்பனையையும் தங்கள் கைக்கு கொண்டுவருகிறோம் என்று இன்றைக்கு Reliance, Wal–Mart போன்ற நிறுவனங்களெல்லாம் இப்போது அதையும் கையிலே எடுத்துக்கொண்டிருக்கின்றன. மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அவர்களை நான் பணிவோடு வேண்டிக் கேட்டுக்கொள்வது, இந்தத் தனியார் நிறுவனங்கள், தனியார் முதலாளிகள் இந்த மண்ணிலே



காலூன்றி ஒட்டுமொத்த தமிழக சிறு வணிகர்களுடைய வாழ்க்கையைச் சுரண்டுவதற்கு நீங்கள் ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது என்பதை நான் இந்த நேரத்தில் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்போது, ஆங்காங்கே சிறு வியாபாரிகளும், வணிகர் சங்கங்களும் போராட்டம் நடத்திக்கொண்டு நம்முடைய முதல்வர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்துக்கொண்டிருக்கிறார்கள். ஏனென்றுச் சொன்னால் இந்த Reliance, Wal–Mart போன்ற நிறுவனங்கள் சார்பில் முதலில் நான் குறைந்த விலைக்குத் தருவேன் என்று வருவான். பிறகு ஒட்டுமொத்தமாக எது விற்பனை அதிகமாக ஆகிறதோ அந்த பொருளைத்தான் கிராமப் பகுதியிலே இருக்கின்ற ஏழையெளிய விவசாயிகள், அந்த விவசாயப் பொருள்களை உற்பத்தி செய்ய வேண்டுமென்கிற நிலைமைக்கு தள்ளப்படுவதற்கு ஒரு மறைமுகமான சூழ்ச்சி இதன் உள்ளே அடங்கியிருக்கிறது. அப்படி வந்து, பிறகு ஒட்டுமொத்த விலை நிர்ணயத்தை Reliance, Wal–Mart தமிழகத்திலே நிர்மாணிக்க முடியும் என்ற ஒரு நிலை உருவாவதற்கு . . . .

*முற்பகல் 10–55*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடம் ஒரு சந்தேகம் கேட்கிறேன். முதலில் குறைந்த விலைக்குத் தருவதாகச் சொல்வார், பிறகு அதிக விலைக்கு விற்பார் என்று குறிப்பிடுகிறார். அவர்கள் குறைந்த விலைக்குத் தருகிற வரையில் அவர்களிடத்திலே வாங்கிக் கொண்டிருப்பது வாங்குபவர்களுக்கு இலாபம்தானே!

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்களுக்கு நான் விளக்கம் சொல்வதாகத் தவறாகப் புரிந்துகொள்ளக் கூடாது. முதலில் அவர்கள் குறைந்த விலைக்குத் தருவதுபோல் தருவார்கள். பன்னாட்டு நிறுவனங்களுடைய அல்லது தனியார் ஆலைகளுடைய வியாபார யுக்திகள் என்பது ரூபாய்க்கு 2 கிலோ காய்கறிகள் என்று அவன் வியாபாரம் செய்து மக்களைக் கவர்ந்திழுப்பான். மக்கள் கூட்டம் வருகின்றபோது இந்த சிறு கடை வியாபாரிகள், சாலையோரங்களிலே வியாபாரம் செய்கின்ற அந்த விவசாய மக்களிடமிருந்து இவர்களுடைய இடத்திற்கு மக்கள்

வந்த பிறகு அவர்களுடைய வாழ்க்கை கேள்விக்குறியாக ஆவதற்கு வாய்ப்பிருக்கிறது என்ற காரணத்தினால்தான் மாண்புமிகு முதலமைச்சருடைய கனிவான கவனத்திற்கு இதை நான் கொண்டுவர விரும்புகிறேன்.

அதேபோல், இன்றைக்கு தொழிலாளர் உரிமை பாதிப்பு, அதில் இருப்பதற்கு வாய்ப்புள்ளது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சில்லறை வணிகத்தில் Reliance இப்பொழுது சென்னையிலே 18 கடைகளைத் துவக்கி இருக்கிறார்கள். இன்னும் தமிழ்நாடு முழுவதும் நூற்றுக்கணக்கான கடைகளைத் துவக்க இருப்பதாகச் சொல்கிறார்கள். அதைப்போல உலகத்திலேயே மிகப் பெரிய தொழில் நிறுவனமான, அமெரிக்காவைச் சார்ந்த Wal–Mart நிறுவனம், இந்தியாவிற்குள்ளே, தமிழ்நாட்டிற்குள்ளே வருவதாகச் சொல்கிறார்கள். இப்படி இந்தப் பெருந்தொழில் நிறுவனங்கள், சில்லறை வணிகத்தில் ஈடுபட்டால் தமிழ்நாட்டிலே இருக்கிற மளிகைக் கடை, பெட்டிக் கடை, பலசரக்குக் கடை, துணிக் கடை, மருந்துக் கடை, பழக் கடை, பூக்கடை, காய்கறிக் கடை, கீரைக் கடை என்று நடத்துபவர்கள் எல்லோரும் அந்தக் கடைகளை மூடக்கூடிய நிலை எதிர்காலத்திலே வரும் என்ற அச்ச உணர்வு எல்லோருக்கும் வந்திருக்கிறது. இதை எதிர்த்து எல்லா அரசியல் கட்சிகளும் குரல் கொடுக்கிறார்கள். அதைப்போல வணிகர் சங்கங்கள் எல்லாம் எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். இது இவர்கள் சுயமாகச் செய்யக்கூடிய தொழில். அரசு வேலைவாய்ப்பே வழங்குவதில்லை. ஊர் ஆளுக்கு வேலைவாய்ப்பு என்று சொன்னால் குதிரைக் கொம்பாக இருக்கிற காலம் இது. ஆகவே சுயமாகத் தொழில் செய்து கொண்டிருக்கிற இந்தச் சில்லறை வணிகத்தில் தாங்கள் அன்புகூர்ந்து, அருள்கூர்ந்து பெரிய நிறுவனங்கள் நுழைவதை நீங்கள் தடை செய்ய வேண்டும், அவர்களை வெளியேற்ற வேண்டும் என்ற வேண்டுகோளைப் பணிவன்போடு வைக்கிறோம். இது பல இலட்சம் குடும்பங்கள் இதையே நம்பிக் காத்திருக்கிற தொழில்; சுய தொழில். இதிலே பெருந்தொழில் நிறுவனங்களை அனுமதிக்க வேண்டாம் என்ற வேண்டுகோளைப் பணிவன்போடு வைக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.



**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சட்டமன்றக் கட்சியின் தலைவர் திரு. மணி அவர்கள் அந்த Reliance போன்ற வியாபாரிகளை எல்லாம் வெளியேற்ற வேண்டுமென்று கோரிக்கை வைக்கிறார். அதை ஒரு மாநில அரசு செய்யக்கூடிய அளவுக்கு சட்டம் இடம் தருமா? இதை மத்திய அரசு செய்ய வேண்டும். ஆகவே, நான் திரு. மணி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன், நாம் எல்லாம் மத்திய அரசிலே இருக்கிறோம். மத்திய அரசை வலியுறுத்தி அங்கே நம்முடைய Cabinet Meeting–ல் அப்படி ஒரு தீர்மானம் கொண்டு வந்து வெளியேற்றுவோம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்களுடைய இந்த நல்ல அறிவிப்பை மனதார பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக நான் வரவேற்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* எது எப்படியோ, இப்போது உள்ளூர் கடைகளின் அழிவு, அதிகரிக்கும் வறுமை, தொழிலாளர்களின் உரிமை பாதிப்பு, குழந்தைத் தொழிலாளர்கள் அதிகரிப்பு, சுற்றுச்சூழல் பாதிப்பு, பெண்ணுரிமைக்கு எதிர்ப்பு, இன ஒதுக்கல், விவசாயத்திற்குப் பாதிப்பு, நுகர்வோருக்குப் பாதிப்பு என்ற ஒட்டுமொத்த இந்தக் காரணங்களால் எதிர்ப்பைத் தெரிவித்து இந்த Reliance, Wal–Mart போன்ற கடைகளை இந்திய நாட்டிலிருந்து, குறிப்பாக தமிழ்நாட்டிலிருந்து அகற்றுவதற்கு மத்திய அரசில் நாம் அனைவரும் ஒன்றுசேர்ந்து நடவடிக்கை எடுக்க அறிவித்ததற்காக முதலமைச்சர் அவர்களுக்கு நான் என்னுடைய மனமார்ந்த நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், தகவல் தொழில்நுட்பத் துறை. இந்த Software துறையிலே இப்போது பல்வேறு கம்பெனிகள் இங்கு வந்து காலூன்றி, நாம் எல்லாச் சலுகைகளையும் கொடுத்து அவர்கள் கம்பெனிகளை நிறுவி வருகின்றார்கள். ஆனால் அந்த நிறுவனங்களில் நான் முன்னரே குறிப்பிட்டதுபோல தமிழ்நாட்டைச் சார்ந்தவர்கள் ஒருவருக்குக்கூட வேலைவாய்ப்பு அளிக்கப்படுவதில்லை. குறிப்பாக அந்த நிறுவனங்களில் எல்லாம் Tie கட்டிக் கொண்டு Shoe போட்டுக் கொண்டு போனால்தான் இன்றைக்கு உள்ளேயே விடுவேன் என்று சொல்கிறார்கள். கிராமத்தில் இருக்கின்ற ஏழைப் பாட்டாளி தப்பித் தவறி இட ஒதுக்கீடு என்கிற உரிமையைப் பெற்று அவன் பட்டம் படித்திருந்தாலும்கூட, அவனுக்கு அதற்கான வேலைவாய்ப்புக்கு

வழிவகை இல்லை. இன்றைக்கு ஆந்திரா, கர்நாடகா, கேரளா போன்ற தென் மாநிலங்கள் மற்றும் வட மாநிலங்கள் எனப் பிற மாநிலத்தவர்களுடைய ஆதிக்கம் இந்தத் துறையிலே இன்றைக்கு காலூன்றி இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் இந்த நிறுவனங்களை தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் யாராவது ஆரம்பித்திருக்கிறார்களா என்று பார்த்தால், வெறும் 10 சதவிகிதம் கூட இல்லை என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் ஒரு நிமிடம்தான்.

**திரு. தி. வேல்முருகன்:** இதோ முடித்துவிடுகிறேன். இந்தத் தகவல் தொழில்நுட்பத் துறையிலே கணினிகளை நாம் இப்போது பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். இப்போது அமெரிக்காவிலிருக்கிற அரசு அலுவலகங்களில் எல்லாம் இலவசமாக கணினிப் பயன்பாட்டு முறையைக் கொண்டு வந்திருக்கின்றார்கள். ஆனால், தமிழகத்தில் நாம் இன்றைக்குச் சேரன், வானவில் என்கிற தனியார் software-களை விலை கொடுத்து வாங்கிக் கொண்டு வருகிறோம். அதேபோல அந்தக் கணினிப் பயன்பாட்டிற்கு இந்த Windows operating system என்பதற்கு ரூ.15,000 மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை செலவாகிறது. அதை மாற்றுவதற்கு, இந்தச் செலவினைக் குறைத்து, இலவசமாக அந்தக் கணினியைக் கையாளுவதற்கும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோல அனைத்துத் துறைகளிலும் இருக்கிற இந்த அரசு ஊழியர்கள் கணினியைக் கற்றுக்கொள்வதற்கு நீங்கள் பயிற்சி அளிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-00

அதேபோல, என்னுடைய கடலூர் மாவட்டத்தினுடைய N.L.C. பிரச்சினையைக் கடந்த பல ஆண்டு காலமாகப் பேசி வருகின்றேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, 1953 ஆம் ஆண்டு நில எடுப்புச் சட்டத்தின்கீழ், தொழிற்சாலைகளுக்கு நிலங்களைக் கையகப்படுத்துகிற சட்டத்தின்கீழ் அந்த நிலங்கள் கையகப்படுத்தப்பட்டிருக்கின்றன. ஏக்கருக்கு வெறும் 55 ஆயிரம் ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதை ஒரு பைசாகூட இன்று வரையில் உயர்த்திக் கொடுப்பதற்கு எந்த அரசும், மத்திய நிறுவனமான N.L.C.-யும் முன்வராத காரணத்தால், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்



Coal Bearing Act என்கிற சட்டத்தின்கீழ் அந்த நிலத்தைக் கையகப்படுத்த வேண்டுமென்ற அடிப்படையிலே கையகப்படுத்தி, அவர்களுக்கு ஏக்கருக்கு ஐந்து இலட்சம் ரூபாய் வழங்குவதற்கு. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள். மாண்புமிகு திரு. நன்மாறன்.

**திரு. தி. வேல்முருகன்:** நிறைய குறுக்கீடுகள் வந்துவிட்டன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒன்றுமில்லை. குறுக்கீடு இல்லாமல் பேசியிருக்கலாம்.

**திரு. தி. வேல்முருகன்:** இரண்டு நிமிடங்கள் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இரண்டு நிமிடங்கள் தரமாட்டேன். இரண்டு seconds தருகிறேன்.

**திரு. தி. வேல்முருகன்:** அந்தச் சட்டத்தின்கீழ் நீங்கள் நிலத்தைக் கையகப்படுத்தி அந்த மக்களுக்கு இழப்பீடு தருவதற்கு இந்த அரசு முன்வர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, 2006-2007 ஆம் ஆண்டுக்கான கொள்கை விளக்கக் குறிப்பில் என்னுடைய கடலூர் மாவட்டத்தில் நாகார்ஜுனா ஆயில் நிறுவனம் தொடங்குவதற்கான பணிகள் 2006 ஆம் ஆண்டில் தொடங்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், 2007-2008 ஆம் ஆண்டுக்கான குறிப்பில் 2007-2008-ல் தொடங்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. நன்மாறன்.

**திரு. தி. வேல்முருகன்:** முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முடிக்கவே வேண்டாம். நாங்கள் அதைப் புரிந்துகொண்டோம். Maximum கடலூர், பண்ருட்டிதானே! திரு. நன்மாறன், பேசுங்கள்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழில் துறை, தகவல் தொழில்நுட்பத் துறை மானியக் கோரிக்கைகளின்மீது மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பில் பேசுவதற்கான வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்களுக்கு 10 நிமிடங்கள்.

**திரு. என். நன்மாறன்:** 2007–2008 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், "தொழில் முனைவோர் எளிதில் அணுகக்கூடிய அரசாக இந்த அரசு திகழ்வதால், புதிய தொழிற்சாலைகள் தமிழ்நாட்டில் வந்தவண்ணம் உள்ளன" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. தொழில் துறை வளர இது நிச்சயமாகப் பயன்படும்.

தகவல் தொழில்நுட்பம் இந்தக் காலத்தில் கூடுதல் முதலீடுகளைப் பெற்றிருக்கிறது. மாநிலத்தில் புதிய வேலைவாய்ப்புகள் ஓரளவு அதிகரித்துள்ளன. பின்தங்கிய பகுதிகளில் சிறு தொழில் முதலீடு மானியத் திட்டத்தை, கடந்த ஆட்சியில் நிறுத்தப்பட்டிருந்ததை மாற்றி மீண்டும் செயல்படுத்த அரசு ஆணை பிறப்பித்திருப்பது வரவேற்கத்தக்கது.

மின் சக்தியின் தேவைகளை உணர்ந்து எடுக்கப்படும் நடவடிக்கைகளை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கணக்கில் எடுத்துக்கொள்கிறது. மத்தியிலும் மாநிலத்திலும் ஆட்சிப் பொறுப்பில் இருக்கிற சூழலில் தி.மு. கழக அரசு அதைச் சிறப்பாகப் பயன்படுத்துகிறது. முதலீடுகளையும் பெற முடிகிறது.

மாநிலம் பெறக்கூடிய தொழில்களுக்கு நாம் வழங்கும் சலுகைகள், மானியங்கள் குறித்து இந்த அவை எப்போதும் விவாதிப்பதில்லை என்பது முக்கியமான விஷயம். முதலீட்டாளர்களை ஈர்க்க வரலாறு காணாத அளவு சலுகைகளை மாநிலங்கள் வழங்கிக் கொண்டிருக்கின்றன. முதலீட்டாளர்களுக்குச் சேவை செய்ய மாநிலங்களுக்கிடையே மிகப் பெரிய போட்டியே இப்போது ஏற்பட்டிருக்கிறது. அந்நிய நாட்டு முதலாளிகள், இந்திய பெருமுதலாளிகள், இந்தப் போட்டியில் குளிர் காய்கிறார்கள். இது ஒரு கவலை அளிக்கும் போக்கு என்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சுட்டிக்காட்டுகிறது.

மத்திய, மாநில உறவுகளின் தன்மை மாறியிருக்கிறது. 11-வது, 12-வது நிதிக் கமிஷன்கள் பல்வேறு தடைகளை மாநில அரசுகளுக்கு உருவாக்கியிருக்கின்றன. மத்திய அரசு, மாநிலங்களில் முதலீடு செய்வதிலிருந்து பின்வாங்கியிருக்கிறது. மாநிலங்கள்மீது புதிய நிர்பந்தத்தைத் தொடுக்கிறது. மாநில உரிமைகளை இன்றைய நிலையில் பாதுகாக்க, புதிய முயற்சிகள் தேவைப்படுகின்றன. இந்த நிலையில் மத்திய அரசு நியமித்திருக்கிற நீதியரசர் பூஞ்சி தலைமையிலான குழு மாநில உரிமைகளைப் பற்றி பரிந்துரைகளை உருவாக்கி இருக்கிறது. இது மாநிலங்களைக் கலந்து உருவாக்கப்படவில்லை. இப்போதுள்ள



உரிமைகள் மேலும் விரிவுபடுத்தப்பட முதல்வர் அவர்கள் அதில் தலையிட்டு, அதை மாற்றியமைக்க முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைய உலகமயமாக்கல், நம்முடைய பொருளாதாரம், அரசியல் ஆகிய இரண்டையும் உள்ளடக்கியது. தேசிய சுயாதிபத்தியத்தைப் பாதுகாப்பது என்பது முக்கியமான அம்சமாக மாறியிருக்கிறது என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது. சிறப்புப் பொருளாதார மண்டலம், 2005 என்று மத்திய அரசு உருவாக்கியுள்ள சட்டத்தில் சில மாற்றங்கள் தேவையென மார்க்சிஸ்ட் கட்சி கருதுகிறது. அதற்கான ஆலோசனைகளை எங்கள் கட்சி தயாரித்து, மத்திய அரசிற்கும் அளித்திருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம், நாங்கள் கோரும் மாற்றத்தைப் பரிசீலித்து, சட்டத்தை மாற்றினால், நம் நாட்டுக்கு நல்லதாக அமையும். மேலும் இத்துடன் தொடர்புகொண்ட, நிலம் கையகப்படுத்தும் 1894 ஆம் ஆண்டு சட்டத்திலும் மாற்றம் தேவை. இது நில உடைமையாளர்கள் பாதுகாப்பு பற்றியது. குறிப்பாக, சிறு விவசாயிகளின் வாழ்க்கை அந்த நிலத்துடன் சம்பந்தப்பட்டிருக்கிறது. குத்தகை விவசாயிகள் பாதுகாப்புப் பற்றி அந்தச் சட்டத்தில் ஒன்றுமில்லை. விவசாயத் தொழிலாளி பற்றி அந்தச் சட்டம் கவலைப்படவில்லை. ஆகவே, பொருத்தமான மாற்றங்களை உருவாக்க எங்கள் கட்சி மத்திய அரசிடம் கோரி வருகிறது. மத்திய அரசு 401 சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கு அனுமதி அளித்திருக்கிறது. இதில் தமிழகத்தில் 25–க்கு அனுமதி வழங்கிவிட்டதாகவும், மேலும் 12–க்கு கொள்கை ரீதியான ஒப்புதலைப் பெற்றுள்ளதாகவும் சொல்லப்படுகிறது.

முற்பகல் 11–05

தமிழகத்தில் உருவாக இருக்கும் சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கு 6,378 ஹெக்டேர் நிலம் தேவை என அறிவிக்கப்பட்டுள்ளது. அதாவது, 15,445 ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. பெரிய அளவிலான சிறப்புப் பொருளாதார மண்டலம் அமையும்போது நிலத்தைக் கையகப்படுத்தும் பணியைத் தனியாரிடம் விடக்கூடாது என்பது எங்கள் கட்சியின் நிலை. இது நடுத்தர விவசாயிகள், குத்தகைதாரர்கள், விவசாயத்தை நம்பியுள்ள . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்க்காடு நா. வீராசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது, சிறப்புப் பொருளாதார மண்டலத்தைப் பற்றிக் குறிப்பிட்டார். சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்கு, மேற்கு வங்காளத்தில் அரசாங்கமே நிலத்தை ஆர்ஜிதம் செய்து தொழிற்சாலைக்குக் கொடுத்தது. ஆனால், தமிழகத்திலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள், சிறப்புப் பொருளாதார மண்டலம் யார் தொடங்குவதாக இருந்தாலும், நிலத்தை அவர்களேதான் விவசாயிகளிடத்திலே வாங்கிக்கொள்ளவேண்டுமே தவிர, அரசாங்கம் நில ஆர்ஜிதம் செய்யாது என்று திட்டவட்டமாகத் தெரிவித்து இருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு பின்னால் வரக்கூடிய விவரத்தை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதாவது, பெரிய அளவிலான சிறப்புப் பொருளாதார மண்டலம் அமையும்போது, நிலத்தைக் கையகப்படுத்தும் பணியைத் தனியாரிடம் விடக்கூடாது என்பது எங்களுடைய நிலைப்பாடு. தமிழகத்தில் நில உச்ச வரம்புச் சட்டம் கடந்த சில வருடங்களாகக் கண்ணை மூடிக்கொண்டு இருக்கிறது. தனியாரை நிலம் கொள்முதல் செய்ய அனுமதித்தால், அந்தச் சட்டம் முற்றிலும் காணாமல் போய்விடும் என்று கருதுகிறோம். ஆகவே, அரசே நிலத்தைக் கையகப்படுத்தி, குத்தகைக்குக் கொடுப்பது பொருத்தமாகவும், சிறப்பாகவும் அமையும். இதை அரசு பரிசீலிக்க வேண்டும்.

உதாரணத்திற்கு ஒன்று. சென்னை நகரத்தில், கிண்டி அருகில் இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் என்கிற ஒரு மத்திய அரசு நிறுவனம் இருந்தது. அது தொடர்ந்து ஆதாயம் ஈட்டும் நிறுவனமாகவும் இருந்தது. மறைந்த மத்திய அமைச்சர் மாண்புமிகு முரசொலி மாறன் அவர்கள், அதை மினி ரத்னா என்றே அழைத்தார். இந்தத் தொழிற்சாலைக்குச் சென்னையில் 50 ஏக்கரும், ஓசூரில் 15 ஏக்கரும் நிலம் இருந்தது. நிலம், தொழிற்சாலை இரண்டையும் முந்தைய பி.ஜே.பி. அரசு, அடிமாட்டு விலைக்கு, அதாவது ரூ.50 கோடிக்கு, இமாச்சலப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு நிறுவனத்திற்கு விற்றார்கள். அவர்கள் விற்கிறபோது அந்தச் சொத்தின் மதிப்பு ரூ.300 கோடி. தற்போது என்ன நடக்கிறது என்றால், அந்த நிறுவனம் தொழிற்சாலையையும் முறையாக நடத்தவில்லை. சில வாரங்களுக்கு முன்னால், ஒரு பகுதி நிலத்தை அதாவது 11 ஏக்கர் நிலத்தை மட்டும், ரூ.298 கோடிக்கு விற்று இருக்கிறார்கள். கிண்டி மேம்பாலம் உருவாக்க 1.7 ஏக்கர் நிலத்திற்கு ரூ.29 கோடி அரசு



அளித்திருக்கிறது. இதுபோன்ற பகல் கொள்ளையைத் தடுக்க வேண்டுமென்றால், நிலம் அரசிடம் இருப்பதுதான் பொருத்தமாக இருக்கும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது.

மின் உற்பத்தியில் தனியார் முதலீட்டில் உள்ள ஆபத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். அரசு தனியாரிடம் செய்யும் ஒப்பந்தம் independent power project என்பதால் எதையும் மீண்டும் பரிசீலிக்க முடியாத நிலை ஏற்படும் என அஞ்சுகிறோம். அரசு இதை உரிய முறையில் கவனத்தில் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

மாநில பொதுத் துறை நிறுவனங்களைச் சிறப்பாகவும், உபயோகமாகவும், இலாபகரமாகவும், இயங்க வைக்க வேண்டி இருக்கிறது. உற்பத்தி, உற்பத்தித் திறன் போன்றவற்றில் அனைவருக்கும் பங்கு உண்டு. நலிவு ஏற்படவிடாமல் சங்கங்களுடன் நிர்வாகம் கலந்து பேச வேண்டும். மத்திய பொதுத் துறைகளில் உள்ளதுபோல், தொழில்நுட்ப ஞானம் உள்ளவர்களையே நிர்வாக இயக்குநர்களாக நியமிக்க வேண்டும். தற்போதுள்ள I.A.S. அதிகாரிகளை போர்டு உறுப்பினர்களாக வைத்துக்கொள்ளலாம். தொழில் வளர, தொழில் அமைதி தேவை என்பதை ஏற்றுக்கொள்கிறோம். முதலீட்டாளர்கள் எந்தச் சட்டத்தையும் மதிப்பது இல்லை. தொழிலாளர் நலச் சட்டங்கள், சங்கம் உருவாக்கும் உரிமை, கூட்டு பேர உரிமை போன்றவை நடைமுறையில் இல்லை. நீதிமன்றத் தீர்ப்புகளும் நிறுவனத்திற்கு சாதகமாகவே வந்துகொண்டிருக்கின்றன. தமிழகத்தில் 90 பணிகளுக்குக் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அவை எந்த அளவுக்கு அமலாகிறது? அமலாக்க வேண்டிய இலாக்கா செயல்படவில்லை. வழக்கு போட்டு வெற்றி பெற்றாலும், அமலாக்க வழியில்லை என்கிற அவல நிலை உருவாகியுள்ளது. இப்படிப்பட்ட சூழ்நிலை தொடர்ந்தால் போராட்டம் தவிர்க்க முடியாமல் போய்விடும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

அரசு முதலீட்டாளர்களைப் பொருத்தமாக எச்சரிக்க வேண்டும். சட்டத்தை மதிக்காதவர்களுக்கு மாநிலத்தில் இடம் இல்லை எனக் கூறவேண்டும். மறைந்த மத்திய அமைச்சர் முரசொலி மாறன் அவர்களால், தென் மாவட்டங்களின் வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட நாங்குநேரி சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்கு புத்துயிர் ஊட்டப்பட்டுள்ளது என்று நிதி நிலை அறிக்கை கூறுகிறது. அது வரவேற்கத்தக்கது. தென் மாவட்டங்கள் பொதுவாக பின் தங்கி உள்ளன. அவற்றை மேம்படுத்த வழிமுறைகளை மாநில அரசு உருவாக்க வேண்டும்.

மதுரையில் மென் பொருள் பூங்கா அமைக்கப்படுவது குறித்து, அரச அறிவித்து இருப்பதை வரவேற்கிறோம். அந்தப் பணியை விரைவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அண்ணா பல்கலைக்கழகத்தின் கிளை மதுரையில் அமைய வேண்டும் என்பதையும் தெரிவிக்கிறேன். தென் மாவட்டங்களில் இராமநாதபுரம், சிவகங்கை மாவட்டங்கள் மிகவும் பின்தங்கி உள்ளன. இங்கே வளர்ச்சிக்காகக் கல்வி, குடிநீர், சுகாதாரம், மின்சாரம் போன்றவற்றுக்கு அரசு முதலீடுகளைத் துரிதமாகச் செய்ய வேண்டும்.

முற்பகல் 11-10

வேலைவாய்ப்புள்ள தொழில் அதாவது, Agro-based Industries— வேளாண் சார்ந்த தொழில்கள் உருவாக வேண்டும். அது மேற்சொன்ன மாவட்டங்களிலும், தருமபுரி போன்ற மாவட்டங்களிலும் உருவாக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாநிலத்தில் சிறு, குறு தொழில்கள் பாதிக்காமல் இருக்க நடவடிக்கை தேவை. இவை அதிகபட்சமான வேலைவாய்ப்புகளை உருவாக்குகின்றன. தீப்பெட்டித் தொழில், தொழில் போட்டியைச் சமாளிக்க முடியாமல் திணறுகிறது. நிப்புத் தொழில், கைத்தறி, விசைத்தறி, பட்டாசு போன்ற தொழில்கள் பாதுகாக்கப்பட வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) மதுரை ஜவுளிப் பூங்கா விரைவில் அமைய ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மூடிய பஞ்சாலைகளைத் திறக்க வேண்டும். மூடிய கூட்டுறவு நூற்பாலைகள் திறக்கப்பட வேண்டும். சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களில் பலபேரை V.R.S. என்கின்ற பெயரில் அனுப்ப— அதாவது, Voluntary Retirement என்பது compulsory retirement ஆக மாறி இருப்பதாக அவர்கள் கவலை அடைந்திருக்கிறார்கள். அதற்கு உரிய நடவடிக்கை வேண்டும். அலங்காநல்லூர் சர்க்கரை ஆலை முறையாக இயங்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திண்டுக்கல் தோல் ஷாப் கழிவுநீர் சுத்திகரிப்பதற்கு மின் கட்டணச் சலுகை வழங்கி உதவ வேண்டும். திண்டுக்கல்லில் லெதர் காம்ப்ளெக்ஸ், மெஸ்பார்க் அமைத்து உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாட்டில் தொழில்களே இல்லாத மாவட்டங்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன். வேலூர் மாவட்டத்தில் உள்ள வெடி மருந்துத் தொழில் பாதுகாக்கப்பட்டு தொழிலாளர்களுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டுமென்று வேண்டுகிறேன். ரூ.10,000 கோடிக்கு மேல் ஏற்றுமதி செய்யும் திருப்பூர் பனியன் தொழில்



சாயப்பட்டறைக் கழிவுநீர் கடலில் கலக்க 700 கோடி ரூபாய் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. குணசேகரன். (குறுக்கீடு) சரி, திரு. நன்மாறன், பேசுங்கள்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள் சட்டமன்றப் பணிகளில் பொன்விழா காண்கின்றார்கள். அவர் இங்கே, சட்டமன்றத்தில் நுழைந்து 50 ஆண்டுகள் ஆகிறது. நான் இந்த மண்ணுக்கு வந்து 59 ஆண்டுகள் ஆகின்றன. நான் அவரை வாழ்த்துவது பொருத்தம் அல்ல. வணங்கி மகிழ்ந்து விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருவாளர் செங்கோட்டையன். ஒரு செகண்டில் பேசி முடியுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்கிறபோது தனியார் தொழில் முதலீட்டாளர்களுக்கு இந்த மாநிலத்தில் அரசு நிலத்தை ஆர்ஜிதம் செய்து அவர்களுக்கு வழங்காது என்ற உத்தரவாதத்தைத் தந்தார். நேற்றையதினம் பெருந்துறை பகுதியில் சிப்காட் ஏறத்தாழ 2500 ஏக்கர் நிலங்களை ஆர்ஜிதம் செய்து பல்வேறு தொழில் முதலீட்டாளர்கள் அங்கே தொழில் துவங்கியிருக்கிறார்கள். மேலும், 2000 ஏக்கர் எடுக்கப்படும் என்று வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கிற அந்த விவசாயிகளிடத்திலே வற்புறுத்தி எடுப்பதாக ஒரு செய்தி வந்திருக்கிறது. அதை அரசு தடுக்குமா என்பதை உங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொறடா அவர்கள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்று நினைக்கிறேன். சிறப்புப் பொருளாதார மண்டலத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அதற்கு இந்த அரசாங்கத்தினுடைய கொள்கையைச் சொன்னேன். சிப்காட்டைப் பற்றிச் சொல்கிறார்கள். சிப்காட் ஆர்ஜிதம் செய்கிற நிலங்கள்கூட தனியார் டிட்கோ மூலமாகவோ அல்லது அரசு நிறுவனங்கள் மூலமாகவோ ஒப்பந்தம் செய்து கொண்டு joint venture மூலமாக வந்தால்தான் அந்த நிலங்கள் அவர்களுக்கு ஒதுக்கப்படுகிறதே தவிர தனியாக யாருக்கும் ஒதுக்கப்படுவதில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு திரு. சு. குணசேகரன். (குறுக்கீடு) திரு. கலைராஜன், அவர் பேசி முடித்தவுடன் உங்களைக் கூப்பிடுகிறேன். (குறுக்கீடு) உங்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்புத் தருகிறேன்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிவகங்கை கிராபைட் திட்டத்தை உலகத் தரம் வாய்ந்த கிராபைட்டாக உருவாக்கி விரிவாக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் அறிவிப்புச் செய்திருக்கிற நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு சிவகங்கை மாவட்ட மக்கள் சார்பில் முதலிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்தில், சிவகங்கை பகுதியில் தொழில் வளர்ச்சி ஏற்பட கிராபைட் பொருட்களை உற்பத்தி செய்வதற்கு ஊக்கம் அளிக்கும் வகையில் கிராபைட் தொழிற் பூங்காவை உருவாக்கித்தர வேண்டுமென்ற கோரிக்கையையும் இந்தநேரத்தில் முன்வைக்கிறேன்.

தமிழ்நாடு சிமெண்ட்ஸ், ஆலங்குளம் ஆலை நவீனப்படுத்தப்பட்டு, உற்பத்தியை அதிகப்படுத்தி வேலைவாய்ப்பையும் அதிகப்படுத்த வேண்டும். இதன்மூலம் சிமெண்ட் விலையைக் கட்டுப்படுத்தி கட்டுமானப் பணிகள் சிறப்பாக நடைபெற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மூடிக் கிடக்கும் கூட்டுறவு நூற்பாலைகளை உடனே திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். வேளாண் தொழில் வளர்ச்சிக்கு மக்களுக்கு அடிப்படைத் தேவையான மின்சக்தி உற்பத்திற்கு சிறப்பான திட்டங்கள் அறிவித்திருக்கிற நிலையில் இன்னும் கூடுதலான திட்டங்கள் விரைந்து செயலுக்கு வர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பொதுவாக, இப்பொழுது சிறப்புப் பொருளாதார மண்டலங்களைப் பற்றி பல்வேறு விதமான பிரச்சினைகள் பேசப்படுகின்றன. சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்காக நஞ்சை நிலங்கள் கையகப்படுத்தப்படமாட்டாது என்ற வாக்குறுதி சிறப்புக்குரியது. அதேநேரத்தில், சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கு தேவைக்கு அதிகமான நிலங்கள் கையகப்படுத்தப்படுகிறது. அதனால் விலை ஏற்றம் ஏற்படும் சூழலில் சாதாரண மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கு ஒதுக்கப்படும் நிலங்கள் பின்னர் ரியல் எஸ்டேட்காரர்களின் இலாபத்திற்கு மட்டுமே பயன்படும். எனவே, தேவையான நிலங்கள் மட்டுமே ஒதுக்கப்பட வேண்டும்.



முற்பகல் 11–15

மக்கள் தொகை அதிகம் உள்ள நாட்டில் உணவுத் தேவைக்காக பிற நாடுகளை எதிர்பார்க்க முடியாது. எனவே, நிலத்தைப் பற்றிய தெளிவான கொள்கை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். வேளாண் தொழில் நிலங்கள் உறுதியாக பாதுகாக்கப்பட வேண்டும்.

தொழில் வளர்ச்சியில் அந்நிய மூலதனத்தை ஈர்ப்பதில், புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் ஏற்படுவதில் தமிழகம் சிறப்பான வளர்ச்சியை எட்டியுள்ளது. ஆனால், அந்நிய மூலதனத்தின் வளர்ச்சியை கட்டுப்படுத்துவதிலும் அதில் தொழிலாளர்களின் உரிமைகள், அரசுக்கான வரி வருமானம் இவற்றைப் பாதுகாப்பதிலும் அரசு சமரசம் செய்துகொள்ளக் கூடாது. அதே நேரத்தில், தமிழகத்தில் அரசு சார்ந்த தொழிற்சாலைகளை மற்றும் வேளாண் சார்ந்த தொழில்களை உருவாக்குவதில் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

ஒரு கோடிக்கும் மேற்பட்ட விவசாயிகள், விவசாயத் தொழிலாளர் குடும்பங்கள் உள்ளதாகக் கணக்கிடும் அரசு, அவர்கள் சார்ந்துள்ள தொழில்கள் சிறப்பாக நடைபெற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் போன்று சிறப்பு வேளாண் மண்டலங்கள் உருவாக்கப்பட வேண்டும். நாட்டின் உணவுத் தேவையை மையமாக வைத்து மண்டலங்களும், வேளாண் சார்ந்த தொழில் வளர்ச்சி மண்டலங்களும் உருவாக்கப்பட வேண்டும்.

தமிழ்நாட்டில் கரும்பு ஆலைகள் கூட்டுறவு, பொது மற்றும் தனியார் துறை என்ற அடிப்படையில் செயல்படுகின்றன. அதனால் விவசாய நலன்கள் ஒரே சீராக இல்லை. விவசாயப் பாதுகாப்பு கேள்விக் குறியாக உள்ளது. எனவே அதைச் சீரமைக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் 54 சதவிகித நிலங்கள் மானாவாரி நிலங்களாக உள்ளன. அதில் பயோ டீசல் உற்பத்திக்கான ஒருங்கிணைந்த திட்டங்களை உருவாக்க வேண்டும். தற்போது உள்ள நடைமுறைகள் விவசாயிகளுக்கு நம்பிக்கை அளிப்பதாக இல்லை. எரிசக்தித் தேவை அதிகரிக்கும் சூழலில் அதில் கூடுதல் கவனம் தேவை.

அதேபோல, பட்டு உற்பத்தியில் கூடுதல் கவனம் தேவை. தமிழ்நாட்டின் தேவையான 400 மெட்ரிக் டன் நூல் கர்நாடகாவிலிருந்து இன்னும் கூடுதல் விலைக்கு வாங்குகின்ற சூழல் உள்ளது என்று கூறுகிறார்கள். எனவே, தமிழ்நாட்டில் பட்டுத் தொழிலைச் சீரமைக்க

நடவடிக்கை தேவை. இதைப்போல, பகுதிவாரியான தொழில்களுக்கு முன்னுரிமை தரப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தகவல் தொழில்நுட்பவியல் வளர்ச்சி தமிழகத்தில் உருவாவதற்கு அடித்தளமிட்டவர் மாண்புமிகு முதல்வர் கலைஞர்தான். தற்போது தமிழகத்தில் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி சிறந்து விளங்குகிறது. I.T. துறை வளர்ச்சியில் இலட்சக்கணக்கான இளைஞர்களின் சக்தி தமிழகத்தில் பயன்படுத்தப்படுகிறது. ஆனால், இதில் ஏற்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வது அரசின் கடமையாகும். I.T. வளர்ச்சியில் சென்னையில் ஏற்பட்டுள்ள நில விலையேற்றம், வீட்டு வாடகை உள்ளிட்ட வாழ்க்கைத்தர உயர்வு சாமானிய மக்களை வெகுவாகப் பாதிக்கிறது. இதற்கு மாற்று நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

சீனாவில் I.T. துறை மலைப் பகுதி மற்றும் வளர்ச்சி குன்றிய பகுதிகளில் உருவாக்கப்படுகிறது. அனைத்து மாவட்டங்களிலும் இந்தத் துறையை வளர்ப்பதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும். I.T. துறையில் பணி நேர வரைமுறை இல்லாததால் தமிழகத்தில் மன நோயால் பாதிக்கப்பட்ட இளைஞர்கள் எண்ணிக்கை 25 ஆயிரத்தைத் தாண்டிவிட்டதாகக் கூறுகிறார்கள். இது எதிர்கால சமூகத்தில் பெரிய பாதிப்பை ஏற்படுத்தும். இதற்கு, பணி நேரத்தில் தகுந்த மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

I.T. துறையில் கால் சென்டர் வளர்ச்சி தமிழகத்தில் வளர்ந்து வரும் நிலையில், மொழிப் பயிற்சியின் தேவை அதிகரித்துள்ளது. அதற்கான பயிற்சிக் கட்டமைப்புகளை உருவாக்க வேண்டும். I.T. துறையில் சாப்ட்வேர், கால் சென்டர் வளர்ச்சி அளவுக்கு ஹார்டுவேர் வளர்ச்சி ஏற்படவில்லை. அதில் கூடுதல் கவனம் செலுத்தி வளர்ச்சிக்கான திட்டமிடல் தேவை. ஓரிரு ஆண்டுகளில் 35 இலட்சம் வேலை வாய்ப்புகள் இத்துறையில் ஏற்படும் என்று கூறுகிறார்கள். அதற்குத் தகுந்த அளவில் கிராமப்புற, பிற்படுத்தப்பட்ட, ஆதி திராவிட மாணவர்களை உருவாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அதைப்போல, சிவகங்கை மாவட்டம் கடந்த ஆண்டு கடுமையான வறட்சிக்கு இலக்காகியிருக்கிற சூழலில் சிவகங்கை மாவட்டத்திற்கு குடி தண்ணீர், வேலைவாய்ப்புக்கான கூடுதல் நிதி ஒதுக்கீடுகளை அறிவித்து, சிவகங்கை மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.



அதைப்போல, இப்போது தமிழக முதல்வர் அவர்கள் ரிலயன்ஸ், வால்–மார்ட் போன்ற கம்பெனிகள் சில்லறை வர்த்தகத்தில் ஈடுபடாத ஒரு சூழ்நிலையை ஏற்படுத்த மத்திய அரசாங்கத்தின் மூலமாக நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதியைத் தெரிவித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில், உடனடியாக தமிழகத்திலே இருக்கிற அந்த ரிலயன்ஸ், வால்–மார்ட் போன்ற நிறுவனங்களை எல்லாம் மூடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே கூறி, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார் அவர்கள்.

**திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முக்கியத்துவம் வாய்ந்த இந்தத் தொழில் துறை மானியத்தின் மீது பேச வாய்ப்பளித்த உங்களுக்கு என்னுடைய நன்றியை முதலிலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

*முற்பகல் 11–20*

மத்தியிலே பொறுப்பேற்றிருக்கின்ற அரசானது, பொறுப்பேற்கின்றபோதே அது வகுத்தளித்த குறைந்தபட்சப் பொது வேலைத் திட்டத்திலே, தனியார் துறையில் இட ஒதுக்கீட்டைக் கொண்டு வருவோம் என்ற வாக்குறுதியை அளித்தது. கடந்த 3 ஆண்டுகளாக அந்த ஆட்சி சிறப்பாக நடந்தபோதிலும், தனியார் துறையில் இட ஒதுக்கீடு கொண்டு வருவோம் என்கின்ற அந்த வாக்குறுதி என்பது, இதுவரை நிறைவேற்றப்படாமலேயே இருக்கின்றது. இன்றைக்கு அரசுத் துறையிலே வேலைவாய்ப்புகள் குறைந்துகொண்டே வருகின்றன. மேலும், மேலும் தனியார்மயம் அதிகரித்துக்கொண்டிருக்கின்ற இந்த நேரத்திலே, ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் இன்றைக்கு வேலைவாய்ப்பைப் பெறவேண்டுமென்று சொன்னால், தனியார் துறையிலே இட ஒதுக்கீடு வந்தாலொழிய, அதற்கு வாய்ப்பே இருக்காது. தனியார் துறையில் இட ஒதுக்கீடு இல்லாமல், இத்தகைய புறக்கணிக்கப்பட்ட மக்களுக்கு வேலைவாய்ப்புகளைத் தாமே உருவாக்கித் தரவேண்டுமென்று நம்முடைய அரசாங்கம் சொன்னபோதிலும்கூட, கடந்த 3 ஆண்டுகளாக, இந்தியாவிலே இருக்கின்ற எந்தவொரு பெரிய தனியார் நிறுவனமும் affirmative action என்று அமெரிக்கா போன்ற நாடுகளிலே குறிப்பிடப்படுகின்ற அத்தகைய ஒத்தாசை

நடவடிக்கைகளைத் தங்கள் நிறுவனங்களிலே அமல்படுத்துவதற்குத் தாமாக இதுவரை முன்வரவே இல்லை. நமக்கெல்லாம் நன்றாகத் தெரியும், மயிலே, மயிலே இறகு போடு என்றால் போடாது என்று. மயிலே மனம் இரங்காதபோது, கழுகுகளிடம் கையேந்திக் கொண்டிருப்பதிலே அர்த்தம் இல்லை. எனவே, தனியார் துறையில் இட ஒதுக்கீட்டினைக் கொண்டுவருவதற்கு நாம் உறுதியான முயற்சியை மேற்கொள்ள வேண்டும். இப்போது இட ஒதுக்கீட்டுக் கொள்கை என்பது மிகவும் இக்கட்டான ஒரு நிலையிலே இருக்கின்ற சூழலிலே, நாம் இந்தக் கோரிக்கையை முன்வைத்தால்தான் எதிர்காலச் சந்ததியினரின் வாழ்வைக் காப்பாற்ற முடியும் என்பதை உணர்ந்து, சமூக நீதிப் போராட்டத்திலே முன் நிற்கின்ற தமிழகம், இந்தக் கொள்கையிலும் உறுதியாக முன்னின்று தனியார் துறையிலே இட ஒதுக்கீட்டினை ஏற்படுத்தித்தர இங்கே உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்ததாக, இப்போது தகவல் தொழில்நுட்பத் துறையில் பல்வேறு புரட்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இந்தத் தகவல் தொழில்நுட்பத் துறையிலே இருக்கின்ற அந்த இணைய தளங்களை நிர்வகிக்கின்ற சர்வர்கள் என்று சொல்லப்படுகின்ற அந்த அமைப்புகள், உலகம் முழுவதும் இருக்கின்ற இணைய தளங்களைக் கட்டுப்படுத்துகின்ற அந்த சர்வர் அமைப்புகள் யாவும் அமெரிக்காவினுடைய கட்டுப்பாட்டிலே இருக்கின்றன. இன்றைக்கு நம்முடைய அமைச்சர்கள், முக்கியமான அதிகாரிகள் பரிமாறிக்கொள்ளும் மின்னஞ்சல்களைக்கூட அமெரிக்காவிலேயிருந்து அவர்கள் கண்காணிக்க முடியும்; அவர்கள் அவற்றைப் படிக்க முடியும். நம்முடைய சுதந்திரம் என்பது, இறையாண்மை என்பது இன்றைக்குக் கேள்விக்குரிய ஒன்றாக மாறியிருக்கிறது. இன்றைக்கு உலகமே ஒரு கிராமமாகச் சுருங்கிவிட்டிருக்கிறது என்று பெருமைப்பட்டுக்கொள்கிற அதேநேரத்திலே, நம்முடைய இறையாண்மை என்பது இன்றைக்கு கொஞ்சம் கொஞ்சமாகப் பறிபோய்க் கொண்டிருக்கிறது என்பதை உணர்ந்து அந்த சர்வர்களை இந்தியாவிலேயே கட்டுப்படுத்துகிற ஒரு அதிகாரத்தைப் பெறுவதற்கு இந்திய அரசை நாம் வலியுறுத்த வேண்டுமாய் நான் இங்கே என்னுடைய கருத்தைப் பதிவு செய்கின்றேன்.

அடுத்ததாக, B.P.O. மையங்கள், out-sourcing முறையில் இப்போது பல இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பைத் தருகின்றன. நம்முடைய இளைஞர்களும் நல்ல சம்பளங்களைப் பெறுகிறார்கள். ஆனால், அந்த



மையங்களிலே எந்தவித வேலை ஒழுங்கமைப்பும் கிடையாது. எத்தனை மணி நேரம் வேலை செய்ய வேண்டும் என்கின்ற வரையறை கிடையாது. நம்முடைய இளைஞர்களெல்லாம் கசக்கிப் பிழியப்படுகிறார்கள். அவற்றை ஏதேனும் ஒரு விதத்திலே வரன்முறைப்படுத்துவதற்கு நம்முடைய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த ஆட்சியின்போது, உலக வங்கியினுடைய ஒரு மையம் சென்னையிலே துவக்கப்பட்டது. சுமார் 100 கோடி ரூபாய் மதிப்புள்ள நிலத்தை அவர்களுக்கு இனாமாக நாம் தந்தோம். ஆனால், அதனுடைய புரிந்துணர்வு ஒப்பந்தத்திலே இடம் பெறாத ஒரு விஷயமாக, அங்கே கட்டப்படுகிற அந்தக் கட்டடத்திற்கான Building charge–ஐக்கூட அவர்கள் இரத்து செய்ய வேண்டும் என்று கோருகிறார்கள். சுமார் ஒன்றரை கோடி ரூபாய்கூடப் பெறாது, அதைக்கூட நாங்கள் கட்டமாட்டோம், அதைக் கூட நீங்கள் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று அவர்கள் கேட்கிறார்கள். இன்றைக்கு உலக வங்கியின் அந்தக் கிளையிலே, நம்முடைய உள்ளூர்வாசிகள் அதிகமாக வேலை செய்வதில்லை. அதனால், இங்கே நமக்கு எந்தப் பலனும் கிடையாது. உலக வங்கிக்கு பல நாடுகள் தங்களுடைய அரசியல் இறையாண்மையையே எழுதிக்கொடுத்த வரலாறு எல்லாம் நமக்குத் தெரியும். அப்படியான அந்த வங்கிக்கு இங்கே நாம் நிலம் கொடுத்தது போதாது என்று இங்கே மேலும் மேலும் சலுகைகளைக் கொடுத்துதான் ஆகவேண்டுமா என்பதை இந்த அரசு சிந்தித்து, அத்தகைய கோரிக்கைகளை நீங்கள் நிராகரிக்க வேண்டுமாய் நான் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11–25*

அடுத்ததாக, மிகவும் அதிகம் விவாதிக்கப்படுவது சிறப்புப் பொருளாதார மண்டலங்கள். அந்தச் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் உருவாக்கப்பட்டபோதே அவை நாட்டுக்குள்ளே அமைகிற ஒரு அந்நிய நாட்டின் பகுதிபோல அந்த மண்டலங்கள் அமையும் என்று அன்றைக்குச் சொன்னார்கள். அந்த மண்டலங்களுக்குள்ளே நம்முடைய நாட்டினுடைய எந்தவிதச் சட்டமும் செல்லாது என்று அன்றைக்குத் தீர்மானிக்கப்பட்டது. இன்றைக்கு அதை வரையறுக்கிற உரிமையோ, அதிகாரமோ மாநில அரசுக்கு இல்லை. அந்தச் சிறப்புப் பொருளாதார மண்டலங்களிலே உருவாக்கப்படுகிற நிறுவனங்களிலே—இங்கே நம்முடைய முதல்வர் அவர்கள் பேசும்போதெல்லாம் சொன்னார்கள்,

இங்கே உள்ளூர்வாசிகளுக்கு வேலைவாய்ப்பிலே முன்னுரிமை கொடுக்கிறீர்களா என்று கேட்டுவிட்டுத்தான் நான் கையெழுத்திடுகிறேன் என்று அவர்கள் பலமுறை இந்த அவையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அதுபோலவே, அந்தச் சிறப்புப் பொருளாதார மண்டலங்களிலே இந்த சமூக நீதிக் கொள்கையை, reservation என்ற அந்தப் பெயரிலே அவர்கள் அவற்றை அமல்படுத்தாவிட்டாலும்கூட ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அவர்கள் இடங்களை அளிக்கவேண்டும், அங்கே இடங்களை, கட்டடங்களை ஒதுக்கீடு செய்யும்போது அவ்வாறு ஒதுக்கீடு செய்யவேண்டும். இத்தகைய நடவடிக்கைகள், அந்த நிறுவனங்களை நடத்துகிற பன்னாட்டு அமைப்புகள் தங்கள் நாடுகளிலே கடைப்பிடிக்கிற நடவடிக்கைகள்தான் என்கிற விதத்திலே, அவற்றை இங்கேயும் அமல்படுத்துவதற்கு அவர்களுக்கு எந்தவிதத் தடையும் கிடையாது. எனவே, நீங்கள் அதை வலியுறுத்தி, சமூக நீதிக் கொள்கையை கடைப்பிடிப்போம் என்ற வாக்குறுதியை அவர்களிடமிருந்து பெற்று அந்த சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கு அனுமதியளிக்க வேண்டுமாய் நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதுபோலவே, பின்னடைந்த பல பகுதிகளிலே இப்போது புதிய தொழில்கள் துவங்கப்படுகின்றன. விவசாயத் துறையை நாம் காப்பாற்ற வேண்டுமென்று சொன்னால், இப்போது தொழில் துறையை வளர்த்தாலொழிய முடியாது. 1901 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பிலே விவசாயத் துறையிலே இருந்த நிலமற்ற கூலி விவசாயிகளுடைய பங்கிலே 67 விழுக்காட்டினர் ஆதி திராவிட மக்கள் என்று அன்றைக்கு கணக்கெடுப்பிலே தெரிவித்தார்கள். 2001 census-லும்கூட அந்த அளவு, அந்த விழுக்காடு மாறாமல் அதே 67 விழுக்காட்டினர் ஆதி திராவிட சமூகத்தைச் சேர்ந்தவர்கள், நிலமற்ற கூலி விவசாயிகளாக இருக்கிறார்கள். நிலத்தை சார்ந்து, கூலி விவசாயிகளாக அவர்கள் இருக்கின்றவரை அவர்களுடைய வறுமை நிலையிலே எந்த மாற்றத்தையும் நாம் கொண்டுவர முடியாது. அவர்கள் நிலத்தை நம்பி இருப்பதிலிருந்து அவர்களை விடுத்து பிற தொழில் துறைகளை நோக்கி நகர்த்துகிற திட்டத்தை நாம் முன்வைத்தாக வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) அத்தகைய திட்டங்களை உருவாக்க வேண்டுமாய் இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

மிகவும் பின்னடைந்திருக்கின்ற என்னுடைய காட்டுமன்னார்கோயில் தொகுதியிலே ஒரு தொழிற்பேட்டை மட்டும் அல்ல, ஒரு தொழில் பயிற்சிக் கல்லூரிகூடக் கிடையாது. அங்கே ஒரு தொழிற்பேட்டையை



உருவாக்கித்தர மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருணைகூர்ந்து நடவடிக்கை எடுக்கவேண்டுமாய்க் கேட்டுக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி சொல்லி அமைகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம். மாண்புமிகு உறுப்பினர், உங்களுக்கு ஏழு நிமிடங்கள்தான்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தினம் தினம் மக்களைப் பற்றி சிந்தி, மக்கள் தேவைக்காக குரல் கொடு என்ற தாரக மந்திரத்தை எங்களுக்குச் சொல்லிக் கொடுத்திருக்கிற தமிழ்க் குடிதாங்கி மருத்துவர் அய்யா அவர்களை வணங்கி, எங்களுடைய மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களையும் வணங்கி, எனக்கு இந்த அவையிலே பேச வாய்ப்பளித்த தங்களுக்கும், தொழில் துறையின்மீது பேசுவதற்காக எனக்கு வாய்ப்பு அளித்து, தமிழ்நாட்டிலே தொழில் துறையை பூத்துக் குலுங்கும் துறையாக மாற்றி வருகிற, கடந்த 50 ஆண்டு காலம் சட்டப் பேரவை வரலாற்றிலே, தமிழ் நாட்டிலே மட்டுமல்ல, இந்திய வரலாற்றிலே மட்டுமல்ல, உலக வரலாற்றிலே எந்தவொரு மனிதரும், 50 ஆண்டுகள் தொடர்ந்து சட்டப் பேரவையில் பணியாற்றியதில்லை என்கிற அளவிற்கு சட்டப் பேரவையிலே சரித்திரம் படைத்திருக்கிற, கின்னஸ் சாதனை படைத்திருக்கிற தமிழக முதல்வர் அவர்களையும் வணங்கி என்னுடைய உரையைத் துவக்குகிறேன்.

முற்பகல் 11-30

தொழில் துறையிலே இப்போது தமிழகம் மிகச் சிறப்பாகச் செயலாற்றிக் கொண்டிருக்கிறது என்பதற்கு பல்வேறு உதாரணங்களை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொள்கை விளக்கக் குறிப்பிலே சிறப்பாக எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அந்த வகையிலே, தமிழ்நாட்டிலே ஒரு பக்கம் பல்வேறு தொழில்கள் வளர்கின்றன என்று சொன்னாலும்கூட, இன்னொரு பக்கத்திலே தகவல் தொழில்நுட்பம் மிகச் சிறப்பாக, மிக மிக ஒரு நல்ல நிலையை எட்டியிருக்கிறது. தென் இந்தியாவின் நுழைவாயிலாக சென்னை அமைந்திருப்பதைப் பயன்படுத்துகிற முதல்வரை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வரவேற்கிறோம்.

அதேசமயத்திலே, தொடர்ந்து நாங்கள் வலியுறுத்தி வருவது, அனைத்து மாவட்டங்களிலும் இதுபோன்ற தொழில்நுட்பப்

பூங்காக்களை அமைக்க வேண்டுமென்கிற கோரிக்கைகளை முன்வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். இன்று சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களிலே மிகச் சிறப்பாகவே இந்தத் தொழில் இயங்கிக் கொண்டிருக்கிறது. அதை அடுத்து, இப்போது நம்முடைய முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். மதுரையிலும், திருநெல்வேலியிலும், கோவையிலும், சேலத்திலும், திருச்சியிலும் இது தொடங்கப்படும் என்று அறிவித்து அதற்காக நில ஆர்ஜிதம் செய்திருப்பதும், அதற்காக முன்கட்டப் பணிகள் தொடங்குவதற்குமான அறிவிப்புகளும் நமக்கு மிக மிக மகிழ்ச்சியை அளிக்கிற விஷயமாக இருந்து கொண்டிருக்கின்றன.

அதேபோன்று, இப்போது இங்கே வருகின்ற முதலாளிகள் கோடிக் கணக்கிலே முதலீடு செய்து கொண்டிருக்கிறார்கள். கடந்த ஓராண்டிலே, பல கோடிக்கணக்கான ரூபாய்கள் முதலீடு செய்கிற தொழில்கள் இங்கு வந்துள்ளன. ஆனால், அந்தத் தொழில்களிலே, மனித உழைப்பு எந்த அளவிற்கு ஏற்றுக்கொள்ளப்படுகிறது என்று சொன்னால், அது மிக மிகக் குறைந்த அளவாக இருக்கிறது.

மாண்புமிகு தமிழக முதல்வரை நான் கேட்டுக்கொள்வது, தமிழகத்திலே ஏறக்குறைய ஆண்களும் பெண்களும் 58 இலட்சம் பேர்கள் படித்துவிட்டு வேலை இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களை அதிகமாகப் பணி அமர்த்துவதற்கான வகையிலே இங்கே வருகிற தொழில்கள் அமைவதற்கான முயற்சியை நம்முடைய தமிழக அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனக்கு முன்பாகப் பேசிய சகோதரர் திரு. ரவிக்குமார் அவர்கள் சொன்னதுபோல, எங்களுடைய அய்யா அவர்கள், இந்தியாவிலேயே முதன்முதலாகக் குரல் கொடுத்த ஒரு கோரிக்கை, தனியார் தொழிற்சாலைகளிலே இட ஒதுக்கீடு வேண்டும் என்ற கோரிக்கை. அக்கோரிக்கையை முன்வைத்து, எங்களுடைய அய்யா அவர்கள் தலைமையிலே, என் முன்னிலையிலே, Ford தொழிற்சாலை முன்பாக மிகப் பெரிய போராட்டத்தை நடத்தினோம். இத்தகைய இட ஒதுக்கீட்டிற்கு நடுவண் அரசும் இசைவைத் தெரிவித்திருக்கிறது. அதனுடைய முதற்படியாக, மகாராஷ்டிரா மாநிலத்திலே அன்றைய முதல்வராக இருந்த ஷிண்டே அவர்கள் அங்கே தனியார் தொழிற்சாலையிலே இட ஒதுக்கீட்டை அளித்தார்கள். அதேபோன்று, இட ஒதுக்கீட்டிற்குப் பிறப்பிடமாக இருக்கின்ற தமிழகத்தில் தந்தை பெரியாருடைய வழித் தோன்றலாக இருக்கின்ற நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் இதை உடனடியாகக் கொண்டு



வருவதற்கான முயற்சியை எடுக்க வேண்டுமென்று இந்தச் சமயத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய தமிழகத்திலே அனைத்துச் செல்வங்களும் உள்ளன. தமிழகத்திலே எந்த வகையான செல்வமும் குறைவில்லை. எல்லா வகையான செல்வங்களும் இருக்கின்றன. அதிலும் குறிப்பாக, விவசாயம் சார்ந்த தொழில் மிகச் சிறப்பாக இருந்து கொண்டிருக்கிறது. அதனையொட்டி வருகிற தொழிலை ஏராளமாக நாம் இங்கே செய்தால்தான், நமக்கு ஒரு நல்ல வாய்ப்பை அளித்து அந்தத் தொழில் நசியாமல் இருக்கின்ற தொழிலாக இருக்கும் என்பதை சொல்லிக் கொள்கிறேன். இதுபோன்ற Agro–based Industries-ஐ நீங்கள் இங்கே கொண்டுவர வேண்டும். அதற்கான பெரு முயற்சியை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகம் முழுவதும் ஒரே மாதிரியான சமச்சீர் வரி (VAT) வந்திருக்கிறது. வேளாண் சார்ந்த தொழில்கள், நெசவு சார்ந்த தொழில்கள், கணினி சார்ந்த தொழில்கள், மீன் வளம் சார்ந்த தொழில்கள் போன்ற வேலைவாய்ப்புகளை உருவாக்கக்கூடிய தொழில்களிலே மிகச் சிறப்புக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது மட்டுமல்லாமல், இதற்கான ஒரு குழுவை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அமைத்து, அதன்மூலம் எந்தெந்தத் தொழிலை தமிழகத்திலே கொண்டுவர முடியும் என்ற ஒரு குறிப்பையும் எடுக்க வேண்டும். அதன்மூலம் இரண்டு வகையிலும் தொழில்கள் வளருவதற்கான வாய்ப்பு இருக்கிறது. விவசாயம் ஒரு பக்கம் மேலே வரும். படித்தவர்களுக்கு ஒரு பக்கம் வேலைவாய்ப்பு வரும். அதனாலே, பொருளாதாரம் மேலுக்கு வர வாய்ப்பு இருக்கிறது. எனவே, அது சார்ந்த பணிகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

VAT மூலம் இந்தியா முழுவதும் ஒரே மாதிரியான சமச்சீர் வரி இருந்தாலும்கூட, மத்திய அரசாங்கம் இன்றைக்கு Central Sales Tax என்று 4 சதவிகித வரியை விதிக்கிறது. அதையும் உடனடியாக எடுப்பதற்கான முயற்சியை நம்முடைய அரசாங்கம் எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, பெரிய தொழில்கள் வந்து கொண்டிருக்கின்றன. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிட்டார்கள். நேரடியாக 50 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு என்று சொன்னால், 20 ஆயிரம், 30 ஆயிரம் பேருக்கு மறைமுகமான வேலைவாய்ப்பு வரும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை ஏன் சொல்கிறார்கள் என்று

சொன்னால், அதோடு ஒட்டி இருக்கிற சிறு மற்றும் குறுந் தொழில்களும் வளர்ந்து அதனுடைய பயனாளிகளும் அதில் இருக்கிற சிறு தொழிலாளர்களும் வாய்ப்பு பெறுவார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள்.

அந்த வகையிலே இன்றைக்குப் பார்த்தோம் என்றால், அதற்காக கடன் வழங்குகிற அந்தத் துறையிலே இருக்கிறவர்கள் கடன் வழங்குகிற வங்கிகளிலே கெடுபிடிகளைப் போடுகிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) முடித்துவிடுகிறேன். சிறு தொழிலுக்கான கடனை நம்முடைய தமிழக அரசே கூட்டுறவுத் துறைமூலமாக வழங்க வேண்டுமென்று இந்தச் சமயத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்திலே 13 நூற்பாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. அந்த நூற்பாலைகளைத் திறப்பதற்கான முயற்சியை எடுக்க வேண்டும். என்னுடைய மாவட்டத்திலே இருக்கிற மதுராந்தகம் சர்க்கரை ஆலையைத் திறப்பது குறித்து நம்முடைய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கடந்த ஆண்டிலே அறிவித்தார்கள். அந்த ஆலையை உடனடியாகத் திறப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதை உடனடியாகத் திறக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதையும் நம்முடைய கூட்டுறவுத் துறையே நடத்த வேண்டும். தனியாரிடம் விடக் கூடாது என்ற என்னுடைய கோரிக்கையையும் வைக்க விரும்புகிறேன்.

முற்பகல் 11–35

சர்க்கரைத் தொழிலில், அங்கே இருக்கிற தனியார் தொழிற்சாலையிலே இருக்கிறவர்கள் என்ன செய்கிறார்கள் என்று சொன்னால், அவர்கள் பதிவு செய்த கரும்பை வெட்டாமல், பதிவு செய்யாத கரும்புகளை இப்போது டன் வெறும் 500 ரூபாய், 600 ரூபாய்க்கு வாங்கி அரைக்கிறார்கள். ஆனால், அங்கே உற்பத்தி செய்யப்படுகிற பதிவு செய்திருக்கிற கரும்புகளை வெட்டுவதற்கு மறுத்துக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய தமிழக அரசாங்கம் முதலிலே பதிவு செய்த கரும்புகளை வெட்டுவதற்கும், அடுத்தபடியாக பதிவு செய்யாத கரும்புகளை வெட்டுவதற்கான முயற்சியை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இதேபோன்று, இன்றைக்கு சிப்காட் தொழிற்பேட்டைகள் நம்முடைய மாநிலத்தில் பல்வேறு பகுதிகளிலும் இருந்து கொண்டிருக்கின்றன. தரமாக அந்தத் தொழிற்சாலைகள் இயங்குகின்றனவா அல்லது அங்கே இருக்கிற பிரச்சினைகள் என்ன



என்பது குறித்து ஒரு வெள்ளை அறிக்கை வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடியுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். பழனிசாமி, ஏழு நிமிடங்கள்தான் உங்களுக்கு.

***திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சட்டப் பேரவையில் தொழில் துறை மானியத்தின்மீது பேச எனக்கு வாய்ப்பு அளித்த, இந்தியாவிலே இரண்டு மாநிலங்களில் ஆளுங்கட்சியாக இருந்த காங்கிரஸ் பேரியக்கத்தை பதினைந்து மாநிலங்களில் ஆளுங்கட்சியாக மாற்றி, இந்திய அரசின் ஆளுங்கட்சியாக அமர்த்திய, தியாகத்தின் திருவுருவம் எங்கள் அன்னை சோனியா காந்திக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) ஐந்தாம் முறையாக தமிழகத்தினுடைய முதலமைச்சராக 50 ஆண்டுகள் சட்டமன்றத்திலே பணியாற்றி, இன்றைக்குப் பொன் விழா கண்டுகொண்டிருக்கிற அருமைக்குரிய தமிழகத்தினுடைய முதல்வர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தையும், அதேபோல என்னுடைய அரசியல் வழிகாட்டி மரியாதைக்குரிய தன்மானத் தலைவர் E.V.K.S. இளங்கோவன் அவர்களுக்கும், காங்கிரஸ் சட்டமன்றத் தலைவர் திரு. சுதர்சனம் அவர்களுக்கும், சட்டமன்றத் துணைத் தலைவர் திருமதி யசோதா அவர்களுக்கும் மற்றும் நம்முடைய மரியாதைக்குரிய சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும் எனது வணக்கத்தைச் சொல்லிக்கொள்கிறேன், தொழில் துறையும், விவசாயமும் ஒரு நாட்டினுடைய இரண்டு கண்களைப் போன்றவையாகும். இந்த நாட்டினுடைய வளர்ச்சியில் விவசாயத்திலும், தொழிலிலும் நாம் இணைந்து முன்னேறுவது மிக முக்கியமான, நல்லதொரு முன்னேற்றப் பாதை. தமிழகத்திலே இப்போது முத்தமிழறிஞர் முதல்வர் கலைஞர் அவர்கள் இந்த இரு துறைகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து அதிக முன்னுரிமை கொடுத்து தமிழகத்தை முன்னேற்றப் பாதைக்கு அழைத்துச் சென்றுள்ளார்கள் என்று சொன்னால் இந்த அரசினுடைய சாதனையாகத்தான் இதைச் சொல்லியாக வேண்டும்.

இந்தியாவிலே தொழில் வளர்ச்சியில் முன்னாள் பாரதப் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் ஆட்சிக் காலம்தான் ஒரு பொற்காலம். அதைப் போல தமிழகத்தினுடைய தொழில் துறைக்குப் பொற்காலம் என்று சொன்னால் அது பெருந்தலைவர் காமராஜர் ஆண்ட காலத்தைச் சொல்ல வேண்டும். இந்த காலகட்டத்தில்தான் ஆவடி டேங்க் தொழிற்சாலை, நெய்வேலி நிலக்கரி தொழிற்சாலை,

திருச்சி பாய்லர் தொழிற்சாலை போன்ற மிகப் பெரிய தொழிற்சாலைகள் எல்லாம் வந்த காலகட்டம்; தமிழகம் முதன்மை மாநிலமாகப் போட்டி போட்ட காலமும் ஆகும்.

இன்று தகவல் தொழில்நுட்பத் துறை இந்தியாவில் இவ்வளவு வளர்ந்திருக்கிறது என்று சொன்னால், இதற்கு வித்திட்டவர் தொலைநோக்குப் பார்வை கொண்டவரும், இந்தியாவை 21 ஆம் நூற்றாண்டிற்கு அழைத்துச் செல்லுகிறேன் என்று அறைகூவல் விடுத்தவரும், தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொலைத் தொடர்புக்குத் தனி ஆலோசகரை நியமித்தவரும், இன்று இந்தியாவை இந்த நிலைக்கு உயர்த்திய இந்தியாவின் இளம் தலைவரும், நேரு குடும்பத்தின் வாரிசும், எங்கள் அன்புத் தலைவருமான இராஜீவ் காந்தி என்று சொன்னால் அது சரியாக இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.எம். பழனிசாமி, 10 நிமிடங்கள்தான்.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** முடித்து விடுகிறேன். இப்போது பொறுப்பேற்று இருக்கிற தமிழக முதல்வர் கலைஞர் இந்த 84 வயதிலும் புதிய தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்கு பல்வேறு நிறுவனங்களை அழைத்துப் பேசி, தமிழகத்திலேயே தொழிலைத் துவங்குங்கள் என்று கேட்டுக்கொண்டு, ரூ.6,985 கோடி மதிப்பிலான Motorola, Apollo Tyres, Tessolve, Dell Computers, Growth-link, Samsung இப்படி பல்வேறு நிறுவனங்களை எல்லாம் அழைத்து கிட்டத்தட்ட 8 புரிந்துணர்வு ஒப்பந்தங்களைப் போட்டு, இதனாலே 96,000 பேருக்கு வேலைவாய்ப்புகள் நேரடியாகவும், மறைமுகமாகவும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்று சொன்னால் இந்த அரசினுடைய மிகப் பெரிய சாதனை என்றுதான் இதைக் குறிப்பிட்டாக வேண்டும். அதேபோலத்தான் ஜப்பான் நாட்டினுடைய Nissan Car நிறுவனமும் பிரெஞ்சு நாட்டினுடைய Renault Car நிறுவனமும் இணைந்து ரூ.4,000 கோடியிலே சென்னைக்கு அருகிலே தொழில் துவங்குவது என்பது, தொழில் துறை சரித்திரத்திலே ஒரு சாதனை நிகழ்வு. இது தமிழக முதல்வர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தொழில் துறை முன்னேற்றத்திற்கு எடுத்துக்கொண்ட முயற்சியாகும்.

சென்னை, எண்ணூர் துறைமுகப் பகுதியிலும், கடலூர் மாவட்டத்திலும் இரு கப்பல் கட்டும் தளங்கள் ரூ.3,700 கோடி முதலீட்டில் 25,000 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கின்ற வகையில் அமையவிருப்பதும் ஓர் அற்புதமான திட்டம்.



சிவகங்கை கிராபைட் கனிம வளத்தை முழுமையாகப் பயன்படுத்துகிற வகையில் கிராபைட் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் வரவேற்கத்தக்க ஒரு விஷயம். அதேபோல மறைந்த மத்திய அமைச்சர் முரசொலி மாறன் அவர்கள் கொண்டு வந்த அற்புதமான திட்டம் நாங்குநேரி திட்டம். அதைக் கடந்த ஆட்சியிலே கிடப்பிலே போட்டார்கள். இப்போது நீங்கள் வந்திருக்கிறீர்கள், மத்திய அரசோடு பேசி அதை நிறைவேற்றித் தாருங்கள் என்று நான் இந்த நேரத்திலே உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-40*

கணினி மென்பொருள் துறையில் ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கின்ற முத்தமிழறிஞர் தமிழக முதல்வர் அவர்களின் அரசு, கோவை, திருச்சி, சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைப்பதற்கான வேலைகள் தொடங்கியதற்கு மிகவும் மகிழ்ச்சி.

ஈரோடு மாவட்டம் என்பது அதிகப்படியான பொறியியல் கல்லூரிகளை உள்ளடக்கிய மாவட்டம். அதிலே வெளிவருகின்ற தகவல் தொழில்நுட்பப் பொறியாளர்கள், கணினிப் பொறியாளர்கள் பணிபுரிவதற்கு தகவல் தொழில்நுட்பப் பூங்கா அல்லது சிறப்புப் பொருளாதார மண்டலம் ஒன்றை முத்தமிழறிஞர் தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் குருகுலமான ஈரோடு மாவட்டத்திற்கு அறிவிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

ஆந்திர அரசு, திருப்பதி அருகில் அமையவிருக்கிற புதிய தொழிற்பேட்டையில் நூற்பாலைத் தொழில்கள் தொடங்குவதற்கு மின்சாரக் கட்டணச் சலுகை மற்றும் பல்வேறு சலுகைகள் வழங்கவுள்ளதாக தென்னிந்திய நூற்பாலைத் தலைவர் கூறியுள்ளார். இதிலேயுள்ள சங்கடங்களை நீக்கி, சலுகைகளைக் கொடுத்து, தமிழக அரசும் நம்முடைய தமிழகத்தில் தொழில் செய்து கொண்டிருப்பவர்களுக்கும், தொழில் துவங்குபவர்களுக்கும், ஆந்திர அரசு அளிக்கவுள்ள சலுகைபோல அளித்து நூற்பாலைத் தொழில்கள் வேறு மாநிலங்களுக்குச் செல்லாமல் காக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

கோவை விமான நிலையத்தை விரிவுபடுத்தி, தரம் உயர்த்தி, அதே நேரத்தில் வெளிநாட்டு விமானங்களும் வருகிற அளவிலே வெளி நாட்டு விமான நிலையமாகவும் அதைத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று மத்திய அரசை நம்முடைய அரசு கேட்டுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறப்புப் பொருளாதார மண்டலம், தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைப்பதைப்போல ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலத்திலே Herbal Zone, மூலிகை மண்டலம் ஒன்று அமைத்து, வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்ய வாய்ப்புள்ள மூலிகை சார்ந்த தொழில்களை இந்த அரசு தொடங்குவதற்கு முன்வருமானால் மலைவாழ் மக்களின் பொருளாதாரம் வளர்ச்சியடைய ஏதுவாக இருக்கும். ஆகவே, முதல்வர் அவர்கள் இந்தக் கோரிக்கையை ஏற்று, ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலத்தில் ஒரு மூலிகை மண்டலம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புதிய சிறப்புப் பொருளாதார மண்டலங்கள், தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள், நெசவுப் பூங்காக்கள் அனைத்து நகரத்தினை ஒட்டி இல்லாமல், இனிமேல் கிராமப் பகுதிகளை ஒட்டியே இருக்குமானால், கிராமப் பகுதிகள் அனைத்தும் உள் கட்டமைப்பு வசதிகள் பெறும் என்பதால் அனைத்துக் கிராமப் பகுதி மக்களும் வரவேற்பார்கள். ஆகவே, அதைக் கிராமப்புறங்களுக்கு எடுத்துச் செல்லுங்கள் என்று கோரிக்கை வைக்கிறேன்.

தொழில்நுட்ப வல்லுநர்களுடன் கலந்து, நலிவுற்ற பொதுத் துறை நிறுவனங்கள் இலாபத்தில் இயங்குவதற்கு வழிமுறைகளைக் கண்டறிந்து புனரமைப்பு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மென்பொருள், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த தொழில்களில் பணிபுரிகிற பெண்களுக்கு நவீன வசதிகள் மற்றும் பாதுகாப்புடன்கூடிய உறைவிட வசதி தேவை என்பதைக் கருத்தில்கொண்டு, மைய அரசின் பணிபுரியும் பெண்கள் விடுதித் திட்டத்தின்கீழ் உதவி பெற்று, பணிபுரியும் பெண்கள் விடுதி ஒன்று பெரிய அளவில் சென்னையில் அமைக்கப்படுவதைப்போல, எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும் அமைப்பதற்கு இந்த அரசு முடிவெடுக்க வேண்டும்.

வருங்காலத்தில் இந்தியாவின் மனித வளத் துறை என்பது உலக அளவில் முதன்மை இடத்தை அடைய இருக்கிறது. இதை எதற்காகக் குறிப்பிட்டுச் சொல்கிறேன் என்று சொன்னால், இந்தியாவில் 25 வயதிற்கு உட்பட்டவர்கள் இன்றைக்கு 60 சதவிகிதம்; சைனாவிலே 40 வயதிற்கு உட்பட்டவர்கள் 60 சதவிகிதம்; ஐரோப்பிய நாடுகளிலே 60 வயதிற்கு உட்பட்டவர்கள் 60 சதவிகிதம். எனவே, இந்தியாவின் மனித வளம் என்பதுதான் உலகளவிலே, வரப்போகின்ற பத்தாண்டுகளிலே மனித வளத் தேவையைப் பூர்த்தி செய்வதாக இருக்கப் போகிறது. ஆகவே, என்னுடைய கோரிக்கையெல்லாம்



நம்முடைய மனித வளத் துறையினுடைய மேம்பாட்டை இங்கே முக்கியப் பங்காற்றுதலோடு செய்வோம் என்று சொன்னால், தமிழகத்திலே மிக அதிகக் கவனத்தோடு இதைப் பயன்படுத்துவோம் என்று சொன்னால், உலக அளவிலான பார்வையை தமிழகத்தின் பக்கம் ஈர்ப்பதற்கு நல்ல வசதியான வாய்ப்பாக அது அமையும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

தமிழகத்திலே விவசாயப் பெருங்குடி மக்களெல்லாம் பல்வேறு கஷ்டங்களினாலே மாற்றுத் தொழிலுக்கு வர வேண்டுமென்று சொன்னால், அடுத்து அவர்கள் முடிவு செய்கிற தொழில், தேர்வு செய்கிற தொழில் என்னவென்று சொன்னால், அது ஜவுளித் தொழிலாகவே இருக்கும். ஆகவே, நாம் முயற்சி செய்து ஜவுளித் தொழிலை நிச்சயமாகப் பெரிய அளவிலே ஊக்குவித்தாக வேண்டும். அதற்கான பூங்காக்களை அல்லது வேறு ஏதாவது திட்டங்களை வழிநடத்திச் செய்தாக வேண்டுமென்ற கோரிக்கையையும் இந்த நேரத்திலே வைக்க விரும்புகிறேன்.

நம்முடைய மாண்புமிகு மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சர் திரு. முரளி தியோரா அவர்கள் கடந்த மார்ச் மாதம் சென்னைக்கு வந்தபோது, எண்ணூர் அருகிலே 15 மில்லியன் டன் Refinery–க்கு அனுமதி கேட்டிருக்கின்றார்கள்; அதற்கு 3,000 ஏக்கர் நிலம் கேட்டிருக்கிறார்கள்; அதனுடைய திட்ட மதிப்பீடு 33,000 கோடி ரூபாய். நம்முடைய முதல்வர் அவர்கள் கனிவோடு இதற்கான இடத்தை ஒதுக்கி, இந்தத் திட்டத்தை த்மிழகத்திற்குப் பெற்றுத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல I.I.T. Research Park அமைப்பதற்கு மத்திய அரசாங்கம் 10 கோடி ரூபாய் அனுமதி அளித்துள்ளது. அதற்கும் தாங்கள் இடத்தை ஒதுக்கி, அந்த இடத்தைத் தேர்வு செய்து கொடுத்து, அந்த I.I.T. Research Park–ஐ நம்முடைய பகுதிக்குக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எத்தனால் தயாரிப்பிலே இருக்கிற ஒரு சிறிய விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு ஆண்டொன்றுக்கு 640 இலட்சம் லிட்டர்களைத் தயாரித்துக் கொண்டிருக்கின்றோம். மேலும் 3 எத்தனால் ஆலைகள் உற்பத்தியைத் தொடங்கிய பின்பு, 910 இலட்சம் லிட்டர்கள் உற்பத்தியாகும் என்கின்ற நிலை சொல்லப்பட்டிருக்கின்றது. தமிழகத்தில் 10 சதவிகிதம் எத்தனால் கலந்த பெட்ரோலை விநியோகிக்கத் தேவைப்படும் எத்தனால் 1,250 இலட்சம் லிட்டர்கள்.

இன்னும் 20 சதவிகிதமாக அதை மாற்றினால் 2,500 இலட்சம் லிட்டர்கள் தேவைப்படும். அந்த அளவிற்கு நாம் உற்பத்தியைப் பெருக்குவோம் என்று சொன்னால் சர்க்கரை ஆலையிலே வருகிற நட்டத்தை, இதன்மூலம் நாம் சரிக்கட்ட முடியும் என்பதை அரசு கவனத்திலேகொண்டு, அதற்கான நடவடிக்கைகளை எடுத்தாக வேண்டும்.

*முற்பகல் 11–45*

என்னுடைய தொகுதியைப்பற்றி ஓரிரு விஷயங்களை இங்கே குறிப்பிட்டுச் சொல்லவேண்டும். மாண்புமிகு முத்தமிழறிஞர் தமிழக முதல்வர் அவர்கள் (மணியடிக்கப்பெற்றது) ஒரே நிமிஷம், ஒரே நிமிஷம் சொல்லிவிடுகிறேன்.

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய க.ர. நல்லசிவம் 1952–லே இந்தச் சட்டப் பேரவைக்குள் வந்தவர், 1971 வரை நான்கு முறைகள் இந்தச் சட்டமன்றத்திலே பணியாற்றியவர். பெருந்தலைவர் காமராஜரோடு, அண்ணாவோடு, முத்தமிழறிஞர் கலைஞரோடு, பக்தவத்சலத்தோடு, எல்லோரோடும் இருந்த அந்த மாமனிதருடைய குடும்பம் இன்றைக்கு நலிவுற்ற நிலையிலே இருக்கிறது. சென்னிமலை தொகுதியிலே, வெள்ளக்கோயில் தொகுதியிலே, மொடக்குறிச்சி தொகுதியிலே சட்டமன்ற உறுப்பினராக அவர்கள் காங்கிரசிலே இருந்தார்கள். சோஷலிச இயக்கத்தினுடைய அகில இந்தியத் தலைவராக 1964–லே அவர்கள் பணியேற்றார்கள். அந்த மாபெரும் மனிதருடைய குடும்பம் இன்றைக்கு விவசாய நிலம் இல்லாமல் தருமபுர ஆதீனத்தில் நிலங்களைத் குத்தகைக்கு எடுத்து அந்த நிலங்களை உழுதுகொண்டிருக்கிறார்கள். அவர்கள் குடும்பத்திற்கு கருணையுள்ளத்தோடு ஏதாவது தாங்கள் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே என்னுடைய கோரிக்கையை நினைவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிற திரு. நல்லசிவத்தை நாம் அனைவரும் நன்றாக அறிவோம். பேரறிஞர் அண்ணா அவர்களுடைய உற்ற நண்பனாக விளங்கியவர். விவசாயிகளிடத்தில் அரும் புகழ்பெற்றவர். அவர்களுக்காக காலமெல்லாம் பாடுபட்டவர்.



அவர்களிடத்திலே திராவிட முன்னேற்றக் கழகம் எந்த அளவிற்கு பாசமும், பற்றும், மரியாதையும் வைத்திருந்தது என்பதற்கு ஒரே ஒரு உதாரணம், அவர் நிற்பதாக இருந்தால், அங்கே தி.மு.க. போட்டியிடாது என்று அண்ணா அறிவித்து, அவர் சுயேச்சையாகவே வெற்றிபெற வாய்ப்பளித்தார் என்பதை ஞாபகப்படுத்துகிறேன். அவருடைய குடும்பத்திற்கு, நீங்கள் இங்கே கோரியபடி மாத்திரமல்ல, நானும் கருதுகிறபடி, நிச்சயமாக உதவி செய்ய அரசு முன்வரும். யோசித்து முடிவு செய்யும். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை இந்த நேரத்திலே எங்கள் தொகுதி மக்கள் சார்பாக, எங்கள் மாவட்ட மக்கள் சார்பாக, நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள். நன்றி சொல்லியாகிவிட்டதல்லவா, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு இந்தியாவிலேயே தொழில் துறையிலும் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல், தகவல் தொழில்நுட்பவியல் சேவை சார்ந்த (I.T.E.S.) துறையிலும் புதிய கொள்கைகளை மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்து, அதன்படி ஸ்ரீபெரும்புதூரில் செயின்ட் கோபெயின் நிறுவனத்தின் இரண்டாம் கட்ட விரிவாக்கத்திற்காக 57 ஏக்கர் நிலம் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெயக்குமார், உங்களுக்கு 10 நிமிடங்கள்தான்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் அறைக்கு வந்தபோது 15 நிமிடங்கள் தருவதாகச் சொன்னீர்கள். அந்த வாக்குறுதியை நீங்கள் காப்பாற்றினாலே போதும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லவே இல்லை. அதாவது நான் ஒரு உறுப்பினருக்குத்தான் சொன்னேன். இரண்டு பேர் பேசியிருக்கிறீர்கள்.

**திரு. டி. ஜெயக்குமார்:** ஐந்தாவது முறை பெல் அடியுங்கள். முடித்துவிடுகிறேன். செயின்ட் கோபெயின் நிறுவனத்தின் இரண்டாம் கட்ட விரிவாக்கத்திற்காக 57 ஏக்கர் நிலம்; நோக்கியா நிறுவனத்திற்கு

210 ஏக்கர்; ப்ளெக்ஸ்டிரானிக்ஸ் நிறுவனத்திற்கு 200 ஏக்கர்; பாக்ஸ்கான் நிறுவனத்திற்கு 100 ஏக்கர், கொமாரோ நிறுவனத்திற்கு 118 ஏக்கர்; எண்ணூர் பவுண்டரி நிறுவனத்திற்கு 40 ஏக்கர், ஒரகடத்தில் தேசிய மோட்டார் வாகன சோதனை நிலையம் மற்றும் ஆராய்ச்சிக் கழகத்திற்கு 239 ஏக்கர்; கடலூரில் கெம்ப்ளாஸ்ட் சன்மார் நிறுவனத்திற்கு 67.43 ஏக்கர், தென்னிந்திய நூற்பாலைகள் சங்கத்துடன் இணைந்து துணி மற்றும் துணி நூல்கள் பதப்படுத்தும் தொழிற்சாலை அமைக்க 283 ஏக்கர்; பெருந்துறை சிப்காட் தொழில் வளர்ச்சி மையத்தில் சுற்றுச்சூழல் வளம் சார்ந்த துணி மற்றும் துணி நூல்கள் பதப்படுத்தும் பூங்காவிற்கு 300 ஏக்கர்; பெருந்துறை வளர்ச்சி மையத்தில் EID Parry India நிறுவனம் தனது துப்புரவு வசதி அமைப்புப் பணிக்காக பொருட்களை உற்பத்தி செய்யும் திட்டத்திற்கு 50 ஏக்கர் வழங்கி, விச்சூர் தொழிற்பேட்டை, கருப்பூர் தொழிற்பேட்டை மற்றும் கும்பகோணம் தொழிற்பேட்டைகளில் ரூ.337 இலட்சம் செலவில் 316 மனைகள் மேம்படுத்தி; கப்பலூர் மகளிர் தொழிற்பூங்கா, மயிலாடுதுறை, விண்ணமங்கலம், கும்பக்குடி, காக்களூர், தேனி மற்றும் குறிச்சி ஆகிய இடங்களில் 652 இலட்சம் ரூபாய் மதிப்பில் 584 மனைகளை மேம்படுத்தி, தமிழகத்தில் டாட்டாவின் டைட்டானியம் டை ஆக்ஸைடு, ஏஷியன் பெயின்ட்ஸ், ஜகந்நாத் டெக்ஸ்டைல்ஸ், எண்ணூர் பவுண்டரி விரிவாக்கம், டால்மியா சிமெண்ட் விரிவாக்கம், கெம்ப்ளாஸ்ட் சன்மார் நிறுவனத்தின பி.வி.சி. தொழிற்சாலை, செயின்ட் கோபெயின் விரிவாக்கம், ஹுண்டாய் விரிவாக்கம், அசாஹி கிளாஸ், நோக்கியா, ப்ளெக்ஸ்டிரானிக்ஸ், பி.எம்.டபிள்யூ, பாக்ஸ்கான், கொமாரோ, காமாட்சு எர்த் மூவர்ஸ், மதர்சன் ஆட்டோமொபைல்ஸ், போன்ற தொழிற்சாலைகள் 11 ஆயிரம் கோடி முதலீடு செய்தும் 1,343 ஏக்கர் நிலப் பரப்பில் பொது மற்றும் தனியார் கூட்டு முயற்சியில் நாட்டிலேயே மிகப் பெரிய தொழிற் பூங்கா 20-9-2002 அன்று அமைக்கப்பட்டு, தனியாரால் மேலாண்மை செய்யப்பட்டு வரும் மஹிந்திரா சிட்டி தொழிற்பூங்கா அமைக்கப்பட்டு, 2001 ஆம் ஆண்டுக்கு முன்னர் 2,000 கோடி ரூபாய்க்குக் குறைவாக இருந்த தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த ஏற்றுமதியை 14 ஆயிரத்து 114 கோடி ரூபாய் அளவிற்கு அதிகரித்து, 20 மில்லியன் சதுர அடி, அதாவது, 2 கோடி சதுர அடிக்கு மேல் தனியார் மற்றும் அரசின் கூட்டு நிறுவனங்கள்மூலம் கட்டடங்கள் அமையக் காரணமாக இருந்து, ஒரு இலட்சம் தகவல் தொழில்நுட்பவியல் வல்லுநர்களுக்கு வேலைவாய்ப்பைப் பெற்றுத் தந்து, எல்காட் நிறுவனம் மூலமாக தகவல் தொழில்நுட்பவியல் பூங்காக்கள் உருவாவதற்கு முயற்சிகள் மேற்கொண்டு, மிகப் பெரிய பன்னாட்டு



நிறுவனங்களான பிலிப்ஸ், 24x7 கஸ்டமர் கேர், அக்கென்சர் ஆகிய நிறுவனங்களும், நாஸ்காம் நிறுவனம் 2004 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் சென்னையில் தனது கிளை அலுவலகம் அமையவும், ஐ–கேட், கே.எல்.ஏ–டென் கேர், கே.என்.பி. சாப்ட்வேர், சின்டெல், ஐசிஎஸ், வெர்ச்சுசா, சீமென்ஸ், அல்காடெல் ஆகிய பல நிறுவனங்கள் பெருமளவில் சென்னையில் முதலீடு செய்யவும், தனது செயல்முறைப் பணிகளைத் தொடங்கக் காரணமாக இருந்தும், பழைய மகாபலிபுரம் சாலையில் டி.சி.எஸ்., இன்போசிஸ், விப்ரோ, காக்னிசன்ட் டெக்னாலஜி சொல்யூஷன்ஸ், சான்சா, போலாரிஸ் போன்ற மிகப் பெரிய நிறுவனங்கள் நிலைபெறுவதற்கும், பழைய மகாபலிபுரம் சாலை தகவல் தொழில்நுட்பவியல் பாதை (I.T. Corridor) என்று அறிவிக்கப்பட்டு, சென்னை சர்தார் பட்டேல் சாலையிலுள்ள மத்திய கைலாஷ் என்ற இடத்திலிருந்து, கிழக்குக் கடற்கரை சாலை வரையிலான பகுதி வரை, உலகத் தரத்திலான ஆறு வழிப் பாதையினைத் தகவல் தொழில்நுட்பவியல் சாலையாக்க 240 கோடி ரூபாய் செலவில், 25–4–2005 முதல் பணிகளைத் தொடங்கியும், உலக வரலாற்றில் தமிழ்நாட்டில் ஒரு மிகப் பெரிய தொழில் புரட்சியையும், தகவல் தொழில்நுட்பவியல் துறையில் ஒரு மாபெரும் புரட்சியையும் உருவாக்கிய மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) தொழில் துறை, தகவல் தொழில்நுட்பவியல் துறைக்கான மானியக் கோரிக்கைகள்மீதான விவாதத்தில் என்னுடைய கருத்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். தங்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–50

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியிலே, டிட்கோ நிறுவனம் அமைத்துள்ள கூட்டு முயற்சி நிறுவனங்கள்மூலம், 1,732 கோடியே 26 இலட்சம் ரூபாய் முதலீட்டில் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டன. ஆனால், உங்களுடைய 1996–2001 ஆம் ஆண்டுக் கால ஆட்சியில், 613 கோடியே 18 இலட்சம் ரூபாய் முதலீட்டில் மட்டுமே தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டன. 1991–1996 ஆம் ஆண்டு அளவில் எங்கள் அம்மாவின் ஆட்சியில், தமிழ்நாட்டில் உற்பத்தித் துறையிலான முதலீடு 35,959 கோடி ரூபாயாகும். 1996–2001 ஆம் ஆண்டைய உங்களுடைய ஆட்சிக் காலத்தின் முடிவில், உற்பத்தித் துறையில் செய்யப்பட்ட முதலீடு 37,306 கோடி ரூபாய். உங்களுடைய ஆட்சிக் காலத்தில், 1996–2001–ல், மிகக் குறைந்த அளவான 1,347 கோடி ரூபாய் வித்தியாச அளவிலே

முதலீடு இருந்தது. ஆனால், அம்மாவின் 2001–2006 ஆட்சிக் காலத்தில், அதாவது, அம்மாவினுடைய ஆட்சியின் இறுதியில், 52,490 கோடி ரூபாயாக உற்பத்தித் துறையிலான முதலீடு உயர்ந்துள்ளது என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது, அம்மாவினுடைய ஆட்சிக் காலத்திலே, உங்களுடைய ஆட்சிக் காலத்தைவிட 15 ஆயிரம் கோடி ரூபாய் என்கிற வித்தியாச அளவிலே முதலீட்டை உயர்த்தியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று, புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சியிலே வெளிநாட்டு முதலீட்டைப் பெறுவதில், இந்தியாவில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது என ஐ.நா. சபையின் வர்த்தக மற்றும் மேம்பாட்டிற்கான அமைப்பு கூறியுள்ளது. இப்போது நிலை என்ன என்பதையும் அறிய விரும்புகின்றேன்.

அதேபோல, புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சியிலே, தமிழகம் சட்டம்-ஒழுங்கைப் பாராமரிப்பதில் சிறப்பாக இருந்த தன்மையை, 'இந்தியாவிலே சட்டம்-ஒழுங்கைப் பாராமரிப்பதில் தமிழ்நாடு இரண்டாம் இடத்தில் உள்ளது' என்று 'India Today' பத்திரிகை 20 மாநிலங்களிலே ஆய்வு செய்தபின் வெளியிட்டுள்ளது. இதன் காரணமாகத்தான், தமிழ்நாடு இந்தியாவிலேயே தொழில் துறையில் சிறந்ததொரு முதன்மை பெற்றது நம்முடைய அம்மாவினுடைய ஆட்சியிலே. (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சியிலே, தமிழகம் தொழில் வளர்ச்சியில் முதலிடத்திலும், வேலைவாய்ப்பிலே இரண்டாவது இடத்திலும் இருந்தது என மத்திய அரசின் 2005 ஆம் ஆண்டிற்கானப் பொருளாதாரக் கணக்கெடுப்பு தெரிவித்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரிவான மானியக் கோரிக்கை பக்கம் 1–ல், கூட்டுறவு குறித்த கடன்கள் தலைப்பின்கீழ், 2006 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சியிலே, 6 கோடியே 50 இலட்சம் ரூபாய் அளவிற்குக் கடன்கள் வழங்கப்பட்டன. ஆனால், கடந்த நிதியாண்டான 2006–2007 மற்றும் இந்த 2007–2008–ல் ஒரு ரூபாய்கூட நீங்கள் ஒதுக்கவில்லை. வருகிற ஆண்டுகளில்கூட, இந்தத் தலைப்பின்கீழ் நீங்கள் நிதி ஒதுக்குவீர்களா என்றுகூட இதில் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை. எனவே, கூட்டுறவு சித்தாந்தத்தையே சிதைக்கின்ற வகையில், நீங்கள் இதற்கு நிதி ஒதுக்கவில்லை என்றே தெரிய வருகிறது.



அதேபோன்று, பக்கம் 45–ல் விரிவான மானியக் கோரிக்கையில், கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்கான கடன்கள், கடந்த ஆண்டிற்கு 82 கோடியே 26 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால், இந்த நிதியாண்டில் 44 கோடி ரூபாய் தற்போது ஒதுக்கப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்கான கடன்களைப் பொறுத்தவரை கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் தங்களுடைய ஆலைகளை இயக்குவதற்கு, அவர்கள் கேட்டது 44 கோடி ரூபாய்தானா? அல்லது அவர்கள் கேட்ட 44 கோடி ரூபாய் மட்டும் ஒதுக்கப்பட்டதா? இல்லையென்றால், கடன்கேட்டு நாம் தராமல் இருக்கின்றோமா என்கின்ற அந்த விவரத்தை இங்கே அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, விரிவான மானியக் கோரிக்கை பக்கம் எண் 28–ல், ஐக்கிய நாடுகள் தொழில் வளர்ச்சி அமைப்பின்கீழ், அதாவது, **Formulation of new programmes under United Nations Industrial Development Organisation (UNIDO)** புதிய திட்டங்களை உருவாக்குவதற்கு, ரூபாய் 100 கோடியை (UNIDO) இதற்காக ஒதுக்கியது. இந்த 100 கோடி ரூபாயில் புதிய திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளதா? உருவாக்கப்பட்டதென்றால், என்னென்ன திட்டங்கள் உருவாக்கப்பட்டன என்பதைத் தெரிவிக்கக் கேட்டுக்கொள்கிறேன். கொள்கை விளக்கக் குறிப்பில் இதுகுறித்து எந்தத் தகவலும் குறிப்பிடப்படவில்லை. ஆனால், இந்த நிதியாண்டிலே token provision 1,000 ரூபாய் என ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கான நிதி, இந்த ஆண்டு UNIDO–விடம் பெறப்படவில்லையா? கடந்த நிதியாண்டில் கொடுத்த நிதியைச் செலவிடாமல் இருந்ததன் காரணமாக, இந்த நிதியாண்டிற்கு UNIDO வழங்கவில்லையா? ஓராண்டிற்கு மட்டும் இந்தத் திட்டமா? அல்லது இந்த ஆண்டு ஐக்கிய நாட்டுத் தொழில் வளர்ச்சியின்கீழ் இந்த நிதியை நாம் பெறத் தவறிவிட்டோமா என்பதை விளக்கவேண்டும்.

விரிவான மானியக் கோரிக்கை பக்கம் எண் 28–ல், தனித் திட்ட உதவித் தொகை, அதாவது, individual based subsidy, கடந்த நிதியாண்டில் 6 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால், இந்த நிதியாண்டில் மானியத்தைக் கூட்டுவதற்குப் பதிலாக, 6 கோடி ரூபாயிலிருந்து 5 கோடி ரூபாயாகக் குறைத்துள்ளமை படிப்படியாகத் தனித் திட்ட உதவித் தொகையை அரசு கைவிடுவதற்கான முயற்சியில் உள்ளது என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

முற்பகல் 11–55

Tamil Nadu Industrial Guidance Export Promotion Bureau 1992–ல் மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய சிந்தனையில் உருவாகியதன் காரணமாக, இவ்வமைப்பின்மூலம், 1992 முதல் ஏப்ரல் 2001 வரை 48 பெரிய அளவிலான முதலீடுகள்மூலம் தமிழ்நாட்டுக்கு 10,070 கோடி ரூபாய் வருவதற்குக் காரணமாக இருந்தவர் நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தற்போது 8 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் 6,985 கோடி ரூபாய் முதலீட்டில் கையெழுத்திட்டுள்ளதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே அறிவித்துள்ளார்கள். 8 நிறுவனங்களுக்கும் என்னென்ன சலுகைகள் வழங்கப்பட்டன? எவ்வளவு நிலங்கள் வழங்கப்பட்டன? என்ன விலையின் அடிப்படையில் அது வழங்கப்பட்டது? வட சென்னையில் 1,000 மெகா வாட் மின் உற்பத்தி செய்ய ரூபாய் 4,000 கோடியில் தேசிய அனல் மின் கழகத்துடனும் (NTPC), தூத்துக்குடியில் ரூபாய் 4,000 கோடி செலவில் 1,000 மெகா வாட் மின்சார உற்பத்தி செய்ய நெய்வேலி பழுப்பு நிலக்கரி (NLC) நிறுவனத்துடனும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டன. பணிகளும் ஆரம்பிக்கப்பட்டன. தற்போது இத்திட்டம் MoU-படி தொடரப்படுகிறதா என்பதையும் தெரிவிக்கக் கேட்டுக்கொள்கின்றேன்.

சிறப்புப் பொருளாதார மண்டலங்களைப் (Special Economic Zones) பொறுத்தவரையில், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள நாங்குநேரி, திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள எண்ணூர், கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள ஓசூர், பெரம்பலூர் மாவட்டத்திலுள்ள பெரம்பலூர், சிங்கப்பூர் நிறுவனமான அசெண்டாஸ், தமிழ்நாடு அரசு கூட்டு நிறுவனமாக திருவள்ளூர் மாவட்டத்தில் அமையவுள்ள சிறப்புப் பொருளாதார மண்டலம் குறித்து எந்தப் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டு நடப்பதாகத் தெரியவில்லை.

தோல் பதப்படுத்துதல் மற்றும் தோல் பொருள் உற்பத்தி தமிழகத்தின் தொழில் துறையில் முக்கியப் பங்கு வகிக்கின்ற நிலையில், கடந்த ஆண்டு இத்துறையால் ஏற்படும் சுற்றுச் சூழல் மாசினைச் சரிசெய்வதற்கு 115 கோடி ரூபாயை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமரிடத்திலே கேட்டார்கள். (மணியடிக்கப்பெற்றது) அந்தத் தொகை பெறப்பட்டதா என்பதையும் தயவுசெய்து இங்கே கேட்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



அதேபோன்று, Natural Gas Distribution Network, இயற்கை எரிவாயு விநியோகத் தொகுப்பினை டிட்கோ மூலம் உருவாக்கும் என்று அறிவிக்கப்பட்டு ஓராண்டு ஆகியும் அதற்கான எந்த முயற்சியும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

அதேபோல, காஞ்சிபுரம் மாவட்டத்தில் திருப்பெரும்புதூர் மற்றும் ஓரகடம் பகுதிகளில் முக்கியமான தொழில் மையங்கள் உள்ளதால் 300 கோடி ரூபாய் செலவில் உள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த, 24 கிலோ மீட்டர் நீள சிங்கபெருமாள் கோவில்–திருப்பெரும்புதூர் சாலை, 20 கிலோ மீட்டர் நீளமுள்ள வண்டலூர்–வாலாஜாபாத் சாலை ஆகியவை ஆறு வழித் தடச் சாலையாகவும், பிற பகுதிகளை நான்கு வழித் தடச்சாலையாகவும் 300 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தும் திட்டம் அறிவிக்கப்பட்டு எதுவும் கடந்த ஓராண்டில் செயல்படுத்தப்படவில்லை. 2006–2007 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் பக்கம் 25–ல் பத்தி 62–ல் மாநிலத்தில் சிறப்புத் தொழில் பெருவழிச்சாலை, அதாவது Industrial Corridor of Excellence ஒன்றினை உருவாக்கவும் இதன்மூலம் பெருவழிச் சாலையில் தொழில் பூங்காக்கள் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள், தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் மற்றும் ஒருங்கிணைந்த நகரியங்கள் அமைக்கப்பட்டு அவை துறைமுகம் மற்றும் விமான நிலையங்களுடன் விரைவு நெடுஞ்சாலைகள் மற்றும் இரயில் பாதைகள் மூலம் இணைக்கப்படும் என்றும், இச்சிறப்புத் தொழில் பெருவழிச் சாலை உலகத் தரம் வாய்ந்த அடிப்படை கட்டமைப்பு வசதியுடன் அமையும் என்று அறிவித்து ஓராண்டு காலமாகியும் இந்த Industrial Corridor of Excellence எங்கே உள்ளது என்று இதுவரை யாருக்கும் தெரியவில்லை. எங்கே இருக்கிறது என்றுகூடத் தெரியவில்லை.

அதேபோன்று, தகவல்தொழில்நுட்பத் துறையில் I.T. Policy 2002, அதேபோன்று ITES குறித்த கொள்கைகளெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களால் வடிவமைக்கப்பட்டு இத்துறைகள் நல்ல வளர்ச்சி பெற்றன. இன்றும் இந்தக் கொள்கையின் அடிப்படையில்தான் (மணியடிக்கப்பெற்றது) தொழில் நிறுவனங்கள் தமிழ்நாட்டிலே முதலீடு செய்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், திரு. ஜெயக்குமார். (குறுக்கீடுகள்)

**திரு. டி. ஜெயக்குமார்:** நான் ரொம்ப ஸ்பீடாகத்தான் போகிறேன்.

**Hon'ble Speaker:** No, no, no. Please complete.

**திரு. டி. ஜெயக்குமார்:** எனவே, புதிய தகவல் தொழில்நுட்பக் கொள்கை கொண்டுவரவேண்டியதன் அவசியம் என்ன? தொழில் முனைவோர்களின் எண்ணத்தில் இதுபோன்ற நல்ல கொள்கைகள் ஒரு அரசால் ஏற்படுத்தி மறு அரசால் மாற்றப்படும்போது தொழில் முனைவோர்கள் மத்தியிலே தமிழக அரசு பற்றிய ஒரு மாறுபட்ட கருத்து ஏற்படுவதற்கு அது வாய்ப்பாக அமையும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 10 நிமிடங்கள்தான் ஒதுக்கப்பட்டன உங்களுக்கு. 10 நிமிடங்களைத் தாண்டியாகிவிட்டது. அதற்குமேல் பேசிக்கொண்டிருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்)

**திரு. டி. ஜெயக்குமார்:** மாநில அளவிலான தகவல் தொழில்நுட்பக் குழு திருத்தியமைக்கப்பட்டு அதேபோன்று . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Not allowed.

**திரு. டி. ஜெயக்குமார்:** Nano தொழில்நுட்ப வளர்ச்சிக்கு 1,000 கோடி ரூபாய் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. நம்முடைய தமிழ்நாட்டில் Nano தொழில்நுட்ப ஆராய்ச்சிக்கு மத்திய அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டு, அதன் அடிப்படையிலே 1,000 கோடி ரூபாயிலிருந்து நிதியை நாம் எவ்வளவு பெற்றுள்ளோம்? Nano தொழில் நுட்ப வளர்ச்சிக்கும், ஆராய்ச்சிக்கும், அதேபோன்று உயிரியல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கும் (Bio-technology) மத்திய அரசிடமிருந்து நிதியுதவி கோரி கருத்துரு ஏதாவது அனுப்பி வைக்கப்பட்டுள்ளதா? மாநில அரசு உயிரியல் தொழில்நுட்பத்தை ஊக்கப்படுத்த வேண்டுமென்ற அடிப்படையில் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பது குறித்து விளக்கக் குறிப்பில் ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. (மணியடிக்கப்பெற்றது) இரண்டு பேப்பரைக்கூட நான் தள்ளிவிட்டேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெயக்குமார், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. டி. ஜெயக்குமார்:** இதோ, இரண்டு பேப்பரைக்கூட தள்ளிவிட்டேன் நான். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதிலுரை. (குறுக்கீடுகள்)



**திரு. டி. ஜெயக்குமார்:** ஒரே நிமிடம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது என்ன முறை? என்ன பழக்கம் இது? (குறுக்கீடுகள்) உரையைச் சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. டி. ஜெயக்குமார்:** விரிவான மானியக் கோரிக்கை பக்கம் எண் 7–ல், கடந்த நிதியாண்டிற்கும் இந்த நிதியாண்டிற்கும் 750 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த நிதியாண்டில் ஒதுக்கப்பட்ட 750 கோடி ரூபாயில், உத்தேசமாக 25 இலட்சம் ரூபாய்க்கு டி.வி. கொள்முதல் செய்து வழங்கப்படும் என்று கூறியுள்ளீர்கள். மேலும், ஆளுநர் உரையில், பக்கம் 17, 18–ல் யார் யாருக்கெல்லாம் கலர் டி.வி. இல்லையோ அவர்களுக்கெல்லாம் கலர் டி.வி. வழங்கப்படும் என்று பத்தி 29–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. யார் யாரிடம் கலர் டி.வி. இல்லையென்ற கணக்கை அரசு எடுத்து முடித்துள்ளதா? கடந்த நிதியாண்டில் இந்த அடிப்படையில்தான் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளதா?

நண்பகல் 12–00

பொதுவாக ஒரு திட்டத் தொடக்க விழா என்று சொல்லும்போது முதலில் அத்திட்டத்தை தொடங்கிவிட்டு பிறகு அதே திட்டத்தின் தொடர்ச்சியாக அதே பொருளை பல்வேறு கட்டமாக பயனாளிகளுக்கு வழங்குவதுதான் வழக்கம். ஆனால், உங்களுடைய ஆட்சியில் முதலாம் கட்டம், இரண்டாம் கட்டம், மூன்றாம் கட்டம் என்று சொல்லிவிட்டு ஏழுவிதமான வண்ண அழைப்பிதழ்களில் அச்சடித்துக் கொடுத்திருக்கிறீர்கள். அதேபோன்று செயல் ஆய்வுரை 2006–2007...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலிலே உட்காருங்கள். திரு. ஜெயக்குமார் உட்காருங்கள். (குறுக்கீடு) எதிர்க்கட்சிக் கொறடா திரு. செங்கோட்டையன், சொன்னால் சொன்னபடி நடந்துகொள்ள வேண்டும். இதெல்லாம் முறையல்ல. (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதல்வர் அவர்களின் பதிலுரை. (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) ஒரு நிமிடத்தில் பேச்சினை முடியுங்கள். (குறுக்கீடு) சொல்கிறேன், கேளுங்கள். நீங்கள் 11–47 மணிக்குப் பேச ஆரம்பித்தீர்கள்.

**திரு. டி. ஜெயக்குமார்:** 12–01 மணியாகிறது. 12–02 மணிக்குள் பேசி முடித்துவிடுகிறேன். 12–02 மணிக்கு மணியடியுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்குக் கொடுத்த நேரமே 10 நிமிடங்கள்தான். நீங்கள் அனுமதித்த நேரத்திற்கு மேல் மூன்று நிமிடங்கள் அதிகமாகப் பேசியிருக்கிறீர்கள்.

**திரு. டி. ஜெயக்குமார்:** செயல் ஆய்வுரை 2006–2007, பக்கம் 10-ல் 2006–07 ஆம் ஆண்டிற்கு 694 கோடியே 18 இலட்ச ரூபாய் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் கொள்முதல் செய்வதற்காகச் செலவழிக்கப்பட்டது. "Expenditure incurred" என்று குறிப்பிடப்பட்டு இருக்கின்றது. ஆனால், 1–4–2007 அன்றைய நிலவரப்படி 4,34,519 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒரு தொலைக்காட்சிப் பெட்டியின் approximate cost 3,000 ரூபாய் என்று கணக்கிட்டால்கூட 4,34,519 தொலைக்காட்சிப் பெட்டிகள் வாங்க 130 கோடியே 35 இலட்ச ரூபாய்தான் செலவழிக்கப்பட்டிருக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கோட்டையன், எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

**திரு. டி. ஜெயக்குமார்:** ஆனால் நீங்கள் 694 கோடியே 18 இலட்ச ரூபாய் செலவழித்ததாக செயல் ஆய்வுரையில் கணக்குக் காட்டியுள்ளீர்கள். இது எந்த அளவுக்கு நியாயம்? 563 கோடியே 83 இலட்சம் ரூபாய் கூடுதலாகச் செலவழிக்கப்பட்டது என்று கூறிய நிதி எங்கே உள்ளது? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்றவர்கள் எல்லோரும் அமைதியாக இருங்கள்.

**திரு. டி. ஜெயக்குமார்:** வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள், டெலிவரி செய்யாமலேயே இவ்வளவு பெருந்தொகையை சர்வதேச ஒப்பந்தப்புள்ளியில் தேர்ந்தெடுக்கப்பட்ட உற்பத்தியாளர்களுக்குக் கொடுத்துவிட்டீர்களா? இதில் ஒரு பெரிய முறைகேடு நடைபெற்றுள்ளது என்று நான் குற்றஞ்சாட்டுகிறேன். (குறுக்கீடுகள்) விவாதத்திற்கு பதில் சொல்லுங்கள். இல்லையென்றால் என்னைப் பேச விடுங்கள். (குறுக்கீடுகள்) என்னைப் பேச விடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெயக்குமார், உங்களுக்குக் கொடுக்கப்பட்ட நேரத்தைவிட கூடுதலாக ஐந்து நிமிடங்கள் பேசிவிட்டீர்கள். போதும். அவை முன்னவர் அவர்கள்.



*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையில் முறைகேடாக வேண்டுமென்றே அனுமதிக்கப்பட்ட நேரத்திற்குமேல் பேசுவதென்ற ஒரு தவறான முறையைப் பின்பற்றி அப்படிப் பேசுகிறபோது புதிய பிரச்சினைகளைக் கிளப்புவது, அனுமதிக்கப்பட்ட நேரத்திற்குமேல் பேசுவது, பேசுகிற கருத்தை, தொடரை முடிக்காமல், மறுபடியும் புதிதாக பிரச்சினையைக் கிளப்பி அதிலே குற்றச்சாட்டு சொல்வது என்பது வேண்டுமென்றே ஒரு பிரச்சினையை இந்த அவையிலே கிளப்ப வேண்டும் என்ற தவறான நோக்கில் செய்யப்படுவது. எனவே, பேரவைத் தலைவர் அவர்கள், இந்த மானியக் கோரிக்கையோடு தொடர்பு இல்லாமல் அவரால் எழுப்பப்பட்ட அந்தப் பிரச்சினையை அனுமதிக்கக்கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கோட்டையன், 10 நிமிடங்கள்தான் அனுமதிக்கப்பட்டது. இப்போது 15 நிமிடங்களுக்குமேல் பேசியாகிவிட்டது.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னவர் அவர்கள் இங்கே சொல்லுகிறபோது. அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற நேரம் 15 நிமிடங்கள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. 10 நிமிடங்கள்தான்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** 15 நிமிடங்கள் என்று எங்களிடத்திலே சொன்னது. நீங்கள் வந்து. . .

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே சொல்வதுதான் உரிய நேரமே தவிர, உங்களிடத்திலே உரையாடலிலே சொன்னது எல்லாம் இங்கே நிற்காது. (குறுக்கீடு) என்ன காரணம் என்றால், அறையிலே பேசுகிறபோது . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்றவர்கள் அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) மற்றவர்கள் அமைதியாக இருங்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** அறையிலே பேசுகிறபோது பேரவைத் தலைவர் அவர் ஒருவர்தான் பேசப் போகிறார் என்ற கருத்திலும் சொல்லியிருக்கலாம்; நிலைமையை முழுவதும் அந்த நேரத்திலே அறிய முடியாத காரணத்தாலும் சொல்லியிருக்கலாம்; அல்லது அவர் 10 நிமிடம் என்று சொல்லி, பேசுகிறவர் 15 நிமிடம்

என்று சொல்கிற தவறும் ஏற்படலாம். ஆகவே, இந்த அவையில் தலைவர் சொல்வதுதான் நேரம். ஆக, இங்கே சொன்னது 10 நிமிடங்கள். பேசியது 15 நிமிடங்களுக்குமேல். (குறுக்கீடு) பேசியது 15 நிமிடங்களுக்குமேல். அப்படிப் பேசுகிறபோது புதிய பிரச்சினை, தொடர்பு இல்லாத பிரச்சினையை எழுப்புவது என்பது வேண்டுமென்றே ஒரு பிரச்சினையை உருவாக்குவது. அதைப் பேரவைத் தலைவர் அனுமதிக்கக் கூடாது. (குறுக்கீடு) பேரவைத் தலைவர் அதை அனுமதிக்கக்கூடாது எனக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெயக்குமார், உங்களை எச்சரிக்கிறேன். நீங்கள் வேண்டுமென்றே பிரச்சினையை உருவாக்குகிறீர்கள். வேண்டுமென்றே பிரச்சினையை உருவாக்குகிறீர்கள் நீங்கள். உட்காருங்கள் முதலிலே. (குறுக்கீடு) அனுமதியில்லை, உட்காருங்கள். முடியாது. உங்களுக்கு 10 நிமிடங்கள் அனுமதிக்கப்பட்டது. 15 நிமிடங்கள் கொடுத்தாகிவிட்டது.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய உறுப்பினர்கள் பேசுகிறபோது நான் அன்றைக்குக்கூட சொன்னேன். இன்று எங்களுடைய உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் இங்கே உரையாற்றுகின்றபோது நீங்கள் அனுமதித்திருக்கிறீர்கள். அப்போது வேண்டுமென்றே இவர்கள் கூச்சல் போட்டு மணியாகிவிட்டது, மணியாகிவிட்டது என்று சொன்னார்கள். இப்போது அவர்கள் குறிப்பிட்ட நேரத்திற்குமேல் பேசுவது, எந்தமுறையிலே நியாயம் என்பதை நீங்கள் தெளிவாக விளக்க வேண்டும்.

பிற்பகல் 12-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. (குறுக்கீடு) திரு. செங்கோட்டையன், முடிந்தது, அவ்வளவுதான். உட்காருங்கள். பிரச்சினை முடிந்தது. உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. சுதர்சனம், சொல்லுங்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் குறிப்பிட்ட நேரத்திற்குமேல் பேசிவிட்டு, அதற்குமேல் வெளிநடப்புச் செய்யவேண்டும் என்ற எண்ணத்திலே இதுபோன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுதான். (குறுக்கீடு) சொல்லுங்கள். (குறுக்கீடு) நீங்கள் வேண்டுமென்றே பிரச்சினையைக் கிளப்புகிறீர்கள். திரு. செங்கோட்டையன், சொல்லுங்கள்.



**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சிக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற நேரம், முதலில் 15 நிமிடங்கள் என்று சொன்னீர்கள். ஆனால், அவர் 21 நிமிடங்கள் பேசினார். அதற்கு நீங்கள் அனுமதித்தீர்கள். ஆளுங்கட்சியாக இருக்கிற நீங்கள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கோட்டையன், என்மீது குற்றச்சாட்டு சொல்வதை முதலில் நிறுத்திக்கொள்ளுங்கள். என்னிடம் வாருங்கள். முதலில் ஒதுக்கப்பட்ட நேரம் எவ்வளவு என்ற விவரத்தை உங்களுக்குத் தருகிறேன். வாருங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** குற்றச்சாட்டு அல்ல. அனுமதித்தீர்கள். ஆனால், பிரதான எதிர்க்கட்சியான எங்களுக்கு நேரத்தை ஒதுக்குகிறபோது, ஒரு நிமிடம் கூடுதலாக இருந்தாலும்கூட நீங்கள் அதை அனுமதிக்க வேண்டுமே தவிர, நீங்கள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை அனுமதிக்க முடியாது. உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் அதிகமாகப் பேசினார் என்பதற்காக, ஆளுங்கட்சிக்கு 20 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டிருந்ததில் ஐந்து நிமிடங்கள் குறைத்துக்கொள்ளப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஐந்து நிமிடங்களைக் குறைத்துக் கொண்டோம். அது அவரிடமும் சொல்லப்பட்டுவிட்டது. அவர் அதிக நேரம் எடுத்துக்கொண்டார் என்பதற்காக, ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த நேரத்தில் ஐந்து நிமிடங்களைக் குறைத்திருக்கிறோம் என்பதை அவரிடம் சொல்லியிருக்கிறோம். அதை ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதிலுரை. (குறுக்கீடு) திரு. அக்ரி கிருஷ்ணமூர்த்தி, உட்கார்ந்துகொண்டு பேசாதீர்கள். உங்களை நான் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறேன். அப்பொழுதிலிருந்தே நீங்கள் பிரச்சினை பண்ணிக்கொண்டேயிருக்கிறீர்கள். உட்கார்ந்துகொண்டு பேசுகிறீர்கள். நான் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறேன். நீங்கள் உட்கார்ந்துகொண்டு கத்திப் பேசுவதையெல்லாம் நான் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் முதலில். மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் மானியங்களின்மீது இந்த அவையில் நடைபெறுகின்ற இந்த விவாதத்தின் இறுதிப் பகுதியாக என்னுடைய விளக்கங்கள் சிலவற்றை வழங்க முன்வந்திருக்கின்றேன்.

முதலில் விவாதத்தைத் தொடங்கி வைத்த திரு. நம்பிதுரை அவர்கள், சில புள்ளிவிவரங்களை மானியக் கோரிக்கைப் புத்தகங்களிலேயிருந்து எடுத்துக்காட்டி, அவற்றிலே உள்ள தவறுகளைச் சுட்டிக்காட்டி, இந்த வேறுபாட்டிற்கு என்ன காரணம் என்றெல்லாம் வினா எழுப்பினார். ஒன்றை நான் சொல்ல விரும்புகின்றேன். பிழைகளைச் சுட்டிக்காட்டுவதும், அவற்றைத் திருத்துகின்ற அந்த வாய்ப்பை ஆளுங்கட்சிக்கோ, அல்லது ஆளுங்கட்சி எதிர்க்கட்சிக்கோ தருவது ஜனநாயக முறையிலே ஒன்றும் மாபெரும் பாவம் அல்ல. ஏற்றுக்கொள்ளக்கூடியதுதான். அந்த வகையிலே, அவர் சொன்னது நியாயமான குறைபாடாக இருந்தால், அதை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். ஆனால் அவர், கரும்பு அரைவையைப் பொறுத்தவரையிலே, இந்த மானியக் குறிப்புப் புத்தகத்திலே இடம்பெற்றுள்ள அந்த வரியைப் படித்துக்காட்டிவிட்டு, அ.தி.மு.க. ஆட்சியில் கரும்பு அரைவை 63 இலட்சம் டன் என்று படித்துவிட்டு, தற்போது தி.மு.க. ஆட்சியில் 31–3–2007 வரையில் 46 இலட்சம் டன்தான் என்று சொல்லி, நீண்ட நேரம் கைத்தட்டலை அவருடைய பகுதியிலேயிருந்து பெற்றுக்கொண்டார்.

எனக்கு என்ன பயமென்றால், இந்தக் கைத்தட்டலைப் பார்க்கும்பொழுது, இங்கும் சரி, அங்கும் சரி—இந்த ஆட்சி தொடங்கியதற்குப் பின்பு, தேர்தல் நடைபெற்றதற்குப் பின்பு—நான் பலமுறை இந்த அவைக்கு வந்து, இந்த இருக்கைகள், மேஜைகள் இவைகளையெல்லாம் தற்போதுள்ள மாதிரி அமைத்து, யாரும் உடனுக்குடன் ஒருவரையொருவர் நெருங்கிவிட முடியாமல், தகராறு வருகின்ற நேரத்திலும் அப்படிப்பட்ட சம்பவங்கள் எவையும் ஏற்பட்டுவிடாத ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்பதற்காக, அடிக்கடி வந்து பல சீர்திருத்தங்களைச் செய்திருக்கிறேன்.

பிற்பகல் 12–10

ஏன் இந்த மேஜையை இவ்வளவு அகலமாகப் போட வேண்டும், ஆளுங்கட்சிக்கும், எதிர்க்கட்சிக்கும் இடையிலே இவ்வளவு அகலம் ஏன் இருக்க வேண்டும் என்றெல்லாம் எனக்குத் தோன்றியதற்குக் காரணம்—எனக்குத் தோன்றவில்லை—எனக்கு அந்த அறிவுரையைச் சொன்னவர் அன்றைய பிரதமர் இராஜிவ் காந்தி அவர்கள். எப்படி இந்த அறிவுரையைப் பெற்றாய் என்று கேட்டால், அதற்கு முன்பு நடைபெற்ற ஒரு சம்பவம், அது இராஜிவ் காந்தியினிடத்திலே வேறு விதமாகச் சொல்லப்பட்டபோது, நான் இங்கே நடைபெற்ற சம்பவங்களுக்கான புகைப்படங்களையெல்லாம் அவரிடத்திலே எடுத்துக்காட்டி "இதோ பாருங்கள் நாங்கள் எங்கே இருக்கிறோம், அவர்கள் எங்கே இருக்கிறார்கள், எப்படி இதெல்லாம் நடந்திருக்க முடியும்" என்றெல்லாம் சொல்லி விளக்கினேன். ஒன்றிரண்டு பெயர்கள் ஆள் மாறாட்டத்திலே தவறாகச் சொல்லியிருக்கக்கூடும். நான்கூட செங்கோட்டையனை அன்றைக்கு முதலில் குற்றஞ்சாட்டினேன். மறுநாளே செங்கோட்டையன் என்னிடத்திலே கண் கலங்க, "நானா அப்படிச் செய்தேன்? என்னையா நீங்கள் சொன்னீர்கள்" என்று சொல்லி, வேறு ஒரு சட்டமன்ற உறுப்பினர்தான் அப்படிச் செய்தார் என்று குறிப்பிட்டார். இப்பொழுது அவர் இல்லை. (குறுக்கீடு) இல்லை, இல்லை, அந்தியூர். (குறுக்கீடு) ஏன் போனவர்களை இப்படி விடமாட்டேன் என்கிறீர்கள்? (குறுக்கீடு) சரி, நீங்கள்தான் செய்தீர்கள் என்று சொல்கிறேன். (சிரிப்பு) (குறுக்கீடு)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள் சார். நீங்கள்தான் இல்லையென்று சொல்லிவிட்டீர்கள் அல்லவா? (குறுக்கீடுகள்)

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** ஒரே நிமிடம், ஒரே நிமிடம். சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நான் அந்தமாதிரி செய்யவில்லை; தொலைக்காட்சியிலே படம் பிடிக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் போட்டுப் பார்த்துக்கொள்ளுங்கள்" என்று சொன்னேனே தவிர, 'மற்றொரு சட்டமன்ற உறுப்பினர் செய்திருக்கிறார்' என்று நான் அவர் பெயரைச் சொல்லவில்லை என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. உட்காருங்கள், உட்காருங்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** அவர் சொல்லாவிட்டாலும், நான் தெரிந்துகொண்டேன். அப்படியே இருக்கட்டும். அந்தச் சட்டமன்ற உறுப்பினர் இப்பொழுது இல்லை. அந்தியூர்க்காரர், அவர் இப்பொழுது இல்லை. அதனால் நான் அதை விரிவாக சாட்சியங்களோடு மெய்ப்பிக்க வேண்டுமென்றும் விரும்பவில்லை. ஏன் இந்த மேஜைகளின் அமைப்பு இப்படி மாற்றப்பட்டது என்பதற்காகச் சொன்னேனேயல்லாமல், வேறல்ல. இப்படி மாற்றப்பட்ட இந்த அமைப்பில், இப்பொழுது சில நேரங்களில் தகராறு, அமளி

ஏற்பட்டாலும்கூட, முன்புபோல அசம்பாவிதங்கள் எதுவும் நடைபெறாமல் பார்த்துக்கொள்வதற்கு இந்த அமைப்பு பயன்படுகிறது என்பதிலே எனக்கு மிகவும் திருப்தி. அந்தத் திருப்தியோடுதான் இங்கே நடைபெறுகின்ற விவாதங்களையெல்லாம் நான் கவனித்துக்கொண்டிருக்கின்றேன். இதற்கு மேல் எதுவும் நடக்காது என்ற நம்பிக்கையோடு நான் பார்த்துக்கொண்டிருக்கின்றேன். ஆனாலும், சில நேரங்களில் வார்த்தைகள், வாசகங்கள் கொஞ்சம் தடித்த நிலையிலே வெளிப்பட்டுவிடுகிற காரணத்தால், நம்முடைய அவையினுடைய மரபுக்கும், அவையினுடைய ஜனநாயக ஆரோக்கியத்திற்கும் பழுது ஏற்பட்டுவிடுமோ என்கின்ற அந்த அச்சம் எனக்கு இல்லாமல் இல்லை. அந்த அச்சத்தோடுதான், ஒவ்வொரு நாளும் இந்த அவையிலே நடைபெறுகிற நிகழ்ச்சிகளை முழு நேரமும் நான் இருந்து கவனிக்க வேண்டுமென்ற அந்த அக்கறையோடு இருந்து கொண்டிருக்கின்றேன். உடல்நிலை இடம் தராவிட்டாலும்கூட, உள்ளம் இடம் தராத காரணத்தால், எதுவும் நடந்துவிடக்கூடாது என்பதற்காக நான் இங்கே அமர்ந்து ஒவ்வொரு நாளும் நடப்பதைக் கவனிக்க வேண்டியவனாக இருக்கிறேன். எல்லோரும் சேர்ந்து நம்முடைய அவையின் கண்ணியத்தைக் காப்பாற்ற வேண்டும்.

“நீங்கள் நேரம் கொடுத்துவிட்டு, இப்பொழுது மறுக்கிறீர்கள்” என்று சபாநாயகரைப் பார்த்தே அவர்கள் சொன்னார்கள். சபாநாயகருடைய அறையிலேதான் அந்த விவாதமே நடைபெற்றது. காலையில் நான் வந்தபொழுது, இன்றைக்குப் பேசுவதற்கு மொத்தமே ஏழு பேர்தான் என்று முதலிலே குறிக்கப்பட்டிருந்தது. அதற்குப்பிறகு அந்த ஏழு, பத்தாக மாற வேண்டுமென்று வாதிடப்பட்டது. நம்முடைய வேல்முருகன் போன்றவர்கள், நம்முடைய செங்கோட்டையன் போன்றவர்கள் எல்லாம் வந்து வாதிட்டார்கள். தம்பிதுரைகூட கோபித்துக்கொண்டு போனார், வேண்டாம் எனக்கு என்று. நான் அதைப் புரிந்துகொண்டேன், கோபமாகப் போகிறார் என்று. நான் தம்பிதுரையினுடைய கோபத்தைத் தாங்க முடியுமா என்ன? என்னோடு பழகியவர் அவர். ஆகவே, அந்தக் கோபத்தைத் தாங்க முடியாமல், உடனே சபாநாயகரிடத்தில், சரி, கொடுத்துவிடுங்கள், எல்லோருக்கும் கொடுத்துவிடுங்கள் என்று சொல்லி, அதற்குப் பிறகு எல்லோருக்கும் நேரம் ஒதுக்கப்பட்டு, அவை நடந்துகொண்டிருக்கிறது.

பிற்பகல் 12–15

திரு. தம்பிதுரை பேசும்போது ஒன்றைக் குறிப்பிட்டார். நான் அதை இங்கே சுட்டிக்காட்டினேன். அ.தி.மு.க. ஆட்சியில் 63 இலட்சம் டன்



கரும்பு அரைவை என்று சொல்லி, தி.மு.க. ஆட்சியில் 46 இலட்சம் டன்தான் என்று சொன்னார். அவர் எவ்வளவு தந்திரமாக உண்மையை மறைக்கக் கற்றவர் என்பது அந்தப் புத்தகத்தைப் பார்த்தாலே தெரியும். அதிலே என்ன இருக்கிறது என்றால், அ.தி.மு.க. ஆட்சியில் கரும்பு அரைவை ஓராண்டு காலத்தில் 63 இலட்சம் டன் என்று இருக்கிறது. தற்போது 46 இலட்சம் டன் என்று அவர் சொன்னது 31–3–2007 வரையிலேதான். அதாவது ஆறு மாதக் காலத்திற்குதான். அ.தி.மு.க. ஆட்சியில் 12 மாதக் காலத்தில். அப்போது 63 இலட்சம் டன் இருந்தது உண்மை. தி.மு.க. ஆட்சியில் ஆறு மாத காலம்தான் என்பதால் 46 இலட்சம் டன் என்று இருக்கிறது என்பதை, நான் நண்பர் தம்பிதுரை அவர்களுக்கு எடுத்துக்கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்னொன்றை அவர்கள் சொன்னார்கள். ஹுண்டாய் கார் தொழிற்சாலைக்கு M.o.U. அம்மா ஆட்சியில்தான் கையெழுத்திட்டதாக அவர்கள் கூறினார்கள். என்னுடைய நினைவு, தெளிவான நினைவு, அதற்கு 18–7–1996-ல் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான் ஹுண்டாய் கார் தொழிற்சாலைக்கு கையெழுத்திடப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு முன்பு வேண்டுமானால் அவர்கள் ஆட்சியாளர்களோடு பேசியிருக்கலாம். ஒருவேளை அவர்களோடு பேசியிருக்கலாம். ஆனால், அந்தப் பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து M.o.U. போடப்படவில்லை. புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்படவில்லையென்பதற்கு சாட்சியம், நம்மிடத்திலே இருக்கின்ற அந்த ஆவணம்தான். 18–7–1996–ல்தான், தி.மு.க. ஆட்சியிலேதான், ஹுண்டாய் கார் தொழிற்சாலைக்கு ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று.

அதைப்போல, செயின்ட் கோபெயினுக்கும் அம்மா ஆட்சியிலேதான் M.o.U. போடப்பட்டது என்று திரு. தம்பிதுரை அவர்கள் சொன்னார்கள். அதையும் எடுத்துப் பார்த்தால் சரியான ஆதாரம் கிடைத்தது. M.o.U. கையெழுத்தானது, 6–1–1997 மற்றும் 22–1–1998 ஆகிய இரண்டு நாட்களில்தான் பேசி முடிவு செய்து 22–1–1998–ல் இறுதியாக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான் கையெழுத்திடப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) இதிலே ஒன்று, நான் அன்றைக்குச் சொன்னதைப்போல நான் பெருமைப்பட்டுக்கொள்ள விரும்பவில்லை. தேதி தவறு. அதைத் தவிர சேதி தவறல்ல. நாங்கள் இந்தத் தொழிற்சாலைகளைக் கொண்டுவர திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காரணமாக இருந்தது என்பதைச் சொல்லி பெருமைப்பட்டுக்கொள்ள விரும்பவில்லை. எப்படியோ தமிழ்நாட்டிலே தொழில் வளர்ந்தால், பெருகினால், எல்லோருக்கும் இலாபம்தான். எல்லோருக்கும்

மகிழ்ச்சிதான். அந்த மகிழ்ச்சியை எல்லோரும் பங்கிட்டுக்கொள்ளலாம். அதிலே எனக்கென்று, அல்லது தம்பிதுரைக்கென்று, வித்தியாசம் இல்லை. அனைவரும் அதிலே பங்கிட்டுக்கொள்ளலாம். ஆனால், கட்சி மாச்சரியங்களால் உண்மைகள் மறைந்துவிடக் கூடாது என்ற அந்தக் கவலையோடுதான் இவற்றை நான் சொல்கிறேனேயல்லாமல் வேறல்ல.

இறுதியாகப் பேசிய நம்முடைய திரு. ஜெயக்குமார் அவர்கள்கூட இந்தியாவிலேயே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைவிட அதிகமாக, அ.தி.மு.க. ஆட்சியில் இந்தியா பெருமை பெற தமிழ்நாட்டில் தொழில் வளத்தைப் பெருக்கியவர் அம்மாதான் என்று குறிப்பிட்டார். அந்தப் பெருமையைப் பேசிக்கொள்ள நாங்கள் யாரும் குறுக்கே நிற்கவில்லை. ஆனால், உண்மை வந்துதான் குறுக்கிடுகிறது. நான் குறுக்கிடவில்லை. அல்லது வேறு யாரும் குறுக்கிடவில்லை. உண்மை, நிதர்சனமான உண்மை குறுக்கிடுகிறது. இந்திய பொருளாதார கண்காணிப்பு மையம் என்று ஒன்று இருக்கிறது. C.M.I.E. என்று அதைக் குறுகலான வார்த்தைகளால் அழைப்பார்கள். அந்த C.M.I.E. ஏப்ரல் 2001-ல் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இந்தியா பெற்ற மொத்த முதலீட்டில், தமிழ்நாடு 10.69 சதவிகிதம், அதாவது மூன்றாவது இடம் என்று C.M.I.E. குறிப்பிடுகிறது. அதே C.M.I.E., அ.தி.மு.க. ஆட்சியில் மார்ச் 2006-ல் இந்தியா பெற்ற முதலீட்டில், தமிழ்நாடு 5.79 சதவிகிதம், ஏழாவது இடம் என்று குறிப்பிடுகிறது. இதற்கு நாம் என்ன செய்ய முடியும்? C.M.I.E. குறிப்பிடுகிறது. அ.தி.மு.க. 2006-லே ஏழாவது இடத்தில் இருக்கிறது; தி.மு.க. 2001-லே மூன்றாவது இடத்திலே இருந்தது என்று குறிப்பிடுகிறது. இது நம்முடைய குற்றமல்ல. வேண்டுமானால், C.M.I.E.-ஐக் குறை கூறலாம். அதற்குக் கண்டனம் தெரிவிக்கலாம். ஒரு கூட்டம்கூடப் போட்டுத் தீர்மானம் நிறைவேற்றலாம்.

*பிற்பகல் 12-20*

நம்முடைய பீட்டர் அல்போன்ஸ் அவர்கள், சென்னையிலேயே எல்லா தொழில் வளங்களும் குவியக்கூடாது என்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். இதை நாம் யாரும் மறந்துவிடவில்லை. அப்படி மறக்காத காரணத்தினாலேதான், முன்பு இருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான் தூத்துக்குடியிலே ஸ்பிக் தொழிற்சாலை வந்தது என்பதை அவர் மறந்திருக்க மாட்டார். இராணிப்பேட்டையிலே சிப்காட் வளாகம்—இராணிப்பேட்டையிலே எப்படி சிப்காட் வளாகம் வந்ததென்றால், ஆட்சி மாறி, 1967-லே அண்ணா தலைமையிலே தி.மு.க. ஆட்சி வந்த பிறகு, அன்றைய தொழில் துறை அமைச்சராக இருந்த மாதவனோடு நான் இராணிப்பேட்டைக்குச் சென்று, இங்கே ஒரு இடம்



திரு. வெங்கட்ராமன் அவர்களுடைய காலத்திலே வாங்கப்பட்டதாமே, அவர் தொழில் அமைச்சராக இருந்தபொழுது. அது என்ன ஆயிற்று என்று விசாரித்தபொழுது, அதை வெங்கட்ராமன் அவர்கள், தொழில் நடத்த உகந்த இடம் அல்ல, ஆகவே அதை விற்றுவிடுவதற்கு ஏற்பாடு செய்யச் சொன்னதாக அங்குள்ளவர்கள் சொன்னார்கள். விற்க வேண்டாம் என்று அங்குள்ள அதிகாரிகளிடம் சொல்லிவிட்டு, அந்த இராணிப்பேட்டையை—இப்பொழுது சிப்காட் வளாகம் இருக்கிறதே, அந்த இடத்தை விற்காமல், இன்றையதினம் பெரும் தொழில் வளாகமாக இராணிப்பேட்டை விளங்குகிறது என்றால், அதற்கு அன்றையதினம் நாங்கள் எடுத்த முயற்சிதான் காரணம். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போலவே, திரு. பீட்டர் அல்போன்ஸ் சொன்னதைப்போல, சென்னையிலே மாத்திரம் அல்ல டைடல் பார்க். அது கோவையிலும் வர வேண்டும், சேலத்திலும் வர வேண்டும், மதுரையிலும் வர வேண்டும், திருச்சியிலும் வர வேண்டும், நெல்லையிலும் வர வேண்டும் என்ற முனைப்பான முயற்சியோடுதான் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் உருவாக இருக்கின்றன என்ற நல்ல செய்தியையும் நான் அவருக்குச் சொல்ல விரும்புகின்றேன்.

ஒரு நாடு அல்லது நம்மைப் போன்ற ஒரு மாநிலம் வளர வேண்டுமேயானால்—இது விவசாயத்தை நம்பி இருக்கின்ற நாடு. வேளாண்மை வளம் கொழிக்கின்ற நாடு. வேளாண்மையை அடிப்படையாக வைத்துத்தான் எதுவும் இங்கே நடைபெற வேண்டும் என்றாலும்கூட, வேளாண்மையை மாத்திரம்தான் நாம் பேணிப் பாதுகாப்போம்; அதை மாத்திரம்தான் வளர்த்து, நம்முடைய பொருளாதாரத்தை, வளத்தைப் பெருக்கிக்கொள்வோம் என்று இல்லாமல், நம்முடைய உள் கட்டமைப்புகளையெல்லாம் வளர்த்து, பெருக்கி, அதன்மூலமாக போக்குவரத்து, துறைமுகம், இரயில்வே, விமானம் போன்ற அத்தனை வசதிகளையும் பெருக்கி, நம்முடைய நாட்டில் நாம் வளத்தைப் பெருக்க வேண்டும். அப்படிப் பெருக்குவதற்கு தொழில்தான் பயன்படும்—வெறும் விவசாயத்தை மாத்திரம்—நான் 'வெறும்' என்று சொன்ன அந்த வார்த்தைக்காகக்கூட நீங்கள் மன்னித்துக்கொள்ள வேண்டும். விவசாயத்தை மாத்திரம் நம்பி நாம் பெரும் வளத்தை இங்கே பெருக்கி, மற்ற நாடுகளோடு போட்டி போட முடியாது. நாம் ஜப்பான் நாட்டோடு போட்டி போட வேண்டுமானால், சீன நாட்டோடு போட்டி போட வேண்டுமானால், பக்கத்திலே இருக்கின்ற பகை நாடுகளோடு போட்டி போட வேண்டுமானால்,

நட்பு நாடுகளோடு போட்டி போட வேண்டுமானால், நாம் விவசாயத்தை வளர்ப்பது மாத்திரமல்ல, அதே நேரத்திலே தொழில் வளத்தையும் பெருக்கியாக வேண்டும்.

ஒரு காலத்திலே, எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது; நம்முடைய பேராசிரியருக்கும் ஞாபகம் இருக்கும் நிச்சயமாக. நாங்கள் மேடைகளில் அப்பொழுது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, திராவிட இயக்கத்தின் சார்பாக நடைபெறுகிற கூட்டங்களிலெல்லாம் தவறாமல் சொன்ன ஒரு கவிதை உண்டு. அவை பட்டினப்பாலையிலே வருகின்ற வரிகள்.

"நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குணகடற் துகிரும்
கங்கை வாரியும், காவிரிப் பயனும்
ஈழத்துணவும் காழகத்தாக்கமும்
அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகின்"

என்ற பட்டினப்பாலையைப் பாடுவோம். இப்படி இருந்தது நம்முடைய காவிரிப்பூம்பட்டினம் துறைமுகம்.

*பிற்பகல் 12–25*

அந்தத் துறைமுகத்திலே வந்திறங்காத பொருள் இல்லை. வெளிநாட்டுக் குதிரைகள் எல்லாம் வந்து இங்கு இறங்கும். இங்கே குதிரைகள் இல்லை, அதனால் வெளிநாட்டுக் குதிரைகள் நம்முடைய படைகளுக்காகத் தருவிக்கப்பட்டன. இப்படிக் குதிரைகள் எல்லாம் வந்து இறங்கும். கருங்கறி மூடை, மிளகு, மயில் துத்தம் இப்படிப் பல பொருள்கள் இங்கே வந்து இறங்கும். அப்படிப்பட்ட துறைமுகத்தைப் பெற்றிருந்த நாம் இன்றைக்கு இறக்குமதிக்கோ, ஏற்றுமதிக்கோ எதைப் பெற்றிருக்கிறோம் என்று கவலைப்பட்டு பேசிப் பேசி, அப்படிப் பேசியதன் விளைவாகத்தான் நாம் போர்க்குரல் எழுப்பி, உரிமைக் குரல் எழுப்பி, அப்படி எழுப்பியதன் விளைவாகத்தான் இன்றையதினம் அந்தத் திட்டம், இந்தத் திட்டம், எந்தத் திட்டம் என்றாலும் அந்தத் திட்டம் தமிழகத்திற்கு வர வேண்டும் என்று வலியுறுத்தி



சேது சமுத்திரத் திட்டம் வரையிலே நாம் இன்றைக்குப் பெற்றிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றவுடன் என்ன செய்தார்? பவனி சென்றாரா, ஊருக்கு ஊர், 'நான் முதலமைச்சராக ஆகியிருக்கிறேன், பார், பார்' என்று. அல்ல. அவருடைய முதல் குரலே எழுச்சிக் குரல். தமிழ்நாட்டின் எழுச்சிக்காக 'எழுச்சி நாள் கொண்டாடு' என்று உத்தரவிட்டார். எதற்காக எழுச்சி நாள்? நாம் நீண்ட நாளாகக் கேட்டு வருகின்ற நெய்வேலி நிலக்கரிக்காக, சேலம் இரும்புத் தொழிற்சாலைக்காக, சேது சமுத்திரத் திட்டத்திற்காக எழுச்சி நாள் கொண்டாட வேண்டுமென்று அன்றைக்கு உத்தரவிட்டார். அந்த உத்தரவை தலைமேல் தாங்கி, இரு வரிசையிலும் உட்கார்ந்திருக்கிற நாம் நடத்திய கூட்டங்கள் ஒன்றல்ல, இரண்டல்ல. நாம் இருவரும் மற்றும் அனைவரும் சேர்ந்துபட்ட பாடுதான் இந்த சேது சமுத்திரத் திட்டம். ஆனால், இன்றைக்கு அந்தப் பங்கு வேண்டாம் என்று போகிறீர்கள், 'எங்களுக்கும் சேது சமுத்திரத் திட்டத்திற்கும் சம்பந்தம் இல்லை என்று சொல்கிறீர்கள், இருக்கிற சம்பந்தத்தையே இல்லை என்று மறுக்கிறீர்கள். இந்த இராமனுடைய பாலம் வந்து கெடுக்கிற கேடு இந்தக் கேடு.

இவ்வளவு திட்டங்களையும் இன்றைக்கு நாம் பெற்றிருக்கிறோம் என்றால்—அகில இந்திய அளவிலே பொருளாதாரத்திலே நம்மை மிக்கார் யாரும் இல்லை என்று எண்ணுகிற அளவுக்கு வளரக்கூடிய வாய்ப்புகளையெல்லாம் நாம் இழந்து விடக்கூடாது. சேலம் திட்டத்திற்காக எப்படிப் போராடினோம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அண்ணா மறைந்து விடுகிறார்; நானும் மதியழகனும், அவர் நிதித் துறை அமைச்சராக, நான் முதலமைச்சராக டெல்லியிலே நடைபெறுகின்ற முதலமைச்சர் மாநாட்டிலே கலந்துகொள்கிறோம்; அந்த மாநாட்டிலே இந்திரா காந்தி அம்மையார் பிரதமர், தலைமை வகிக்கிறார், முதலமைச்சர் மாநாட்டில். மொரார்ஜி தேசாய் துணைப் பிரதமர், அவரும் அந்த அவையிலே இருக்கிறார். அப்போது, Draft Plan–வரைவுத் திட்டம், அதை ஒவ்வொரு முதலமைச்சருடைய கையிலும் வழங்குகிறார்கள். அதைப் பிரித்துப் பார்த்த நான்—என்னைப் பேசச் சொல்லி அழைக்கிறார்கள்—சேலம் இரும்பாலைத் திட்டம் இடம் பெறாத இந்த வரைவுத் திட்டத்தை தமிழ்நாடு ஏற்றுக்கொள்ளாது என்று அங்கேயே அறிவித்துவிட்டு, walk–out செய்வார்களே, அப்போதே நான் walk–out செய்தேன்; செய்யக் கூடாது,

முறை அல்ல. முதலமைச்சர்கள் மாநாட்டில் walk-out செய்தது கருணாநிதி அல்ல, தமிழ் உணர்ச்சி அன்றைக்கு walk-out செய்தது. (மேசையைத் தட்டும் ஒலி) அது நடந்த அடுத்த வாரம், விமானத்திலே நானும், சி. சுப்ரமணியமும் வந்தோம். சி. சுப்ரமணியம் அவர்கள் என்னைவிட அனுபவஸ்தர் அல்லவா? அவர்கள் சொன்னார்கள், "என்ன இப்படிச் செய்துவிட்டீர்கள், walk-out செய்யலாமா, செய்யக்கூடாதே, இன்னும் கொஞ்சம் அழுத்தம் திருத்தமாகக் கேட்டிருக்கலாமே?" என்றார்கள். "இல்லை, இல்லை. தமிழ்நாட்டு மக்களுடைய உணர்ச்சியை எத்தனை முறைதான், எத்தனை தடவைதான் காட்டுவது என்பதற்காகத்தான் இப்படிச் செய்தேன்" என்று சொன்னேன். அதற்கு அடுத்த வாரம் டெல்லியிலே இருந்து அழைப்பு வந்தது; சென்றோம். அம்மையார், இந்திரா காந்தி அவர்கள், என்னை அழைத்து "சேலம் திட்டம் கொடுத்துவிட்டேன், என்றைக்குத் தொடக்க விழா வைத்துக்கொள்ளலாம்? என்று கேட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நானும், சேலத்தைச் சேர்ந்த இராசாராம் அவர்களும், இங்கிருந்து அம்மையார் அவர்களை அழைத்துக்கொண்டு சேலத்திற்குச் சென்றோம். நம்முடைய வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள் எல்லாம் இருந்து பெரிய விழா நடத்தினார்கள்; அப்போது அடிக்கல் நாட்டினோம். இப்படி வந்ததுதான் சேலம் இரும்புத் தொழிற்சாலைத் திட்டம்.

இதைப்போல, சேது சமுத்திரத் திட்டத்திற்கு எந்த அளவிற்குக் கஷ்டப்பட்டோம் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். சேது சமுத்திரத் திட்டத்திற்காக எந்த அளவிற்குக் குரல் கொடுத்தோம் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். அந்தத் திட்டமும் இப்போது கிடைத்திருக்கிறது. இப்படிப் பல திட்டங்கள் நம்முடைய வளத்தைப் பெருக்கக்கூடிய திட்டங்கள் நமக்குக் கிடைத்திருக்கின்றன.

*பிற்பகல் 12-30*

தொழில் வளர்ச்சி, விவசாயத்தைப்போல ஒரு நாட்டுக்கு மிக முக்கியமான வளர்ச்சி என்பதை உணர்ந்திருக்கின்ற காரணத்தினால்தான்—அத்தனைபேருக்கும் விவசாயத்தால் வேலைவாய்ப்பு அளித்திட முடியாது. விவசாயம் பெருகினால் ஒரு குடும்பத்திலே இருப்பவர்களுக்கு வாழ்வு கிடைக்கும். பசி, பட்டினி இல்லாமல் வாழ முடியும். வளமாகக்கூட வாழ முடியும். ஆனால், தமிழ்நாட்டில் இருக்கின்ற அத்தனைபேருக்கும், மக்கள்தொகை பெருகப் பெருக, அதுவும் பெருகுவது சாதாரணமாகவா பெருகுகிறது? (சிரிப்பு) இப்படிப் பெருகப் பெருக, அத்தனைபேருக்கும், அவர்களுக்கெல்லாம்



வேலைவாய்ப்பு அளிப்பது என்பது, வெறும் விவசாயத்தை மாத்திரம் நம்பிப் பயனில்லை—தொழில் துறையிலும் நாம் முன்னேறவேண்டும் என்று கருதி, அதற்காகப் பாடுபட்டுக் கொண்டிருக்கின்றோம். அவ்வாறு பாடுபட்டதனுடைய பலன்தான், இன்றைக்கு நாம் தொழில் துறையின் வாயிலாக தமிழகத்திலே முன்னேற்றம் பெறுவதற்கு முனைப்பு காட்டிக்கொண்டிருக்கின்றோம்.

முக்கியமாக நம்முடைய தம்பிதுரை கேட்டார், கொள்கை வகுத்திருக்கிறீர்களா வகுத்தீர்களா என்று தொழில் துறைக்கு கொள்கை வகுத்திருக்கிறீர்களா என்று கேட்டார். நாங்கள் அந்த உண்மையை ஒப்புக்கொள்கின்றோம். இங்கே குறிப்பிலேயும் சொல்லியிருக்கின்றோம், இன்னும் இந்த முறை கொள்கை வகுக்கவில்லையென்று. ஆனாலும், கொள்கை வகுக்கப்பட்டு தயாராக இருக்கின்றது. அது எங்களுடைய தொழில் துறை செயலாளரால் மீண்டும் ஒருமுறை பார்க்கப்பட்டு, முறைப்படி அமைச்சரவைக் கூட்டத்திலே ஒப்புதல் பெறப்பட்டு வெளியிடப்படவிருக்கிறது. அதற்கிடையிலே தொழில் துறைச் செயலாளர் உடல் நலமில்லாத காரணத்தால், அவர் மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டிருக்கின்றார். அவர் சுகம் பெற்று விரைவில் திரும்பவேண்டுமென்று நான் தொழில் துறை மானியம் பற்றிப் பேசுகின்ற நேரத்தில் என்னுடைய விழைவை வெளிப்படுத்துகின்றேன். அவர் உடனடியாக வெளிவந்து அந்தக் காரியத்தைச் செய்ய முடியாத காரணத்தால், அந்த அறிவிப்பை இந்த மானியத்தோடு சேர்த்து வழங்க முடியவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதற்காக நாங்கள் தொழில் கொள்கையையே அறிவித்தது கிடையாதா என்றால், முதன்முதலாக 1996 ஆம் ஆண்டு தொழில் கொள்கையை அறிவித்த அரசு, திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் என்பதை ஞாபகப்படுத்துகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் அறிவித்ததைப்போல நீங்களும் அறிவித்திருக்கின்றீர்கள். இரண்டு பேருக்கும் சரியாகப் போயிற்று. யாரும் இதில் பெருமைப்பட்டுக்கொள்வதற்கு ஒன்றும் கிடையாது. ஆனால், நீங்கள் அறிவித்த அந்தக் கொள்கையின் அடிப்படையில் சில காரியங்களை நாங்களும் செய்திருக்கின்றோம். நாங்கள் அறிவித்திருந்த கொள்கையின் அடிப்படையில், நீங்களும் சில காரியங்களைச் செய்திருக்கின்றீர்கள். எனவே, இந்த இரண்டு பேர் செய்த காரியங்களும் நம்முடைய மாநிலத்தின் வளர்ச்சிக்காகச் செய்யப்பட்டதாக அமையும். ஆனால், அதிலே சில காரியங்கள் சரிவர நிறைவேறாமல், விமர்சனத்திற்கு உட்பட்டவையாக இருக்கக்கூடும்.

நம்முடைய ஜெயக்குமார் திடீரென்று சொன்னார், டி.வி. பெட்டிகள் வாங்கியதிலே முறைகேடு நடந்திருக்கிறது என்று. இந்த ஒரு சிறு வார்த்தைகூட, ஒரு முணுமுணுப்புகூட, டி.வி. வாங்குவதிலே வந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான், மாநில அளவிலே ஒரு கமிட்டியைப் போட்டோம். அந்தக் கமிட்டியிலே நீங்களும் இருங்கள் என்று கேட்டோம். மறுத்துவிட்டீர்கள். ம.தி.மு.க.வைக் கேட்டோம். இணங்கவில்லை. அந்தக் கமிட்டியிலே காங்கிரஸ் சார்பாக, பாட்டாளி மக்கள் கட்சி சார்பாக, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக, விடுதலைச் சிறுத்தைகள் சார்பாக, ஐ.யு.எம்.எல்., மற்றும் புரட்சி பாரதம் கட்சியின் சார்பாகவும் உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். ஒவ்வொரு தடவையும் ஒரு இலட்சம் பெட்டிகள் வாங்கலாமா என்று எண்ணினால், அந்தக் கூட்டத்தைக் கூட்டி, அவர்கள் அத்தனைபேரும் வந்து அமர்ந்து, அவர்களெல்லாம் கருத்துத் தெரிவித்து, அதற்குப் பிறகு எத்தனை இலட்சம் பெட்டிகள் வாங்குவது என்று முடிவெடுத்து, அந்த முடிவையும் இரகசியமாக வைக்காமல், open secret–என்பார்களே, அதைப்போல அதைத் திறந்த ஒன்றாக வெளியிட்டு, அப்படி வெளியிட்டதை நிறைவேற்ற, உடனடியாக டெண்டர் கோரி, அதன் பின்னர் யார் யார் எவ்வளவு ரூபாய்க்கு வழங்குகின்றார்கள் என்று அவர்கள் முன்வந்து, அவர்களையெல்லாம் அழைத்து, நாமக்கல் கவிஞர் மாளிகையிலே உட்கார வைத்து, அவர்களுடைய பேரங்கள் என்ன என்று டெண்டர் மூலமாகக் கேட்டு, நம்முடைய கமிட்டி உறுப்பினர்கள் அவர்களிடத்திலே விசாரணை நடத்தி, அதற்குப் பிறகுதான் அது முடிவாகிறது.

*பிற்பகல் 12–35*

இப்படி முடிவு செய்யப்படுகின்றபடி, வாங்கப்பட்ட அந்த டி.வி. பெட்டிகள் எப்படி விநியோகிக்கப்படுகின்றன? மாவட்ட ஆட்சித் தலைவர்கள்மூலம், கீழே இருக்கின்ற அதிகாரிகள்மூலம், ஒவ்வொரு ஊரிலும் அதனை விநியோகிக்கின்றவர்கள், நகரசபையாக இருந்தால் சேர்மன், கிராமமாக இருந்தால் பஞ்சாயத்துத் தலைவர், அந்த் ஊரிலே உள்ள முக்கியப் பிரமுகர்கள், ஒவ்வொரு கட்சியைச் சேர்ந்தவர்கள் (குறுக்கீடு), பள்ளி தலைமை ஆசிரியர்கள் இத்தனை பேரையும் அந்தக் குழுவிலே சேர்த்துத்தான் இந்த டி.வி. பெட்டிகள் விநியோகிக்கப்படுகின்றன. இதையே நீங்கள் முறைகேடு என்று சொன்னால், முறைகேட்டின் உருவாகவே இருக்கின்றார்களே சில பேர், அவர்களை என்ன சொல்வீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)



தொழில் துறையைப் பொறுத்தவரையில் நான், இந்த இலாகாவை ஏற்று, பொறுப்பைத் தொடங்கியவுடன், தமிழகத்திலே உள்ள... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள் பதிலுரையை முடித்ததற்குப் பிறகு உங்கள் விளக்கங்களைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். உங்கள் கருத்தைக் கடைசியாகச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** சொல்லப் போகிறார். (குறுக்கீடு) சொல்லப் போகிறார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செயல் ஆய்வுரை, அதாவது, மாண்புமிகு முன்னவர்கூட இந்த டி.வி. விஷயத்தை இப்போது ஏன் சொல்லவேண்டுமென்றுகூட அவர்கள் கேட்டார்கள். இதை I.T. Department–தான் deal செய்கிறது. ஒவ்வொரு வருடமும் 750 கோடி ரூபாய் என, கடந்த நிதியாண்டில் ஒதுக்கப்பட்டிருக்கிறது, இந்த நிதியாண்டிலும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. என்ன சொல்கிறோம் என்று சொன்னால், ஒவ்வொரு வருடமும் 25 இலட்சம் டி.வி. கொடுப்போம் என்கிறோம். என்னுடைய கேள்வி, நான் இங்கே கேட்டது, 4,34,000 டி.வி. தான் வந்திருக்கிறது. 4,34,000 என்கிறபோது, 750 கோடி ரூபாய் ஒதுக்கும்போது, கிட்டத்தட்ட ஒரு டி.வி. approximate cost 3,000 ரூபாய் என்று நீங்கள் வைத்தீர்களானால்கூட கிட்டத்தட்ட 134 கோடி ரூபாய் ஆகும். 134 கோடி ரூபாய்தான் செலவழிக்கப்பட்டிருக்கவேண்டும். ஆனால், இந்த 134 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டு அது செயல் ஆய்வுரையில் தகவல் correct–ஆக வந்திருந்தால் சரி. ஆனால், இப்பொழுது செயல் ஆய்வுரையில் என்ன சொல்லியிருக்கிறீர்கள், கிட்டத்தட்ட 750 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டது—"expenditure has been incurred" என்ற அந்தத் தகவல் வந்ததால்தான் நான் கேட்டேன். இப்போது, ஒப்பந்தம் கோரியவர்கள் இந்த டி.வி. சப்ளை செய்பவர்கள், டெலிவரி பண்ணாமலேயே மீதியிருக்கின்ற இந்த பணத்தை அவர்களுக்குக் கொடுத்திருக்கிறோமா? இதுதான் என்னுடைய கேள்வி.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** அந்தத் தொகை செலவிடப்பட்டதா இல்லையா? முறையாகச் செலவிடப்பட்டதா இல்லையா என்பதை அறிந்துகொள்ள சட்டசபையிலே இருக்கின்ற கட்சித் தலைவர்கள் கொண்ட ஒரு குழுவையே நியமிக்கின்றோம். அதிலே மாண்புமிகு உறுப்பினர் ஜெயக்குமார் அவர்களும்

கலந்துகொள்ளட்டும். கலந்துகொண்டு அதிலே குறை இருந்தால் தூக்கிற்குப் போகவும் தயாராக இருக்கிறேன். நீங்கள் எதற்குத் தயாராக இருக்கிறீர்கள்? *(குறுக்கீடுகள்)*

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்குவதிலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலே ஒரு குழு போடப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவிலே அங்கம் பெற்றிருக்கின்ற கட்சிகளின் தலைவர்களெல்லாம் கலந்துகொண்ட கூட்டத்தில், அதிகாரிகளை உள்ளடக்கி நாங்களெல்லாம் கலந்துகொண்டு, ஆலோசனைகளையெல்லாம் சொன்னோம். நாங்கள் சொன்ன ஆலோசனைகளுக்கு மேலாக முதலமைச்சர் அவர்கள், இன்னும் ஒரு படி மேலே போய், இது திறந்தவெளியாக இருக்கவேண்டும், ஒரு சின்ன குறைகூட நடைபெற்றுவிடக்கூடாதென்ற அந்த நோக்கத்தின் அடிப்படையில், ஒப்பந்தப் புள்ளிகள் கோருகின்ற நேரத்தில்கூட, ஒப்பந்தப் புள்ளிகள் கோருகிறவர்களை வரவழைத்து, பத்திரிகையாளர்களை வரவழைத்து, எங்களைப் போன்றவர்களையும் வரவழைத்து, நீண்ட நேரம் விவாதித்தார்கள். அதிலே எந்தக் குறையும் இல்லை. ஒளிவுமறைவு இல்லாமல் இருக்கிறது. முறைகேட்டிற்குத் துளியும் இடமில்லை என்பதை நான் பட்டவர்த்தனமாக, பகிரங்கமாக தமிழ்நாட்டு மக்களுக்கு, இம்மாமன்றத்தின் வாயிலாகச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஒரு சின்ன குறைகூட இல்லை. அது வெளிப்படையாக எல்லாக் கட்சிகளுக்கும் தெரியும். ஆகவே, அதிலே உள்நோக்கம் கற்பிக்க வேண்டாமென்பதை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டி வழங்குவதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதுபோன்று, எல்லா கட்சித் தலைவர்களையும், கமிட்டியில் உறுப்பினர்களாக இருங்கள் என்று கேட்டபோது வேண்டுமென்றே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகமும் ,அதிலே உறுப்பினராகச் சேர்வதற்கு மறுத்துவிட்டார்கள்.

*பிற்பகல் 12–40*

அதற்குப் பின்னாலே ஒவ்வொரு முறையும் கூட்டம் நடைபெற்றது. யாரிடத்திலே வாங்கலாம், எப்படி வாங்கலாம் என்பதைப் பற்றித்



தீவிரமாகக் கூட்டங்கள் போட்டுப் பேசினோம். பேசி, உலகளாவிய டெண்டர் கோரப்பட்டது. உலகளாவிய டெண்டர் கோரப்பட்டபோது, *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசிக் கொண்டிருக்கிறேன். வேண்டுமென்றே இதுபோன்று பின்னாலே பேசிக் கொண்டிருப்பது அவ்வளவு முறையல்ல என்பதை மீண்டும் ஒரு முறை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். திரும்பத் திரும்ப ... *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அன்பழகன், அமைதியாக இருக்க வேண்டும், தெரிகிறதா? நான் பார்த்துக் கொண்டே இருக்கிறேன், நீங்கள் உட்கார்ந்துகொண்டே பேசிக் கொண்டிருப்பதை. கையை நீட்டிப் பேசுகிறீர்கள். அங்கே பேசுகிறீர்கள், இங்கே பேசுகிறீர்கள்; நான் பார்த்துக் கொண்டே இருக்கிறேன்.

**திரு. டி. சுதர்சனம்:** உலகளாவிய டெண்டர் கோரப்பட்டது. உலகளாவிய டெண்டர் கோரப்படுகிறபோது, சம்பந்தப்பட்ட அதிகாரிகள், அந்த டெண்டரிலே யார், யார் எல்லாம் பங்கு பெற்றார்களோ அவர்கள் எல்லாம் நேரிலே அழைக்கப்பட்டார்கள். அவர்கள் முன்னிலையிலேயே அந்த Tender form திறக்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அங்கே இருந்தார்கள். யார் குறைந்த விலைக்கு டெண்டர் கேட்டார்கள் என்று பரிசீலிக்கப்பட்டது. அதற்காக 3 நாட்கள் ஒவ்வொரு நாளும் 2½ மணி நேரம், 3 மணி நேரம் முதலமைச்சர் அவர்கள் அந்த நாமக்கல் கவிஞர் மாளிகையிலே இருந்தார்கள். நானும், நம்முடைய மணி அவர்களும், நம்முடைய கோவிந்தசாமி அவர்களும், நம்முடைய சிவபுண்ணியம் அவர்களும், விடுதலைச் சிறுத்தைகள் சார்பாகவும், பிறகு புரட்சி பாரதம் சார்பாகவும் அத்தனை உறுப்பினர்களும் அந்தக் கூட்டத்திலே கலந்துகொண்டோம். ஒப்பந்தப்புள்ளி படிவம் ஒளிவுமறைவில்லாமல் திறக்கப்பட்டது. திறக்கப்பட்டு அதற்குப் பின்னாலே யார் குறைந்த விலைக்குக் கொடுத்திருக்கிறார்களோ அந்தக் குறைந்த விலையைக் குறித்துக் கொடுத்தவர்களுக்கும், யாரால் அந்த அளவிற்கு உற்பத்தியைச் செய்ய முடியும் என்று பார்க்கப்பட்டது. அந்த 25 இலட்சம் அல்லது 5 இலட்சம் டி.வி.க்கள் ஒரு கம்பெனி கொடுக்கிறது என்று சொன்னால் அதனுடைய உற்பத்தித் திறன் எவ்வளவு என்று சரிபார்க்கப்பட்டது. அப்படிச் சரிபார்க்கப்பட்டு, அதையெல்லாம் கணக்கிலே எடுத்துக் கொண்டுதான் அதில் டி.வி. பெட்டிகளை வாங்கினார்கள். எந்தவிதமான ஒளிவுமறைவுமற்று டெண்டர் கோரப்பட்டது என்பதை நான் இந்த அவையிலே பதிவு செய்ய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளைக் கொள்முதல் செய்வதற்கு, அதேபோல மக்களுக்கு அவற்றை விநியோகிப்பதற்கும் நம்முடைய அரசு ஒரு குழுவை அமைத்திருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். அந்தக் குழுவினுடைய உறுப்பினர்கள் எல்லாம்கூட இங்கே அதுபற்றிய விவரத்தைக் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள்.

இந்த டி.வி. பெட்டிகளைக்கூட எந்த நிறுவனத்திடமிருந்து வாங்குவது என்பதற்கு டெண்டர் விடப்பட்டது. அந்த டெண்டர் விடப்பட்ட நேரத்திலே, டெண்டர்களைப் பிரிக்கிற இடத்திலே அந்தக் குழுவினுடைய உறுப்பினர்கள் மட்டும் அல்ல, அந்தக் குழுவினுடைய தலைமைப் பொறுப்பிலே இருக்கக்கூடிய முதல்வர் அவர்கள்கூட அந்த டெண்டர் பிரிக்கக்கூடிய அந்த அரங்கத்திற்கு வந்து உட்கார்ந்து நேரடியாகப் பார்த்தார்கள். நான் இங்கே பெருமையோடு தெரிவிக்க விரும்புகிறேன், உலக வரலாற்றிலே ஒரு முதலமைச்சர் டெண்டர் பிரிக்கிற இடத்திலே வந்து உட்கார்ந்த வரலாறு இதுவரையிலே எங்கும் கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) இதை நான் சொல்லவில்லை. அந்த டெண்டரிலே பங்கு பெற்றிருக்கக்கூடிய வெளிநாட்டிலேயிருந்து வந்திருக்கக்கூடிய அந்த நிறுவனங்களைச் சார்ந்தவர்கள் வெளிப்படையாகவே எங்களிடத்திலே இதை எடுத்துச் சொன்னார்கள் என்பதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் குழு உறுப்பினர் என்ற முறையிலே, உண்மையிலேயே நான் அறிந்தவரை இவ்வளவு பெரிய திட்டத்திற்கு இவ்வளவு வெளிப்படையான ஒரு நடவடிக்கையை மேற்கொண்டதை நான் இதுவரை பார்க்கவில்லை. அந்த அளவுக்கு முதலமைச்சருடைய தலைமையிலேயே அனைத்துக் கட்சிகளை உள்ளடக்கிய ஒரு குழு அமைக்கப்பட்டு, துவக்கம் முதல் கடைசி வரையில் எல்லா முடிவுகளையும் அந்தக் குழுவே எடுக்கக்கூடிய அளவுக்கு இப்போது வெளிப்படையாக, எந்தவிதமான சிறு தவறுகளும்கூட நிகழ்ந்து



விடக்கூடாது என்கிற உணர்வோடு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தப் பணியை மிகச் சிறந்த முறையில் நடத்தி வருகிறார்கள்.

நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, அந்த டெண்டர் பிரிப்பதற்குக்கூட இந்தக் குழுவோ அல்லது முதலமைச்சரோ பங்குகொள்ள வேண்டுமா என்று நாங்கள் எல்லாம்கூட கேட்ட நேரத்திலே, அதிகாரிகள் மட்டத்திலே அதைப் பார்த்தால் போதாதா என்று கேட்டபோது, "இல்லை, இல்லை, இந்தக் குழுவே முழுமையாக இருக்க வேண்டும், நானும் அதில் கலந்து கொள்கிறேன்" என்று சொல்லி அதிலே பங்கேற்றார் முதலமைச்சர். அந்தத் திட்டம் ஒளிவுமறைவில்லாமல் நடைபெறுவதோடு, கீழ்மட்டத்திலே அதை விநியோகம் செய்வதிலேகூட பொதுவாக அங்கே இருக்கக்கூடியவர்கள் அல்லது ஆளுகிற தரப்பைச் சார்ந்தவர்கள் தேர்வு செய்து கொடுத்தால், விநியோகத்திலேகூட தவறு நிகழ்ந்துவிடும் என்று சொல்லி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்கான ஓர் ஆலோசனையை அங்கே வைத்து ஒரு சட்டமன்றத் தொகுதிக்கு 10 ஆயிரம் என்றால் குறைவான மக்கள் தொகை இருக்கக்கூடிய ஊராட்சியிலிருந்து அதைத் தொடங்குவது என்று நிர்ணயிக்கப்பட்டது. அந்த ஊராட்சித் தலைவர் எந்தக் கட்சியைச் சார்ந்தவராக இருந்தாலும் அதைப் பற்றிக் கவலை இல்லை. அடுத்து, படிப்படியாக மேல்நோக்கி வருவது என்ற ஒரு முடிவையும் எடுத்து எந்த நிருவாகக் குறுக்கீடுகளுக்கும் இடமில்லாமல் ஒரு வழிகாட்டுதல் வழங்கப்பட்டு அவை விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

என்னுடைய திருப்பூர் சட்டமன்றத் தொகுதியிலே நான்கு ஊராட்சிகளுக்கு இதுவரை வழங்கப்பட்டிருப்பதில் மூன்று அண்ணா ஊராட்சிகளுக்கு இதுவரை... 

பிற்பகல் 12–45

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்றவர்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இலவச வண்ணத் தொலைக்காட்சி வழங்குவது குறித்து மாண்புமிகு அ.தி.மு.க. உறுப்பினர் திரு. ஜெயக்குமார் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். நிதி 750 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது, செலவு 134 கோடி ரூபாய்தான் ஆகியிருக்கிறது என்று சொல்கிறார். ஒரு திட்டத்திற்காக நிதி ஒதுக்குகிறபோது, அந்த நிதியை ஒரே தடவையிலே செலவு செய்துவிட முடியுமா? அந்தத் திட்டத்தினுடைய பயன்களும், அதற்குத் தேவையான பொருட்களும் எப்படி வழங்கப்படுகின்றன என்பதை முதலிலே கவனிக்க வேண்டும். 25 இலட்சம் கலர் டி.வி.-க்கள் வாங்குவதற்கு, நிதி ஒதுக்கப்பட்டது. டெண்டரும் கோரப்பட்டது. டெண்டர் வழங்குபவர்கள் ஒரு மாதம்வீதமாக எத்தனை இலட்சம் டி.வி.-க்கள் வழங்குவோம் என்பதை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையிலேதான் அந்தச் செலவுகள் நடந்துகொண்டே இருக்கும். இந்த நிதியை ஒரேயடியாகச் செலவு செய்யவில்லையே என்று சொல்கிறார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அதற்கு நீண்ட விளக்கத்தை அளித்தார்கள். ஆனால், ஒரு படி மேலே போய், அப்படி அதிலே தவறு நடந்தால், நான் தூக்கு மேடை ஏறவும் தயாராக இருக்கிறேன் என்று சொல்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நான் சொல்கிறேன், இந்த ஒரு விஷயத்திற்கு இவ்வளவு பெரிய விளக்கம் தேவையில்லை. திறந்த புத்தகமாக அந்தக் காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன. அப்படியெல்லாம் தூக்கு மேடையேற வேண்டுமானால், அ.தி.மு.க. பல ஆயிரம் தடவை தூக்கு மேடையேற வேண்டியிருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) அதுதான் இன்றைக்கு இருக்கிற உண்மையான நிலை. (குறுக்கீடுகள்) ஆனால், அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள், அதை ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் இருக்கிறது என்பது எனக்கு வருத்தமாக இருக்கிறது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) திரு. செல்வம், கொஞ்சம் இருங்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொல்ல வேண்டுமாம். மற்றவர்கள் எல்லாம் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... (குறுக்கீடுகள்)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) அமைதியாக இருங்கள். (குறுக்கீடு) திரு. ஜெயக்குமார், உட்காருங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006–2007 செயல் ஆய்வுரை என்ற தலைப்பின்கீழ் தகவல் தொழில்நுட்பவியல் துறையின் சார்பாக, இங்கு புத்தகம் வழங்கப்பட்டிருக்கின்றது. அந்தப் புத்தகத்தில், இத்திட்டத்திற்காக, அதாவது கலர் டி.வி. பெட்டிகள் வாங்கும் திட்டத்திற்காக, 2006–2007 ஆம் ஆண்டில் "ரூபாய் 694.18 கோடி செலவிடப்பட்டுள்ளது" என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அதைத்தான் நாங்கள் கேட்டுக்கொண்டிருக்கின்றோம். 25 இலட்சம் கலர் பெட்டிகளுக்காக 694.18 கோடி என்று சொல்கின்றீர்கள். ஆனால், வழங்கப்பட்ட டி.வி.-க்களின் எண்ணிக்கை, இங்கிருந்து மாவட்ட நிர்வாகத்திற்கு டி.வி.-க்களின் எண்ணிக்கை 4,34,519. அவர்கள் வழங்கப்பட்ட டி.வி.-க்களின் எண்ணிக்கை 4,34,519. அவர்கள் வழங்கப்பட்ட டி.வி.-க்களின் எண்ணிக்கை விநியோகித்த பெட்டிகள் 3,49,453. 25 இலட்சம் பெட்டிகளுக்குத்தானே 694 கோடி ரூபாய் தேவைப்படுகின்றது. 4,34,000 பெட்டிகள் வாங்கியதற்கு இந்தத் தொகை செலவழிக்கப்பட்டதா என்பதுதான் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயக்குமாருடைய கேள்வி. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். சொல்லியாகிவிட்டதல்லவா?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்கு ஒரு விளக்கத்தைத் தர விரும்புகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** ஒரு விளக்கம் தருவதற்கு... (குறுக்கீடு) நான் சொல்கிறேன். (குறுக்கீடு) சொல்கிறேன், உட்காருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** டி.வி. பெட்டி வாங்குவதற்காக, அரசின் சார்பில் நிதி, எல்காட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு, அவர்கள் டி.வி. கம்பெனிகளுக்கு அந்தப் பெட்டிகள் வாங்கும்போது, வாங்குகின்ற பெட்டிகளுடைய எண்ணிக்கைக்கேற்ப நிதியை வழங்குவார்கள். அதன்படி, எல்காட் நிறுவனத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி முழுவதும் கொடுக்கப்பட்டுவிடும். எல்காட் நிறுவனம், அரசுக்கும்

டி.வி. பெட்டிகள் விற்பவர்களுக்குமிடையே இருந்து இந்தப் பணியை ஆற்றுகிறது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள், சொல்லுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்களும் அதைத்தான் சொல்லி இருக்கின்றோம். ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தால், பிரச்சினையே எழாது. "செலவிடப்பட்டுள்ளது" என்று சொன்னதால்தான் இங்கே பிரச்சினை. (குறுக்கீடுகள்) என்னங்க இது? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** கொஞ்சம் இருங்கள். ஒதுக்கியிருந்து கஜானாவிலே இருந்தால், ஒதுக்கியிருப்பதாகச் சொல்லலாம். கஜானாவிலிருந்து எல்காட் நிறுவனத்திற்குப் போன பிறகு. ஒதுக்கியிருப்பதாகச் சொல்ல முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

*பிற்பகல் 12–50*

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால ஆட்சியில் அப்போது இருந்த முதலமைச்சர் பேசுகின்றபோது (குறுக்கீடுகள்) நாங்கள் எழுந்து ஏதாவது கேட்டால், முதலமைச்சர் பேசிய பிறகு, பதிலுரை முடித்த பிறகு நீங்கள் கேளுங்கள், வாய்ப்புத் தருவோம் என்று அப்போதைய சபாநாயகர் சொல்வார். ஆனால், பேசி முடித்தபிறகு நாங்கள் எழுந்து கேட்டால், பேரவையின் இன்றைய அலுவல் இத்தோடு முடிவுற்றது என்று ஓடிவிடுவார்கள். ஆனால், இன்றைக்கு பரந்துபட்ட ஜனநாயகம், சட்டமன்ற ஜனநாயகம், பூத்துக் குலுங்குகிறது. எத்தனை முறை வேண்டுமானாலும், எழுந்து, எழுந்து குறுக்கிட்டுக் கேளுங்கள். அத்தனை முறையும் பதில் சொல்லத் தயாராக இருக்கிறார் எங்கள் முதல்வர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இனி ஏதாவது கேட்க வேண்டும் என்றால், நீங்கள் முதல்வர் உரையாற்றி முடித்தபிறகு கேளுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மற்றவர்கள் எல்லோரும் உட்காருங்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** இல்லை, நான் உங்களைக் கேட்கிறேன், நீங்கள் இந்த அவையிலே இருந்தீர்களே, அமைச்சராக இருந்தீர்களே, அப்போது இந்த முறை கடைப்பிடிக்கப்பட்டதா?



**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** டெண்டர் வைத்து Transparent முறை என்பது எல்லா அரசிலும் நடைமுறையில் இருந்தது உண்மை. நான் சொல்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எல்காட் நிறுவனத்திற்கு 25 இலட்சம் கலர் டி.வி. பெட்டிகள் வாங்குவதற்கு ரூ.694.18 கோடி அரசின் சார்பாக வழங்கப்பட்டுவிட்டது என்று சொல்லி இருக்கின்றார்கள், முடிந்தது. 2006–2007–ல் இந்த அரசு, 25 இலட்சம் கலர் தொலைக்காட்சிப் பெட்டிகளுக்காக ரூ.694.18 கோடி வழங்கி இருக்கின்றது. இந்த வருடமும் 2007–2008–ல் மேலும் ரூ.694.18 கோடி வழங்க வேண்டும். ஆக, 2006–2007, 2007–2008–க்கு 50 இலட்சம் கலர் பெட்டிகள் வாங்குவதாகத்தான் அர்த்தம் என்று முதலமைச்சர் இன்றைக்கு இந்த சபையிலே உறுதி கொடுப்பார்களா என்று கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம் அவர்கள், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பற்றிக் கூறுவதற்கு அவருக்கு எந்த அருகதையும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இங்கே பார்த்துப் பேசுங்கள். (குறுக்கீடுகள்) திரு. சிவபுண்ணியம், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே அரசினுடைய நிதி எப்படி செலவிடப்படுகிறது என்பதைப் பற்றி ஒரு விவாதம் ஏற்பட்டு இருக்கிறது. ஒவ்வோர் ஆண்டும். . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. ஜெயக்குமார், நீங்கள் வரம்பு மீறிப் போய்க்கொண்டு இருக்கிறீர்கள். உட்காருங்கள், சொல்லிவிட்டேன். ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வோர் ஆண்டும் நம்முடைய சட்டமன்றம் கூடி ஒவ்வொரு துறைக்கும் கோருகின்ற மானியத்தை நாம் அளிக்கின்றோம். அந்த மானியம் அளிக்கப்படுகின்றபோது, ஒவ்வொரு துறைக்கும் ஒரு ஏஜென்சி, ஒரு முகமை, அந்தப் பணத்தைச் செலவிடுகிறது. உதாரணமாக, சட்டமன்ற உறுப்பினர்களுடைய தொகுதி வளர்ச்சித் திட்டம் என்று வைத்துக்கொண்டால், ஒவ்வோர் உறுப்பினருக்கும், ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாய் கொடுக்கிறார்கள். இந்த

ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாய் உடனடியாக மாவட்ட நிர்வாகத்திற்கு மாற்றப்பட்டு, மாவட்ட வளர்ச்சி முகமைக்கு கொடுக்கப்படுகிறது. அரசாங்கத்தைப் பொறுத்தவரை அந்தப் பணம் செலவிடப்பட்டுவிட்டது. ஆனால், அந்தப் பணி நிறைவேற்றப்படும்வரை அந்த ஏஜென்சி, அந்த முகமை, அந்தப் பணத்தை வைத்துக்கொள்ளும். இது அடிப்படையான ஒரு நிதி சூத்திரம். மத்திய அரசு இருக்கிறது. மத்திய அரசு இந்திரா ஆவாஸ் யோஜனா என்ற திட்டத்தில், அந்த இந்திரா நினைவு குடியிருப்புக்கு 2 இலட்சம் வீடுகளுக்காக தமிழ்நாட்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்கிறது. (குறுக்கீடு) முடித்துவிடுகிறேன். ஏன் பேசுகிறீர்கள், நீங்கள்? அந்தப் பணத்தினை மாநில அரசும் (குறுக்கீடு) நீங்கள் சொன்னதைத்தான் நான் சொல்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் சொன்னதைத்தான் நான் சொல்கிறேன். அந்தப் பணத்தினை மாநில அரசுக்குக் கொடுக்கிறது. மத்திய அரசைப் பொறுத்தவரை அந்தப் பணம் செலவுக் கணக்கு. மாநில அரசு தன் கணக்கில், அந்தப் பணத்தை வைத்துக்கொண்டு செலவு செய்யும். இது ஒரு அடிப்படையான நிதி சூத்திரம். இது, ஏதோ ஊழல் நடந்துவிட்டதுபோலவும், முறைகேடு நடந்துவிட்டதுபோலவும் பேனைப் பெருமாளாக்குகிற வேலைதானேயொழிய வேறு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேண்டும் என்றே எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்கள் முதலமைச்சருடைய உரையைத் தடுக்க வேண்டும் என்பதற்காகவும், (குறுக்கீடுகள்) இந்த ஆட்சியினுடைய சாதனைகள் மக்களுக்குத் தெரிந்துவிடக்கூடாது என்பதற்காகவும், இப்படிக் குறுக்கிட்டுக் கொண்டிருக்கிறார்கள். தாங்கள் தயவு செய்து முதலமைச்சரை பேசுவதற்கு அனுமதிக்க வேண்டும். அதற்குப் பிறகு ஏதாவது சந்தேகங்கள் இருந்தால் பின்னாலே அவர்கள் கேட்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். முதல்வர் பேசட்டும். அதற்குப் பின்னாலே கடைசியிலே ஏதாவது கேட்கவேண்டும் என்றால் கேட்கலாம். (குறுக்கீடு) திரு. சிவபுண்ணியம், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதல்வர். (குறுக்கீடு) திரு. பன்னீர்செல்வம், நீங்கள் என்னைப் பார்த்துப் பேசுங்கள். நீங்கள் உறுப்பினரைப் பார்த்துப் பேசுவது முறையல்ல, தெரிகிறதா? நீங்கள் என்னைப் பார்த்துத்தான் பேச வேண்டுமே தவிர அங்கே பார்த்துப் பேசக்கூடாது. உட்காருங்கள்.



திரு. செங்கோட்டையன், உட்காருங்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

*பிற்பகல் 12–55*

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்தில் சட்டமன்றத்தில் அன்றைய முதலமைச்சர் பேசிக் கொண்டிருக்கும்பொழுது நியாயமான கேள்வியைக்கூட, எதிர்க்கட்சித் தலைவர்கூடக் கேட்க முடியாது. கேட்க முடியாது; கேட்க அனுமதிக்கப்படவில்லை. எதையும் நாங்கள் கேட்க அனுமதிக்கப்படவில்லை. பேச்சுரிமை மறுக்கப்பட்டது. கேள்வி எழுப்ப முடியாது. இப்பொழுது கேள்வி எழுப்பி, அதற்கு ஒரு விளக்கத்தை முதலமைச்சரும் சொல்லி, மற்றவர்களும் சொல்லியிருக்கிறார்கள். எல்லாவற்றையும்விட, இதிலே குற்றச்சாட்டே கிடையாது. There is no mis–appropriation. பணம் தவறாகக் கையாளப்பட்டது என்று நிரூபிக்கப்பட்டால்தான் அது குற்றச்சாட்டு. காணப்படுகிற கணக்கு வரவு–செலவில் சொல்லப்பட்டிருக்கின்ற முறையில் அது பட்ஜெட்டரி முறை. நிதி வரவு–செலவு முறையில் ஓர் அரசாங்கம் கையாளுகிற முறை. நிதி செலவழிக்கப்பட்டது என்று சொல்கிறபொழுது மொத்த நிதிப் பொறுப்பிலே உள்ளவர்கள் செலவழிக்கப்பட்டதைச் சொல்கிறார்கள். அந்த நிதி செலவிடப்பட்டதாக வருகிற கணக்கில் அந்த மொத்த நிதி இடையிலே இருக்கிற அமைப்பினால் பொருட்கள் வாங்கியவர்கள் இடத்திலே செலுத்தப்படாத ஒரு நிலையில், அந்தப் பணம் இடையிலே இருக்கிறது. இடையிலே இருக்கிறது என்றால்— சட்டப்படி, அதிகார முறைப்படி இந்த டி.வி.–க்களை வாங்குவதற்கான தகுதி பெற்ற ஓர் அமைப்பு எல்காட் அமைப்பு. அவர்கள் இந்த டி.வி.–க்கள் திறன் உள்ள டி.வி.–க்கள்தானா, குறை இல்லாத டி.வி.–க்களா என்று கண்காணிக்கின்ற தகுதி உடையவர்கள். எனவே, இப்படி முறையாக நடைபெற்ற காரியத்தில் அதற்குமேல் ஐயம் எழுப்புவதற்கு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எந்த உரிமையும் இல்லையென்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் துறையில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி எத்தகைய சாதனைகளைப் புரிந்துள்ளது என்பதை நானோ அல்லது இங்கே உரையாற்றிய தோழமைக் கட்சிகளின் தலைவர்களோ கூறியதைவிட ஒன்றை உங்களுக்கு நினைவூட்டுகிறேன். இந்த ஆட்சி,

அந்த ஆட்சி என்று நான் ஒப்பிட்டுப் பேசி, எது சிறந்தது, எது சிறப்பில்லாதது என்றெல்லாம் இந்த நேரத்தில் சொல்ல விரும்பவில்லை என்று முதலிலே குறிப்பிட்டேன். அந்த ஒப்பிட்டுக் காட்டுகின்ற முறையைக் கைவிட்டிருந்தேன். "ஆனால் நீ என்ன செய்திருக்கிறாய், ஒப்பிட்டுக் காட்டு" என்று சொல்வதைப்போல நம்முடைய அ.தி.மு.க. நண்பர்கள், தலைவர்கள் இங்கே பேசியிருக்கின்றார்கள். எனவே ஒன்றை மாத்திரம் சொல்ல விரும்புகின்றேன். கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் 5 ஆண்டு காலத்தில் 5 நிறுவனங்களோடு 2,220 கோடி ரூபாய் முதலீட்டுக்கான திட்டங்களுக்கு M.o.U. கையெழுத்திடப்பட்டுள்ளது. அதாவது 5 நிறுவனங்களுடன் 2,220 கோடி ரூபாய் முதலீட்டுக்கு M.o.U. கையெழுத்தானது இது 5 ஆண்டு கால ஆட்சியில். கடந்த 12 மாதங்களில், இந்த ஆட்சியில், 8 பன்னாட்டுத் தொழில் நிறுவனங்களோடு 6,985 கோடி ரூபாய் (மேசையைத் தட்டும் ஒலி) முதலீடுள்ள திட்டங்களுக்கு M.o.U.—புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) இந்து பத்திரிகை, 26–4–2007–ல் எழுதுகிறது "Good show by automobile, IT sectors: CII survey. Double–digit growth rate in October 2006–March 2007 period. The information technology and automobile industries in Tamil Nadu have registered an impressive performance with double–digit growth during the October 2006–March 2007 period, according to a survey conducted by the Confederation of Indian Industry (CII)–Southern Region."

*பிற்பகல் 1–00*

அதாவது, வாகன உற்பத்தித் தொழிலிலும், தகவல் தொழில்நுட்பத் துறையிலும் சிறப்பான சாதனை 2006 அக்டோபர் முதல் 2007 மார்ச் வரை நடைபெற்றிருக்கிறது என்று இந்தியத் தொழில் கூட்டமைப்பு மதிப்பீடு செய்து அறிவித்திருக்கிறது. இந்தியத் தொழில் கூட்டமைப்பு நடத்திய மதிப்பீட்டின்படி தமிழ்நாட்டில் தகவல் தொழில்நுட்பத் தொழிலும், வாகன உற்பத்தித் தொழிலும் 2006 அக்டோபர் முதல் 2007 மார்ச் வரையிலான காலக் கட்டத்தில் இரட்டை இலக்க வளர்ச்சியை அடைந்து மிகச் சிறப்பான சாதனையை ஏற்படுத்தியுள்ளது என்று குறிப்பிடப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

"While the I.T. Industry increased its revenue by 25 per cent, the automobile and auto component Industry registered an 18 per cent growth in production according to the Bi–annual Industry Monitor Survey. Exports recorded an excellent growth of 40 per cent during this period." என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அரையாண்டு மதிப்பீட்டின்படி தகவல்



தொழில்நுட்பத் தொழிலில் 25 சதவிகிதம் வருவாயும், மோட்டார் வாகனம், வாகன உதிரி பாகத் தொழிலில் 18 சதவிகித வருவாயும் அதிகரித்துள்ளது. இந்த அரையாண்டில் ஏற்றுமதி 40 சதவிகிதம் அளவுக்கு அதிகரித்து மிகச் சிறப்பான சாதனையைத் தமிழகம் ஏற்படுத்தியுள்ளது என்று குறிப்பிட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) நான் அந்த 8 அல்லது 9 நிறுவனங்களுடைய பெயர்களை எல்லாம் சொல்லி, ஒவ்வொன்றிலும் எவ்வளவு பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கிறது என்றெல்லாம் குறிப்பிட்டு, நேரத்தை வீணாக்க விரும்பவில்லை. நேரம் வீணாகாது, இருந்தாலும் உங்களுடைய நேரத்தைக் கெடுக்க நான் விரும்பவில்லை.

மேலும் இந்த அரசின் சார்பாக தொழில் வளம் பெருக என்னென்ன செய்யப் போகிறோம் என்றால் தொழில் வளத்தைப் பொறுத்தவரையிலே சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் 2007–2008 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில விருதுநகர் மாவட்டத்தில் தொழில் மையம் ஒன்று உருவாக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அந்தத் திட்டத்திற்கான நிலங்கள் எல்லாம் கண்டறியப்பட்டுவிட்டன. அந்த மையம் அமைப்பதற்கான விண்ணப்பம் மத்திய அரசிடம் நிலுவையிலே உள்ளது. தொழில் வளர்ச்சியிலே மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள இப்பகுதியின் பொருளாதார வளர்ச்சியில் இத்திட்டம் மிகப் பெரிய முன்னேற்றத்தை உறுதியாக ஏற்படுத்தும் என்று விருதுநகர் மாவட்டத்திலே உள்ள தொழில் விரும்புவோருக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இன்னொன்று, gas pipe line. சில மாதங்களுக்கு முன்பு மத்திய அமைச்சர்கள் சென்னைக்கு வந்து, அந்த pipe line எப்படி function செய்கின்றது என்பதை எல்லாம் எங்களிடத்திலே காட்டினார்கள். நானும், நண்பர் வீராசாமி அவர்களும், அமைச்சர்களும், மற்றவர்களும் அதைப் பார்த்தோம். கிருஷ்ணா, கோதாவரி ஆற்றுப் படுகையில் கிடைக்கும் எரிவாயுவை ரிலயன்ஸ் நிறுவனம் குழாய் மூலமாகச் சென்னைக்கு வழங்கும் திட்டத்தை நிறைவேற்ற கருத்துரு ஒன்று மத்திய அரசுக்கு 2006–2007 ஆம் ஆண்டில் பரிந்துரை செய்யப்பட்டு அதற்கான அனுமதியும் கிடைத்துள்ளது. அதேபோல், கடந்த ஆண்டு தொழில் துறை மானியக் கோரிக்கையில் அறிவித்தவாறு TIDCO நிறுவனம் குஜராத் பெட்ரோலிய நிறுவனத்தோடு இணைந்து மற்றொரு எரிவாயு இணைப்புத் திட்டத்தை உருவாக்க பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது. இப்பேச்சுவார்த்தையின் விளைவாக, எரிவாயு மற்றும் எண்ணெய் வளங்களைக் கண்டறிந்து, உற்பத்தி செய்து, தமிழகத்திற்குக் குழாய்

மூலம் வழங்கும் பணிகளை மேற்கொள்ள குஜராத் பெட்ரோலிய நிறுவனத்தோடு இணைந்து, இணைத்துறையிலே ஒரு புதிய நிறுவனத்தை அமைக்க தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இத்திட்டத்தின் முதல் கட்டப் பணிகளுக்காக ஏறத்தாழ 500 கோடி ரூபாய் செலவாகுமென மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. குஜராத் மாநில பெட்ரோலிய கழகம் தனது இசைவையும் இதற்காகத் தெரிவித்துள்ளது. இத்திட்டத்தின்மீது மாநில அரசு உன்னிப்பான தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

2005–2006 ஆம் ஆண்டில் ஏப்ரல் முதல் செப்டம்பர் வரை தமிழ்நாடு ஏற்றுமதி செய்த பொருட்களின் மதிப்பு 26,237 கோடி ரூபாய். 2006–2007 ஆம் ஆண்டு, இந்த காலகட்டத்தில் ஏற்றுமதி செய்த பொருட்களுடைய மதிப்பு 35,231 கோடி ரூபாய். (மேசையைத் தட்டும் ஒலி) இது கடந்த ஆண்டைவிட 34.27 சதவிகிதம் அதிகமாகும்.

சர்க்கரைத் துறையில் தமிழ்நாட்டில் தற்போது 35 ஆலைகள் செயலாக்கத்திலே உள்ளன. கரும்பு அரைக்கப்பட்டது 2005–2006–ல் 63 இலட்சம் டன். 2006–2007–ல் திரு. தம்பிதுரை சொன்னதைப்போல 46 இலட்சம் டன் அல்ல, 81 இலட்சம் டன். (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது 29 சதவிகிதம் அதிகம்.

பிற்பகல் 1–05

சர்க்கரை உற்பத்தி 2005–2006–ல் 21 இலட்சம் டன். 2006–2007–ல் 26 இலட்சம் டன். 20 சதவிகிதம் அதிகம். சர்க்கரை உற்பத்தி அதிகமாக ஆகியிருக்கிறது.

நாங்குநேரி பற்றிப் பேசப்பட்டது. முரசொலி மாறன் மத்திய அமைச்சராக இருந்தபோது அதற்கான அடிக்கல் நாட்டுவிழா நடைபெற்றது. அப்போது திரு. கிருஷ்ணன் என்ற நண்பர், C.P.I. கட்சியைச் சேர்ந்தவர், அங்கே சட்டமன்ற உறுப்பினராக இருந்தார். அவரும், அவருடைய கட்சியினரும் மற்றும் அந்த வட்டாரத்துப் பெருமக்களும் அந்த நாங்குநேரித் திட்டத்தை எந்த அளவுக்கு வரவேற்றார்கள் என்பதை நேரிலே கண்டு நாங்கள் மகிழ்ந்திருக்கிறோம். ஆனால், அதைக் கிடப்பிலே போட்டுவிட்டார்கள் என்று இங்கே குற்றம் சாட்டப்பட்டது. இடையிலே 5 ஆண்டுகாலம் அது கிடப்பிலே போடப்படுவதற்குக் காரணம் ஆயிற்று. 5 ஆண்டுகாலம் கிடப்பிலே கிடந்தும் திட்டம் துருப்பிடிக்கவில்லை. அதை இப்போது நாங்கள் மீண்டும் எடுத்து அந்தத் திட்டத்தை நிறைவேற்றப் போகிறோம்.



(மேசையைத் தட்டும் பலத்த ஒலி) தற்போது அமெரிக்காவினுடைய ATMAC நிறுவனம், இந்திய நிறுவனமான A.M.R. நிறுவனம், இரண்டும் இணைந்து இத்திட்டத்தைச் செயல்படுத்த முன்வந்துள்ளன. இதற்கு எவ்வளவு செலவாகும் என்று மதிப்பீடு செய்ததில், 1,025 கோடி ரூபாய் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. மத்திய அரசுக்கு இந்தத் திட்டத்திற்கான விண்ணப்பம் அனுப்பப்பட்டுள்ளது. ஒப்புதல் விரைவில் கிடைக்கும். கிடைத்தவுடன் திட்டப் பணிகள் தொடங்கும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும், சில அறிவிப்புகள். ஒரகடத்தில் வளர்ச்சி மையத்தில் 285 ஏக்கர் பரப்பளவில் புதிய மின்னணுப் பொருள்களுக்கான ஏற்றுமதி மையம் ஒன்றை சிப்காட் நிறுவனம் உருவாக்கும். இந்தப் புதிய ஏற்றுமதி மையம் தொடக்க நிலையில் சுமார் 1,300 கோடி ரூபாய் முதலீட்டினை ஈர்க்கும். இதன்மூலம் 23,000 பேர் நேரடி வேலைவாய்ப்புகளைப் பெறுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மையம் என்றதும் திரு. ஜி.கே. மணி அவர்கள் பயப்பட வேண்டாம். இது ஒரகடம். ஒரகடத்திலே உங்கள் அய்யா அனுமதித்திருக்கிறார். அதனாலே ஒரகடத்திலே 285 ஏக்கர் பரப்பளவிலே இது அமையும். சிப்காட் நிறுவனம் இதை அமைக்கும், உருவாக்கும்.

பெருந்துறையில் சிப்காட்டின் வளர்ச்சி மைய விரிவாக்கம். பல புதிய தொழிற்சாலைகளை நிறுவவும், புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கும் அவசியத்தைக் கருத்தில்கொண்டு, மேலும் கூடுதலாக 1,256 ஏக்கர் பரப்பளவில் பெருந்துறை தொழில் வளர்ச்சி மையத்தை சிப்காட் நிறுவனம் நடப்பாண்டிலேயே விரிவாக்கம் செய்யும். (மேசையைத் தட்டும் ஒலி)

மோட்டார்கள், பம்பு செட்டுகள், போர்ஜிங்குகள், வார்ப்படங்கள் போன்ற பொறியியல் சாதனங்களை உற்பத்தி செய்ய புதிய ஏற்றுமதி மையம் ஒன்று பெருந்துறை வளர்ச்சி மையத்தில் 250 ஏக்கர் நிலப் பரப்பில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

ஸ்ரீபெரும்புதூர்–இருங்காட்டுக்கோட்டை–ஒரகடம் தொழிற்சாலைகளுக்குக் கழிவுநீர் மறு சுழற்சி (Recycling) அடிப்படையில் நீர் வழங்கும் திட்டம். தொழிற்சாலை நீரை உற்பத்தி செய்ய மூன்றாம் கட்ட சுத்திகரிப்பு மற்றும் எதிர்மறை சவ்வூடு பரவல் (Tertiary Treatment and Reverse Osmosis) நிலையத்தை அமைக்க சிப்காட் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும். 500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும் இத்திட்டம், இரண்டு ஆண்டுகளில்

முழுமையாக நிறைவேற்றப்படும்போது ஸ்ரீபெரும்புதூர், இருங்காட்டுக்கோட்டை மற்றும் ஒரகடம் பகுதிகளின் தொழிற்சாலைகளுக்கான நீர்த் தேவையை முற்றிலும் நிறைவு செய்யும். (மேசையைத் தட்டும் ஒலி)

செய்யாறு தொழிற்சாலை வளாகத்தை விரிவுபடுத்துதல். பின்தங்கிய செய்யாறு பகுதியில் வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தந்திடவும், அந்தப் பகுதியை மிகப் பெரிய தொழில் பகுதியாக மாற்றவும் செய்யாறு சிப்காட் தொழில் பூங்கா மேலும் 2,250 ஏக்கரில் விரிவுபடுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–10

ஸ்ரீபெரும்புதூரில் (Bio–IT Park) தகவல் தொழில்நுட்பப் பூங்கா. 100 ஏக்கர் நிலப் பரப்பில் இந்திய மென்பொருள் தொழில் பூங்கா, சிங்கப்பூரிலுள்ள அசெண்டாஸ் நிறுவனம் ஆகியவற்றோடு இணைந்து, தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் உயிரியல் தகவல் தொழில்நுட்பப் பூங்கா ஒன்றை அமைக்க முடிவு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மொத்தம் 500 கோடி ரூபாய் செலவில் அமையும் இந்த உயிரியல் தகவல் தொழில்நுட்பப் பூங்கா, இந்தியாவிலே இத்தகைய முதல் உயிரியல் தகவல் தொழில்நுட்பப் பூங்கா என்ற சிறப்பைப் பெறும். (மேசையைத் தட்டும் ஒலி) இத்தொழில் பூங்காவில் ஏறத்தாழ எட்டாயிரம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் வழங்கப்படும்.

தரமணியில் கருத்தரங்கு மையத்தோடு கூடிய மூன்றாவது டைடல் பூங்கா. சர்வதேசக் கருத்தரங்கு மையம், தங்கும் அறைகள் உள்ளிட்ட வசதிகளோடு கூடிய தகவல் தொழில்நுட்பம்/தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகளுக்கான மூன்றாவது டைடல் பூங்காவினை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. இத்திட்டத்திற்கு ஏறத்தாழ ரூபாய் 800 கோடி செலவாகும். இத்திட்டம் 12,000 மென்பொருள் வல்லுநர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

இதிலே இரண்டாவது பூங்கா தொடர்பாக வேலை நடந்துகொண்டு இருக்கிறது. இந்த மூன்றாவது பூங்காவிலுடைய வேலை ஆரம்பம் ஆகிறது என்பதை இந்த அவைக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தரமணியில் டைசல் உயிரியல் பூங்காவை விரிவுபடுத்துதல். உயிரியல் ஆராய்ச்சி நிறுவனங்களின் அதிகப்படியான தேவையைச் சமாளிக்கும் வகையில், கூடுதல் ஆய்வகப் பகுதி ஒன்றை உருவாக்க சுமார் 5 இலட்சம் சதுர அடி பரப்பளவில் 250 கோடி ரூபாய் செலவில்,



டைசல் உயிரியல் பூங்கா விரிவுபடுத்தப்படும். இந்த விரிவாக்கத் திட்டம் கூடுதலாக 2,000 உயிரியல் தொழில்நுட்பம் மற்றும் மருந்துத் துறை விஞ்ஞானிகளுக்கு வேலைவாய்ப்பை வழங்கும்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடவடிக்கையாக தமிழ்நாடு செய்தித் தாள் மற்றும் காகித நிறுவனத்தால் சிறிய சிமெண்ட் தொழிற்சாலை அமைத்தல். கரூர் காகித ஆலைப் பகுதியில் தூய்மையான சுற்றுப்புறச்சூழலை உருவாக்கும் நோக்கத்தோடு 45 கோடி ரூபாய் செலவில் நாள் ஒன்றுக்கு 400 டன்கள் உற்பத்திச் செய்யும் சிமெண்ட் ஆலையை தமிழ்நாடு செய்தித் தாள் காகித நிறுவனம் அந்த வளாகத்திலேயே அமைக்கும். மேலும், சுண்ணாம்புக் கசடு மற்றும் உலைச் சாம்பலினால் ஏற்படும் தூசி பாதிப்பைத் தடுக்கும். இது செயல்படுத்தப்பட்டவுடன் செய்தித் தாள் துறையிலே வீணாகும் பொருட்களிலிருந்து உயர் ரக சிமெண்ட் தயாரிக்கும் முதல் நிறுவனமாகத் தமிழ்நாடு செய்தித் தாள் மற்றும் காகித நிறுவனம் இடம் பெறும்.

தமிழ்நாடு செய்தித் தாள் மற்றும் காகித நிறுவனத்தின் தகவல் தொழில்நுட்பப் பூங்கா. தமிழ்நாட்டில் தகவல் தொழில்நுட்பத் தொழில்களில் ஏற்பட்டு வரும் மகத்தான வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, அம்பத்தூர் தொழிற்பேட்டை வளாகத்தில் காலியாக உள்ள தமிழ்நாடு செய்தித் தாள் மற்றும் காகித நிறுவனத்திற்குச் சொந்தமான நிலப் பகுதியில் 4 இலட்சம் சதுர அடிப் பரப்பில் தகவல் தொழில் நுட்பப் பூங்கா ஒன்றை 80 கோடி ரூபாய் செலவில் தமிழ்நாடு செய்தித் தாள் மற்றும் காகித நிறுவனம் அமைக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்தின்மூலம் 4,000 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

புவியியல் மற்றும் சுரங்கத் துறையில் தனி ஆய்வுப் பிரிவு அமைப்பது. மாநிலத்தின் கனிம இருப்புகள் குறித்து விரிவாக ஆய்வு செய்ய தனியாக ஆய்வுப் பிரிவு ஒன்று, ஓர் துணை இயக்குநரின்கீழ் புவியியல் மற்றும் சுரங்கத் துறையின் தலைமை அலுவலகத்திலே தொடங்கப்படும்.

மணலியிலே உள்ள தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் வெட்டுதல் மற்றும் மெருகேற்றும் தொழிற்பிரிவை நவீனப்படுத்த 20 கோடி ரூபாய் செலவிடப்படும்.

செய்யாறு மற்றும் எம்.ஆர்.கே. கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் வடிப்பகத்துடனான எத்தனால் தொழிற்பிரிவுகள் அமைக்கப்படும். 72 கோடி ரூபாய் செலவில் இது நடத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பெரும்பாக்கத்தில் தகவல் தொழில்நுட்ப நகரம் அமைத்தல். காஞ்சிபுரம் மாவட்டம், சோழிங்கநல்லூர் மற்றும் பெரும்பாக்கம் கிராமங்களில் 213 ஏக்கர் நிலப் பரப்பில் ஒருங்கிணைந்த தகவல் தொழில்நுட்பவியல் நகரம் அமைக்கப்படும்.

கோயம்புத்தூர் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா விரிவாக்கப்படும் கோவை மருத்துவக் கல்லூரி வளாகத்தில் 33 ஏக்கர் நிலப் பரப்பில் ஒருங்கிணைந்த தகவல் தொழில்நுட்ப வளாகம் நிறுவப்படும்.

மதுரையில் வடபழஞ்சி மற்றும் கிண்ணிமங்கலம் கிராமங்களில் 240 ஏக்கர் நிலப் பரப்பிலும், திருச்சி மாவட்டம், நவல்பட்டு கிராமத்தில் 135 ஏக்கர் நிலப் பரப்பிலும், (மேசையைத் தட்டும் ஒலி) (சேலம் மாவட்டம் ஜாகிர் அம்மாபாளையம் கிராமத்தில் 164 ஏக்கர் நிலப் பரப்பிலும், (மேசையைத் தட்டும் ஒலி) நெல்லை மாவட்டம், கங்கைகொண்டான் கிராமத்தில் 100 ஏக்கர் நிலப் பரப்பிலும் (மேசையைத் தட்டும் ஒலி) தகவல் தொழில்நுட்பவியல் கட்டடங்கள் தவிர, குடியிருப்பு மற்றும் சமூக வசதிகள் அடங்கிய ஒருங்கிணைந்த தகவல் தொழில்நுட்ப வளாகம் நிறுவப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–15

தமிழ் இணையப் பல்கலைக்கழகத்திற்குச் சொந்தக் கட்டடம் அமைக்கப்படும். மைலாப்பூர் திருவல்லிக்கேணி வட்டம், கோட்டூரில் தமிழ் இணையப் பல்கலைக்கழகத்திற்கென இரண்டு ஏக்கர் நிலத்தில் சொந்தக் கட்டடம் உருவாக்கப்படும். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

புதிய அறிவிப்புகள் விரிவாக அச்சிடப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அந்த அறிவிப்புகளை@ நான் படித்ததாகக் கருதி அவற்றைக் குறிப்பேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த விளக்கங்களோடு என் உரையை நிறைவு செய்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கைகளையாவது அமைதியாக நிறைவேற்றித் தர வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

---

@ 548 முதல் 558 வரையிலான பக்கங்களில் இணைப்பு-III ஆக அச்சிடப்பட்டுள்ளது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. (குறுக்கீடுகள்)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் சார்பாக தொழில் முனைவோர்களுக்கு, சிப்காட் நிறுவனத்தின் மூலமாக நாம் பல்லாயிரம் ஏக்கர் நிலங்களை கையகப்படுத்தி, பலவிதமான தொழிற்பேட்டைகளை அமைப்பதற்கு அரசு பல வழிமுறைகளில் அவர்களுக்கு உதவி புரிகின்றது. அங்கு நிலங்களை வாங்கித் தொழில் செய்வோர் 5 ஆண்டுகள், 10 ஆண்டுகள், 15 ஆண்டுகள் தொழில் செய்துவிட்டு, மீண்டும் நிலத்தினுடைய மதிப்பு பன்மடங்கு உயர்கின்ற காரணத்தினால், அந்தத் தொழிலை அவர்கள் நிறுத்திவிட்டு, நிலங்களைக் கூடுதல் விலைக்கு விற்கக் கூடிய ஒரு நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்றது. அப்படித்தான் இன்றைக்கு அம்பத்தூர் தொழிற்பேட்டையில் பல தொழிற்சாலைகள் மூடப்பட்டு, நிலங்கள் கூடுதல் விலைக்கு விற்கப்படுவதாக தகவல் வந்து கொண்டிருக்கிறது. ஆகவே, அரசு இதில் தீவிர கவனம் செலுத்தி, தொழில் முனைவோர் தொழிற்சாலைகளுக்காகப் பெறுகின்ற நிலத்தை, அவர்கள் தொழிலில் நஷ்டம் ஏற்பட்டு, அந்த நிறுவனம் மூடுவதாக இருந்தால், மீண்டும் அரசுக்கே அந்த நிலத்தை ஒப்படைக்க வேண்டும் என்ற ஷரத்தினை சேர்க்க வேண்டும் என்று நான் அரசைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** ஒரு குறிக்கோளுக்காக வாங்கப்பட்டு, வேறொரு காரியத்திற்காக அதை விநியோகித்தால், அதைத் தடுப்பதற்கான அந்தக் கருவியை அரசு கையிலே வைத்துக்கொள்ளும். அப்படி மீறி நடந்தால், அவர்கள் சிறை செல்லக் கூடிய அளவிற்குக்கூட சட்டம் இயற்றப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

## (அ) கோரிக்கை எண் 27-தொழில் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 27–தொழில் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

*(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)*

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.69,18,30,000/–, மூலதனக் கணக்கில் ரூ.48,81,01,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.112,00,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

## (ஆ) கோரிக்கை எண் 31–தகவல் தொழில்நுட்பவியல் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 31–தகவல் தொழில்நுட்பவியல் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.766,99,48,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெறுகிறது.



பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (9–5–2007) புதன்கிழமை காலை 9–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–19 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

# 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

– ஏதுமில்லை –

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

233. மானியக் கோரிக்கை எண் 27–தொழில் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2007–2008. (தமிழ், ஆங்கிலம்)

234. தொழில் துறை பற்றிய செயலாக்கத் திட்டம், 2007–2008. (தமிழ், ஆங்கிலம்)

235. தொழில் துறை பற்றிய செயல்பாட்டு ஆய்வுரை, 2006–2007. (தமிழ், ஆங்கிலம்)

236. தமிழ்நாடு மேக்னசைட் பற்றிய "மக்கள் சாசனம்"

237. மானியக் கோரிக்கை எண் 31–தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2007–2008. (தமிழ், ஆங்கிலம்)

238. தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய செயல் ஆய்வுரை, 2006–2007. (தமிழ், ஆங்கிலம்)

239. சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) பற்றிய மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2007–2008. (தமிழ்)

240. செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2007–2008. (தமிழ்)

241. 2006-2007 ஆம் ஆண்டிற்கான செய்தி மற்றும் விளம்பரத் துறை மீதான அறிவிப்புகள்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள். (தமிழ்)

242. செய்தி-மக்கள் தொடர்புத் துறை பற்றிய "மக்கள் சாசனம்". (தமிழ்)

243. எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2007-2008. (தமிழ்)

244. 2006-2207 ஆம் ஆண்டிற்கான எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மீதான அறிவிப்புகள்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள். (தமிழ்)

245. பொதுக் கணக்குக் குழுவின் அறுபத்து இரண்டாவது அறிக்கை. (2006-2007)

246. பொதுக் கணக்குக் குழுவின் அறுபத்து மூன்றாவது அறிக்கை. (2006-2007)

247. பொதுக் கணக்குக் குழுவின் அறுபத்து நான்காவது அறிக்கை. (2006-2007)



## இணைப்பு - I

*(389 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 27–தொழில் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2007-2008

### முன்னுரை

தமிழ்நாட்டின் பொருளாதாரம் கடந்த ஓராண்டில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் கண்டுள்ளது. குறிப்பாக உற்பத்தித் துறையில் சிறப்பான வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. இத்தகைய சிறப்பான தொழில் வளர்ச்சிக்கு அடிப்படைக் காரணங்கள் அனைவரும் அறிந்தவை. மத்திய அரசின் முற்போக்கான கொள்கைகளினால் இந்திய பொருளாதாரம் வளர்ச்சி அடைந்துள்ளது. அதனையொட்டி, தமிழ்நாட்டின் பொருளாதாரம் புத்துயிர் பெற்று எழுச்சி பெற, அரசின் நட்புரீதியிலான தொழில் கொள்கைகளும் நம்பிக்கையூட்டும் முயற்சிகளும் முக்கியப் பங்காற்றியுள்ளன.

தமிழ்நாட்டில் முக்கியமான தொழிற்சாலைகள் அமைவதற்கு மாநில அரசின் கொள்கையும் ஊக்குவிப்புமே காரணங்களாகும். கடந்த ஓர் ஆண்டு காலமாக இத்தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டு வருவதால் பலவகைகளிலும் வளர்ச்சி ஏற்பட்டு, அதன் தொடர்ச்சியாக வேலைவாய்ப்புகளும், முதலீடுகளும் பெருகி வருகின்றன. அதனால் சேவைத் துறையும், தொழில் வளர்ச்சிக்குத் தேவையான சாலைகள், நீர் வழங்கல், தொடர்வண்டிகள், தொழிற் பூங்காக்கள் உள்ளிட்ட அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளும் மாநில அரசின் சிறப்பான கவனத்தைப் பெற்றுள்ளன. மாநில பொருளாதாரத்தில் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் முக்கிய வளர்ச்சிக் கருவிகளாக அமைந்துள்ளன.

கடந்த 12 மாதங்களில் மாநில அரசின் தொழில் துறை மூலமாக ரூ.6,985 கோடி மதிப்பிலான தொழில் திட்டங்களை உருவாக்குவதற்காக எட்டு தொழில் அமைப்புகள்/பன்னாட்டு நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டுள்ளன.

இம்முதலீடுகளில் மின்னணு மற்றும் தானியங்கி வாகனத் துறைகளில் அதிக முதலீடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த இரு துறைகளிலும் ஏற்பட்டுள்ள முதலீடுகளால் இந்தியாவில், சென்னை முன்னணி நிலையைப் பெற்றுள்ளது. தானியங்கி மோட்டார் வாகனத் துறையில் மஹிந்திரா மற்றும் மஹிந்திரா நிறுவனம் பிரான்ஸ் நாட்டின் ரெனால்ட் மற்றும் ஜப்பான் நாட்டின் நிஸான் நிறுவனங்களுடன் இணைந்து ரூ.4,000 கோடி முதலீடு செய்யத் திட்டமிட்டுள்ளது. முதலீடுகளில் மகுடமாகத் திகழ்கிறது. இந்த புரிந்துணர்வுத் திட்டங்கள் அனைத்தும் முழு வீச்சில் பல்வேறு கட்டப் பணிகளின்மூலம் நிறைவேறி வருகின்றன.

மாநில அரசின் வெளிப்படையான நடைமுறைகளும், அதன் விரைவான முடிவுகளும், தடைகளை நீக்கும் திறன், திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குப் பின்பற்றப்படும் ஒற்றைச்சாளர முறை போன்றவைகளும் திட்டங்களை விரைவாகச் செயல்படுத்துவதற்கும், முதலீட்டாளர்களுடைய நம்பிக்கையைப் பெறுவதற்கும் முக்கிய காரணிகளாக அமைந்துள்ளன. உள்நாட்டுத் தொழில் அமைப்புகளை உள்ளடக்கிய பல தொழிற் திட்டங்களும் பல்வேறு நிலைகளில் உள்ளன.

வேலை வாய்ப்புகள் பெருகுதல், உற்பத்திகள் அதிகரித்தல் ஆகியவற்றின் மூலமாகப் பொருளாதார வளர்ச்சி ஏற்படுதலே தொழில்மயமாக்கலின் விளைவாகும். கடந்த ஓராண்டில் நிறைவேற்றப்பட்ட 8 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் 37,000 தொழிலாளர்களுக்கு நேரடியான வேலை வாய்ப்பும், 60,000 பேருக்கு மறைமுகமான வேலை வாய்ப்பும் அளிக்கும். தமிழ்நாட்டில் இவ்வாறு பெருமளவிலான வேலை வாய்ப்புகள் மிகக் குறைவான காலத்தில் முதன்முறையாக உருவாக்கப்படுகிறது. இத்தொழில் மயமாக்கலின் விளைவாகத் தேர்ச்சி பெற்ற மனித வளத்திற்கான தேவை பன்மடங்காகப் பெருகியுள்ளது. மாநில அரசு இச்சவாலை எதிர்கொண்டு அதிகமான வேலை வாய்ப்புகளைத் தமிழக இளைஞர்களுக்கு உருவாக்கும் கடமையில் மிகுந்த முனைப்புடன் ஈடுபட்டுள்ளது.

பொருளாதாரத்திலும், வேலை வாய்ப்புகளிலும் முன்னேற்றம் அடைவதற்கு மத்திய மற்றும் மாநில அரசுகளின் சிறப்புப் பொருளாதார மண்டலக் கொள்கைகள் முக்கியமான காரணங்களாக அமைகின்றன. உலகளாவிய தொழில் நிறுவனங்கள் வேறு இடங்களில் தங்கள் தொழிற்சாலைகளை நிறுவுவதற்குப் பதிலாக, இந்தியாவில்





குறிப்பாகத் தமிழ்நாட்டில் சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் தங்கள் தொழில் திட்டங்களைத் தொடங்கியுள்ளன. மோட்டோரோலா, டெல், சாம்சங், குரோத்-லிங்க், நோக்கியா, ஃப்ளக்ஸ்ட்ரானிக்ஸ் போன்ற பன்னாட்டு நிறுவனங்கள் தங்களுடைய உயர் தொழில்நுட்பத் திட்டங்களைத் தமிழ்நாட்டின் சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் அமைத்துக் கொண்டுள்ளன. இதுவரையில் தமிழ்நாட்டில் 46 சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அமைவதற்கு இந்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்த 46-ல் 12-க்கு கொள்கை அளவிலான ஒப்புதலும், 21-க்கு முறையான ஒப்புதலும் அளிக்கப்பட்டுள்ளன; மற்றும் 13-க்கு அறிவிக்கைகளும் செய்யப்பட்டுள்ளன. அறிவிக்கை செய்யப்பட்ட 13 சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் 3 ஏற்கனவே செயல்பாட்டிற்கு வந்துவிட்டன. இவற்றைத்தவிர, மத்திய சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் சட்டம் 2005-க்கு முன்பு அறிவிக்கை செய்யப்பட்ட 5 சிறப்புப் பொருளாதார மண்டலங்களும் செயல்பாட்டிற்கு வந்துள்ளன. ஆகவே, தமிழ்நாட்டில் தற்போது 8 சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த 46 சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் நீங்கலாக 21 சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் உருவாக்கப்படுவதற்கான விண்ணப்பங்கள் மாநில அரசின் பரிசீலனையில் உள்ளன; 28 விண்ணப்பங்கள் இந்திய அரசின் பரிசீலனையில் உள்ளன.

மாநில அரசின் முக்கியத் துறையாக வேளாண்மை விளங்குகிறது என்பதை அரசு நன்றாகவே உணர்ந்துள்ளது. எனவே, சிப்காட் மற்றும் டிட்கோ நிறுவனங்களால் உருவாக்கப்படும் சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கு நன்செய் நிலங்களைக் கையகப்படுத்துதல் தவிர்க்கப்படுகிறது. அதைப்போல, தனியார் நிறுவனங்களால் மேம்படுத்தப்படும் சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கு நிலம் கையகப்படுத்தும் பணிகளை அரசு மேற்கொள்வதில்லை.

இதுபோன்ற மிகப்பெரிய சேவை மற்றும் உற்பத்தித் துறைகளின் மூலமாகத்தான் வேலை வாய்ப்பற்ற, இலட்சக்கணக்கான இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை அளிக்க முடியும். எனவே, உற்பத்தி நடவடிக்கைகளைச் சிறப்புப் பொருளாதார மண்டலத்தின் மூலமாக மேம்படுத்துதல் இன்றியமையாததாகிறது. மாநிலத்தின் பின்தங்கிய பகுதிகளுக்கு இந்த வளர்ச்சிப் பெருக்கத்தை எடுத்துச் செல்வது முக்கியமானதொன்றாகும். இதனால்தான் மாநிலத்தின் பின்தங்கிய பகுதிகளான பெரம்பலூர், ஓசூர், விருதுநகர் போன்ற

இடங்களில் பொருளாதார மண்டலங்களை அமைப்பதற்குப் புன்செய் நிலங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இதுபோன்ற பின்தங்கிய பகுதிகளில் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அமைவதன் மூலமாக பொருளாதாரத்தில் பின்தங்கிய பகுதிகள் விரைவான முறையில் பொருளாதார வளர்ச்சியைக் காணமுடியும். மேலும், புன்செய் மற்றும் தரிசு நிலங்களில் அமையவிருக்கும் இச்சிறப்புப் பொருளாதார மண்டலங்களினால் கூடுதலான வேலை வாய்ப்புகள் ஏற்படும்.

இச்சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் முதலீடு செய்கின்ற முதலீட்டாளர்கள், உதிரி பாகங்கள், சிறு கருவிகள் ஆகியவற்றைத் தயாரிக்கும் தொழில் நிறுவனங்களை நிறுவுவதில் மிக ஆர்வமாக உள்ளனர். இந்தச் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் உற்பத்தித் துறையில் வளர்ச்சி ஏற்படுவதற்கு அடிப்படையாக அமைகின்றன.

## தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்

தொழிற்சாலைகளை அமைப்பதில் அரசுக்குப் பெரும்பங்கு இருப்பதால், தமிழ்நாட்டில் பெரிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், தமிழக அரசின் நிறுவனமாக 1965 ஆம் ஆண்டில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) ஏற்படுத்தப்பட்டது. சிறப்புப் பொருளாதார மண்டலங்களை மேம்படுத்துவதிலும், தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களை நிறுவுவதிலும், இதர உட்கட்டமைப்பு வசதிகளைப் பெருக்குவதிலும் டிட்கோ தற்போது அதிக கவனம் செலுத்தி வருகின்றது. தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம் மற்றும் டைடல் பூங்கா (TIDEL) ஆகியவை டிட்கோவின் முனைப்பான செயல்பாட்டிற்கு எடுத்துக்காட்டுகள் ஆகும். உற்பத்தித் தொழில்கள், சுரங்கத் துறை, விளைபொருள்களைப் பதப்படுத்துதல் போன்ற இதர துறைகளிலும் டிட்கோ கவனம் செலுத்தி வருகிறது.

தொழில் வளர்ச்சியை மாநிலத்திலுள்ள எல்லாப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்த வேண்டும் என்ற அரசின் விருப்பத்திற்கிணங்க ஜிண்டால் விஜய நகர் உருக்கு நிறுவனத்துடன் டிட்கோ நிறுவனம் இணைந்து திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள தரம் குறைந்த இரும்புத் தாதுக்களை வெட்டியெடுக்கும் திட்டத்தை விரைவுபடுத்தவுள்ளது. சுரங்கக் குத்தகை விண்ணப்பங்களும் அரசின் விரைவான நடவடிக்கையில் உள்ளன.



பண்ருட்டியில் ரூ. 17 கோடி முதலீட்டில் முந்திரி பதனிடுதல் பிரிவு ஒன்று அமைக்கப்படும் என 2007-2008 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் அரசு அறிவித்துள்ளது. இத்திட்டத்தினை டிட்கோ இயக்குநர் குழுமம், திருவாளர்கள் சத்வா வேளாண் ஏற்றுமதி தனியார் நிறுவனத்துடன் இணைந்து ரூ.16.54 கோடி செலவில் நிறுவ ஒப்புதல் அளித்துள்ளது. முந்திரி பதனிடுதல் தொழிற்சாலையை அமைப்பது தவிர, இத்திட்டம் பொதுப் பதனிடுதல், சிப்பம் கட்டும் அறை, சிறு செடிகள் வளர்ப்பு, புதிய மகசூல் ரகங்களைத் தெரிவு செய்தல், செய்முறைப் பண்ணை, சேமிப்புக் கிடங்கு மற்றும் ஆய்வுக்கூடம் போன்ற அமைப்புகளை உள்ளடக்கியதாகும். இத்திட்டம் ஓராண்டு காலத்திற்குள் செயல்படத் தொடங்கும் என்றும், 3,000 முந்திரி விவசாயிகள் பயனடைவர் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

கிழக்குக் கடற்கரைச் சாலைத் திட்டம் நிறைவேறியபின் தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம் (டிட்கோவின் ஓர் இணை நிறுவனம்) தகவல் தொழில்நுட்ப நெடுஞ்சாலைத் திட்டத்தை நிறைவேற்ற உள்ளது. மத்திய கைலாசம் சந்திப்பிலிருந்து சிறுசேரி வரை 20 கி.மீ. தூரம் வரையிலும், கிழக்குக் கடற்கரைச் சாலையுடன் இணைப்புப் பாதையாக அமையும் 2.2 கி.மீ. தொலைவிற்கும் உலகத் தரம் வாய்ந்த 6 வழிப்பாதை உருவாக்கப்படுகிறது. அரசின் விடாமுயற்சியினால் இத்திட்டத்தின் செயல்பாடுகள் விரைவுபடுத்தப்பட்டு வருகின்றன. இரண்டாவது கட்டத்தில் இந்த நெடுஞ்சாலை சிறுசேரியிலிருந்து மாமல்லபுரம் வரை விரிவுபடுத்தப்பட உள்ளது.

தமிழக அரசின் டிட்கோ மற்றும் சிங்கப்பூரிலுள்ள அசென்டாஸ் ஆகியவற்றின் கூட்டு முயற்சியில் உருவாகும் அசென்டாஸ் தகவல் தொழில்நுட்ப பூங்கா (சென்னை) லிமிடெட் என்ற நிறுவனம் முதல் கட்டமாக ஏறத்தாழ 5,40,000 சதுர அடி பரப்பளவில் தகவல் தொழில் நுட்பப் பூங்காவை ஏற்படுத்தும் பணிகள் முடிவடைந்த பின், இரண்டாவது கட்டமாக ஏறத்தாழ 7,30,000 சதுர அடி பரப்பளவு கொண்ட தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைப்பதற்கான கட்டடக் கட்டுமானப் பணிகளை ரூ.190 கோடி மதிப்பீட்டுச் செலவில் அமைத்து வருகிறது. இத்திட்டம் ஜூலை 2007-ல் முடிவடையும் என்றும், இது ஏறத்தாழ 8,000 மென்பொருள் வல்லுநர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிறுவனம் மூன்றாவது கட்டமாக, ஏறத்தாழ 6,00,000 சதுர அடி பரப்பளவு கொண்ட கட்டடக் கட்டுமானப் பணிகளை ரூ.167.50 கோடி செலவில் நடப்பு ஆண்டில் தொடங்கிடத் திட்டமிட்டுள்ளது.



227668

[2007 மே 8

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் மற்றும் நாகார்ஜுனா குழும நிறுவனங்களின் ஒரு கூட்டு முயற்சியான, நாகார்ஜுனா எண்ணெய் நிறுவனம், மொத்தம் ரூ.4,790 கோடி முதலீட்டுடன், கடலூர் மாவட்டத்தில், ஆண்டொன்றுக்கு 60 இலட்சம் டன் நிறுவுதிறன் கொண்ட பெட்ரோலியம் சுத்திகரிப்புத் திட்டம் ஒன்றை ஏற்படுத்துகிறது. இது, இம்மாநிலத்தில் கூட்டு முயற்சித் துறையில் முன் எப்போதும் செய்யப்படாத தனியொரு மிகப் பெரிய முதலீடு ஆகும். இந்நிறுவனம், நிதி வகையில் பங்குகளை வெளியிட்டுள்ளது; இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் தலைமையிலான வங்கிகளின் கூட்டமைப்பு ஒன்று, இந்த நிறுவனத்திற்கு தவணைக் கடன்கள் அனுமதித்துள்ளது. இத்திட்டத்தின் கட்டுமானப் பணிகள் நடப்பாண்டில் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள எண்ணூருக்கு அருகில், பல்பொருள் சிறப்புப் பொருளாதார மண்டலம் ஒன்றை எண்ணூர் துறைமுகத்திற்கு அருகில் ஏறத்தாழ 3,000 ஏக்கர் நிலப் பரப்பில் ஏற்படுத்துவதற்கு, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் திட்டத் தகவல் பற்றிய குறிப்பு, இட அமைப்பு பற்றிய மதிப்பீட்டாய்வு, மண் ஆய்வுப் பணிகள் ஆகியவற்றை முடித்துள்ளது. இத்திட்டத்திற்கான ஒருங்கிணைந்த பெருந்திட்ட ஆவணம் தயாரிக்கும் பணியும் முடிந்துள்ளது. இத்திட்டத்திற்காக உப்புத் துறைக்குரிய 1,800 ஏக்கர் நிலத்தை மாற்றம் செய்வதற்கு மத்திய அரசு தற்பொழுது இசைவு அளித்துள்ளது. இந்தச் சிறப்புப் பொருளாதார மண்டலத்தை உருவாக்குவதற்கான செலவு ரூ.630 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தச் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் மோட்டார் வாகனத் துணைப் பாகங்கள் தயாரித்தல், தோல் பொருள்கள், மின்னணுப் பொருள்கள், ஆடைகள் மற்றும் கனரக, இலகுரக பொறியியல் பொருள்கள் தயாரித்தல் ஆகிய தொழில்கள் அமையும்.

இதுதவிர மேலும் இரண்டு பல்பொருள் சிறப்புப் பொருளாதார மண்டலங்களை கிருஷ்ணகிரி மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் டிட்கோ நிறுவனம் அமைக்க உள்ளது. பெரம்பலூர் சிறப்புப் பொருளாதார மண்டலம் 2006-07 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு திட்டங்களுக்கும், சக தொழில் முனைவோரைத் தேர்வு செய்யும் பணி, வெளிப்படையான மற்றும் போட்டி முறையில் ஏலம் அறிவிப்பு முறை வாயிலாக நடைபெற்று வருகிறது. பெரம்பலூர் சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்கான நில எடுப்பு நடவடிக்கைகள் ஏற்கெனவே தொடங்கப்பட்டுவிட்டன. கிருஷ்ணகிரி சிறப்புப் பொருளாதார



2007 மே 8]

மண்டலத்தைப் பொறுத்தவரை, ஏற்கெனவே உத்தேசிக்கப்பட்ட நன்செய் நிலங்களுக்குப் பதிலாகப் புன்செய் நிலங்கள் தற்போது தேர்வு செய்யப்பட்டுள்ளன. இச்செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

இந்திய அரசு, திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள நாங்குநேரியில் பல்பொருள் சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்கக் “கொள்கை அளவில்” இசைவு தந்தது. பிரமோட்டர்கள் இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு 2,100 ஏக்கர் நிலங்களைக் கையகப்படுத்திய பின்னர், மீதமுள்ள 410 ஏக்கர் நிலங்களைக் கையகப்படுத்தி இந்தப் பல்பொருள் சிறப்புப் ·பொருளாதார மண்டலம் அமைப்பதற்கான இறுதிக்கட்ட நடவடிக்கையில் இறங்கியுள்ளனர். இத்திட்டத்தைச் செயல்படுத்த அனுமதி கோரும் விண்ணப்பம் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் உத்தேச மதிப்பீடு ரூ.1,025 கோடி. இத்திட்டம் செயல்படுத்தப்பட்டால், பத்து ஆண்டுகளில் ஏற்றுமதியின்மூலம் ஆண்டுக்கு ரூ.9,000 கோடி அந்நியச் செலாவணியும் 50,000 பேருக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

2006-2007 நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட இரண்டாவது டைடல் பூங்கா (TIDEL PARK) திட்டத்தை டிட்கோ, செயல்படுத்தவுள்ளது. இத்தகவல் தொழில்நுட்பப் பூங்கா சென்னையிலுள்ள தரமணியில் 26.39 ஏக்கர் நிலப் பரப்பில் 25 இலட்சம் சதுர அடியில் அமைக்கப்படும். இத்திட்டம் தனியார் துறையின் பங்கேற்புடன் ஒரு கூட்டுத் துறையாக நிறைவேற்றப்படும். கூட்டுத் துறை பங்கீட்டாளர்கள் வெளிப்படையான ஏலமுறையில் (Tender) தேர்வு செய்யப்படவுள்ளனர். இத்திட்டத்திற்கான மதிப்பீட்டுச் செலவு ரூ.850 கோடி ஆகும். இத்திட்டம் மென்பொருள் துறையைச் சார்ந்த ஏறத்தாழ 25,000 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தச் சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்கான செயற்குறிப்பு மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

கோயம்புத்தூரில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைப்பதற்காக டைடல் பூங்கா மற்றும் எல்காட் நிறுவனத்திற்கிடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் 8-9-2006 அன்று கையொப்பமிடப்பட்டது. கோயம்புத்தூர் தகவல் தொழில்நுட்பப் பூங்காவிற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 24-2-2007 அன்று அடிக்கல் நாட்டினார். இப்பூங்கா 2008 ஆம் ஆண்டு இறுதிக்குள் தயாராகிவிடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை டிட்கோ மற்றும் எல்காட்

[2007 மே 8

இணைந்து செயல்படுத்த அரசு தற்போது முடிவெடுத்துள்ளது இத்திட்டம் ரூ.300 கோடி செலவில் 10 இலட்சம் சதுர அடி பரப்பளவில் அமையும். இத்திட்டம் தகவல் தொழில் நுட்பவியலைச் சார்ந்த சுமார் 10,000 வல்லுநர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும், 2,000 பேருக்கு மறைமுக வேலைவாய்ப்பும் அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## தமிழ்நாடு மாநிலத் தொழில் முன்னேற்ற நிறுவனம்

தமிழ்நாடு மாநிலத் தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்), தொழில் வளத்தைப் பெருக்குவதற்கும், நடுத்தர மற்றும் பெரிய தொழில்கள் தொடங்கிட தவணைக் கடன்கள் வழங்குவதற்காகவும் 1971 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. தவணைக் கடன் வழங்கும் பணிகள் யாவும் 2000 ஆம் ஆண்டில் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திற்கு மாற்றப்பட்டதன் விளைவாக, சிப்காட் நிறுவனம், தொழிற்பூங்காக்கள் மற்றும் இதர உட்கட்டமைப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது. மாநிலம் முழுவதும் பரவலான மற்றும் சீரான தொழில் வளர்ச்சியை உருவாக்குவதே இதன் நோக்கமாகும்.

சிப்காட் நிறுவனம் தற்போது பின்வரும் நடவடிக்கைகளில் மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது: (அ) அடிப்படை கட்டமைப்பு வசதிகளுடன் தொழில் வளாகம் / தொழில் பூங்கா/ வளர்ச்சி மையம் ஆகியவற்றை உருவாக்குதல் (ஆ) குறிப்பிட்ட தொழில் துறையை அடிப்படையாகக் கொண்ட சிறப்புப் பொருளாதார மண்டலங்களை உருவாக்குதல் (இ) சிறப்பு உட்கட்டமைப்புத் திட்டங்களைச் செயல்படுத்துதல் மற்றும் (ஈ) 2000 ஆம் ஆண்டிற்கு முன் வழங்கப்பட்ட தவணைக் கடன் தொகை குறித்து கவனித்து தொடர் நடவடிக்கை மேற்கொள்ளல்.

இராணிப்பேட்டை, ஓசூர், மானாமதுரை, புதுக்கோட்டை, கடலூர், கும்மிடிப்பூண்டி, தூத்துக்குடி, பர்கூர், நிலக்கோட்டை மற்றும் செய்யாறு ஆகிய இடங்களில் தொழில் வளாகங்களையும், இருங்காட்டுக்கோட்டை, திருப்பெரும்புதூர் மற்றும் சிறுசேரி ஆகிய இடங்களில் தொழில் பூங்காக்களையும், பெருந்துறை, ஓரகடம், கங்கைகொண்டான் ஆகிய இடங்களில் தொழில் வளர்ச்சி மையங்களையும் சிப்காட் நிறுவனம் ஏற்படுத்தியுள்ளது. சிப்காட் நிறுவனம் தொடங்கப்பட்டது முதல் இதுவரை 23,909 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. இதில் ஒதுக்கீடு செய்யத்தக்க மொத்த நிலப் பரப்பு 19,018 ஏக்கராகும். சிப்காட் நிறுவனம் இதுவரை 11,460 ஏக்கர் நிலங்களை 1530 தொழிற் பிரிவுகளுக்கு ஒதுக்கீடு செய்துள்ளது.



2007 மே 8]

### சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கு ஊக்கம்

மாறிவரும் தொழில் நிலைமைகளைக் கருத்திற் கொண்டு, முன்னணி தொழில் முகவர்கள் தங்களின் தனி சிறப்புப் பொருளாதார மண்டலங்களை நிறுவிடவும், சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் தொழில் பிரிவுகள் நிறுவிடவும் நிலங்கள் ஒதுக்கீடு செய்வது மற்றும் ஒரு குறிப்பிட்ட தொழில் துறை சார்ந்த சிறப்புப் பொருளாதார மண்டலங்களை மேம்படுத்துவது ஆகிய பணிகளில் சிப்காட் நிறுவனம் முனைப்பாகச் செயல்பட்டு வருகிறது. திருப்பெரும்புதூரில் 468.74 ஏக்கர் நிலப் பரப்பில், சிப்காட் நிறுவனம், தனது முதல் குறிப்பிட்ட துறைசார்ந்த உயர் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலத்தை நிறுவி வருகிறது. இம்மண்டலத்தில் பன்னாட்டு நிறுவனங்களான டெல் கம்ப்யூட்டர்ஸ், சாம்சங் எலக்ட்ரானிக்ஸ், மோட்டோரோலோ, ஃபாக்ஸ்கான், டேப் செமிகண்டக்டர்ஸ் ஆகியவை தங்களின் உற்பத்திப் பிரிவை நிறுவிட சிப்காட் நிறுவனம் மொத்தம் 351.85 ஏக்கர் நிலம் ஒதுக்கியுள்ளது.

மேலும் சிப்காட் நிறுவனம், இருங்காட்டுக்கோட்டையில், 153.65 ஏக்கர் நிலப் பரப்பில் காலணிகளுக்கான சிறப்புப் பொருளாதார மண்டலத்தை நிறுவி வருகிறது. இம்மண்டலம் நிறைவடையும் நிலையில் உள்ளது. செய்யாறு தொழில் வளாகத்தில் 260 ஏக்கர் நிலப் பரப்பில் மோட்டார் வாகனத் தொழில்களுக்காக ஒரு சிறப்புப் பொருளாதார மண்டலத்தை நிறுவிட நடவடிக்கை எடுத்து வருகிறது.

தைவான் நாட்டைச் சார்ந்த திருவாளர்கள் ஃபெங்டாய் குழுமம், அதன் இந்திய துணை நிறுவனமான செய்யாறு எஸ்.இ.இசட் டெவலப்பர்ஸ் (SEZ Developers) என்ற நிறுவனத்தின்மூலம், காலணிகளுக்கான சிறப்புப் பொருளாதார மண்டலம் ஒன்றினைச் செய்யாறு தொழில் வளாகத்தில் நிறுவுவதற்கு சிப்காட் நிறுவனம் 275 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்துள்ளது. இத்திட்டத்தின் மூலமாக 5,000 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். இதில், பெண்களுக்கு 70% வாய்ப்புகள் கிடைக்கும், உள்ளூர்ப் பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு அதிக அளவில் வேலைவாய்ப்புகள் கிடைக்கும்.

### பிற பகுதிகளில் திட்டங்கள்

திருப்பெரும்புதூர் (பகுதி II) சிப்காட்தொழில் பூங்காவில், கெபாரோ இஞ்சினியரிங் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனம் மோட்டார் வாகன பாகங்கள் தயாரிக்கும் உற்பத்தித் தொழில் பிரிவை ஏற்படுத்த

சிப்காட் நிறுவனம் 118.06 ஏக்கர் நிலம் ஒதுக்கியுள்ளது. ஒரகடம் வளர்ச்சி மையத்தில் கெபாரோ குழுமத்தின், "கொபாரோ வெஹிகிள் ப்ராடக்ட்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட்" என்ற நிறுவனம் தனது இரண்டாவது உற்பத்திப் பிரிவை நிறுவுவதற்கு கூடுதல் நிலங்கள் ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுத்து வருகிறது. திருவாளர்கள் அப்பலோ டயர்ஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு ஒரகடம் வளர்ச்சி மையத்தில் ரேடியல் டயர்கள் தயாரிப்பதற்கான தொழிற்சாலையை ஏற்படுத்திட 135 ஏக்கர் நிலத்தினை சிப்காட் ஒதுக்கியுள்ளது.

### சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்துதல்

இந்திய அரசின் பெருந்தொழில் அமைச்சகம் ரூ. 470 கோடி திட்ட மதிப்பீட்டில், உலகத் தரத்தில் மோட்டார் வாகன சோதனை மற்றும் ஆராய்ச்சி மையம் ஒன்றினை சிப்காட் நிறுவனத்தின் ஒரகடம் வளர்ச்சி மையத்தில் நிறுவி வருகிறது. இந்த மிகப் பெரிய திட்டத்திற்காக 304 ஏக்கர் நிலத்தினை சிப்காட் ஒதுக்கீடு செய்துள்ளது. இத்திட்டத்திற்கு இந்தியப் பிரதமர் அவர்களால் நவம்பர் 2006-ல் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

உலகத் தரத்திலான உட்கட்டமைப்பு வசதிகளைக் கொண்ட தொழில் பூங்காக்கள், சிறப்புப் பொருளாதார மண்டலங்கள், தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் மற்றும் ஒருங்கிணைந்த நகரியங்கள் ஆகியவற்றை உருவாக்குவதற்கு ஏதுவாக உன்னதமான தொழில் நகரங்களை (Industrial corridors) ஏற்படுத்திட சிப்காட் நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

### 2007-2008-க்கான கருத்துருக்கள்

- தொழில் முனைவோர்களின் தேவையைக் கருத்திற் கொண்டு, இருங்காட்டுக்கோட்டை தொழில் பூங்காவை 1122.27 ஏக்கர் அளவில் விரிவாக்கம் செய்யவும், ஒரகடம் வளர்ச்சி மையத்தில் 977.81 ஏக்கர் அளவிற்கு விரிவாக்கம் செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. நில எடுப்புப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.
- நிலவங்கி ஒன்றினை ஏற்படுத்திட, கூடுதலாக 4,000 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்துவதற்கு சிப்காட் திட்டமிட்டுள்ளது.
- மதுரையில் தொழிற்பூங்கா ஒன்றினை நிறுவிட சுமார் 900 ஏக்கர் நிலத்தினை சிப்காட் நிறுவனம் கண்டறிந்துள்ளது.



### தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்

இந்திய நிறுவனங்கள் சட்டத்தின்கீழ் 1949 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், நாட்டிலேயே மாநில அளவிலான முதன்மையான நிதி நிறுவனமாகும். இக்கழகம் தற்பொழுது புதிய தொழில்கள் நிறுவுவதற்கும், தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் ஏற்கெனவே உள்ள தொழிற் பிரிவுகளை விரிவுபடுத்துவதற்கும், நவீனமயமாக்குவதற்கும், பல்திறப்படுத்துதலுக்கும், நிலம் வாங்குதல், கட்டடங்கள் கட்டுதல், தளவாடம் மற்றும் இயந்திரங்கள் வாங்குதல் ஆகியவற்றிற்கும் நிதியுதவிக் கடன்கள் அளிக்கிறது.

### தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் இயக்கும் திட்டங்கள்

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் தேசிய பங்கு மூலதனத் திட்டம், முன்னாள் இராணுவத்தினர் சுய வேலைவாய்ப்புத் திட்டம், மகளிர் தொழில் முனைவோருக்கான திட்டம் ஆகிய பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இவைதவிர, தொழில் மேம்பாடு நிதித் திட்டத்தின்கீழ் நெசவுத் தொழில் பிரிவுகளை நவீனப்படுத்தும் திட்டத்தினையும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் செயல்படுத்தி வருகிறது. இக்கழகம் செயல்படுத்தி வரும் முக்கியத் திட்டங்களின் சிறப்பியல்புகள் பின்வருமாறு:

### தேசிய பங்கு மூலதனத் திட்டம்

சிறு தொழில் முனைவோர்களுக்கு, முக்கியமாக முதன்முதலாகத் தொழில் தொடங்கும் தொழில்முனைவோர்க்கு, உதவும் வகையில் புதிய திட்டம் மற்றும் ஏற்கெனவே உள்ள திட்டத்தின் விரிவாக்கத்திற்கு சிறு தொழில் பிரிவுகளின்கீழ் திட்டத்தின் மதிப்பு ரூ.50.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்கும் பட்சத்தில், நிதி உதவி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 2006 - 2007 ஆம் ஆண்டில் 344 தொழில் பிரிவுகளுக்கு ரூ.72 கோடி வழங்கப்பட்டுள்ளது.

### ஜவுளித் தொழில் நிறுவனங்களுக்கான தொழில் மேம்பாட்டு நிதித் திட்டம்

இத்திட்டம் ஜவுளித் தொழில்களின் தொழில்நுட்பத்தை உயர்த்தவும், உற்பத்தி வசதிகளை நவீனப்படுத்தவும் ஊக்கமளிக்கிறது. இத்திட்டத்தின்கீழ் இந்திய அரசால் ஒப்புதலளிக்கப்பட்ட இயந்திரங்கள் மற்றும் கருவிகளை வாங்க தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் நிதியுதவி வழங்குகிறது. சிறு தொழில்கள் வகையில்

விசைத்தறி அலகுகளை நவீனப்படுத்துவதற்காக கடன் இணைந்த மூலதன மானியத் திட்டம் தொழில் மேம்பாடு நிதித் திட்டத்தின்கீழ் மூலதன மானியமாக 20 விழுக்காடு (கடந்த காலத்தில் 12 விழுக்காடாக இருந்தது) அதாவது ரூ. 20 இலட்ச உச்சவரம்பிற்குட்பட்டும் அல்லது 5 விழுக்காடு வட்டி மானியமும், இதில் எது நன்மைபயக்கக் கூடியதோ அத்தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 2006-2007 ஆம் ஆண்டில் 33 தொழிற்சாலைகளுக்கு ரூ.40 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**சிறிய மற்றும் நடுத்தர நிறுவன நிதி**

சிறிய மற்றும் நடுத்தர நிறுவன நிதி நம் நாட்டில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில் வளர்ச்சியினை ஊக்கப்படுத்துவதற்காக, சிறு தொழில்கள் மேம்பாட்டு வங்கியால் (SIDBI) உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் குறைக்கப்பட்ட வட்டி விகிதமான 12 விழுக்காட்டில் தொழிற்சாலைகளை நவீனப்படுத்துவதற்கும் மற்றும் தொழில்நுட்ப உயர்விற்கும் நிதியுதவி வழங்குகிறது. 775 நிறுவனங்கள் இந்தத் திட்டத்தின்கீழ் கடந்த ஆண்டில் பயனடைந்துள்ளன.

**காற்று ஆலைகள் திட்டம்**

தமிழ்நாட்டில் உள்ள காற்றாலைகள் சுமார் 3,000 மெகா வாட் மின் சக்தியை உற்பத்தி செய்கிறது. இத்திட்டத்திற்கு நிதி உதவி அளிக்க தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் சிறப்பு அனுபவம் பெற்றுள்ளது. பலதரப்பட்ட வாடிக்கையாளர்களின் தேவைக்கு பொருந்துமாறு இந்நிறுவனம் இரு திட்டங்களைச் செயல்படுத்துகிறது. முதல் திட்டமாகிய பொது காலக்கடன் திட்டத்தின்கீழ் திட்ட மதிப்பில் 75 விழுக்காடு நிதியுதவியும் மற்றும் இயந்திரத் தளவாடங்கள் நிதியுதவித் திட்டத்தில் காற்றாலை மதிப்பு மற்றும் அதுசார்ந்த செலவினங்களுக்காக 85 விழுக்காடு நிதியுதவியும் வழங்குகிறது. தனது சுய தேவைக்கு அல்லது தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு விற்பதற்கு தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் ஆண்டிற்கு 12.5 விழுக்காடு சலுகை வட்டியில் காற்றாலை மின் திட்டத்திற்குக் கடன் வழங்குகிறது. 2006-2007 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 7 காற்றாலைத் தொழிற் திட்டங்களுக்கு ரூ.8 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது.



**தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் இயக்கும் மானியத் திட்டங்கள்**

தொழில் முனைவோர்களின் நலனுக்காக தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் மத்திய மற்றும் மாநில அரசுகளின் பல்வேறு மானியத் திட்டங்களை செயல்படுத்துகிறது. தொழில் திட்டங்களை நிறுவ / விரிவாக்க / மற்றும் இயக்கத்தில் உள்ள தொழில்களை நவீனப்படுத்துதலில் தொழில் முனைவோரின் நிதிச் சுமையைக் குறைக்க உதவுவதே இத்திட்டத்தின் முக்கியக் குறிக்கோளாகும்.

**கடன் இணைந்த மூலதன மானியத் திட்டம்**

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் ஒரு செயல் அமைப்பாக கடன் இணைந்த மூலதன மானியத் திட்டத்தின்கீழ் சிறு தொழில் பிரிவுகளில் அடங்கியுள்ள 45 தொழில் பிரிவுகளுக்கு தொழில் மேம்பாட்டிற்காக இயந்திரங்களின் விலையில் 15 விழுக்காடு மூலதன மானியம் உச்சவரம்புத் தொகையாக ரூ. 15 இலட்சம் வரை வழங்குகிறது. தமிழக அரசு திரும்பப் பெறும் வட்டி மானியத் திட்டத்தை பின்வரும் திட்டங்களில் விரிவுபடுத்தியுள்ளது:

(அ) தொழில் மேம்பாடு/நவீனப்படுத்துவதற்காக பெற்ற காலக் கடன்கள்

(ஆ) தேசிய மூலதனப் பங்கு நிதியுதவி திட்டத்தின்கீழ் பெற்ற காலக் கடன்கள்

(இ) ஐ.எஸ்.ஓ. தரச் சான்றிதழ் மற்றும் ஆராய்ச்சி மேம்பாடுகளுக்காகப் பெற்ற காலக் கடன்கள்.

இத்திட்டத்தின்கீழ் அதிகபட்சமாக 3 விழுக்காடு வட்டி குறையும் அளவுக்கு திரும்பப் பெறும் வட்டி மானியம் வழங்கப்படுகிறது.

**முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகள்**

தொழில் முனைவோர்களுக்கு உதவும் வகையில் கழகத்தில் நிதியுதவி பெறுவோர்களுக்குக் கழகத்தின் சட்ட ஆவணங்கள் எளிதாக்கப்பட்டுள்ளன.

புதிய தொழில் முனைவோர்களுக்கு உதவும் வகையில் அனைத்துக் கடன் விண்ணப்பங்களும் எளிதாக்கப்பட்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

## கழகத்தின் 2006-07 மற்றும் 2007-2008-க்கான செயல்பாடுகள்

2006-2007 ஆம் ஆண்டில் கடன் ஒப்பளிப்பு ரூ. 467 கோடியாகவும், கடன் வழங்கல் ரூ. 320 கோடியாகவும், கடன் வசூலித்தல் ரூ.367 கோடியாகவும் இருந்தது. நடப்பு ஆண்டில் இக்கழகம் ரூ. 650 கோடி கடன் ஒப்பளிப்பு, ரூ.350 கோடி கடன் வழங்கல் மற்றும் ரூ. 318 கோடி கடன் வசூலித்தல் என்ற இலக்குகளை நிர்ணயித்துள்ளது. பாதிக்கப்பட்ட, ஆதாயம் தராமல இயங்கும் நிறுவனங்களுக்கு ஒரே தவணையில் கடன் முடிக்கும் திட்டம் 2007-2008 ஆண்டிற்கும் நீட்டிக்கப்படும். கழகத்தில் தரமான நிர்வாக முறைகளை ஏற்படுத்தியுள்ளதற்காக தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் ஐ.எஸ்.ஓ. 9001:2000 தரச் சான்றிதழ்களைப் பெற்றுள்ளது.

## தமிழ்நாடு செய்தித் தாள் மற்றும் காகித நிறுவனம்

தமிழ்நாடு செய்தித் தாள் மற்றும் காகித நிறுவனம், நிறுவனங்கள் சட்டம் 1956-ன்கீழ் தமிழக அரசால் 1979 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. நாட்டில் காடுகளின் பரப்பைப் பாதுகாக்கும் நோக்கத்தில் கரும்புச் சக்கையை, முதன்மை மூலப் பொருளாகப் பயன்படுத்தி செய்தி அச்சுத் தாளையும், அச்சு மற்றும் எழுத்துத் தாளையும் உற்பத்தி செய்வது இதன் நோக்கமாகும். இந்த நிறுவனம் தொடக்கத்தில் 50,000 மெ.டன் செய்தித் தாளையும், 40,000 மெ.டன் அச்சு எழுத்துத் தாளையும் உற்பத்தி செய்யும் திறன் கொண்டதாக ரூ. 239 கோடியில் நிறுவப்பட்டு, 1985 ஆம் ஆண்டில் வணிக உற்பத்தியைத் தொடங்கியது.

காகித நிறுவனத்தின் திறன் விரிவாக்கம் செய்யப்பட்டு (1996) காகித இயந்திரங்களின் தரம் உயர்த்தப்பட்ட பின் (2003), தமிழ்நாடு செய்தித் தாள் மற்றும் காகித நிறுவனத்தின் மொத்த உற்பத்தித் திறன் தற்போது 2,30,000 மெட்ரிக் டன்களாக உயர்ந்துள்ளது. இந்த நிறுவனம் இந்தியாவில் உள்ள காகித நிறுவனங்களில் ஒரே இடத்தில் இயங்கும் மிகப் பெரிய காகித ஆலை என முதலிடம் பெற்றுள்ளது. எழுதுவதற்கும், அச்சிடுவதற்கும் உரிய காகிதத்தை உற்பத்தி செய்வதில், நாட்டின் இரண்டாவது பெரிய காகித ஆலை என்ற சிறப்பையும் இந்த நிறுவனம் பெற்றுள்ளது. உற்பத்தித் திறனை ஆண்டொன்றுக்கு 2,45,000 மெட்ரிக் டன்களாக மேலும் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு ஜூலைத் திங்களில் இந்த உற்பத்திச் சாதனை எய்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.



2006-2007 ஆம் ஆண்டில் தமிழ்நாடு செய்தித் தாள் மற்றும் காகித நிறுவனம் 2,31,161 மெட்ரிக் டன் செய்தி அச்சுத் தாள், அச்சு மற்றும் எழுத்துத் தாள் உற்பத்தி செய்து 100.5% பயன்பாட்டுத் திறனை எட்டியுள்ளது. கடந்த ஆண்டை ஒப்பிடும்போது இந்த நிறுவனம் 44,407 மெட்ரிக் டன் நகல் காகிதம் (copier paper) உற்பத்தி செய்து முந்தைய ஆண்டினைவிட 18% வளர்ச்சி அடைந்துள்ளது. வரி கணக்கிடுவதற்குமுன் இலாபம் ரூ.125 கோடி இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்நாடு செய்தித் தாள் மற்றும் காகித நிறுவனம் 31-3-2007 வரை மொத்தம் 2,91,587 மெட்ரிக் டன் அச்சு மற்றும் எழுத்துத் தாள் ஏற்றுமதி செய்து ரூ. 893 கோடி அந்நியச் செலாவணி ஈட்டியுள்ளது. இதில் 2006-2007 ஆம் ஆண்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட ரூ. 182 கோடி மதிப்புள்ள 52,712 மெட்ரிக் டன் காகிதமும் அடங்கும். தமிழ்நாடு செய்தித் தாள் மற்றும் காகித நிறுவனம் 2007-2008 ஆம் ஆண்டில் ஏற்றுமதி மேலும் அதிகரிக்கும் எனும் நம்பிக்கையுடன் இயங்குகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 23-8-2006 அன்று சட்டமன்றப் பேரவையில் அறிவித்தபடி தமிழ்நாடு காகித நிறுவனம் 2006-2007 ஆம் ஆண்டில் 1.25 மெகா வாட் திறன் கொண்ட 6 காற்றாலைகளை திருநெல்வேலி மாவட்டத்தில் ரூ.40 கோடி செலவில் நிறுவியுள்ளது. இந்த 6 காற்றலைகளும் 29-3-2007 முதல் மின் உற்பத்தி செய்கிறது. காற்றாலைகளின் திறன் மார்ச் 2007 வரை 28 மெகா வாட்டில் இருந்து 35.5 மெகா வாட்டாக அதிகரிக்கப்பட்டது. டர்போ ஜெனரேட்டர் மற்றும் காற்றாலைப் பண்ணையிலிருந்து உற்பத்தி செய்யப்பட்டு ரூ.41.04 கோடி மதிப்புள்ள 1509.63 இலட்சம் யூனிட், எஞ்சிய மின்சாரத்தினை இந்நிறுவனம் தமிழ்நாடு மின் வாரியத்திற்கு விநியோகம் செய்துள்ளது.

சுற்றுச் சூழல் மேம்பாட்டின் பொருட்டு தமிழ்நாடு செய்தித் தாள் மற்றும் காகித நிறுவனம் மீத்தேன் வாயுவைப் பயன்படுத்தும் வகையில் பயோமெத்தனேஷன் இயந்திர சாதனம் ஒன்றை நிறுவியது. இதன்மூலம் கரும்புச் சக்கை கழிவு நீரிலிருந்து வெளியேறும் மீத்தேன் வாயு காற்றோடு கலந்து மாசு ஏற்படுத்தாமல் தவிர்க்கப்படுகிறது. மேலும் 2006-2007 ஆம் ஆண்டில் தமிழ்நாடு செய்தித் தாள் மற்றும் காகித நிறுவனம் இந்த ஆலையில் இருந்து 51.62 இலட்சம் கன மீ. மீத்தேன் வாயு உற்பத்தி செய்யப்பட்டு ரூ.6.44 கோடி மதிப்புள்ள 3097 கிலோ லிட்டர் உலை எண்ணெய்யின் உபயோகம் தவிர்க்கப்பட்டது. இந்தத்

[2007 மே 8

திட்டத்தை இந்திய தொழில் கூட்டமைப்பு (CII) ஓர் அரிய திட்டமாக அங்கீகரித்து தமிழ்நாடு செய்தித் தாள் மற்றும் காகித நிறுவனத்திற்குச் சிறந்த எரிசக்தி மேலாண்மைக்கான விருது வழங்கியுள்ளது.

பண்ணைக் காடுகள் மற்றும் நிறுவன பண்ணைத் திட்டத்தின்கீழ் மூலப்பொருள் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு 2006-2007 ஆம் ஆண்டில் இந்த நிறுவனம் 10,013 ஏக்கர் நிலத்தில் கூழ் மரங்கள் பயிர் செய்துள்ளது.

தமிழ்நாடு செய்தித் தாள் மற்றும் காகித நிறுவனம் நேரடியாக 1,735 பேருக்கும், மறைமுகமாக ஏறத்தாழ 5,000 பேருக்கும் வேலைவாய்ப்பு அளித்துள்ளது.

## தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம்

டிட்கோ நிறுவனத்தால் ஆலங்குளத்தில் அமைக்கப்பட்ட சிமெண்ட் ஆலையை ஏற்றுக்கொண்டு, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கு (டிட்கோ) முழுவதும் சொந்தமான துணை நிறுவனமாக "தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் (டான்செம்)" 1976 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. அதைத் தொடர்ந்து டான்செம் நிறுவனம், மற்றொரு சிமெண்ட் ஆலையை 1979 ஆம் ஆண்டு அரியலூரிலும், கல்நார் தகடு ஆலையை 1981 ஆம் ஆண்டு ஆலங்குளத்திலும், கல்நார் சிமெண்ட் அழுத்தக் குழாய் ஆலையை 1984 ஆம் ஆண்டு மாயனூரிலும் அமைத்தது. டான்செம் நிறுவனம், இயங்காமல் இருந்த கற்குழாய் ஆலையை தமிழ்நாடு பீங்கான் தயாரிப்பு நிறுவனத்திடமிருந்து 1989 ஆம் ஆண்டில் ஏற்றுக் கொண்டது. இவ்வாறாக, தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் பல இடங்களில் ஆலைகளை நிறுவி, பல்வேறு பொருட்களைத் தயார் செய்யும் நிறுவனமாக உள்ளது. 1994 ஆம் ஆண்டில் தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் முழுமையான அரசு நிறுவனமாக மாறியது. தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் தனது உற்பத்தியில் பெரும் பகுதியை அரசுத் துறைகளுக்கும் மற்றும் அரசு நிறுவனங்களுக்கும் விநியோகம் செய்து வருகிறது.

ஆலங்குளம் சிமெண்ட் ஆலையில் உள்ள இரண்டு கிளிங்கர் சூளைகளில் ஒரு கிளிங்கர் சூளை மட்டுமே இயங்கி வருகிறது. கிளிங்கர் குறைந்த அளவில் கிடைப்பதாலும், காலத்திற்குப் பொருந்தாத ஈரப்பதத் தொழில் நுட்பத்தினாலும், 2006-07 ஆம் ஆண்டில் இவ்வாலை 50.03% பயன்பாட்டுத் திறன் அளவுக்கே உற்பத்தி செய்ய முடிந்தது. இழப்பைக் குறைப்பதற்காக சில பகுதிகளில் உள்ள



2007 மே 8]

இயந்திரங்களில் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும், ஈரப்பதத் தொழில்நுட்பத்திலிருந்து உலர்பத முறைக்கு மாற்றி ஆலையை நவீனமயமாக்குவதே நிரந்தரத் தீர்வாகும்.

கடந்த ஆண்டு ஈட்டிய ரூ.3.93 கோடி இலாபத்தைவிட 2006-07 ஆம் ஆண்டில் அரியலூர் சிமெண்ட் ஆலை 106.62 சதவிகித உற்பத்தித் திறன் பயன்பாட்டை எய்தி, ரூ.12.94 கோடி இலாபம் ஈட்டி சாதனை படைத்துள்ளது.

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய அளவுகோலை நிறைவு செய்யும்பொருட்டு, தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம், சுமார் ரூ.2 கோடி செலவில் மாசுக் கட்டுப்பாட்டு முறைகளைப் புதுப்பிக்க/மாற்றியமைக்க நடவடிக்கை எடுத்துள்ளது. அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலையின் செயல்பாட்டுத் திறனைஅதிகரிக்கும் பொருட்டு தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் ஒரு கருத்துருவைப் பரிசீலித்து வருகிறது. 2006-07 ஆம் ஆண்டில் டான்செம் நிறுவனத்தின் சிமெண்ட் மொத்த விற்று முதல் ரூ.238 கோடி ஆகும்.

2006-07 ஆம் ஆண்டில், கல்நார் தகடு ஆலை 94.50% உற்பத்தித் திறன் பயன்பாட்டை எய்தியுள்ளது. 2006-07 ஆம் ஆண்டில் மொத்த விற்று முதல் ரூ.18.32 கோடியாகும்.

மாயனூரில் உள்ள கல்நார் அழுத்தக் குழாய் ஆலை, தற்போது செயல்பாட்டில் இல்லை. அரசு அனுமதியின்படி டான்செம் நிறுவனம் ஒரு விருப்ப ஓய்வு பெறும் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. தொழிலாளர்களில் ஒரு சிறு பிரிவினர், ஆலையை மூடுவதற்கு எதிராக சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளனர்.

2006-07 ஆம் ஆண்டில் தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் ரூ.4.85 கோடி நிகர இலாபம் ஈட்டியுள்ளது. எனினும், 31-3-2007 அன்று திரண்ட நட்டம் ரூ.62.73 கோடி ஆகும்.

## தமிழ்நாடு கனிம நிறுவனம்

தமிழ்நாடு கனிம நிறுவனம் (டாமின்) தமிழ்நாடு அரசு நிறுவனமாக 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் நிறுவப்பட்டது. டாமின் கருப்பு, வெள்ளை பாரடைசோ மற்றும் பல வண்ணப் பாறைகளையும், உயர்வகைக் கனிமங்களான கிராபைட், குவார்ட்ஸ், பெல்ட்ஸ்பார், சுண்ணாம்புக்கல், சிலிகா மணல் மற்றும் வெர்மிகுலைட் கனிமங்களையும் தொடர்ந்து பெருமளவில் வெட்டியெடுத்து விற்பனை

[2007 மே 8

செய்து வருகின்றது. தமிழ்நாட்டில் கிடைக்கக்கூடிய கனிம வளங்களை அறிவியல் ரீதியாகப் பராமரித்து, அவற்றை வணிக முறை பயன்பாட்டிற்காக வெட்டியெடுத்தல் டாமினின் முக்கியக் குறிக்கோளாகும். டாமின் நிறுவனம் கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்புகளை அளித்து வருகிறது.

**விற்பனை**

டாமின் நிறுவனம் 2006-2007 ஆம் ஆண்டில் ரூ.102/- கோடி அளவு விற்பனை செய்துள்ளது. (தணிக்கைக்கு உட்பட்டது) இந்நிறுவனம் 2007-2008 ஆம் ஆண்டு ரூ.125 கோடி அளவு மொத்த விற்பனை செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**டாமின் தொழிற்சாலைகள்**

டாமின் பின்வரும் 6 தொழிற்சாலைகளை நிறுவியுள்ளது:

| | | |
|---|---|---|
| 1 | டாமின் கிரானைட்ஸ், மணலி, சென்னை | வீடு கட்டுமான கற்பலகை, வால் பேனல்ஸ், நினைவுச் சின்னங்கள் போன்றவற்றை உற்பத்தி செய்தல். |
| 2 | டாமின் கிரானைட்ஸ் ஓடுகள் தொழிற்சாலை, மாதேப்பள்ளி, கிருஷ்ணகிரி | ஏற்றுமதி விற்பனைக்காக கிரானைட் ஓடுகள் உற்பத்தி செய்தல் |
| 3 | கிரானைட்ஸ் ஓடுகள் தொழிற்சாலை, சூலமலை, கிருஷ்ணகிரி | உள்ளூர் சந்தை விற்பனைக்காக கிரானைட் ஓடுகள் உற்பத்தி |
| 4 | கிராபைட் சுத்திகரிப்பு தொழிற்சாலை, சிவகங்கை | செழுமைப்படுத்திய கிராபைட்டின் உற்பத்தி |
| 5 | இந்திய தர மணல் தொழிற்சாலை, எண்ணூர் | கான்கிரீட் சோதனைக்கு பயன்படும் இந்திய தரச் சான்றின் தன்மை கொண்ட சிலிகா மணல் உற்பத்தி செய்தல் |
| 6 | வெர்மிகுலைட் விரிவாக்க தொழிற்சாலை, அம்பத்தூர் | மிருதுவாக்கப்பட்ட வெர்மிகுலைட் உற்பத்தி |



2007 மே 8]

**சேலம் மத்தியப் பணிமனை**

டாமின், சேலத்தில் உள்ள தமிழ்நாடு அக்ரோ தொழிற்சாலை நிறுவன பணிமனையை ஏற்று, அதை டாமின் மத்தியப் பணிமனையாக மாற்றியமைத்து, அதில் டாமினின் குவாரி தொடர்பான நகரும் இயந்திரங்களும், வாகனங்களும் டாமின் நிறுவனத்தின் மற்ற பிரிவுகளில் உள்ள நிர்வாகப் பொறியாளர்கள், பட்டயப் பொறியாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் ஆகியோரைக் கொண்டு செப்பனிடப்படுகின்றன.

இந்த மத்தியப் பணிமனை, டாமின் நிறுவனத்தின் இயந்திரங்கள் மற்றும் வாகனங்களைச் சுத்தம் செய்தல், பழுது நீக்கிச் செப்பனிடுதல், வண்ணம் தீட்டுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளும் அனைத்து வசதிகளையும் கொண்ட ஓர் அரசு ஒப்புதல் பெற்ற பணிமனையாக இயங்கி வருகிறது.

**தொழிற்பயிற்சிக் கூடம்**

டாமின் நிறுவனம் ஒரு தொழிற்பயிற்சி மையத்தைத் திருச்சியில் தொடங்கி, அங்கு இந்நிறுவன அலுவலர்கள், ஊழியர்கள், சுரங்கத் தொழிலாளர்களுக்கு, சிறந்த துறை வல்லுநர்களைக் கொண்டு பயிற்சி அளிக்கிறது.

**டாமின் காட்சியகம்**

டாமின் நிறுவனத்தின் கிரானைட் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்பட்ட கிரானைட் ஓடுகள், கற்பலகைகள் விற்பனையை உள்ளூரில் அதிகரிப்பதற்காக சென்னையில் வடபழனியில் காட்சியகம் ஒன்றை டாமின் நிறுவியுள்ளது.

**எதிர்காலத் திட்டங்கள்**

1) **குவாரிகளை இயக்குதல்**

டாமின் 2006-2007 ஆம் ஆண்டில் 39 கருப்பு மற்றும் 38 பல வண்ண கிரானைட் குவாரிகளை இயக்கி வந்தது. 2007-08 ஆம் ஆண்டில் 82 குவாரிகளை இயக்கிடத் திட்டமிட்டுள்ளது.

2) **டாமின் கிரானைட்ஸ், மணலி**

மணலியில் தற்போது செயல்படும் டாமின் கிரானைட்ஸ் அறுவை மற்றும் மெருகேற்றும் தொழிற்சாலையைப் புனரமைத்து இதன் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் பொருட்டு, நவீன கேங்ஸா மற்றும் பல இயந்திரங்களை அங்கு நிறுவ டாமின் முடிவு செய்துள்ளது.

[2007 மே

### 3) பிற மாநிலங்களில் நிலக்கரி சுரங்கப் பணி

இந்திய அரசின் நிலக்கரி பங்கிடுதல் திட்டத்தின்கீழ், நிலக்க சுரங்கப்பணிக்காக ஒரிசா மாநிலத்திலுள்ள டால்சரில் உள்ள நிலக்கரி பிளாக்குகளைப் பகிர்ந்து கொடுக்குமாறு டாமில நிறுவனம் விண்ணப்பித்துள்ளது.

## தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம்

தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம் (டான்மேக்) 1979 ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் பொது நிறுவனமாகக் குரும்பப்பட்டி பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியில் அமைந்துள்ள மேக்னசைட் சுரங்கத்தில் கனிமத்தை வெட்டியெடுப்பதற்காக நிறுவப்பட்டது இந்நிறுவனம் மேக்னசைட் கனிமத்தைக் கொண்டு, சுழலும் சூளைப் பிரிவில் முழு எரியூட்டப்பட்ட மேக்னசைட் மற்றும் நிலைச் சூளைப் பிரிவில் மித எரியூட்டப்பட்ட மேக்னசைட் பொருட்களை உற்பத்தி செய்கின்றது. இந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட சுரங்க குத்தகை உரிமம் ஆகஸ்டு 2008-ல் முடிவடைகிறது. எனவே, இந்நிறுவனம் சுரங்க குத்தகை உரிமத்தைப் புதுப்பிப்பதற்காக வனப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் தேவையான நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

2006-2007 ஆம் ஆண்டில் இந்நிறுவனத்தின் செயல்பாடுகள் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டுடன் ஒப்பிடப்பட்டு அதன் விவரங்கள் பின்வருமாறு:—

| | உற்பத்தி | | விற்பனை | |
|---|---|---|---|---|
| | (அளவு மெட்ரிக் டன்களில்) | | | |
| | குறியீடு | எட்டியது | குறியீடு | எட்டியது |
| கச்சா மேக்னசைட் | 85,000 | 99,248 | 85,000 | 97,470 |
| முழு எரியூட்டப்பட்ட மேக்னசைட் | 31,000 | 33,859 | 31,000 | 36,621 |
| மிதமாக எரியூட்டப்பட்ட மேக்னசைட் | 12,000 | 14,729 | 12,000 | 14,216 |



2007 மே 8]

2007-2008 ஆம் ஆண்டிற்கான உற்பத்தி மற்றும் விற்பனைக் குறியீட்டளவுகள் பின்வருமாறு:—

| | உற்பத்தி | விற்பனை |
|---|---|---|
| | (மெட்ரிக் டன்கள்) | |
| கச்சா மேக்னசைட் | 1,10,000 | 1,10,000 |
| முழு எரியூட்டப்பட்ட மேக்னசைட் | 35,000 | 35,000 |
| மிதமாக எரியூட்டப்பட்ட மேக்னசைட் | 14,000 | 14,000 |

எஃகு தொழிலில் ஏற்பட்டுள்ள புத்தாக்கத்தின் காரணமாக முழு எரியூட்டப்பட்ட மேக்னசைட் பொருளுக்குக் கடந்த மூன்று ஆண்டுகளாகத் தேவை அதிகரித்தது; சுழலும் சூளைப் பிரிவின் நிறுவு திறனுக்கு (30,000 மெட்ரிக் டன்கள்) மேலாக இந்நிறுவனம் உற்பத்தி செய்துள்ளது. மேலும், மிதமாக எரியூட்டப்பட்ட மேக்னசைட்டின் தேவையும் அதிகரித்துள்ளது; இந்த மித எரியூட்டப்பட்ட மேக்னசைட்டை நெதர்லாந்து, எத்தியோப்பியா, ஜெர்மனி, வங்காளதேசம், சூடான் போன்ற பல்வேறு நாடுகளுக்கு இந்நிறுவனம் ஏற்றுமதி செய்கிறது.

2006-2007 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் ரூ.262.30 இலட்சங்கள் இலாபம் ஈட்டியுள்ளது. 2007-08 ஆம் ஆண்டிலும் இதே அளவு இலாபம் ஈட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம்

தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம் (டெல்) 1983 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்நிறுவனத்தின் தொழிற்சாலை வேலூர் மாவட்டம், காட்பாடியில் அமைந்துள்ளது. 1986 ஆம் ஆண்டில் இது தனது வணிக உற்பத்தியைத் தொடங்கியது.

நைட்ரோ கிளிசரின் வகை வெடிமருந்துகள் 1-4-2004 முதல் தடை செய்யப்பட்டதால் “டெல்” நிறுவனத்தின் செயல்பாடு மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு, நிறுவனத்திற்குக் கடந்த மூன்று ஆண்டுகளாக இழப்பு ஏற்பட்டுள்ளது.

இத்தொழிற்சாலையின் செயல்பாட்டினை மேம்படுத்த டெல் நிறுவனம் 2006-2007 ஆம் ஆண்டில் மோனோ மெதைல் அமின் நைட்ரேட் (எம்.எம்.ஏ.என்.) மூலம் உற்பத்தி செய்யப்படும் வெடிமருந்துகளைத் தயாரிக்க ரூ 88.00 இலட்சம் செலவில் ஒரு திட்டத்தைச் செயல்படுத்தியது. மேலும் ரூ 95.00 இலட்சம் செலவில் 2 இ.எச்.என். எனப்படும் அமிலம் தயாரிக்கும் திட்டத்தினை நடைமுறைப்படுத்த டெல் நிறுவனமும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இத்திட்டம் 2007 ஜூன் மாதம் வணிக உற்பத்தியைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

டெல் நிறுவனம் ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த, வெடிபொருள் தயாரிப்பில் புகழ் வாய்ந்த மேக்சம் கார்ப்பரேஷன் (முன்னர் யூ.ஈ.ஈ என அழைக்கப்பட்டது) என்ற நிறுவனத்துடன் இணைந்து, ஒரு கூட்டு நிறுவனத்தை உருவாக்கி அதன்மூலம் டெல் நிறுவனம் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்திட ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டது.

நைட்ரோ கிளிசரின் வகை வெடிமருந்துகள் தடையினால் ஏற்பட்ட மோசமான விளைவினால் பாதிக்கப்பட்ட டெல் நிறுவனம், இந்த முயற்சிகள் மூலம் தற்போதுள்ள பின்னடைவிலிருந்து மீண்டு முன்னேற்றம் அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தரம், சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் மாசிலாச் சுற்றுச் சூழல் ஆகியவற்றைப் பேணி வருவதற்காக டெல் நிறுவனம் ஐ.எஸ்.ஓ. 9001 : 2000, ஐ.எஸ்.ஓ. 14001 : 2004 மற்றும் ஓ.எச்.எஸ்.ஏ.எஸ் 18001 : 1999 தரச் சான்றிதழ்களைப் பெற்றுள்ளது.

## சதர்ன் ஸ்ட்ரக்சரல்ஸ் நிறுவனம்

சதர்ன் ஸ்ட்ரக்சரல்ஸ் நிறுவனம் (எஸ்.எஸ்.எல்) தனியார் துறையில் சரக்கு இரயில் பெட்டிகள், சுரங்க உபகரணங்கள் மற்றும் இரும்பு கட்டுமானங்கள் தயாரிப்பதற்காக 1956 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. 1969-70-ல் இத்தொழிற்சாலை மூடப்பட்டவுடன் இதில் பணிபுரிந்த ஊழியர்களின் நலனைக் கருத்தில் கொண்டு 1971 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசு இந்நிறுவனத்தின் நிர்வாகத்தைத் தன் பொறுப்பில் ஏற்றுக்கொண்டது. 1988-89-ல் இருந்து சதர்ன் ஸ்ட்ரக்சரல்ஸ் நிறுவனம் தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வந்தது. எதிர்மறையான நிகர மதிப்பின் காரணமாக 1992 ஆம் ஆண்டு



இந்நிறுவனம் தொழில் மற்றும் நிதி புனரமைப்பு வாரியத்தின் (BIFR) ஆய்வுக்குப் பரிந்துரைக்கப்பட்டது. இக்குழுமம் 1998 ஆம் ஆண்டு ஜனவரியில் புனரமைப்புத் திட்டம் ஒன்றை அனுமதித்தது. எனினும், சந்தையில் நிலவிய கடும் போட்டியாலும், சந்தையின் மந்த நிலையினாலும் மற்றும் சில காரணங்களினாலும் மறு சீரமைப்புத் திட்டத்தின்மூலம் இந்நிறுவனம் புத்துயிர் பெற இயலவில்லை. புனரமைப்புத் திட்டம் தோல்வி அடைந்ததால் மாற்று நிர்வாகம் அமைப்பதற்கு BIFR பாரத ஸ்டேட் வங்கியிடம் பொறுப்பை ஒப்படைத்தது. மாற்று நிர்வாகத்திற்கு நல்ல கம்பெனிகள் முன்வரவில்லை. இதற்கிடையில் வங்கியினர் சர்பாஸி சட்டப்படி (SARFAESI ACT-2002இன்படி) கம்பெனியின் சொத்துக்களை தன்வசப்படுத்திக் கொண்டு, அதை BIFR-இடமும் தெரிவித்தது. இதனால் 17-11-2005 அன்று நடந்த தனது கூட்டத்தில் BIFR இந்நிறுவனத்தை விடுவித்தது.

தமிழக அரசின் விருப்ப ஓய்வுத் திட்டத்தின்கீழ் (VRS) இந்நிறுவனத்தின் அனைத்து 737 பணியாளர்களும் விடுவிக்கப்பட்டனர். விருப்ப ஓய்வில் செல்ல விரும்பாத 12 ஊழியர்கள் பணியிலிருந்து (Retrenchment) விடுவிக்கப்பட்டனர். 5 ஊழியர்கள் மட்டும் பாக்கியுள்ள பணிகளை கவனிக்க மீண்டும் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

## தமிழ்நாடு உப்பு நிறுவனம்

தமிழக அரசு 1974 ஆம் ஆண்டில், நிறுவனங்கள் சட்டத்தின்படி, தமிழ்நாடு உப்பு நிறுவனத்தை நிறுவியது. இந்நிறுவனம் உப்பு உற்பத்தி செய்வதுடன், உப்பு சார்ந்த பொருள்களையும் தயாரிக்கிறது. இராமநாதபுரம் மாவட்டம், மாரியூர் வாலிநோக்கம் உப்பு வளாகத்தில், இந்நிறுவனம் தொழிற்சாலைகளுக்குத் தேவையான உப்பு, பிற செறிவூட்டப்பட்ட உப்பு வகைகள், அயோடின் கலந்த 'அரசு' உப்பு மற்றும் இருமடங்கு செறிவூட்டப்பட்ட உப்பு ஆகியவற்றை உற்பத்தி செய்கிறது.

தமிழ்நாட்டில் மதிய உணவுத் திட்ட மையங்களுக்கு பொது விநியோகத் திட்டத்தின் மூலமாக தமிழ்நாடு உப்பு நிறுவனம் அயோடின் கலந்த உப்பைத் தொடர்ந்து வழங்கி வருகிறது. மேலும் இந்நிறுவனம் கர்நாடகம் மற்றும் ஆந்திர மாநிலங்களிலும் அயோடின் கலந்த உப்பு விற்பனையை விரிவுபடுத்தியுள்ளது. இவ்விற்பனை

முயற்சிகளின்மூலம் தென் மாநிலங்களின் பொது மக்களுக்கு அயோடின் சத்து குறைபாட்டினால் ஏற்படும் நோய்களைக் களைவதற்கு தமிழ்நாடு உப்பு நிறுவனம் பங்காற்றி வருகிறது.

கனடாவிலுள்ள மைக்ரோ நியூட்ரியண்ட் நிறுவனத்தின் தொழில் நுட்ப உதவியுடன் இரும்பு மற்றும் அயோடின் கலந்த இருமடங்கு செறிவூட்டப்பட்ட உப்பை இந்நிறுவனம் தற்போது உற்பத்தி செய்து வருகிறது. இந்த வகையான உப்பு, முன்கழுத்துக் கழலை நோய் பாதிப்பு அதிகமுள்ள ஏழு மாவட்டங்களுக்கும் மற்றும் சில மதிய உணவுத் திட்ட மையங்களுக்கும் வழங்கப்படுகிறது. மேலும் இரும்பு மற்றும் அயோடின் கலந்த இருமடங்கு செறிவூட்டப்பட்ட உப்பினை ஜூலை 2006 முதல் யூனியன் பிரதேசமான புதுச்சேரி அரசு மதிய உணவுத் திட்ட மையங்களுக்கும் வழங்கி வருகிறது. இந்த உப்பு டிசம்பர் 2006 முதல் ஆந்திர மாநில அரசின் மதிய உணவுத் திட்ட மையங்களுக்கும் மாநில அரசால் நடத்தப்படும் உணவகங்களுக்கும் மற்றும் நிறுவனங்களுக்கும், நியாய விலைக் கடைகள்மூலம் வழங்கப்படுகிறது. இருமடங்கு செறிவூட்டப்பட்ட உப்பு கர்நாடக மாநிலத்தில் உள்ள கர்நாடக மதிய உணவுத் திட்டங்களுக்கு அம்மாநில அரசின் நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் விரைவில் விற்பனை செய்யப்பட உள்ளது.

வாலிநோக்கம் உப்பு வளாகத்தில் தமிழ்நாடு உப்பு நிறுவனம் ஏறத்தாழ ரூபாய் 2 கோடி செலவில் பொதுத் துறை தனியார் துறை பங்கேற்புடன் உபரி உப்பு 'பிட்டர்ன்' என்ற பொருளைப் பயன்படுத்தி 'புரோமின்' தயாரிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இத்திட்டத்தினால் தமிழ்நாடு உப்பு நிறுவனத்திற்குக் கூடுதல் வருவாய் கிடைப்பதுடன், இந்தப் பின்தங்கிய பகுதியில் ஏறத்தாழ [illegible] பேருக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கிறது.

மத்திய அரசின் "நமக் மஸ்தூர் ஆவாஸ் யோஜனா" வீடு கட்டும் திட்டத்தின்கீழ் வாலிநோக்கத்தில் உப்புத் தொழிலாளர்களுக்காக 250 வீடுகள் கட்டும் திட்டத்தினை தமிழ்நாடு உப்பு நிறுவனம் மேற்கொண்டுள்ளது.



## தமிழ்நாடு தொழில் வழிகாட்டுதல் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம்

தொழில் நிறுவனங்களின் நிதித் தேவைகளுக்கு வழிகாட்டி, அவற்றிற்கான முதலீட்டு மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்வதற்காக தமிழ்நாடு தொழில் வழிகாட்டுதல் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம் (சுருக்கமாக, "கைடன்ஸ் பீரோ" என அழைக்கப்படுகிறது) சங்கங்கள் சட்டப்படி நிறுவப்பட்டது. 1990-91-ல் இது நிறுவப்பட்ட பொழுது, ரூ.25 இலட்சம் தொகுப்பு நிதியைக் கொண்டு செயல்படும் என்றும், இந்நிதியைத் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் மற்றும் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் ஆகிய ஐந்து நிறுவனங்களும் தலா ரூபாய் 5 இலட்சம் வழங்கி உருவாக்குவதுடன், ஆண்டுதோறும் தங்கள் பங்களிப்பாக ரூபாய் 5 இலட்சம் இந்நிறுவனத்திற்கு வழங்கிட வேண்டுமென்றும், அரசு ஆணை பிறப்பித்தது. இந்த நிதிநிலை ஆதரவுடன், தமிழ்நாடு தொழில் வழிகாட்டுதல் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம் பின்வரும் பணிகளை மேற்கொண்டு வருகிறது:

### தமிழ்நாடு தொழில் வழிகாட்டுதல் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனத்தின் பணிகள்

- தமிழ்நாட்டிற்குத் தொழில் திட்டங்களை ஈர்ப்பதுடன், அதிக முதலீடுகளையும் பெற முயலுதல்.
- பெரிய அளவிலான முதலீட்டுத் திட்டங்களுக்குத் தேவைப்படும் அனுமதிகளை வழங்கிடும் ஒற்றைச் சாளர முறையிலான ஆவண மையமாகச் செயல்படுதல்.
- மைய மாநில அரசுகளின் கொள்கைகள், ஆதரவாக உள்ள உள்கட்டமைப்பு வசதிகள், கிடைக்கும் வரிச் சலுகைகள், முதலீடுகளுக்குள்ள வாய்ப்புகள் போன்றவை குறித்த விரிவான செய்திகளை முதலீட்டாளர்களுக்கு அளித்தல்.
- தமிழ்நாட்டிற்கான அயல்நாடு வாழ் இந்தியரின் நட்பு அமைப்பாகச் செயல்பட்டு தமிழகத்திற்கு NRI முதலீடுகள் கிடைக்கச் செய்தல்.
- இந்திய அரசு மற்றும் வெளிநாட்டு முதலீட்டுக் குழுமத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வெளிநாட்டு முதலீட்டுத் திட்டங்களின் செயலாக்கங்களைக் கண்காணித்தல்.

- முதலீட்டாளர் குழுக்கள், தொழில் மாநாடுகள், கூட்டுத் தொழில் அமைப்புகள் போன்ற இடங்களில் தமிழகத்தில் முதலீடு செய்வதற்குள்ள வாய்ப்புகள், போட்டிகள் மூலம் கிடைக்கும் சாதகச் சூழ்நிலைகள் போன்றவற்றை டிஜிட்டல் முறையில் ஒலி, ஒளிக் காட்சி விளக்கங்களாகத் தெளிவுபடுத்துதல்.

- பெரிய அளவிலான முதலீட்டுத் திட்டங்களுக்கு தொடர்ந்து கண்காணித்து வசதிகள் செய்து தருவதுடன், முன்னோடித் திட்டங்களில் அவற்றின் செயலாக்க நிலையில் ஏற்படும் இடையூறுகளைக் களைதல்; மறு ஆய்வுக் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்தல்.

- 2006-07 ஆம் ஆண்டில் தமிழ்நாடு தொழில் வழிகாட்டுதல் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம் ரூ.9,189.59 கோடி முதலீடுகளுடன் கூடிய 19 பெரிய அளவிலான திட்டங்களுக்குரிய கருத்துருக்களின்மீது நடவடிக்கைகள் மேற்கொண்டு, அவற்றை ஈர்ப்பதற்கு பெரும் முயற்சிகள் மேற்கொண்டுள்ளது.

- கைடன்ஸ் நிறுவனம் கட்டண அடிப்படையிலான பணியாக, ஒற்றைச் சாளர முறையில் அனுமதிகளை அளிக்கிறது. ஒவ்வொரு திட்டத்திற்கும் தற்போது பின்வருமாறு கட்டணம் வசூலிக்கிறது.

| | | |
|---|---|---|
| (i) | ரூ.100 கோடிக்குக் குறைவான முதலீட்டுத் திட்டங்களுக்கு | ரூ. 3 இலட்சம் |
| (ii) | ரூ.100 கோடி முதல் ரூ.300 கோடி வரையிலான முதலீட்டுத் திட்டங்களுக்கு | ரூ. 5 இலட்சம் |
| (iii) | ரூ.300 கோடிக்கு மேற்பட்ட முதலீட்டுத் திட்டங்களுக்கு | ரூ. 7 இலட்சம் |

தமிழ்நாடு தொழில் வழிகாட்டுதல் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனத்திற்கு 2006-07 ஆம் ஆண்டில் ஒற்றைச் சாளரப் பணிகளில் கட்டணமாகக் கிடைத்துள்ள வருவாய் ரூ.98,21,500/- ஆகும்.



## புவியியல் மற்றும் சுரங்கத் துறை

நாட்டின் பொருளாதாரத்திற்கு கனிமம் முதுகெலும்பாக அமைந்துள்ளது. அவற்றை அறிவியல் முறையிலும், நீதித் துறைக்கு உட்பட்டும் அகழ்ந்து எடுப்பது அவசியமாகிறது. தொழில் மற்றும் வர்த்தகத் துறையில் ஒரு அங்கமாக விளங்கி வந்த புவியியல் பிரிவானது தொடக்கத்தில் கனிமங்களைக் கண்டறியும் பணிகளை தலையாய பணியாக மேற்கொண்டிருந்தது. கனிமம் தொடர்பான அனைத்து நிர்வாகங்களையும் ஒரே அதிகாரத்தின்கீழ் கொண்டு வருவதற்காக 1983 ஆம் ஆண்டு "புவியியல் மற்றும் சுரங்கத் துறை" தனித் துறையாக புதிதாக உருவாக்கப்பட்டது. இத்துறையின் முக்கியமான பணிகள் பின்வருமாறு:—

I. (அ) மாநிலத்திலுள்ள பல்வேறு கனிமங்களின் இருப்பினைக் கண்டறிந்து மதிப்பிடுதல்

(ஆ) நீலகிரி மற்றும் கொடைக்கானல் போன்ற மலைப் பிரதேசங்களில் புவியியல் தொழில்நுட்ப ஆய்வு மேற்கொள்ளுதல்

II. (அ) கனிம நிர்வாகம்

(ஆ) அரசுக்கு கனிம வருவாயினை ஈட்டுதல்

**III. மேம்பாட்டுச் செயல்கள்**

**(அ) மாநிலத்திலுள்ள பல்வேறு கனிமங்களின் இருப்பினைக் கண்டறிந்து மதிப்பிடுதல்**

தமிழகத்தின் தெற்கு மற்றும் மேற்கு மாவட்டங்களிலுள்ள சுண்ணாம்புக்கல் படிவங்களின் இருப்பைக் கண்டறிவதற்காக, அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதன்படி, முதற்கட்டமாக தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் வட்டத்தில் சுண்ணாம்புக்கல் படிவங்களில் 32 முதல் 45 விழுக்காடு வரை சுண்ணாம்பு ஆக்ஸைடு இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. மேலும் 85,92,000 மெட்ரிக் டன் அளவிற்கு கன்க்கரி சுண்ணாம்புக் கல் கனிம இருப்பு இருப்பதாக ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. இரண்டாம் கட்டமாக, 2006-2007 ஆம் ஆண்டில் திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டத்திலுள்ள கிராமங்களான இளங்குளம், பரப்பாடியில் முழுமையாக ஆய்வுப்

பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அவ்வாய்வு அறிக்கையில் சுண்ணாம்பு ஆக்ஸைடு குறைந்தபட்சமாக 10.81 விழுக்காடும் அதிக பட்சமாக 52.15 விழுக்காடும் இருப்பதாகக் கண்டறியப்பட்டு, இப்பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

**(ஆ) நீலகிரி மற்றும் கொடைக்கானல் போன்ற மலைப் பிரதேசங்களில் புவியியல் தொழில்நுட்ப ஆய்வு மேற்கொள்ளுதல்**

புவியியல்-தொழில்நுட்பப் பிரிவு, புவியியல்-தொழில்நுட்ப அறிக்கைகளைத் தயாரிக்கிறது. மேலும், அது மலைப் பகுதிகளில் கட்டுமானப் பணிகள் மேற்கொள்வதற்குரிய சாதகமான அம்சங்களுக்கு ஆலோசனை வழங்குகிறது. புவியியல்-தொழில்நுட்பப் பிரிவு ஒவ்வொரு பகுதியையும் ஆய்வு செய்து வளர்ச்சிப் பணிகளுக்குரிய இடங்களைத் தேர்வு செய்வதில் திட்டமிடுபவர்களுக்கு உதவுகிறது. மலைச் சரிவுகள் ஏற்படக்கூடிய இடங்களைக் கண்டறியவும். மலைப் பகுதிகளில் மக்களின் உயிருக்கும், உடைமைகளுக்கும் பாதுகாப்பு அளிப்பதற்கும் உதவுகிறது.

இப்பிரிவு வளர்ச்சிப் பணிகள், கட்டுமானப் பணிகள், தடுப்பு அணை, தொழிற்சாலை மற்றும் சுரங்கப் பணிகள் போன்றவற்றினை மேற்கொள்ள திட்டமிடுவோருக்கு புவியியல் தொழில்நுட்ப உதவியுடன் அப்புலங்களை ஆய்வு செய்து பரிந்துரையை சம்பந்தப்பட்டவர்களுக்கு வழங்கி வருகிறது. இம்மையம் நிலச் சரிவு ஏற்பட வாய்ப்பு உள்ள பகுதிகளை ஆய்வு செய்து அறிக்கை அளிப்பதன் மூலம் உயிர்ச்சேதம் மற்றும் பொருட்சேதத்தைத் தடுக்க உதவி வருகிறது. இப்பிரிவு 2006-2007 ஆம் ஆண்டில் நீலகிரியில் 916 இடங்களையும், கொடைக்கானலில் 15 இடங்களையும் ஆய்வு செய்துள்ளது.

**IV (அ) கனிம நிர்வாகம்**

இத்துறையின் மாவட்ட அலுவலகங்கள் துணை இயக்குநர் அல்லது உதவி இயக்குநரின் பொறுப்பில் செயல்படுகிறது. மாவட்ட அலுவலகங்கள் அந்தந்த மாவட்ட ஆட்சியரின் கட்டுப்பாட்டிலும், புவியியல் மற்றும் சுரங்கத் துறை இயக்குநரின் முழுக் கட்டுப்பாட்டிலும் செயல்படுகின்றன. (1) கனிம நிர்வாகப் பணிகளில், கனிமச் சட்ட விதிகளுக்குட்பட்டு பெருவகை / சிறுவகை கனிமங்களை அகழ்ந்தெடுக்க சலுகை வழங்குதல், (2) கனிமம் அகழ்தலை நடைமுறைப்படுத்துதல், கனிமங்களைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல், (3) அக்கனிமங்களுக்கான உரிமைத் தொகையினை ஈட்டுதல் மற்றும் (4) சட்டத்திற்குப் புறம்பாக கனிமம் அகழ்ந்தெடுத்துக் கொண்டு செல்லுதலைத் தடுத்தல் போன்றவை அடங்கும். பட்டா



நிலங்களில் பெருங்கனிமங்களுக்கான சலுகைகளை வழங்குவதற்கான அதிகாரம் புவியியல் மற்றும் சுரங்கத் துறை ஆணையர் மற்றும் இயக்குநருக்கு அரசினால் வழங்கப்பட்டுள்ளது. அரசு நிலங்களில் கனிமச் சலுகைககள் வழங்கும் அதிகாரம் மாநில அரசிடம் உள்ளது.

அரசு மற்றும் பட்டா நிலங்களில் அவை எந்த வகை நிலமாயினும் அதில் உள்ள கிரானைட் கற்களை அகழ்ந்தெடுக்க குத்தகை வழங்கும் அதிகாரத்தினை அரசு தன்னிடம் கொண்டுள்ளது. அரசு மற்றும் பட்டா நிலங்களில் உள்ள பொது உபயோகங்களுக்குப் பயன்படும் சிறு கனிமங்களுக்கான குத்தகை வழங்க, மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அனைத்து சிறுவகை கனிமங்களின் குத்தகை தொடர்பாக மாவட்ட ஆட்சித் தலைவரால் பிறப்பிக்கப்படும் ஆணைக்கெதிராக தொடுக்கப்படும் மேல்முறையீடுகளுக்கு தகுந்த ஆணை பிறப்பிக்கும் அதிகாரம் புவியியல் மற்றும் சுரங்கத் துறை ஆணையர் மற்றும் இயக்குநருக்கு வழங்கப்பட்டுள்ளது. கிரானைட் கனிமத்திற்கான சுரங்கத் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரத்தினை அரசு, புவியியல் மற்றும் சுரங்கத் துறை ஆணையர் மற்றும் இயக்குநருக்கு வழங்கியுள்ளது. அதுபோலவே, அறிவிக்கப்பட்ட 29 பெருங் கனிமங்களுக்கான சுரங்கத் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கக்கூடிய அதிகாரம் புவியியல் மற்றும் சுரங்கத் துறையில் கூடுதல்/இணை இயக்குநருக்கு வழங்கப்பட்டுள்ளது.

**(ஆ) அரசுக்கு கனிம வருவாயினை ஈட்டுதல்**

1983-1984 ஆம் ஆண்டில் ரூ.2.83 கோடியாக இருந்த இத்துறையின் கனிம வருவாய், வரவினம் 2006-2007 ஆம் நடப்பு நிதியாண்டில் ரூ. 469.01 கோடியாக (மார்ச் 2007 ஒத்திசைவு செய்யப்படாதது) பெருகியுள்ளது. இத்துறையின் சீரிய கனிம நிர்வாகத்தின் மூலம் இது சாத்தியமாகியுள்ளது.

**மேம்பாட்டுச் செயல்கள்**

இத்துறையானது சென்னையில் ஜனவரி 2007 ஆம் ஆண்டு நடைபெற்ற மூன்றாவது சர்வதேச கிரானைட் கற்களின் கண்காட்சியில் பங்கு பெற்றது. இக்கண்காட்சி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 3-1-2007 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. இக்கண்காட்சியில் பல வகையான கிரானைட் கற்களைக் காட்சிக்கு வைத்ததுடன், நம் மாநிலத்தில் உள்ள பலவிதமான கிரானைட் வகைகள் குறித்த கையேடுகள் பார்வையாளர்களுக்கு வழங்கப்பட்டன.

[2007 மே 8

## சர்க்கரைத் தொழில்

சர்க்கரைத் தொழில், தமிழ்நாட்டில் ஒரு முக்கியமான வேளாண் சார்ந்த தொழிலாகத் திகழ்கிறது. சர்க்கரைத் தொழில் கிராமப் பொருளாதாரத்தில் பெருமளவில் தாக்கம் ஏற்படுத்தும் தொழிலாக விளங்குகிறது. இத்தொழில் கிராமப்புறங்களில் கரும்பு பயிரிடுவதிலும், கரும்பை அறுவடை செய்வதிலும், கரும்பை எடுத்துச் செல்வதிலும், இது சம்பந்தப்பட்ட இதர காரியங்களிலும் ஈடுபட்டுள்ள இலட்சக்கணக்கான விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும், பொது மக்களுக்கும் பெரிய அளவில் நேர்முகமாகவும், மறைமுகமாகவும் வேலைவாய்ப்பை வழங்கி வருகிறது.

தமிழ்நாட்டில் 38 சர்க்கரை ஆலைகள் உள்ளன. அவற்றில் 16 கூட்டுறவுத் துறையிலும், 19 தனியார் துறையிலும் உள்ளன. இதைத் தவிர, 3 பொதுத் துறை சர்க்கரை ஆலைகளான அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை, பெரம்பலூர் சர்க்கரை ஆலை மற்றும் மதுரா சுகர்ஸ் ஆகியவற்றை 1974 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின்கீழ் தொடங்கப்பட்ட தமிழ்நாடு சர்க்கரைக் கழகம் செயல்படுத்தி வருகிறது. இருப்பினும், தற்போது 38 சர்க்கரை ஆலைகளில் 35 சர்க்கரை ஆலைகள் மட்டுமே இயங்கி வருகின்றன. 16 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை தனது அரைவையை 2001-02 அரைவைப் பருவம் முதல் நிறுத்திவிட்டு அதன் பணியாளர்களுக்கு விருப்ப ஓய்வுத் திட்டத்தை அமல்படுத்தியுள்ளது. பொதுத் துறையிலுள்ள மதுரா சுகர்ஸ் 2002-2003 அரைவைப் பருவம் முதல் இயங்கவில்லை. தனியார் துறையிலுள்ள அருணாச்சலம் சர்க்கரை ஆலை 2003-2004 அரைவைப் பருவம் முதல் இயங்கவில்லை. மேற்கூறிய 3 ஆலைகளில் கரும்பு அரைவை நிறுத்தப்பட்டதால், மாநிலத்தின் கரும்பு அரைவை அளவு நாளொன்றுக்கு 1,14,050 டன்களிலிருந்து 1,07,800 டன்களாகக் குறைந்துள்ளது.

2005-2006 அரைவைப் பருவத்தில் 231.46 இலட்சம் டன்கள் கரும்பு அரைவை செய்து 21.38 இலட்சம் டன்கள் சர்க்கரையை 9.24% சர்க்கரைக் கட்டுமானத்துடன் உற்பத்தி செய்ததற்கெதிராக, இயங்கக்கூடிய அனைத்து 35 சர்க்கரை ஆலைகளும் 2006-2007 அரைவைப் பருவத்தில் 269.75 இலட்சம் டன்கள் கரும்பை அரைவை செய்யவும், 25.75 இலட்சம் டன்கள் சர்க்கரையை சராசரி 9.55% சர்க்கரைக் கட்டுமானத்துடன் உற்பத்தி செய்யவும் திட்டமிட்டு பணிகள் நடைபெறுகின்றன.



2007 மே 8]

### கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகள்

2005-2006 அரைவைப் பருவத்தில் 62.68 இலட்சம் டன்கள் கரும்பு அரைவை செய்யப்பட்டு 5.87 இலட்சம் டன்கள் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டது.

2006-2007 அரைவைப் பருவத்தில் 19 கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில், 17 சர்க்கரை ஆலைகளில் மட்டும் அரைவை மேற்கொள்ள முடிந்தது. மதுராந்தகம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை மற்றும் மதுரா சர்க்கரை ஆலைகளில் அரைவை மேற்கொள்ள முடியவில்லை. 31-3-2007 முடிய இந்த ஆலைகள் 46.70 இலட்சம் டன்கள் கரும்பை அரைவை செய்து 4.54 இலட்சம் டன்கள் சர்க்கரையை சராசரி 9.73% சர்க்கரைக் கட்டுமானத்துடன் உற்பத்தி செய்துள்ளன.

### கரும்புச் சக்கை

சர்க்கரை ஆலைகள் தங்களின் உபபொருளான கரும்புச் சக்கையை நீராவி உற்பத்தி செய்ய எரிபொருளாக உபயோகப்படுத்துகின்றன. உபரியாக உள்ள கரும்புச் சக்கை தமிழ்நாடு காகித நிறுவனத்திற்கும் இதர உபயோகதாரர்களுக்கும் டெண்டர் முறையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

### இணை மின் உற்பத்தி

கூட்டுறவுத் துறையில், எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை (சேத்தியாத்தோப்பு), செய்யாறு கூட்டுறவுச் சர்க்கரை ஆலை (அனக்காவூர்) மற்றும் சுப்ரமணிய சிவா கூட்டுறவுச் சர்க்கரை ஆலை (அரூர்) ஆகியவை இணை மின் உற்பத்தி வசதிகளைப் பெற்றுள்ளன. இந்த 3 இணை மின் உற்பத்திப் பிரிவுகளிலும் மொத்தம் 20 மெ.வா. மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. இவற்றில் உற்பத்தியாகும் மின்சாரம் சர்க்கரை ஆலைகளில் பயன்படுத்தப்படுகிறது. தவிர, உபரியாக உள்ள மின்சாரத்தை அவை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஏற்றுமதி செய்கின்றன. தனியார் துறையில் 15 சர்க்கரை ஆலைகளில் இணை மின் உற்பத்தித் திட்டம் செயல்படுத்தப்பட்டு மொத்தம் 297.10 மெ.வா. மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. உபரியான மின்சாரம் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

[2007 மே 8

மேலும், 2006-2007-ல் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்கெனவே அறிவித்தபடி, மாநில அளவிலான ஆலோசனைக் குழு, கள்ளக்குறிச்சி II கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் 6 மெ.வா. திறனுடைய இணை மின் உற்பத்தி நிலையம் அமைப்பதற்கு தனது ஒப்புதலை வழங்கியுள்ளது. இத்திட்டம் தற்போது ஒப்பந்தப் புள்ளி கோரும் நிலையில் உள்ளது.

**கழிவுப் பாகு**

தமிழகத்தில் உள்ள கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகள் 2005-2006 அரைவைப் பருவத்தில் மொத்தம் 2.71 இலட்சம் டன்கள் கழிவுப் பாகு உற்பத்தி செய்துள்ளன. 2006-2007 அரைவைப் பருவத்தில் இவ்வாலைகளில் கழிவுப் பாகு உற்பத்தி 3.65 இலட்சம் டன்களாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2006-2007 அரைவைப் பருவத்தில் 31-3-2007 முடிய கழிவுப் பாகு உற்பத்தி 1.94 இலட்சம் டன்கள் ஆகும்.

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து சர்க்கரை ஆலைகளிலிருந்தும் 2006-2007 அரைவைப் பருவத்தில் 12.13 இலட்சம் டன்கள் கழிவுப் பாகு உற்பத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வடிப்பகங்கள்**

தமிழ்நாட்டில் 10 சர்க்கரை ஆலைகளில் வடிப்பகங்கள் இணைக்கப்பட்டுள்ளன. இந்த 10 வடிப்பகங்களில் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் உள்ள 2 வடிப்பகங்களான, சேலம் மற்றும் அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் 2005-2006 அரைவைப் பருவத்தில் 83.13 இலட்சம் லிட்டர் ஆல்கஹாலும், 2006-2007 அரைவைப் பருவத்தில் 31-3-2007 முடிய 221.49 இலட்சம் லிட்டர் ஆல்கஹாலும் உற்பத்தி செய்துள்ளன.

**எத்தனால்**

தமிழ்நாட்டில் மொத்த எத்தனால் உற்பத்தித் திறன் ஆண்டொன்றுக்கு 640 இலட்சம் லிட்டர்களாகும். சேலம், அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் மற்றும் ஈ.ஐ.டி. பாரி (நெல்லிக்குப்பம்) ஆகிய சர்க்கரை ஆலைகளில் மேலும் 3 எத்தனால் ஆலைகள் நிறுவப்பட்டு வருகின்றன. இந்த 3 எத்தனால் ஆலைகள் நிறுவப்பட்ட பின்பு நமது மாநிலத்தின் மொத்த எத்தனால் உற்பத்தித் திறன் 910 இலட்சம் லிட்டர்களாக இருக்கும். நமது மாநிலத்தில் 10 விழுக்காடு எத்தனால் கலந்த பெட்ரோலை விநியோகிக்கத் தேவைப்படும் எத்தனால் 1,250 இலட்சம் லிட்டர்களாகும்.



2007 மே 8]

## இணைப்பு - II

(389 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மானியக் கோரிக்கை எண் 31

## தகவல் தொழில்நுட்பவியல் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2007-2008

தகவல் தொழில்நுட்பவியல் துறையில் தமிழ்நாடு பெரும் முன்னேற்றம் அடைந்துள்ளது. மாநிலத்தின் மென்பொருள் ஏற்றுமதி 2005-2006-ல் ரூ.14,115 கோடியாக இருந்தது. இது 2006-2007-ல் ரூ.20,700 கோடிக்கும் கூடுதலாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2005-2006-ல் 32 சதவிகிதமாக இருந்த மென்பொருள் ஏற்றுமதியின் வளர்ச்சி விகிதம், 2006-2007-ல் ஏறத்தாழ 46 சதவிகிதமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இம்மாநிலத்தில் மென்பொருள் நிறுவனங்களின் எண்ணிக்கையும்
மிக வேகமாக வளர்ந்து வருகிறது. 2005-2006 வரை இந்திய மென்பொருள்
தொழில்நுட்பப் பூங்கா (STPI) நிறுவனத்தில் 1,437 நிறுவனங்கள்
பதிவு பெற்றிருந்தன. கடந்த ஆண்டில் (2006-2007) மட்டும் 162 புதிய
நிறுவனங்கள் தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த அதிவேக
வளர்ச்சி, தமிழ்நாடு, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளுக்கு
உகந்த இடமாக உருவாகியுள்ளது என்பதற்கு ஒரு சிறந்த அறிகுறியாகும்.
இந்தியாவின் தலைசிறந்த 10 தகவல் தொழில்நுட்பவியல் நிறுவனங்களும்
தமிழ்நாட்டில் செயல்பட்டு வருகின்றன. இம்மாநிலத்தில் மிகப்பெரிய
தகவல் தொழில்நுட்ப வளாகங்கள் நிறுவப்பட்டு வருவது
குறிப்பிடத்தக்கது. குறிப்பாக இந்தியாவின் தலைசிறந்த இன்போஸிஸ்
நிறுவனம் மஹிந்திரா வேர்ல்டு சிட்டியில் 130 ஏக்கர் பரப்பளவிலும்,
டாட்டா கன்ஸல்டன்சி சர்வீஸஸ் நிறுவனம் சிறுசேரியில் 70 ஏக்கர்
பரப்பளவிலும் பெரிய தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைத்து
வருகின்றன. இதேபோல் விப்ரோ நிறுவனம் சோழிங்கநல்லூரில் 80
ஏக்கர் பரப்பளவிலும், மஹிந்திரா வேர்ல்டு சிட்டியில் 90 ஏக்கர்
பரப்பளவிலும் தொழில்நுட்பப் பூங்காக்களை அமைத்து வருகின்றன.
எச்.சி.எல் நிறுவனம் சோழிங்கநல்லூரில் 50 ஏக்கர், சத்யம் நிறுவனம்
சோழிங்கநல்லூரில் 50 ஏக்கர் மற்றும் காக்னிசன்ட் டெக்னாலஜி

சொல்யூஷன்ஸ் சிறுசேரியில் 25 ஏக்கர் பரப்பளவில் தொழில்நுட்பப் பூங்காக்கள் அமைத்து வருகின்றன. சென்னையில் மட்டுமன்றி, கோயம்புத்தூர், மதுரை போன்ற இதர நகரங்களிலும் மேலும் பல தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்வகையில் தமிழ்நாட்டில் தகவல் தொழில்நுட்பவியல் துறையின் வளர்ச்சி வாய்ப்புகள் மிகவும் ஒளிமயமாக உள்ளன.

மிகப் பெரிய பன்னாட்டு வன்பொருள் உற்பத்தியாளர்களான நோக்கியா (Nokia), பாக்ஸ்கான் (Foxconn), ப்ளெக்ஸ்ட்ரானிக்ஸ் (Flextronics) மற்றும் மோட்டோரோலா (Motorola) போன்ற நிறுவனங்கள் தங்களின் தொழிற்சாலைகளை ஏற்கெனவே தமிழகத்தில் அமைத்துள்ளனர். டெல் கம்ப்யூட்டர்ஸ் (Dell Computers), சாம்சங் (Samsung), ஆஸ்போகாம்ப் (ASPOCOMP), ஸ்பெல்மெக் (Spelmech) செமிகண்டக்டர்ஸ், சேல்காம்ப் (Salcomp), பெர்லோஸ் (Perlos), ஜாபில் (Jabil), வின்டெக் (Wintek) மற்றும் பல மின்னணு வன்பொருள் தயாரிப்பு நிறுவனங்களும் தமிழகத்தில் தங்களுடைய தொழிற்சாலைகளை அமைக்க முடிவெடுத்துள்ளனர். மென்பொருள் மற்றும் வன்பொருள் தொழில்கள் இங்கே ஒருங்கே அமைந்திருப்பது உலக அளவில் தனிச் சிறப்பு பெறுகிறது.

பொருளாதார வளர்ச்சியும், அதிகரிக்கும் வேலைவாய்ப்புகளுமான இரட்டைப் பயன்கள் தமிழகத்திற்குக் கிடைப்பதால், தகவல் தொழில்நுட்பவியல் துறையின் வளர்ச்சியை நிலைபெறச் செய்வதிலும், மேலும் வளர்ப்பதிலும் தமிழ்நாடு அரசு உறுதி பூண்டுள்ளது.

**சென்னையில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா**

சென்னை தரமணியில் இரண்டாவது தகவல் தொழில் நுட்பவியல் பூங்கா அமைக்கப்படுமென சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, தரமணியில் உலகத் தரம் வாய்ந்த வசதிகளை கூட்டு முயற்சியில் உருவாக்க தமிழ்நாடு அரசின் நிறுவனமான டிட்கோ ஒப்பந்தப் புள்ளிகள் கோரியுள்ளது. இதற்கான திட்ட மதிப்பீடு ரூ.850 கோடியாகும். இத்திட்டத்திற்கான பணிகள் அடுத்த சில மாதங்களில் தொடங்கப்படும் எனவும், 2009 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இத்திட்டம் நிறைவு பெறும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம் ஏறத்தாழ 25,000 பேருக்கு வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தும்.





விப்ரோ, எச்.சி.எல் மற்றும் சத்யம் ஆகிய நிறுவனங்கள் கட்டுமானப் பணிகளைத் தொடங்கியுள்ளதால் சோழிங்கநல்லூரில் எல்காட் நிறுவனத்தால் ஏற்படுத்தப்படும் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகளுக்கான சிறப்புப் பொருளாதார மண்டலம் வேகமாக உருப்பெற்று வருகிறது. இவ்வளாகத்தில் ஏறத்தாழ ஒரு இலட்சத்திற்கும் மேலான வேலைவாய்ப்புகள் உருவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சிறுசேரியில் சிப்காட் நிறுவனத்தால் ஏற்படுத்தப்படும் தகவல் தொழில்நுட்பவியல் பூங்காவும் மிக வேகமாக உருவாகி வருகிறது. டாட்டா கன்சல்டன்ஸி நிறுவனம், காக்னிசன்ட் டெக்னாலஜி சொல்யூஷன்ஸ், பட்னி கம்ப்யூட்டர்ஸ் மற்றும் ஃசான்சா நிறுவனத்தார் மட்டுமன்றி தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த இதர 58 நிறுவெனங்களும் தங்களுடைய அமைப்புகளை இத்தகவல் தொழில்நுட்பவியல் பூங்காவில் அமைக்கின்றன.

**கோவையில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா**

கோவையில் ஒரு தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா அமைக்கப்படுமென சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்பட்டது. இதன்படி கோயம்புத்தூர் தெற்கு வட்டம், விளாங்குறிச்சி கிராமத்தில் 29.08 ஏக்கர் நிலப்பரப்பில் தகவல் தொழில் நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலம் நிறுவப்படுகிறது. இச்சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் 10 ஏக்கர் நிலம் விப்ரோ நிறுவனத்திற்கும், 5 ஏக்கர் நிலம் டாட்டா கன்சல்டன்ஸி நிறுவனத்திற்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள இடத்தில் எல்காட் நிறுவனமும், டிட்கோ நிறுவனமும் (தமிழ்நாடு அரசின் இரண்டு பொதுத் துறை நிறுவனங்கள்) இணைந்து தகவல் தொழில் நுட்பவியல் கட்டடத்தை நிறுவுகின்றன. 24-2-2007 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் இத்திட்டத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

**மதுரையில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்காக்கள்**

மதுரையில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா அமைக்கப்படுமென சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பின் விளைவாக மதுரையில் இரண்டு இடங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

[2007 மே 8

முதலாவது இடம் மதுரை வட்டம், இலந்தைக்குளம் கிராமத்தில் 29 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இந்த இடத்தில் பத்து இலட்சம் சதுர அடிக்கும் மேலான பரப்பளவில் தகவல் தொழில்நுட்பவியல் கட்டடம் அமைக்க அரசு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது.

இரண்டாவது, மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தையொட்டி வடபழஞ்சி கிராமத்தில் 200 ஏக்கரும், கிண்ணிமங்கலம் கிராமத்தில் 39.58 ஏக்கரும் எல்காட் நிறுவனத்திற்கு நில உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இங்கு அனைத்து வசதிகளும் கூடிய தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா ஏற்படுத்தப்படும்.

**திருச்சியில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா**

திருச்சியில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா அமைக்கப்படுமென சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்பட்டது. இதன்படி, நவல்பட்டு கிராமத்தில் 135.04 ஏக்கர் பரப்பளவுள்ள இடம் தகவல் தொழில் நுட்பவியல் பூங்கா அமைப்பதற்காக எல்காட் நிறுவனத்திற்கு நில உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்த இடத்தில் பத்து இலட்சம் சதுர அடிக்கும் மேலான பரப்பளவில் தகவல் தொழில்நுட்பத்திற்கென பல அடுக்குக் கட்டடம் அமைக்க அரசு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டப் பணிகள் விரைவில் தொடங்கப்படும்.

**சேலத்தில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா**

சேலத்தில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா அமைக்கப்படுமென சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பின் விளைவாக, ஜாகிர் அம்மாபாளையம் கிராமத்தில் 164.26 ஏக்கர் பரப்பளவுள்ள இடம் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா அமைப்பதற்காக எல்காட் நிறுவனத்திற்கு நில உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகள் விரைவில் தொடங்கும்.

**திருநெல்வேலியில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா**

திருநெல்வேலியில் ஒரு தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா அமைக்கப்படுமென சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பினையொட்டி, கங்கைகொண்டான் சிப்காட் தொழிற்பேட்டையில் 100 ஏக்கர் பரப்பளவுள்ள இடம் தகவல் தொழில் நுட்பப் பூங்கா அமைப்பதற்காக எல்காட் நிறுவனத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகள் விரைவில் தொடங்கும்.



2007 மே 8]

**தகவல் தொழில்நுட்பம், வடிவமைத்தல் மற்றும் உற்பத்தி தொடர்பான தேசிய உயர் தனிக் கல்வி மையம் அமைத்தல்**

மைய அரசின் மனித வள மேம்பாட்டுத் துறை தகவல் தொழில் நுட்பம், வடிவமைத்தல் மற்றும் உற்பத்தி தொடர்பான தேசிய உயர் தனிக் கல்வி மையத்தை (National Centre of Excellence - Indian Institute of Information Technology Design and Manufacturing) - சர்வதேசத் தரத்தில் சென்னையில் அமைக்க முடிவு செய்துள்ளது.

இம்மையத்தை நிறுவுவதற்குத் தேவையான இடம் காஞ்சிபுரம் மாவட்டத்தில் கண்டறியப்பட்டுள்ளது. கட்டடம் கட்டுதல் மற்றும் இதர தொடர்புடைய வேலைகள் நிலுவையில் இருப்பினும் வரும் 2007-2008 ஆம் கல்வியாண்டில் பொறியியல் வடிவமைப்புப் பிரிவில் 30 மாணவர்களைச் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேற்படி நிறுவனம் காஞ்சிபுரம் மாவட்டத்தில் முழுவதுமாக அமையும்வரை ஒரு தற்காலிக நடவடிக்கையாக, சென்னை, இந்திய தொழில்நுட்ப நிறுவன (IIT) வளாகத்திலேயே வகுப்புகளை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. பெருமைக்குரிய இந்நிறுவனம் தமிழ்நாட்டில் அமைவது மாநிலத்தில் தகவல் தொழில் நுட்பவியல் வன்பொருள் தொழிலை மேலும் உயர்த்தும்.

**மின்னணு வணிக நடவடிக்கை மற்றும் பாதுகாப்புச் சங்கம் (Society for Electronic Transaction and Security - SETS)**

மின்னணு வணிக நடவடிக்கை மற்றும் பாதுகாப்புச் சங்கம், மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர் முனைவர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்களின் எண்ணத்தில் உருவான ஓர் அமைப்பாகும். மைய அரசின் முதன்மை அறிவியல் ஆலோசகர் இவ்வமைப்பின் தற்போதைய தலைவர் ஆவார். நாட்டின் தகவல் வளத்தைப் பாதுகாக்கவும், தகவல் பாதுகாப்பு சார்ந்த உற்பத்தி மற்றும் சேவைகளுக்கு தரச் சான்றளிக்கப் பயன்படுத்தவும், தொழில் நுட்பங்களை மேம்படுத்தும் நோக்கத்திற்காகவும் இச்சங்கம் அமைக்கப்பட்டது. தகவல் பாதுகாப்பு மற்றும் மறைமொழிக்கான (சங்கேத மொழி) நவீன வசதிகளுடன் உலகத் தரத்திலான அமைப்பை நிறுவ, சென்னை தரமணியில் 2.8 ஏக்கர் நிலத்தை தமிழ்நாடு அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இத்திட்டத்திற்கான பணி ஏற்கெனவே தொடங்கப்பட்டுவிட்டது. சென்னையில் அமைக்கப்படும் இப்பெருமைமிகு நிறுவனம், சென்னை மற்றும் தமிழ்நாட்டை முதலீடுகளுக்கு உகந்த இடமாக மேலும் உயர்த்தும்.

[2007 மே 8

## தகவல் தொழில்நுட்பப் பணி முனைப்புக் குழு

மாநில தகவல் தொழில்நுட்பப் பணி முனைப்புக் குழு ஒன்று பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது:-

| | |
|---|---|
| மாண்புமிகு முதலமைச்சர், தமிழ்நாடு அரசு | தலைவர் |
| திரு. தயாநிதி மாறன், மாண்புமிகு மத்திய தகவல் தொடர்பு மற்றும் தகவல் தொழில் நுட்பத் துறை அமைச்சர் | துணைத் தலைவர் |
| தலைமைச் செயலாளர் | உறுப்பினர் |
| அரசுச் செயலாளர், நிதித் துறை | உறுப்பினர் |
| அரசுச் செயலாளர், தொழில் துறை | உறுப்பினர் |
| அரசுச் செயலாளர், தகவல் தொழில் நுட்பவியல் துறை | உறுப்பினர்/ அமைப்பாளர் |
| திரு. என். மகாலிங்கம், டாட்டா கன்சல்டன்சி சர்வீசஸ் | உறுப்பினர் |
| திரு. லட்சுமி நாராயணன், காக்னிசன்ட் டெக்னாலஜி சொல்யூஷன்ஸ் | உறுப்பினர் |
| திரு. ஷிவ் நாடார், எச்.சி.எல். | உறுப்பினர் |
| திரு. லக்ஷ்மண் பாடிகா, விப்ரோ | உறுப்பினர் |
| திருவாளர்கள் ராமலிங்க ராஜு / ராமராஜு, சத்யம் | உறுப்பினர் |
| திரு. மோகன்தாஸ் பெய், இன்போசிஸ் | உறுப்பினர் |
| திரு. அருண் ஜெயின், போலாரிஸ் | உறுப்பினர் |
| திரு. எல். ஜூக்கா லெக்தலா, நோக்கியா | உறுப்பினர் |
| திரு. குருராஜ், ப்ளெக்ஸ்ட்ரானிக்ஸ் | உறுப்பினர் |
| திரு. கோபால் சீனிவாசன், டி.வி.எஸ். எலக்ட்ரானிக்ஸ் | உறுப்பினர் |
| திரு. ஆர்.எம். அருண் (ஸ்பெல் செமிகண்டக்டர்ஸ்) | உறுப்பினர் |



2007 மே 8]

| | |
|---|---|
| டெல் கம்ப்யூட்டர் நிறுவனத்தின் பிரதிநிதி | உறுப்பினர் |
| முனைவர் எம். அனந்தகிருஷ்ணன், முன்னாள் துணை வேந்தர், அண்ணா பல்கலைக்கழகம் | உறுப்பினர் |
| முனைவர் ஆனந்த், இயக்குநர், ஐ.ஐ.டி. | உறுப்பினர் |
| முனைவர் டி. விஸ்வநாதன், துணை வேந்தர், அண்ணா பல்கலைக்கழகம் | உறுப்பினர் |
| திரு. கிரண் கார்ணிக், நாஸ்காம் | உறுப்பினர் |
| மாநிலத் தலைவர், இந்திய தொழிற்சாலைகள் கூட்டமைப்பு | உறுப்பினர் |
| மாநிலத் தலைவர், எம்.ஏ.ஐ.டி. | உறுப்பினர் |
| திரு. எம். மாணிக்கம், கோயம்புத்தூர் | உறுப்பினர் |
| திரு. சஞ்சய் ஜெயவர்த்தனவேலு, கோயம்புத்தூர் | உறுப்பினர் |
| திரு. அசோக் பக்தவத்சலம், கோயம்புத்தூர் | உறுப்பினர் |
| திரு. கருமுத்து டி. கண்ணன், மதுரை | உறுப்பினர் |
| தலைவர், இந்திய தொழிற்சாலைகள் கூட்டமைப்பு, திருச்சி | உறுப்பினர் |

## இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டம்

வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இல்லாத வீடுகளுக்கு, இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் ஒரு தன்னிகரில்லாத் திட்டம் 15-9-2006 அன்று தொடங்கப்பட்டுள்ளது. இந்தத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வெளிப்படையான முறையில் கொள்முதல் செய்யவும், குறை நேராமல் விநியோகிக்கவும் சட்டமன்ற அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இக்குழுவின் தலைவர் ஆவார். உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் (திராவிட முன்னேற்றக் கழகம்), திரு. டி. சுதர்சனம் (காங்கிரஸ் கட்சி), திரு. கோ.க. மணி (பாட்டாளி மக்கள் கட்சி), திரு. சி. கோவிந்தசாமி (மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி),

திரு வை. சிவபுண்ணியம் (இந்திய கம்யூனிஸ்ட் கட்சி), திரு கு. செல்வம் (விடுதலைச் சிறுத்தைகள்), திரு எச். அப்துல் பாசித் (இந்திய யூனியன் முஸ்லீம் லீக்), திரு பூவை மு. ஜெகன்மூர்த்தி (புரட்சி பாரதம்) ஆகியோர் இக்குழுவின் உறுப்பினர்களாவர். இக்குழுவின் நேரடிப் மேற்பார்வையிலும், வழிகாட்டுதலின் பேரிலும் முதற்கட்டமாக 30,000 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் தேசிய ஒப்பந்தப் புள்ளி முறையிலும், இரண்டாவது கட்டமாக 25 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வெளிப்படையான சர்வதேச ஒப்பந்தப் புள்ளி முறையிலும் கொள்முதல் செய்யப்பட்டன. வெளிப்படையாகவும், நியாயமாகவும் மேற்கொள்ளப்பட்ட இந்த ஒப்பற்ற கொள்முதல் முறை அனைத்துத் தரப்பிலிருந்தும் பாராட்டுதலைப் பெற்றுள்ளது.

முதற்கட்டமாக 30,000 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் கொள்முதல் செய்யப்பட்டு அவை பெரியார் நினைவு சமத்துவபுரங்களில் உள்ள குடும்பங்களுக்கும், நீலகிரி மாவட்டத்தில் உள்ள மலைவாழ் பழங்குடி குடும்பங்களுக்கும், சென்னை மாநகரில் வடசென்னையில் ஒன்றும், தென்சென்னையில் ஒன்றுமாக இரண்டு குடிசை மாற்று வாரிய குடியிருப்புகளில் உள்ள குடும்பங்களுக்கும், மாநிலத்தில் உள்ள அனைத்து மறுவாழ்வு இல்லங்களில் வாழ்வோருக்கும் வழங்கப்பட்டன. இதற்காக ரூ.9 கோடி செலவிடப்பட்டது.

25 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கான இரண்டாவது கட்ட விநியோகம் 15-2-2007 அன்று திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள பம்மதுகுளம் கிராமத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. மாண்புமிகு அமைச்சர்கள் மாவட்டங்களில் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை பொதுமக்களுக்கு விநியோகம் செய்தார்கள். 31-3-2007 அன்றுள்ளவாறு மொத்தம் சுமார் 4,34,500 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. 2007 ஆம் வருட முடிவிற்குள் ஒவ்வொரு சட்டப் பேரவைத் தொகுதியிலும் சுமார் 10,000 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்தும் வகையில் 2007-2008 நிதியாண்டுக்கு ரூபாய் 750 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



**கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு**

தகவல் தொழில்நுட்பவியல் வளர்ச்சிக்கான முதன்மைத் தேவைகளில் ஒன்று அதிநவீன கட்டடக் கட்டமைப்புகள் ஆகும். தகவல் தொழில்நுட்பவியல் கட்டடங்களுக்குத் "தடையில்லாச் சான்றிதழ்" வழங்கும் அதிகாரத்தைத் தமிழ்நாடு அரசு எல்காட் நிறுவனத்திற்கு வழங்கியுள்ளது. எல்காட் நிறுவனம், தடையில்லாச் சான்றிதழ் வழங்கும் நடைமுறைகளை ஒழுங்குபடுத்தியுள்ளது. நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பெறப்பட்ட 72 மணி நேரத்திற்குள் தடையில்லாச் சான்றிதழ் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதுவரை எல்காட் 173 தகவல் தொழில்நுட்பவியல் கட்டடங்களுக்கு 55 மில்லியனுக்கும் மேலான சதுர அடி அளவுக்குத் தடையில்லாச் சான்றிதழ் வழங்கியுள்ளது. தமிழ்நாட்டில் இதுவரை தகவல் தொழில் நுட்பவியலுக்கென 18 சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இத்தகைய கட்டடக் கட்டமைப்பு வசதிகள் கிடைப்பது தகவல் தொழில்நுட்பவியல் துறையில் முதலீட்டாளர்களைப் பெருமளவில் கவரும்.

மிகவும் தாமதமாகி வந்த, தகவல் தொழில்நுட்பவியல் விரைவுப் பாதைத் திட்டம் முடுக்கி விடப்பட்டு, 2007 ஆகஸ்டு மாதம் முடிவடைய உள்ளது. இத்திட்டப் பணிகளின் முன்னேற்றத்தைக் கண்காணிப்பதற்காக உயர் மட்டக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. எவ்விதத் தடைகளுமின்றி வெகு விரைவில் நிறைவேற ஏதுவாக இத்திட்டத்தின் வடிவமைப்பு மறு சீரமைக்கப்பட்டுள்ளது.

தகவல் தொழில்நுட்பவியல் துறையின் வியத்தகு வளர்ச்சியினால் வேகமாகப் பெருகிவரும் மக்கள்தொகைப் பெருக்கத்தை எதிர்நோக்கும் வகையில் சென்னை, கோயம்புத்தூர் மற்றும் இதர நகரங்களுக்கு ஒருங்கிணைந்த பலதுறை மேம்பாட்டுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்நகரங்களில் மின்சாரம், சாலைகள், குடிநீர், கழிவுநீர் மற்றும் மழைநீர் வடிகால் ஆகிய அடிப்படை வசதிகளை வழங்குவதற்குத் தேவையான பெருந்திட்டங்கள் வடிவமைக்கப்பட்டு வருகின்றன.

நகர மக்களின் போக்குவரத்துத் தேவையை மேம்படுத்துவதற்கு பெருநகர் ரயில் திட்டம் ஒன்றும் இதர பொதுமக்கள் போக்குவரத்துத் திட்டங்களும் திட்டமிடப்பட்டுள்ளன.

[2007 மே 8

கட்டமைப்பு வசதிகளுக்கான இத்திட்டங்கள், தேசிய மற்றும் சர்வதேச முதலீட்டாளர்களை மிகவும் கவரும்.

**தகவல் தொழில்நுட்பவியல் மேம்பாடு**

தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் அதனைச் சார்ந்த சேவைகளின் முதலீடுகளுக்கு உகந்த மாநிலமாகத் தமிழகத்தை உயர்த்துவதற்காக தமிழக அரசு எல்காட் நிறுவனம் மூலமாகப் பல்வேறு தேசிய மற்றும் சர்வதேசத் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறது. இவற்றுள் தலைசிறந்தது "கனெக்ட்" என்ற நிகழ்ச்சி ஆகும். அரசு, தொழில் நிறுவனங்கள், சேவை வழங்குவோர், கல்வி நிறுவனங்கள் மற்றும் முக்கியமாக இறுதிக் கட்ட பயனாளிகள் ஆகிய தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பவியல் துறை சார்ந்த அனைவரையும் ஒரே இடத்தில் ஒருங்கிணைக்கின்ற ஓர் அரங்கமாக இந்த கனெக்ட் நிகழ்ச்சி திகழ்கிறது. கடந்த 6 ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்று வரும் கனெக்ட் நிகழ்ச்சி, இந்தியா மற்றும் வெளிநாடுகளில் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களின் கவனத்தைப் பெருமளவில் ஈர்த்து, மிகவும் புகழ்பெற்ற நிகழ்ச்சியாக உயர்ந்துள்ளது.

இந்த வரிசையில் "கனெக்ட் 2007" சென்னையில் வரும் செப்டம்பர் மாதம் நடத்தப்பட உள்ளது. தேசிய மற்றும் சர்வதேசப் பிரதிநிதிகள் பெருமளவில் இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்வார்கள் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்நாட்டை முதலீடுகளுக்கு உகந்த மாநிலமாக உயர்த்தும் நோக்கத்தில் தேசிய மற்றும் சர்வதேசத் தகவல் தொழில்நுட்பவியல் கண்காட்சிகளில் எல்காட் நிறுவனம் கலந்து கொள்ள ஏதுவாக இச்செலவினத்திற்கென்று 2007-2008 ஆம் ஆண்டுக்கு ரூ.1.25 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. தேசிய மற்றும் பன்னாட்டு நிகழ்ச்சிகளில் எல்காட் நிறுவனத்துடன் இணைந்து பங்கேற்கும் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு மானியத் தொகை வழங்குவதற்காக ரூ.1 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (எல்காட்)**

தமிழ்நாடு மின்னணு நிறுவனம் தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான ஒரு நிறுவனம் ஆகும். 1977-ல் நிறுவப்பட்ட இந்நிறுவனம், தகவல் தொழில்நுட்பவியல்/தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த துறைகளின் முதலீட்டாளர்களுக்கும் அரசுக்கும் ஓர் இணைப்புத் தடமாகச் செயல்பட்டு வருகிறது. எல்காட் நிறுவனம் 21-3-2007 அன்று தன்னுடைய



2007 மே 8]

30 ஆம் ஆண்டை நிறைவு செய்தது. திட்டங்களைச் செயற்படுத்துதல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் மேம்பாடு போன்ற துறைகளில் எல்காட் நிறுவனம் செயல் நடவடிக்கைகளை விரிவுபடுத்தியுள்ளது.

**எல்காட் நிறுவனத்தால் செயல்படுத்தப்படும் முக்கிய திட்டங்கள்**

1. பொதுமக்களுக்கு இலவசமாக வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் பெருமைமிகு திட்டத்தின்கீழ் 14" வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளைக் கொள்முதல் செய்யும் பணியை அரசு எல்காட் நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளது.
2. இரண்டாம் நிலை நகரங்களில் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களை உருவாக்குதல்.
3. தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்பு (TNSWAN) திட்டத்திற்கு எல்காட் ஒருங்கிணைப்பு முகமையாக (Nodal Agency) நியமனம் செய்யப்பட்டுள்ளது.
4. அரசுத் துறைகளுக்கு கணினிகள், இதர துணைப் பொருட்கள் போன்ற கருவிகளைக் கொள்முதல் செய்து தருவதற்கு விரும்பத் தகுந்த ஒரு முகமையாகப் பணியாற்றுகிறது.
5. 86 மையங்களில் கணினிமயமாக்கப்பட்ட மற்றும் லாமினேட் செய்த (laminated) ஓட்டுநர் உரிம அட்டைகளைத் தயாரித்து வழங்கும் பணி எல்காட் நிறுவனத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.
6. புதிய குடும்ப அட்டைகளைத் தயாரித்து அச்சடித்துத் தரும் பணியை எல்காட்டிடம் உணவுப் பொருள் வழங்கல் துறை ஒப்படைத்துள்ளது.

**மின் ஆளுமை**

**தமிழ்நாடு மின் ஆளுமை முகமை**

"தமிழ்நாடு மின் ஆளுமை முகமை" என வழங்கப்படும் தன்னாட்சி உரிமை பெற்ற சங்கம் ஒன்று அமைப்பதற்கு ஆணைகள் வெளியிடப்பட்டன. அரசின் பல்வேறு துறைகளின் மின் ஆளுமைத் திட்டங்களுக்கும் ஒருங்கிணைப்பு முகமையாக இது செயல்படும். இச்சங்கத்தின் நடப்புச் செலவினங்களுக்காக ரூ.23,00,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மின் ஆளுமை இயக்ககத்தின் இயக்குநர் இச்சங்கத்தின் தலைமைச் செயல் அலுவலர் ஆவார்.

[2007 மே 8

**தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்பு (TNSWAN)**

பொது மற்றும் தனியார் தகவல் தொடர்பு வழங்கு நிறுவனங்கள் மூலமாக அளிக்கப்படும் 2 Mbps திறன் கொண்ட அலைக்கற்றையைப் பயன்படுத்தி தமிழக அரசும், இந்திய அரசும் இணைந்து அமைத்துள்ள தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்பு (TNSWAN) மூலமாக 30 மாவட்டத் தலைமை அலுவலகங்களை மாநிலத் தலைநகர் சென்னையுடனும், அதேபோல கோட்டத் தலைமை அலுவலகங்கள், வட்டத் தலைமை அலுவலகங்கள் மற்றும் வட்டாரத் தலைமை அலுவலகங்கள் ஆகியவற்றுடன் மாவட்டத் தலைமை அலுவலகங்களை இணைக்கின்ற பணி செயல்படுத்தப்பட உள்ளது. முற்றுப்பெறும் நிலையிலுள்ள இத்திட்டம் 2007 ஜூன் மாதம் செயல்படத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நவீன வசதியைப் பெற்றுள்ள இந்தியாவின் மிகச் சில மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். இத்திட்டத்திற்கான இயக்கச் செலவில் மாநிலத்தின் பங்காக 2007-2008 ஆம் ஆண்டுக்கு ரூ.12 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**திறன் உருவாக்கம்**

தெரிவு செய்யப்பட்ட அரசுத் துறைகளில் மின் ஆளுமையை அறிமுகப்படுத்த இந்திய அரசு, தேசிய மின் ஆளுமைத் திட்டம் (NeGP) என்ற பெயரில் ஒரு திட்டத்தை அறிவித்துள்ளது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக, மாநில அரசின் திறனை மேம்படுத்துவதற்கு ஒரு விரிவான திட்ட அறிக்கை மைய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் கேட்கப்பட்டுள்ள உதவி விரைவில் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

**தேசிய மின் ஆளுமைத் திட்டம் (NeGP)**

அரசின் எல்லாத் துறைகளிலும் மின் ஆளுமையைச் செயற்படுத்த தமிழ்நாடு அரசு உறுதி பூண்டுள்ளது.

தேசிய மின் ஆளுமைத் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் 15 திட்டங்கள் (Mission Mode Projects) தெரிவு செய்யப்பட்டுள்ளன. அவை வருமாறு :

1. நில ஆவணங்கள்
2. வணிக வரி
3. பதிவுத் துறை



2007 மே 8]

4. வேளாண்மை
5. உணவு, குடிமைப் பொருள் வழங்கல்
6. சுகாதாரம்
7. ஊராட்சிகள்
8. கல்வி
9. கருவூலங்கள்
10. நகராட்சிகள்
11. போக்குவரத்து
12. வேலைவாய்ப்பு
13. தொழில்
14. சமூக நலம்
15. தலைமைச் செயலகத் துறைகளைக் கணினிமயமாக்குதல்

மேற்குறிப்பிட்டுள்ள எல்லா திட்டங்களுக்கும் விரிவான வரைவு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

**மாநிலத் தகவல் விவரத் தொகுப்பு மையம் மற்றும் மின் ஆளுமைத் திட்டங்கள்**

மாண்புமிகு மத்திய தகவல் தொடர்பு மற்றும் தகவல் தொழில் நுட்பத் துறை அமைச்சர் திரு. தயாநிதி மாறன் அவர்களின் தனிப்பட்ட ஆர்வம் மற்றும் முயற்சியால் தமிழ்நாட்டிற்கு மாநிலத் தகவல் விவரத் தொகுப்பு மையம் மற்றும் ஆறு மின் ஆளுமைத் திட்டங்களுக்கு மத்திய அரசு ரூ.75 கோடி அனுமதி அளித்துள்ளது.

**(அ) மாநிலத் தகவல் விவரத் தொகுப்பு மையம்**

மைய அரசின் உதவியுடன் சென்னையில் மாதிரி மாநில தகவல் விவரத் தொகுப்பு மையம் ஒன்று அமைக்க திட்டமிடப்பட்டு வருகிறது. நிறுவப்படும் இந்த முக்கிய கட்டமைப்பு, மாநிலத்தில் மின் ஆளுமைத் திட்டங்களின் செயல்பாட்டை மேலும் வலுப்படுத்தும். இந்தியாவில் இதுபோன்ற வசதியைக் கொண்ட மிகச் சில மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும்.

**(ஆ) மின் ஆளுமைத் திட்டங்கள்:**

1. தமிழ்நாட்டில் வட்டாட்சியர் அலுவலகங்களின் கணினி வழி மின் ஆளுமைச் சேவைகளை மேம்படுத்துதல்.

2. தமிழ்நாட்டில் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களின் கணினிவழி மின் ஆளுமைச் சேவைகளை மேம்படுத்துதல்.
3. தமிழ்நாட்டில் நகராட்சி மற்றும் பேரூராட்சி அலுவலகங்களின் கணினிவழி மின் ஆளுமைச் சேவைகளை மேம்படுத்துதல்.
4. தமிழ்நாட்டில் குடிமைப் பொருள் வழங்கு துறை அலுவலகங்களின் கணினிவழி மின் ஆளுமைச் சேவைகளை மேம்படுத்துதல்.
5. தமிழ்நாட்டில் போக்குவரத்துத் துறை அலுவலகங்களின் கணினிவழி மின் ஆளுமைச் சேவைகளை மேம்படுத்துதல் மூலம் மாநிலப் போக்குவரத்துக் கழகங்களில் கணினிவழி முன்பதிவு முறையை மேம்படுத்துதல்.
6. தமிழ்நாட்டில் பதிவுத் துறை அலுவலகங்களின் கணினிவழி மின் ஆளுமைச் சேவைகளை மேம்படுத்துதல்.

### பொது சேவை மையங்கள் (CSCs)

கிராமப்புற பகுதிகளுக்கு வலிமை சேர்க்கவும் நகர மற்றும் ஊரகப் பகுதிகளில் வசிக்கும் மக்களிடையே உள்ள மின்னணுவியல் இடைவெளியைச் சரிசெய்யவும் மைய அரசின் உதவியுடன் பொது சேவை மையங்கள் மூலமாக ஊரக சேவைத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அரசும் தனியாரும் பங்கேற்று நடத்தும் வகையில் 5,440 பொது சேவை மையங்கள் வரும் ஆண்டில் அமைக்கப்படும். இச்சேவை மையங்கள் அரசு மற்றும் தனியார் வழங்கும் சேவைகள் சாதாரண மக்களின் வீடு தேடிச் சென்றடையும் வாய்ப்பை உருவாக்கும்.

### தமிழ் இணையப் பல்கலைக்கழகம்

### தொடக்கம்

உலகெங்கிலும் வாழும் தமிழரும், தமிழ் ஆர்வலரும் தமிழ்மொழியைக் கற்கவும், தமிழ் இலக்கியம், பண்பாடு, கலை, வரலாறு ஆகியவற்றை அறிந்துகொள்ளவும், விரும்புவோருக்கு இணைய தளம் வாயிலாகக் கல்வி வளத்தையும், வாய்ப்பினையும் அளிக்க தமிழக அரசு தமிழ் இணையப் பல்கலைக்கழகம் எனும் அமைப்பை நிறுவியது. இத்தகைய ஒன்றாகும். தமிழ் இணையப் பல்கலைக்கழகத்திற்கு 2007-2008 ஆம் ஆண்டில் நடப்புச் செலவினங்களை மேற்கொள்வதற்காக ரூ.94.52 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.



### கல்வித் திட்டங்கள்

பல்வேறு நாடுகளில் நிறுவப்பட்டுள்ள தமிழ்க் கல்வி மையங்களின் வழியாகத் தமிழில் சான்றிதழ் மற்றும் இளநிலைப் பட்டப் படிப்புக்கான தேர்வுகளையும் தமிழ் இணையப் பல்கலைக்கழகம் நடத்தி வருகிறது. அடிப்படை, இடைநிலை, மேல்நிலை என்ற 3 படிநிலைகளில் அமைந்த சான்றிதழ்க் கல்வியையும், தமிழ் இளநிலைப் பட்டப் படிப்பையும், தமிழ் இணையப் பல்கலைக்கழகம் வழங்குகிறது. மேலும், இதன் முதுகலைப் பட்டப் படிப்பு [MA (Tamil)] தமிழ் பல்கலைக்கழகத்தால் ஏற்பளிக்கப்பட்டுள்ளது; அதற்குரிய பாடப் பொருள் தயாரிக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது. தமிழ் இணையப் பல்கலைக்கழகம் இந்திரா காந்தி தேசிய திறந்தவெளிப் பல்கலைக்கழகத்தின் கல்வி வள ஆதாரங்களை, தமிழ் இணையப் பல்கலைக்கழக மாணவர்களுடன் பகிர்ந்து கொள்வதற்காக, அப்பல்கலைக்கழகத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இந்த வள ஆதாரங்கள், இளநிலைப் பட்டப் படிப்பில் விருப்ப மொழி (ஆங்கிலம் பகுதி-II) கல்விக்குப் பயன்படுத்தப்படும்.

### மாணவர் பதிவு மற்றும் தேர்வுகள்

56 நாடுகளைச் சேர்ந்த 5,527 மாணவர்கள் பல்வேறு பாடத் திட்டங்களுக்குப் பதிவு செய்துள்ளனர். 2,598 மாணவர்கள் சான்றிதழ்ப் படிப்பிற்கும், 2,929 மாணவர்கள் தமிழ் இளநிலைப் பட்டப்படிப்பிற்கும் பதிவு செய்துள்ளனர். 2006 ஆம் ஆண்டில், 211 மாணவர்கள் சான்றிதழ்ப் படிப்பிலும், 131 மாணவர்கள் பட்டயத் தேர்விலும், 28 மாணவர்கள் மேற்பட்டயத்திலும், தேர்வு எழுதி வெற்றி பெற்றுள்ளனர். 2006-07 ஆம் ஆண்டில் இந்தியாவிலேயே முதன் முறையாக, மொத்தம் 247 இளங்கலை பட்டப் படிப்பு மாணவர்களுக்கு, இணையம் வழியாக 62 தேர்வுகள் நடத்தப்பட்டன. இந்த ஆண்டு, 40 பட்டய மாணவர்களுக்கும், 48 மேற்பட்டய மாணவர்களுக்கும் தேர்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதுவரையில், தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் இணைய தளத்தை ஏறத்தாழ 15 இலட்சம் பேர் பார்வையிட்டுள்ளனர்.

### இணையவழி வகுப்பறைகள்

இணையவழிக் கல்வித் திட்டத்தில் கற்பித்தல் மற்றும் கற்றலுக்காகப் பயன்படுத்தப்படும் நெறிமுறைகள் ஒலி, ஒளி முதலிய பல்வேறு வகையான ஊடகங்களின் வாயிலாக வழங்கப்படுகின்றன. இணைய

தள வாயிலான கல்வியை மேலும் வலுப்படுத்துவதற்காகவும், வளரச் செய்வதற்காகவும், விரைந்து செயல்படும் சர்வர் கணினி, அதிவேக வலை இணைப்பு ஆகியவற்றுடன் வீடியோ உரையாடல் கருவிகளுடன் கூடிய நவீன இணையக் கல்வி முறைக்கான இணைய வகுப்பறை, தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட்டுள்ளது.

**மின் நூலகம் (Digital Library)**

தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் மின் நூலகம், தமிழ் இலக்கியத்தின் சிறந்த நூல்களின் தொகுப்புக் களஞ்சியமாகத் திகழ்கிறது. தமிழரின் பண்பாடு, வரலாறு மற்றும் பாரம்பரியம் ஆகியவற்றை அறிந்து கொள்வதற்குரிய சாளரமாகவும் அமைந்துள்ளது. இணையதளத்தில் உள்ள இந்த மின் நூலகத்தில் இலக்கணம், சங்க இலக்கியம், பதினெண்கீழ்க்கணக்கு, காப்பியங்கள், சமய இலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள், திரட்டு நூல்கள், நெறிநூல்கள், இருபதாம் நூற்றாண்டின் கவிதைகள் மற்றும் உரைநடை நூல்கள், நாட்டுப்புற இலக்கியங்கள், கலைச்சொற்கள் தொகுப்பு மற்றும் அகராதிகள் என மொத்தம் 300 நூல்கள் சேர்க்கப்பட்டுள்ளன. மேலும், தற்கால இலக்கியம் சார்ந்த நூல்களும் சேர்க்கப்பட்டு வருகின்றன. தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகள் என்ற அடிப்படையில், கரகாட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம் முதலிய நாட்டுப்புறக் கலைகளின் ஒலி ஒளிக் காட்சிகள் இடம்பெற்றுள்ளன. அவற்றுடன், 137 சைவ, வைணவக் கோயில்களின் ஒளிப்படக் காட்சிகளும் இணைக்கப்பட்டுள்ளன. தொல்காப்பியம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை நூல்கள் உரோமன் எழுத்துகளில் இடப்பட்டுள்ளன. விரிவான பொருளடக்கி அட்டவணை மற்றும் தேடுதல் வசதி ஆகியவை இந்த மின் நூலகத்தின் தனிச் சிறப்பாகும். ஒரு மொழியில் இது ஒரு தனித்தன்மையான மற்றும் முன்னோடியான முயற்சியாகும். இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட கலைச் சொற்களைக் கொண்ட 30 வகையான வெவ்வேறு அருஞ்சொற்பொருள் தொகுப்புகள் இந்நூலகத்தில் இடம்பெற்றுள்ளன.

**தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தை விளம்பரப்படுத்துதல்**

சென்னை, சிதம்பரம், பாண்டிச்சேரி மற்றும் திருவனந்தபுரத்தில் நடைபெற்ற புத்தகக் கண்காட்சிகளில் தமிழ் இணையப் பல்கலைக் கழகத்தின் சார்பில் அரங்கம் அமைக்கப்பட்டது. நாளிதழ்கள் மற்றும் இணைய தளங்களில் தமிழ் இணையப் பல்கலைக்கழகம் குறித்து விளம்பரங்கள் வெளியிடப்பட்டன. தமிழ் இணையப் பல்கலைக்கழக



இயக்குநர் கொல்கத்தா, கோயம்புத்தூர் மற்றும் பாலக்காடு ஆகிய நகரங்களில் பயிலரங்குகள் நடத்தி தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் வசதிகள் மற்றும் சிறப்புகள் குறித்து அங்கு விளக்கங்கள் அளித்துள்ளார். இத்துடன், தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தை விளம்பரப்படுத்தும் முயற்சியில், பல்வேறு விளக்கக் கருத்தரங்குகள் கல்லூரிகளில் நடத்தப்பட்டன. அதில், தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் மின்நூலகச் சிறப்புகளைப் பற்றியும் வகுப்பு நிரல்கள் பற்றியும் கூறப்பட்டன. பிர்லா கோளரங்கத்தில் ஒன்றும், கன்னிமாரா பொது நூலகத்தில் மற்றொன்றுமாக இரு தொடுதிரைக் கணினிகள் அமைக்கப்பட்டுள்ளன.

**தேடும் வசதியுடன் கூடிய திருக்குறள்**

தமிழ் இணையப் பல்கலைக்கழக மின் நூலகத்தில் 5 உரைகளுடன் கூடிய, தேடும் வசதிகளைக் கொண்ட திருக்குறள் நூலுடன் அதன் 2 மொழியாக்கங்களும் குறுந்தகடு வடிவில் தயாரிக்கப்படவுள்ளன.

**ஓலைச் சுவடிகளைத் தமிழ் இணையப் பல்கலைக்கழக இணைய தளத்தில் இடல்**

முனைவர் உ.வே. சாமிநாதய்யர் அவர்கள் தொகுத்து வைத்துள்ள ஓலைச்சுவடிகளை உ.வே.சா. நூலகத்தில் இருந்து தமிழ் இணையப் பல்கலைக்கழகம் பெற்று, அவற்றை எளிதில் படிக்கும் வண்ணம், தேடும் வசதியுடன் உருவாக்கியுள்ளது. ஓலைச்சுவடியை எளிதில் புரிந்து கொள்ள அவற்றின் தற்காலத் தமிழ் வடிவமும் கொடுக்கப்பட்டுள்ளது.

**கோயில்கள் / கிறித்துவ பேராலயங்கள் / பள்ளிவாசல்கள் ஆகியவையடங்கிய குறுந்தகடுகள்**

கோயில்கள் / கிறித்துவ பேராலயங்கள் / பள்ளிவாசல்கள் ஆகியவற்றின் ஒளிக்காட்சிகள் தமிழ் இணையப் பல்கலைக்கழக இணையத்தில் இடப்பட்டுள்ளன. குறுந்தகடுகளாக வெளியிடவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

**தற்போதைய கலை மற்றும் பாரம்பரிய பண்பாட்டு நிகழ்ச்சிகள்**

தற்போது, தமிழ் இணையப் பல்கலைக்கழக இணைய தளத்தில் உள்ள ஒலி-ஒளிக்காட்சி தொகுப்பு, மேலும் காட்சிகளைச் சேர்த்து விரிவாக்கப்பட்டு வருகிறது. அவற்றைக் குறுந்தகடுகளாக உருவாக்கி மக்களுக்கு வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

## தமிழ் 16-பிட் அனைத்து எழுத்துருக் கருத்தரங்கம்

தமிழ் இணையப் பல்கலைக்கழகம், 2-9-2006 அன்று சென்னையில், 16-பிட் தமிழ் அனைத்து எழுத்துருக்கான ஒரு நாள் கருத்தரங்கினை நடத்தியது. அக்கருத்தரங்கில் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையில், 16-பிட் தமிழ் எழுத்துரு குறித்து ஆழ்ந்து ஆராய்ந்து, அறிக்கையை அளிக்க, முனைவர் எம். அனந்தகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் வல்லுநர்களடங்கிய பணி முனைப்புக் குழு (Task Force) ஒன்றை அரசு அமைத்துள்ளது.

## தமிழ் இணையப் பல்கலைக்கழகத்திற்குச் சொந்தக் கட்டடம்

சட்டமன்றப் பேரவையில், 23-8-2006 அன்று தமிழ் இணையப் பல்கலைக்கழகத்திற்கென தனியே சொந்தமாகக் கட்டடம் அமைவதற்கேற்ற நிலமும், கட்டுமானப் பணிக்காக ரூ.1 கோடியும் கொடுப்பதாக அறிவிக்கப்பட்டது. இதனடிப்படையில், தமிழ் இணையப் பல்கலைக்கழகத்திற்கு நிலம் ஒதுக்கீடு செய்வதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தகுந்த இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டவுடன், அங்கு தமிழ் இணையப் பல்கலைக்கழகத்திற்கு சொந்தமாகக் கட்டடம் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

## புதிய திட்டங்கள்

2007-2008 ஆம் ஆண்டில் சேர்க்கப்பட்டுள்ள ரூ.1 கோடிக்கான புதிய திட்டங்கள் பின்வருமாறு:

## சிறிய தகவல் தொகுப்பு மையம்

பெருங்குடி கிளை வளாகத்தில் எல்காட் நிறுவனம் ஒரு சிறிய தகவல் தொகுப்பு மையத்தை நிறுவக் கருதியுள்ளது. அரசின் பல்வேறு துறைகளுக்கும் சேவை புரிவதற்காக அம்மையத்தில் சர்வர் கணினிகள், வலைப்பின்னல் தொடர்பான சாதனங்கள் மற்றும் வலைப்பின்னல் அலைக்கற்றை ஆகியவற்றை நிறுவ வேண்டியுள்ளது. தகவல் தொகுப்பு மையத்திற்குத் தேவையான உயர்ந்த அளவு எல்லை கொண்ட இரண்டு சர்வர் கணினிகளை வாங்கி மையத்தில் நிறுவுவதற்காக ரூ.50 இலட்சம் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

## தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தை வெளிநாடுகளில் பரப்புதல்

தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் பணிகளை மற்ற மாநிலங்களிலும், அயல் நாட்டிலும் பரவலாக்குவதற்கும், மேம்படுத்துவதற்கும் இணையதள விளம்பரங்கள் மற்றும் இந்தியாவில் சில பத்திரிகைகள் மற்றும் பருவ இதழ்களில் விளம்பரம் அளிக்கவும் கருதப்பட்டுள்ளது. முக்கிய நகரங்களான மும்பை, கொல்கத்தா, தில்லி போன்ற பெருநகரங்களில் பயிலரங்குகள் நடத்தவும், வெளிநாடுகளில் உள்ள பல்வேறு கல்வி மையங்களைப் பார்வையிடுவதற்கும் கருதப்பட்டுள்ளது. இதற்காக வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.10 இலட்சம் சேர்க்கப்பட்டுள்ளது.



## பாடங்கள், மின் நூல்கள் மற்றும் தொழில்நுட்ப அகராதிகள் வெளியிடுதல்

தமிழ் இணையப் பல்கலைக்கழகம் அதிக அளவில் புத்தகங்களை தனது மின் நூலகத்தில் வெளியிட்டுள்ளது. மாணவர்களுக்கும், மற்றவர்களுக்கும் பயன்படும் வகையில் தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் இணைய தளத்தில் தற்போதுள்ள பாடங்கள் மற்றும் மின் நூல்களை வெளியிடுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், தமிழில் தொழில்நுட்ப நூல்களை எழுதும் ஆசிரியர்களுக்குப் பயனுள்ள வகையில் மின் நூலகத்தில் உள்ள தொழில்நுட்ப சொற்களை அவ்வப்போது ஆய்வு செய்து, தர நிர்ணயம் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. பாடங்கள், மின் நூல்கள் மற்றும் தொழில்நுட்ப அகராதிகளைப் புத்தகமாகவும், மென்பொருள் குறுந்தகடுகளாகவும் வெளியிடுவதற்கு ரூ.15 இலட்சம் வரவு-செலவுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

## இணைய வகுப்பறைக்கு கலைவினைக் கூட உபகரணங்கள் (Studio Equipments) வாங்குதல்

தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தில் அயல்நாட்டு மாணவர்களுக்கு வகுப்புகள் நடத்தும் பொருட்டு இணையக் கலைவினைக் கூடம் (Virtual Studio) ஒன்று அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. கலைவினைக் கூட உபகரணங்களான ஒளிப்படக் கருவி, ஒளி மற்றும் ஒலிப்பதிவுக் கருவிகள் மற்றும் அரங்கம் அமைத்தல் போன்றவை தேவைப்படுகின்றன. இதற்காக ரூ.25 இலட்சம் வரவு-செலவுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

## இணைப்பு–III

*(492 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

### (அ) மானியக் கோரிக்கை எண் 27–தொழில் துறை

### அறிவிப்புகள்

**ஒரகடத்தில் மின்னணு பொருள்கள் ஏற்றுமதி மையம்:**

திருப்பெரும்புதூரில் ஏற்கெனவே உருவாக்கப்பட்டுள்ள 468 ஏக்கர் பரப்பளவிலான உயர் தொழில்நுட்ப மையத்தில், மோட்டோரோலா, டெல், சாம்சங்க், ஃபாக்ஸ்கான் போன்ற பெரும் மின்னணுப் பொருள் உற்பத்தி நிறுவனங்கள் அமைந்துள்ளன.

மேலும் உலகளாவிய பல மின்னணு பொருள் நிறுவனங்கள் தமிழகத்தில் தங்கள் தொழிற்சாலைகளை நிறுவ ஆர்வத்துடன் முன்வந்துள்ளதால் ஒரகடம் வளர்ச்சி மையத்தில் 285 ஏக்கர் பரப்பளவில், புதிய மின்னணுப் பொருள்களுக்கான ஏற்றுமதி மையம் ஒன்றை "சிப்காட்" நிறுவனம் உருவாக்கும். இந்தப் புதிய ஏற்றுமதி மையம் தொடக்க நிலையில் சுமார் 1,300 கோடி ரூபாய் முதலீட்டை ஈர்க்கும்; அதன் மூலம் சுமார் 23,000 பேர் நேரடி வேலை வாய்ப்புகளைப் பெறுவர்.

**பெருந்துறையில் சிப்காட்டின் வளர்ச்சி மைய விரிவாக்கம்:**

'சிப்காட்' நிறுவனம் ஈரோடு மாவட்டம் பெருந்துறையில் 2,599 ஏக்கர் பரப்பளவில் ஒரு தொழில் வளர்ச்சி மையத்தை ஏற்கெனவே அமைத்துள்ளது. இதில், ஒதுக்கீடு செய்யத்தகுந்த 1,820 ஏக்கர் நிலத்தில் 1,137 ஏக்கர் நிலங்கள் பல்வேறு தொழில் நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுவிட்டன.

மீதமுள்ள, ஒதுக்கீடு செய்யப்படாத நிலங்களையும், நிலுவையிலுள்ள விண்ணப்பங்களின் அடிப்படையில் புதிய தொழில் நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

பல புதிய தொழிற்சாலைகளை நிறுவுவதற்கும், புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்குமான அவசியத்தைக் கருத்தில் கொண்டு, மேலும் கூடுதலாக 1,256 ஏக்கர் பரப்பளவில் பெருந்துறை தொழில் வளர்ச்சி மையத்தை சிப்காட் நிறுவனம் நடப்பாண்டிலேயே விரிவாக்கம் செய்யும்.



**பெருந்துறையில் பொறியியல் சாதனங்களுக்கான ஏற்றுமதி மையம்:**

பொறியியல் தொழில்நுட்பத்தில், குறிப்பாக பம்பு செட்டுகள், மோட்டார்கள், வார்ப்படங்கள், போர்ஜிங்குகள் மற்றும் நெசவு இயந்திர விசைகள் தயாரிப்பில் கோயம்புத்தூர், ஈரோடு பகுதி உலக அளவில் புகழ் பெற்றுத் திகழ்கிறது.

இத்தகைய பொறியியல் சாதனங்களை ஏற்றுமதி செய்வதிலும் இப்பகுதி தனிச் சிறப்பைப் பெற்றுள்ளது.

இந்தத் திறனை மேலும் அதிகரிக்கவும், ஏற்றுமதிக்கு மேலும் ஊக்கமளிக்கவும், மோட்டார்கள், பம்பு செட்டுகள், போர்ஜிங்குகள், வார்ப்படங்கள் போன்ற பொறியியல் சாதனங்களை உற்பத்தி செய்வதற்கான புதிய ஏற்றுமதி மையம் ஒன்று பெருந்துறை வளர்ச்சி மையத்தில் 250 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்படும்.

**திருப்பெரும்புதூர்–இருங்காட்டுக்கோட்டை–ஒரகடம் தொழிற்சாலைகளுக்கு கழிவு நீர் மறுசுழற்சி (Recycling) அடிப்படையில் நீர் வழங்கல் திட்டம்:**

திருப்பெரும்புதூர், இருங்காட்டுக்கோட்டை, ஒரகடம் ஆகிய இடங்களிலுள்ள தொழில் வளாகங்கள், தொழில் துறைச் செயல்பாடுகளின் அச்சாணியாக மாறியுள்ளன. அங்கு புதிய தொழிலகங்களைத் தொடங்குவதாலும், ஏற்கெனவே உள்ள தொழிற்சாலைகளை விரிவாக்கம் செய்வதாலும் அவற்றின் தண்ணீர்த் தேவை அதிகரித்து வருகிறது. இப்பகுதிகளிலுள்ள தொழிற்சாலைகளின் தண்ணீர்த் தேவையை நிறைவு செய்யும் வண்ணம், சென்னைப் பெருநகர குடிநீர் வாரியத்திடமுள்ள நெசப்பாக்கம் மற்றும் கோயம்பேடு கழிவு நீரேற்று நிலையங்களில் 18 கோடி லிட்டர் வீதம் நாள்தோறும் கிடைக்கப் பெறும் இரண்டாம் கட்ட சுத்திகரிப்பிற்கு உட்படுத்தப்பட்ட கழிவு நீரை, மறுசுழற்சி செய்வதன் மூலம், தொழிற்சாலைகளுக்கான நீரை உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டம், குடிநீர்த் தேவைக்கான நிலத்தடி மற்றும் மேற்பரப்பு நீராதாரங்களைப் பாதுகாக்கும்; நீர் ஓடைகளில் ஏற்படும் மாசுக்களைக் குறைக்கும்; சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீர் வெளியேறுவதன் மூலம் நிலத்தடி நீர் கெட்டுப் போவதைத் தடுக்கும்.

மேலும், பருவ மழையைச் சாராத தொழிற்சாலைகளுக்கான தண்ணீர்த் தேவைக்கென நிரந்தரமான நீராதாரத்தைத் தோற்றுவிக்கவும் இத்திட்டம் வழிகோலும்.

எனவே, தொழிற்சாலை நீரை உற்பத்தி செய்ய மூன்றாம் கட்ட சுத்திகரிப்பு மற்றும் எதிர்மறை சவ்வூடு பரவல் (Tertiary Treatment and Reverse Osmosis) நிலையத்தை அமைப்பதற்கு சிப்காட் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்.

500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும் இத்திட்டம், இரண்டாண்டுகளில் முழுமையாக நிறைவேற்றப்படும்போது திருப்பெரும்புதூர், இருங்காட்டுக்கோட்டை மற்றும் ஒரகடம் பகுதிகளின் தொழிற்சாலைகளுக்கான நீர்த்தேவையை முற்றிலும் நிறைவு செய்யும்.

**செய்யாறு தொழிற்சாலை வளாகத்தை விரிவுபடுத்துதல்:**

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு சிப்காட் வளாகத்தில் ரூரோத் லிங்க் நிறுவனத்தின் "காலணிகளுக்கான ஏற்றுமதி மையம்" அமைக்கப்பட்டு வருகிறது.

2006-2007-ல் தொழில் துறை மான்யக் கோரிக்கையின்போது அறிவிக்கப்பட்ட மோட்டார் வாகன உதிரி பாகங்களுக்கான ஏற்றுமதி மையம், செய்யாறு சிப்காட் தொழில் வளாகத்தில் அமைக்கப்பட்டு வருகிறது.

செய்யாறு தொழில் வளாகத்தின் முதல் கட்டத்திலுள்ள அனைத்து நிலங்களும் பல தொழிற்சாலைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு விட்டன.

செய்யாறு பகுதி, சென்னை மற்றும் எண்ணூர் துறைமுகங்கள் மற்றும் சென்னை சர்வதேச விமான நிலையத்திற்கு அருகில் அமைந்துள்ளதால், இது தொழில் திட்டங்களை ஈர்க்கும் மையமாகத் திகழ்கிறது.

மேலும், நெடுஞ்சாலைத் துறை 2007-2008-க்கான மானியக் கோரிக்கையில், தேசிய நெடுஞ்சாலையிலிருந்து செய்யாறு சிப்காட் வளாகம் செல்வதற்கு மேம்படுத்தப்பட்ட சாலை வசதித் திட்டம் நிறைவேற்றப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பின்தங்கிய பகுதியில் வேலைவாய்ப்புகளை உருவாக்கிப் பெருக்கிடவும், இந்தப் பகுதியை மிகப் பெரிய தொழில் பகுதியாக மாற்றவும், செய்யாறு சிப்காட் தொழிற்பூங்கா மேலும் 2,250 ஏக்கரில் விரிவுபடுத்தப்படும்.



**திருப்பெரும்புதூரில் உயிரியல் தகவல் தொழில்நுட்பப் பூங்கா (Bio-IT Park):**

திருப்பெரும்புதூர் சிப்காட் தொழில் வளாகத்தில், 100 ஏக்கர் நிலப் பரப்பில், இந்திய மென்பொருள் தொழில் பூங்கா, சிங்கப்பூரிலுள்ள அசெண்டாஸ் நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம், உயிரியல் தகவல் தொழில்நுட்பப் பூங்கா ஒன்றினை அமைக்க முடிவு செய்துள்ளது. இத்திட்ட முதலீட்டில் 11 விழுக்காடு அளவிற்குப் பங்கேற்க தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்திற்கு தமிழ்நாடு அரசு கொள்கை அளவில் ஒப்புதல் அளித்துள்ளது.

மொத்தம் 500 கோடி ரூபாய்ச் செலவில் அமையும் உயிரியல் தகவல் தொழில்நுட்பப் பூங்கா இந்தியாவிலேயே இத்தகைய முதல் உயிரியல் தகவல் தொழில்நுட்பப் பூங்கா என்ற சிறப்பைப் பெறும்.

இத்தொழிற்பூங்கா ஏறத்தாழ 8,000 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கும்.

**தரமணியில் கருத்தரங்கு மையத்துடன்கூடிய மூன்றாவது டைடல் பூங்கா (TIDEL-III):**

2006-2007-க்கான தொழில் துறையின் மானியக் கோரிக்கையில், தரமணியில் இரண்டாவது டைடல் பூங்கா அமைப்பது குறித்து அறிவிப்பு வெளியிடப்பட்டது.

அதனையொட்டித் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம், தனியார் முதலீட்டாளருடன் இணைந்து, இத்திட்டத்தைச் செயல்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறது.

தற்போது சர்வதேச கருத்தரங்கு மையம், தங்கும் அறைகள் உள்ளிட்ட வசதிகளுடன்கூடிய தகவல் தொழில்நுட்பம்/தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகளுக்கான மூன்றாவது டைடல் பூங்காவினை (TIDEL-III) அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. இது சென்னையிலுள்ள தரமணியில் 25 ஏக்கர் நிலத்தில் தகவல் தொழில்நுட்பம்/தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகளுக்கான ஏற்றுமதி மையமாகச் செயல்படுத்தப்படும்.

இந்த மையத்தில் 21 இலட்சம் சதுர அடி பரப்பளவில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்ப உதவியுடன் கூடிய சேவைகள் மற்றும் வணிகப் பணிகளுக்கான கட்டடங்களுடன், ஒருங்கிணைந்த சர்வதேசக் கருத்தரங்கு மையமும், தங்கும் விடுதிகளும் அமைக்கப்படும்.

இத்திட்டம் தனியார் முதலீட்டாளர்களுடன் இணைந்து கூட்டு முயற்சியாகச் செயல்படுத்தப்படும்.

இத்திட்டத்திற்கு ஏறத்தாழ ரூ.800 கோடி செலவாகும்.

இத்திட்டம் 12,000 மென்பொருள் வல்லுநர்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்கும்.

**தரமணியில் டைசல் உயிரியல் பூங்காவை விரிவுபடுத்துதல்:**

2000 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட தமிழ்நாடு உயிரியல் தொழில்நுட்பக் கொள்கையின்படி, டைசல் உயிரியல் பூங்கா மிக உயர்ந்த தொழில்நுட்பத்துடனும், அமெரிக்காவின் கார்னல் பல்கலைக்கழகத் தொழில்நுட்ப உதவியுடனும் ரூ. 62.5 கோடி செலவில் அமைக்கப்பட்டது.

1.4 இலட்சம் சதுர அடி பரப்பளவில் தரமணியில் இந்த உயிரியல் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது.

இப்பூங்காவிலுள்ள ஆய்வகப் பகுதி முழுவதும் 12 முக்கிய நிறுவனங்களுக்குப் பல்வேறு உயிரியல் ஆராய்ச்சிப் பணிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

டைசல் உயிரியல் பூங்கா தற்போது 500 உயிரியல் தொழில்நுட்ப விஞ்ஞானிகளுக்கு வேலைவாய்ப்புகளை அளித்துள்ளது.

உயிரியல் ஆராய்ச்சி நிறுவனங்களின் அதிகப்படியான தேவையைச் சமாளிக்கும் வகையில், கூடுதல் ஆய்வகப் பகுதி ஒன்றை உருவாக்க சுமார் 5 இலட்சம் சதுர அடி பரப்பளவில் 250 கோடி ரூபாய் செலவில், டைசல் உயிரியல் பூங்கா விரிவுபடுத்தப்படும்.

இப்படி விரிவாக்கம் செய்வதால், உயிரியல் தொழில்நுட்பம் மற்றும் மருந்துகள் பற்றிய ஆராய்ச்சி மிகுந்த பயன்பெறும்.

இந்த விரிவாக்கத் திட்டம், கூடுதலாக 2000 உயிரியல் தொழில்நுட்பம் மற்றும் மருந்துத் துறை விஞ்ஞானிகளுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கும்.



**சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடவடிக்கையாக தமிழ்நாடு செய்தித் தாள் மற்றும் காகித நிறுவனத்தால் சிறிய சிமெண்ட் தொழிற்சாலை அமைத்தல்:**

தமிழ்நாடு செய்தித் தாள் மற்றும் காகித நிறுவனம் நாளொன்றுக்கு 480 டன்கள் மரக்கூழ் உற்பத்தி செய்கிறது.

இந்த உற்பத்தியின்போது, 220 டன் சுண்ணாம்புக் கசடும், 150 டன் உலைச் சாம்பலும் (Fly Ash) கிடைக்கின்றன.

ஆகஸ்ட் 2007-லிருந்து மரக்கூழ் உற்பத்தி நாளொன்றிற்கு 480 டன்னிலிருந்து 720 டன்னாக உயரும். இதனால் ஆகஸ்ட் 2007-லிருந்து 50% ஈரப் பதத்துடனான சுண்ணாம்புக் கசடு உற்பத்தி நாளொன்றுக்கு 400 டன் என்ற அளவிற்கு அதிகரிக்கும். சுண்ணாம்புக் கசடு மற்றும் உலைச் சாம்பல் இரண்டு வணிகர்களுக்கும், சிமெண்ட் உற்பத்தியாளர்களுக்கும் தரப்படுகிறது.

சுண்ணாம்புக்கல் கசடில் 50% ஈரப்பதம் இருப்பதால் ஒப்பந்தக்காரர்கள் அதனை காகித ஆலைப் பகுதியில் இருப்பில் வைத்து, அது நன்கு காய்ந்தவுடன்தான் அதனைத் தங்கள் உபயோகத்திற்கு எடுத்துச் செல்கின்றனர்.

இதனால் கரூரிலுள்ள தமிழ்நாடு செய்தித் தாள் மற்றும் காகித நிறுவனத் தொழிற்சாலைக்கு அருகில் தூசி பாதிப்பு மற்றும் நிலப் பாதிப்புப் பிரச்சினைகள் உருவாகின்றன.

சுண்ணாம்புக் கசடு மற்றும் உலைச் சாம்பல் இரண்டும் உயர் ரக சிமெண்ட் தயாரிக்க மூலப் பொருள்களாகப் பயன்படும். ஆதலால், காகித ஆலைப் பகுதியில் தூய்மையான சுற்றுப்புறச் சூழலை உருவாக்கும் நோக்கத்துடன், 45 கோடி ரூபாய் செலவில், நாளொன்றுக்கு 400 டன்கள் உற்பத்தி செய்யும் சிமெண்ட் ஆலையைத் தமிழ்நாடு செய்தித் தாள் மற்றும் காகித நிறுவனம், அந்த வளாகத்திலேயே அமைக்கும்.

இது காகித ஆலையின் சுற்றுப்புறச் சூழலை மேம்படுத்திட உதவும்.

மேலும், சுண்ணாம்புக் கசடு மற்றும் உலைச் சாம்பலினால் ஏற்படும் தூசி பாதிப்பைத் தடுக்கும். இது செயல்படுத்தப்பட்டவுடன் செய்தித் தாள் துறையில் வீணாகும் பொருட்களிலிருந்து உயர் ரக சிமெண்ட் தயாரிக்கும் முதல் நிறுவனமாகத் தமிழ்நாடு செய்தித் தாள் மற்றும் காகித நிறுவனம் இடம் பெறும்.

இத்திட்டம், இரண்டு ஆண்டுகளில் செயல்படுத்தப்படும்.

தமிழ்நாடு செய்தித் தாள் மற்றும் காகித நிறுவனம் தனது உள் நிதி ஆதாரங்கள் மற்றும் வங்கி நிதி உதவியுடன் இத்திட்டத்தைச் செயல்படுத்தும்.

**தமிழ்நாடு செய்தித் தாள் மற்றும் காகித நிறுவனத்தின் தகவல் தொழில்நுட்பப் பூங்கா:**

திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் தொழிற்பேட்டையின் மையப் பகுதியில் தமிழ்நாடு செய்தித் தாள் மற்றும் காகித நிறுவனத்திற்குச் சொந்தமான 6.5 ஏக்கர் காலி நிலம் உள்ளது.

தமிழ்நாட்டில் தகவல் தொழில்நுட்பத் தொழில்களில் ஏற்பட்டுவரும் மகத்தான வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, அம்பத்தூர் தொழிற்பேட்டை வளாகத்தில் காலியாக உள்ள அந்த நிலப் பகுதியில், 4 இலட்சம் சதுர அடிப் பரப்பில் தகவல் தொழில் நுட்பப் பூங்கா ஒன்றை 80 கோடி ரூபாய் செலவில் தமிழ்நாடு செய்தித் தாள் மற்றும் காகித நிறுவனம் அமைக்கும். இத்திட்டத்தினால் 1,000 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

**புவியியல் மற்றும் சுரங்கத் துறையில் தனி ஆய்வுப் பிரிவு அமைப்பது:**

தமிழ்நாட்டில் கிரானைட் உட்பட பல முக்கியக் கனிமங்கள் அதிக அளவில் கிடைக்கின்றன; கனிமங்களைக் கொண்டு பல கனிமத் தொழிற்சாலைகள் தமிழகத்தில் ஏற்பட்டு பலருக்கும் வேலைவாய்ப்புகள் அளிக்கின்றன; அரசுக்கும் அதன்மூலம் வருவாய் கிடைக்கிறது. கனிமத் துறையில் போதிய அளவில் பணியாளர்கள் இல்லாததால், புதிய கனிமங்களைக் கண்டெடுக்கும் பணியினை முழுமையாகச் செய்ய இயலவில்லை.

தமிழக நிலப் பகுதிகளில் உள்ள கனிம இருப்பினை முழுமையாகப் பயன்படுத்துவதற்கு, அவற்றின் இருப்பினை ஆய்வு செய்து கண்டறிவது மிகவும் அவசியமாகிறது. கனிம வள மற்றும் புவியியல் ஆராய்ச்சிக்கு என்று தனியாகப் புவியியலாளர்கள் மற்றும் பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டியது இன்றியமையாத தேவையாகிறது.



ஆகையால், மாநிலத்தின் கனிம இருப்புகள் குறித்து விரிவாக ஆய்வு செய்திட தனியாக ஆய்வுப் பிரிவு ஒன்று, ஓர் துணை இயக்குநரின்கீழ் புவியியல் மற்றும் சுரங்கத் துறையின் தலைமை அலுவலகத்தில் தொடங்கப்படும்.

**மணலியிலுள்ள தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் வெட்டுதல் மற்றும் மெருகேற்றும் தொழிற்பிரிவை நவீனப்படுத்துதல்:**

வெட்டியெடுக்கப்பட்ட கிரானைட் கற்களிலிருந்து கட்டடம் கட்டுவதற்குத் தேவைப்படும் கற்பலகைகள், நினைவுச் சின்ன வடிவமைப்புகள் ஆகியவற்றைத் தயாரிப்பதற்கான 34 ஆயிரத்து 710 சதுர மீட்டர் திறன் கொண்ட மையம் ஒன்று, "தமிழ்நாடு கிரானைட்ஸ்" என்ற பெயரில் சென்னைக்கு அருகே மணலியில் 1986-ல் தொடங்கப்பட்டது.

இந்த மையத்தில் உள்ள இயந்திரங்கள் 20 ஆண்டுகளுக்கு மேற்பட்டவையாக இருப்பதாலும், அதிக தேய்மானம் காரணமாக, தரம் குன்றிய நிலையில் இருப்பதாலும், உலகச் சந்தையில் அதிக அளவில் தேவைப்படும் உயர்தர மெருகூட்டக்கூடிய பெரிய கற்பலகைகளைத் தயாரிக்க இயலவில்லை. இந்த இயந்திரங்கள் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வருவதால், இவற்றிலிருந்து நல்ல தரமான பொருட்களை உற்பத்தி செய்யவும் இயலவில்லை. எனவே, சர்வதேசச் சந்தையில் கட்டடங்களுக்குத் தேவைப்படும் பெரிய அளவு கிரானைட் பலகைகள் மிக உயர்ந்த தரத்தில் மெருகூட்டித் தயாரித்து விற்பனை செய்திடும் நோக்கத்துடன், தற்போது மணலியிலுள்ள தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் தொழிற்சாலையை 20 கோடி ரூபாய் செலவில் நவீனப்படுத்தி, ஒரே நேரத்தில் மூன்று நவீன கிரானைட் கற்களை வெட்டியெடுப்பதற்கேற்ற கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்திட அரசு முடிவு செய்துள்ளது.

இந்த நவீனப்படுத்தும் பணி பத்து மாதங்களுக்குள் நிறைவேற்றப்படும். இதன் பிறகு இந்நிறுவனத்தின் ஆண்டு உற்பத்தித் திறன் ஒன்றரை இலட்சம் சதுர மீட்டராக உயரும்.

[2007 மே 8

**செய்யாறு மற்றும் எம்.ஆர்.கே. கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் வடிப்பகத்துடனான எத்தனால் தொழிற் பிரிவுகளை அமைத்தல்:**

செய்யாறு மற்றும் எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் தலா 36 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மொத்தம் 72 கோடி ரூபாய் செலவில் வடிப்பகத்துடன்கூடிய இரண்டு எத்தனால் தொழிற் பிரிவுகளை அமைக்க விரிவான செயல் திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இந்த இரண்டு எத்தனால் தொழிற் பிரிவுகளின் உற்பத்தித் திறன் நாளொன்றுக்கு 45 கிலோ லிட்டராக இருக்கும். ஒவ்வொரு எத்தனால் தொழிற் பிரிவிற்கும் துணையாக ஒரு வடிப்பகமும் அமைக்கப்படும்.

இந்த இரண்டு திட்டங்களும் செய்யாறு மற்றும் எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளின் நிதி நிலையைச் சீராக்க உதவும். விவசாயிகள் தொடர்ந்து பயன் பெறவும் துணை புரியும். இந்த இரண்டு சர்க்கரை ஆலைகளும், எத்தனால் தொழிற் பிரிவுகளை நிறுவுவதற்காக, தேசிய கூட்டுறவு முன்னேற்றக் கழகம் மற்றும் சர்க்கரை மேம்பாட்டு நிதியத்திலிருந்து கடன் தொகைகளைப் பெறும். இதற்குத் தேவையான உதவிகளை மாநில அரசு இந்த ஆலைகளுக்கு வழங்கும்.



2007 மே 8]

## (ஆ) மானியக் கோரிக்கை எண் 31–தகவல் தொழில் நுட்பவியல் துறை

### அறிவிப்புகள்

**சோழிங்கநல்லூர் பெரும்பாக்கத்தில் தகவல் தொழில்நுட்ப நகரம் அமைத்தல்:**

காஞ்சிபுரம் மாவட்டம், சோழிங்கநல்லூர் மற்றும் பெரும்பாக்கம் கிராமங்களில் 213 ஏக்கர் நிலம் எல்காட் நிறுவனத்திற்கு ஒப்படைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த இடத்தில் ஒருங்கிணைந்த தகவல் தொழில்நுட்பவியல் நகரம் அமைக்கப்படும். இதில் தகவல் தொழில்நுட்பவியல் கட்டடங்கள் தவிர, குடியிருப்புகள் மற்றும் சமூக வசதிகள் உருவாக்கப்படும்.

**கோயம்புத்தூர் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா விரிவாக்கம்:**

தற்போதுள்ள தகவல் தொழில்நுட்பவியல் ஏற்றுமதி மையத்தை விரிவாக்கம் செய்யும்பொருட்டு, கோவை மருத்துவக் கல்லூரி வளாகத்தில் கூடுதலாக 33 ஏக்கர் நிலம் எல்காட் நிறுவனத்திற்கு நில உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்நிலத்தின் ஒரு பகுதியில் தகவல் தொழில்நுட்பவியல் கட்டடங்கள் தவிர, குடியிருப்பு மற்றும் சமூக வசதிகள் அடங்கிய ஒருங்கிணைந்த தகவல் தொழில்நுட்ப வளாகம் நிறுவப்படும்.

**மதுரை தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா:**

மதுரையில் வடபழஞ்சி மற்றும் கிண்ணிமங்கலம் கிராமங்களில் 240 ஏக்கர் நிலம் எல்காட் நிறுவனத்திற்கு நில உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்த இடத்தில் சுமார் 50 ஏக்கர் பரப்பளவில் தகவல் தொழில்நுட்ப கட்டடங்கள் தவிர, குடியிருப்பு மற்றும் சமூக வசதிகள் அடங்கிய ஒருங்கிணைந்த தகவல் தொழில்நுட்ப வளாகம் நிறுவப்படும்.

**திருச்சி தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா:**

திருச்சி மாவட்டம், நவல்பட்டு கிராமத்தில் 135 ஏக்கர் நிலம் எல்காட் நிறுவனத்திற்கு நில உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்த இடத்தில் சுமார் 50 ஏக்கர் பரப்பளவில் தகவல் தொழில்நுட்பக் கட்டடங்கள் தவிர, குடியிருப்பு மற்றும் சமூக வசதிகள் அடங்கிய ஒருங்கிணைந்த தகவல் தொழில்நுட்ப வளாகம் நிறுவப்படும்.

**சேலம் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா:**

சேலம் மாவட்டம், ஜாகிர் அம்மாபாளையம் கிராமத்தில் 161 ஏக்கர் நிலம் எல்காட் நிறுவனத்திற்கு நில உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்த இடத்தில் சுமார் 100 ஏக்கர் பரப்பளவில் தகவல் தொழில்நுட்பவியல் கட்டடங்கள் தவிர, குடியிருப்பு மற்றும் சமூக வசதிகள் அடங்கிய ஒருங்கிணைந்த தகவல் தொழில்நுட்ப வளாகம் நிறுவப்படும்.

**திருநெல்வேலி தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா:**

திருநெல்வேலி மாவட்டம், கங்கைகொண்டான் கிராமத்தில் 100 ஏக்கர் நிலம் சிப்காட் நிறுவனத்தால் எல்காட் நிறுவனத்திற்கு நீண்டகாலக் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது. தங்கள் வளாகங்களை நிறுவிக்கொள்ள விரும்பும் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சேவைகள் சார்ந்த நிறுவனங்களுக்கு இந்த இடத்தில் நிலம் ஒதுக்கீடு செய்யப்படும். இந்த இடத்தில் மேலும் 400 ஏக்கர் நிலத்தை சிப்காட் நிறுவனத்திடமிருந்து குத்தகைக்குப் பெற உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த இடத்தில் தகவல் தொழில்நுட்பவியல் கட்டடங்கள் தவிர, குடியிருப்பு மற்றும் சமூக வசதிகள் அடங்கிய ஒருங்கிணைந்த தகவல் தொழில்நுட்ப வளாகம் நிறுவப்படும்.

தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பாடத்திட்ட மேம்பாடு, பயிற்றுநர் உருவாக்கம், கல்விசார் சாதனங்கள் ஏற்படுத்துதல் ஆகியவற்றுக்காகவும் மாணவர் பொதுத் திறன் பயிற்சியளிக்கும் பொருட்டும், தகவல் தொழில்நுட்பவியல் கல்விக் கழகம் (IT Academy) ஒன்று நிறுவப்படும்.

மைலாப்பூர்-திருவல்லிக்கேணி வட்டம், கோட்டூரில் தமிழ் இணைய பல்கலைக்கழகத்திற்கென 2 ஏக்கர் நிலத்தில் சொந்தக் கட்டடம் உருவாக்கப்படும்.

---

D V21/31/P07 P7.35.2
227668

அரசு மைய அச்சகம், சென்னை-600 079.

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©
Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the Commissioner of
Stationery and Printing, Chennai-600 002.